
# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி 2024

www.tnpscthervupettagam.com





















SHANKAR IAS ACADEMY™
Best Academy for Civil Services Exam Coaching
SINCE 2004

Plot No. 1742, I Foor, 18th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
Phone - 044-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
*Information is a Blessing*
A Shankar IAS Academy Initiative

# உள்ளடக்கம்


**TNPSC துளிகள் ........ 9**

**தமிழ்நாடு செய்திகள் ........ 20**

தமிழ்நாட்டில் சடல உறுப்பு தானத்தில் புதிய சாதனை ........ 20

'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டம் ........ 21

கோயில் நுழைவு குறித்து சென்னை உயர்நீதிமன்றம் ........ 22

18வது வனவிலங்கு சரணாலயம் – தமிழ்நாடு ........ 22

'சாதி மதம் அற்றவர்' சான்றிதழ் ........ 23

தமிழ்நாட்டில் சேர்க்கை விகிதம் 2021-22 ........ 24

2023/24 ஆம் ஆண்டில் மத்திய வரிகளின் பங்கு ........ 24

2023 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பதிவான கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்புகள் ........ 25

முதல் இயந்திர யானை ........ 26

கரியாச்சல்லி தீவுகள் மீட்பு திட்டம் ........ 26

பொன்னை ஆற்றில் தடுப்பணை ........ 27

தமிழ்நாடு ஒருங்கிணைந்த பறவைகள் மதிப்பீடு ........ 28

தென்னிந்தியாவின் முதல் திரையரங்கம் ........ 29

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இருப்புப்பாதை கடப்பு முன்னெச்சரிக்கை அமைப்பு ........ 29

சாலை விபத்துகளின் போக்குகள் ........ 30

கையகப்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்ட விதிகள், 2024 ........ 30

தமிழக சட்டசபை தீர்மானம் 2024 ........ 31

கொந்தகையில் நிலத்தடி நீர் ஊற்றெடுப்பு ........ 32

தமிழ்நாடு அரசின் 10 சாதனைகள் ........ 32

TNPSC ஆணையத்தில் புதிய உறுப்பினர்கள் நியமனம் ........ 33

முதலாவது சிறிய TIDEL பூங்கா ........ 33

மாநிலத் தேர்தல் ஆணையத்தின் பதவிக்காலம் – தமிழ்நாடு ........ 34

மாற்றுத் திறனாளிகளுக்கான சேவை மற்றும் தீர்வு வழங்கீட்டு மையங்கள் – தமிழ்நாடு ........ 35

தமிழ்நாட்டில் மகாவீரரின் சிலை ........ 35

கொற்றவை சிற்பம் ........ 36

தமிழ்நாட்டில் சிறுபான்மை நல நடவடிக்கைகள் 2024 ........ 36

தமிழகத்தின் 2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை ........ 37

ரோடமைன்-B ........ 40

வேளாண் நிதிநிலை அறிக்கை 2024 ........ 41

தமிழ்நாடு மாநில அரசின் மகளிருக்கான கொள்கை 2024 ........ 42

சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை 2024 ........ 43

தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்க மறுக்கும் அதிகாரம் ........ 44

'தொல்குடி' திட்டம் ........ 45

TN Umagine 2024 .... 45
அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதி .... 46
தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2024 .... 46
இந்தியாவின் முதல் 360 கோணத்திலான குவிமாட வடிவிலான மூழ்குவிப்பு திரையரங்கம் .... 47
நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை .... 47
சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா - விஜயதாரணி .... 48
VinFast நிறுவனத்தின் மின்சார மகிழுந்து உற்பத்தி அலகு .... 48
வழக்கு விசாரணையினை மாற்றுவதற்கான அதிகாரம் .... 48
கலைஞரின் நினைவிடம் .... 49
தமிழகத்தின் கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பு 2024 .... 50
தேசிய முதியோர் மையம் .... 50
தமிழ்நாடு புல்வெளி மறுசீரமைப்புத் திட்டத்திற்கான மாதிரிப் பகுதி .... 50
கொடுங்கையூர் உயிரி முறை கழிவு பிரித்தெடுப்பு .... 51
**தேசியச் செய்திகள் .... 52**
உச்ச நீதிமன்றத்தின் 75வது ஆண்டு விழா .... 52
சிறந்த தேர்தல் நடைமுறைகளுக்கான விருது 2023 .... 52
இடைக்கால நிதிநிலை அறிக்கை 2024 .... 53
பிச்சைத் தொழில் செய்பவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் தேசிய அளவிலான முன்னடுப்பு .... 55
கனிம (ஏலம்) திருத்த விதிகள், 2024 .... 56
16வது நிதி ஆணையத்தின் உறுப்பினர்கள் .... 57
நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி ஆணையம் .... 57
இந்தியாவின் மராத்திய இராணுவ நிலப்பரப்புகள் .... 58
உச்ச நீதிமன்றத்தின் பதிவுரு வழக்கறிஞர் (AoR) 2024 .... 58
இந்திய இராணுவத்தின் புதிய உடற்தகுதி கொள்கை .... 59
கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி .... 60
AYUSH திட்டத்தின் கீழ் சுகாதாரநலப் பாதுகாப்பு .... 60
பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு இடஒதுக்கீடு விலக்கு மீதான வழி காட்டுதல்கள் .... 61
இந்தியப் பெண்களிடையே கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகள் .... 61
RoSCTL திட்டம் நீட்டிப்பு .... 63
ஹமாரா சம்விதன் ஹமாரா சம்மான் .... 63
முதலாவது ஆய்வுக் கப்பல் - ஐஎன்எஸ் சந்தாயக் .... 64
அதிகபட்ச பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடு – 2024 .... 64
இந்திய எரிசக்தி வாரம் 2024 .... 66
UGC - உயர் கல்வியில் சம வாய்ப்புகள் .... 66
கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி .... 67
GHAR இணைய தளம் .... 67
ஊழியர் மதிப்பீடு கணக்கெடுப்பு .... 67
பொதுச் சொத்து சேதம் தொடர்பான சட்ட ஆணைய அறிக்கை .... 68
குற்றவியல் அவதூறு பேச்சு தொடர்பான சட்டம் .... 68

மேரா கௌன் மேரி தரோஹர் திட்டம் ..... 69
பழங்குடியினர் விவகாரங்கள் திருத்த மசோதாக்கள் 2024 ..... 70
எஃகுத் தொழில் துறையில் பசுமை ஹைட்ரஜன் குறித்தப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்கள் ..... 71
பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) மசோதா, 2024 ..... 72
பாரத ரத்னா 2024 ..... 73
இந்தியாவின் எண்ணெய் தேவை 2030 ..... 74
ஜம்மு & காஷ்மீருக்கான சட்டத் திருத்த மசோதாக்கள் ..... 74
கில்காரி திட்டம் ..... 75
வருடாந்திர மரண தண்டனை அறிக்கை 2023 ..... 76
பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சஹ்-யோஜனா ..... 77
17வது மக்களவையின் அமர்வு நாட்கள் ..... 77
தண்ணீர் (மாசுபடுத்துதல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா, 2024 ..... 79
தேர்தல் பத்திரங்கள் ரத்து ..... 80
பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனா ..... 81
சேமிப்பு திட்டங்களின் பெயர் மாற்றம் ..... 82
ASI 2020-21 மற்றும் ASI 2021-22 ..... 82
உலகளாவிய டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கையில் புதிய சாதனை ..... 84
வருடாந்திர NeSDA முன்னேற்ற அறிக்கை 2023 ..... 84
இந்தியாவின் மிகவும் வரவேற்புமிக்க பகுதி 2024 ..... 85
பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம் ..... 86
காடுகள் என்பதன் வரையறை - உச்ச நீதிமன்றம் ..... 86
உலகின் மிக உயரமான இரயில் பாலம் ..... 87
நியாயமான மற்றும் இலாபகரமான விலை 2024-25 ..... 88
தேசியக் கால்நடைத் திட்ட விரிவாக்கம் ..... 88
விண்வெளித் துறையில் 100 சதவிகித அந்நிய முதலீடு ..... 90
இரப்பர் உற்பத்தித் துறைக்கான நிதி உதவி ..... 91
இணையவெளிக் குற்றங்கள் குறித்த அறிக்கை ..... 91
'பெண்களின் பாதுகாப்பு' 2025-26 ..... 92
வெள்ள மேலாண்மை மற்றும் எல்லைப் பகுதிகள் திட்டம் (FMBAP) 2025-26 ..... 92
ரைசினா பேச்சு வார்த்தை மாநாடு 2024 ..... 93
செலினா ஜான் வழக்கு ..... 93
இராஷ்ட்ரிய உத்யமிதா விகாஸ் பரியோஜனா ..... 94
**சர்வதேசச் செய்திகள் ..... 94**
G77 + சீனா மூன்றாவது தெற்கு உச்சி மாநாடு 2024 ..... 94
மலேசியாவின் 17வது மன்னர் ..... 95
குழந்தைகளுக்கான உலகின் முதல் மலேரியா தடுப்பூசி வழங்கீட்டுத் திட்டம் ..... 95
கென்யாவில் கோல்டான் இருப்புகள் ..... 96
தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்கக் கொழுப்புகளை நீக்குதல் ..... 97
ரெட்பா ஏரி நெருக்கடி ..... 98

UNRWA நிதி இடைநிறுத்தம் ........ 98
மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் கூட்டணி - ECOWAS ........ 99
சீனாவில் 'சந்திரப் புத்தாண்டு' ........ 100
ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்திர நிதிநிலை அறிக்கை ........ 100
இந்தியர்களுக்கு ஈரான் அரசின் இலவச நுழைவு இசைவுச் சீட்டு ........ 101
இந்தோ-மியான்மர் எல்லையில் தடுப்பு வேலி ........ 102
மெக்ஸிகோவில் ஃபெண்டானில் நெருக்கடி ........ 102
அணு உலைகள் ஒப்பந்தம் மீதான நெறிமுறை ........ 103
BAPS இந்து கோவில் ........ 104
சர்வதேச எரிசக்தி முகமையின் அமைச்சர்கள் கூட்டம் 2024 ........ 104
இணைப்பு துண்டிக்கும் உரிமை – ஆஸ்திரேலியா ........ 105
வெய்மர் முக்கோணம் ........ 106
உலகின் நான்காவது பெரிய பொருளாதாரம் ........ 107
ஆஸ்பைட்ஸ் பாதுகாப்புத் திட்டம் ........ 108
IBSA நிதி ........ 109
பாகிஸ்தானின் புதிய பிரதமர் ........ 109
கடல்சார் போக்குவரத்து 2023 ........ 109
37வது ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு, 2024 ........ 110
5 ஆண்டு கால பல்பயண நுழைவு இசைவுச் சீட்டு ........ 111
கினியா புழு நோய் ஒழிப்பு ........ 111
பணியிட வன்முறைகள் மற்றும் பணியிட துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ILO உடன்படிக்கை ........ 112
**பொருளாதாரச் செய்திகள் ........ 113**
'இந்தியப் பொருளாதாரம் – ஒரு மறுமதிப்பாய்வு' ........ 113
1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதி இலக்கு ........ 114
சுவிட்சர்லாந்து-இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ........ 114
மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடி வரி விகிதம் 2023 ........ 115
நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளை உட்சேர்ப்பதற்கான திருத்தப்பட்ட தகுதி விதிமுறைகள் ........ 115
மாநில அரசுகளின் கடன் பெறுவதற்கான உத்தரவாதங்கள் குறித்த வழிகாட்டுதல்கள் ........ 116
டாடா குழுமத்தின் புதிய சாதனை ........ 117
புதிய பண வழங்கீட்டுத் தொகுப்பு நிறுவனங்களுக்கான ஒப்புதல் ........ 118
இந்தியப் பொருளாதாரம் பற்றிய வெள்ளை அறிக்கை ........ 118
வீட்டு உபயோகச் செலவினக் கணக்கெடுப்பு ........ 120
**அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 121**
இன்ஜெனூட்டி செவ்வாய் ஆய்வு ஹெலிகாப்டர் ........ 121
பெரிய வளைய வடிவ அமைப்பு ........ 121
சந்திரயான்-3 தரையிறங்கு விண்கலத்துடனான லேசர் தகவல் தொடர்பு ........ 122
நியூராலிங்க் நிறுவனத்தின் முதல் மனித சோதனை ........ 122
ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட செயற்கை மீன் இறைச்சி ........ 123

eROSITA தரவு ........ 124
PHANGS திட்டம் ........ 124
INSAT-3DS செயற்கைக்கோள் ........ 125
TOI-715b ........ 126
சிக்னஸ் X-1 ........ 126
ரோட்டோருவா ஏரியின் கீழ் காந்தத் திறன் முரண்பாடு ........ 127
நிலவில் அணுக்கரு பிளவு உலை ........ 127
GRAPES-3 பரிசோதனை ........ 128
இந்தியாவின் முதல் செயல் திறன்மிகு தோட்டா ........ 129
எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவி ........ 129
இந்தியாவின் முதல் அதி உயர் திசைவேக விரிவாக்க குழலமைப்பு பரிசோதனை மையம் ........ 130
PACE ஆய்வுத் திட்டம் ........ 130
தனிச்சுழி வெப்பநிலை கொண்ட அணுக்களின் வரைபடமாக்கல் ........ 131
அதிக உயரத்தில் பறக்கும் சூடோ செயற்கைக்கோள் வாகனம் ........ 132
அதி உயர் ஆற்றல் கொண்ட துகள் "அமேதராசு" ........ 133
உறைந்த புகை கண்டுபிடிப்பு ........ 133
ஒலி அடிப்படையிலான ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பு ........ 134
INSAT-3DS ஆய்வுக் கலம் ........ 134
குறுங்கோள்களில் நீர் ........ 135
உலகின் முதலாவது துவரம்பருப்பு உற்பத்தி விரைவாக்க நெறிமுறை ........ 135
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சீரொளிக் கற்றை ஆயுதம் DURGA-2 ........ 136
Assert AI நிறுவனம் - ப்ரதம் ........ 137
பாசிட்ரோனியத்தினை சீரொளிக் கற்றை மூலமாக குளிரூட்டல் ........ 137
**சுற்றுச்சூழல் செய்திகள் ........ 138**
ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட வெள்ளை காண்டாமிருகம் ........ 138
இந்தியாவில் சிறிய தவிட்டுப் புறா ........ 139
இந்தியாவின் புதிய ராம்சர் சதுப்பு நிலங்கள் ........ 139
காசிரங்காவில் இரண்டு புதிய பாலூட்டி இனங்கள் ........ 140
புதிய கங்காரு பல்லி ........ 141
இரண்டு புதிய விலாங்கு மீன் இனங்கள் ........ 142
இந்தியாவில் உள்ள பனிச் சிறுத்தைகளின் நிலை குறித்த அறிக்கை ........ 142
காவிரி வடக்கு வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள் ........ 143
சைப்ரஸுக்கு அருகில் நீருக்கடியில் அமைந்த பள்ளத்தாக்கு ........ 144
நகோயா நெறிமுறை - கேமரூன் ........ 144
அண்டார்டிக் ஆய்விற்கான குயின்லிங் நிலையம் ........ 145
GRI பல்லுயிர்ப் பெருக்கத் தரநிலை ........ 145
இதுவரை இல்லாத வெப்பமிகு 12 மாதங்கள் ........ 146
ருமேனியாவில் உள்ள மஹ்முதியா ஈரநிலம் ........ 147
பருவநிலை மற்றும் பேரழிவுகள் குறித்த தகவல்கள் அறிக்கை ........ 148

தூத்துமக் கொத்தான் களைச்செடி ..... 149
குப்தேஸ்வர் காடு ..... 149
தெராய் வளைவரை நிலப்பரப்பு ..... 150
தவளையின் உடலின் மீது வளரும் காளான் ..... 150
கேழல்மூக்கன் தவளை ..... 151
STAR மதிப்பீட்டு முறை ..... 151
பச்சை அனகோண்டாவின் இரண்டு புதிய இனங்கள் ..... 152
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ..... 153
ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2023 ..... 153
"மின்சாரம் 2024" அறிக்கை ..... 153
டாம்டாம் போக்குவரத்துக் குறியீடு ..... 154
உணவு முறை மாற்றத்தின் பொருளாதாரம் அறிக்கை ..... 155
ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2024 ..... 156
உலக வளங்கள் குறித்த கண்ணோட்ட அறிக்கை ..... 156
மாநிலச் செய்திகள் ..... 157
ஆந்திர பிரதேசத்தில் சாதிவாரிக் கணக்கெடுப்பு ..... 157
4வது தேசிய சிலிகா பறவை திருவிழா ..... 158
சதக் சுரக்யா படை ..... 158
இந்திய முதியோர் அறிக்கை 2023: ஜம்மு காஷ்மீரின் ஆயுட்காலம் ..... 158
ஜாதுங் கிராமத்தின் மறுசீரமைப்பு ..... 159
மாற்றியமைக்கப்பட்ட PKC-ERCP இணைப்பு திட்டம் ..... 160
பாட்னா பிரகடனம் ..... 160
சுபிகா ஓவிய நெருக்கடி – மணிப்பூர் ..... 161
உத்தரகாண்ட் பொது உரிமையியல் சட்ட மசோதா ..... 162
கேரளாவின் சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கை ..... 163
தடோபா காவால் வளங்காப்பகம் ..... 163
தேவி காமாக்யா திவ்ய பரியோஜனா ..... 164
அசாம் மாநில அரசின் பழம் ..... 165
ஹோரி ஹப்பா ..... 165
சீர்மிகு கிராமப் பஞ்சாயத்து ..... 166
புதிய இரும்புத்தாது இருப்பு ..... 166
பிர் லச்சித் போர்புகான் சிலை ..... 167
சண்டிகர் மேயர் தேர்தல் ..... 167
புதிய மராட்டியர் இட ஒதுக்கீடு மசோதா ..... 168
சம்மக்கா சாரலம்மா ஜாதரா ..... 169
பருவேட்டாத் திருவிழா ..... 170
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ..... 170
டாக்டர் நித்யா ஆனந்த் ..... 170
ஐக்கியப் பேரரசின் பிளாவட்னிக் விருதுகள் ..... 171

சூரஜ்குந்த் மேளா 2024 ....171
சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கார் ....171
அரசியல்/பொது வாழ்வில் நன்னடத்தைக்கான காயிதே மில்லத் விருது ....172
கிராமி விருதுகள் 2024 ....172
பாரத் ரங் மஹோத்சவம் 2024 ....173
ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக் கலைஞர் ....173
தேசிய திரைப்பட விருதுகள் 2024 ....174
ஞானபீட விருது 2023 ....174
கஜுராஹோ நடனத் திருவிழா ....175
ஃபாலி S. நரிமன் ....175
அலெக்ஸி நவல்னி ....176
நிதிசார் கல்வியறிவு வாரம் 2024 ....177
விளையாட்டுச் செய்திகள் ....177
கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2024 ....177
ஆஸ்திரேலிய ஓபன் போட்டி 2024 ....178
ISSF உலகக் கோப்பை போட்டி 2024 ....178
சிறந்த விளையாட்டு நாயகருக்கான ஏசஸ் விருதுகள் 2024 ....179
கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் 2024 ....179
உறைந்த ஏரி மீது நடத்தப்படும் மாரத்தான் போட்டி ....180
முக்கிய தினங்கள் ....181
இந்தியக் கடலோரக் காவல்படை தினம் - பிப்ரவரி 01 ....181
உலக சதுப்பு நில தினம் - பிப்ரவரி 02 ....181
முடக்கு வாதம் விழிப்புணர்வு தினம் - பிப்ரவரி 02 ....182
உலக சமய நல்லிணக்க வாரம் ....183
உலகப் புற்றுநோய் தினம் - பிப்ரவரி 04 ....183
சர்வதேச மனித சகோதரத்துவத் தினம் - பிப்ரவரி 04 ....183
சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் - பிப்ரவரி 06 ....184
சர்வதேச அரேபிய சிறுத்தை தினம் - பிப்ரவரி 10 ....184
தேசியக் குடற்புழு நீக்க நாள் - பிப்ரவரி 10 ....184
உலக பருப்பு வகைகள் தினம் - பிப்ரவரி 10 ....185
உலக நோயுற்றோர் தினம் - பிப்ரவரி 11 ....185
அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11 ....185
டார்வின் தினம் - பிப்ரவரி 12 ....186
உலக யுனானி சிகிச்சை முறை தினம் - பிப்ரவரி 11 ....186
தேசிய உற்பத்தித் திறன் தினம் - பிப்ரவரி 12 ....186
உலக வானொலி தினம் - பிப்ரவரி 13 ....187
மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதமானது தீவிரவாதத்திற்கு ஏதுவானதாக மாறுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 12 ....187
சர்வதேச வலிப்பு நோய் தினம் - பிப்ரவரி 12 ....187

சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15 .......... 187
உலக மானுடவியல் தினம் - பிப்ரவரி 15 .......... 188
உலக நீர்யானை தினம் - பிப்ரவரி 15 .......... 189
உலக எறும்புத் திண்ணிகள் தினம் - பிப்ரவரி 17 .......... 189
உலகச் சுற்றுலா நெகிழ்திறன் தினம் - பிப்ரவரி 17 .......... 189
உலக திமிங்கல தினம் - பிப்ரவரி 18 .......... 190
அருணாச்சலப் பிரதேச மாநில உருவாக்க தினம் - பிப்ரவரி 20 .......... 190
மிசோரம் மாநில தினம் - பிப்ரவரி 20 .......... 190
உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20 .......... 191
சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21 .......... 192
உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22 .......... 192
உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22 .......... 192
உலக அமைதி மற்றும் புரிதல் தினம் - பிப்ரவரி 23 .......... 193
மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24 .......... 194
உலக அரசு சாரா அமைப்புகள் தினம் - பிப்ரவரி 27 .......... 194
உலக புரத தினம் – பிப்ரவரி 27 .......... 195
தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28 .......... 195
அரிய நோய் தினம் - பிப்ரவரி 29 .......... 195
**இதரச் செய்திகள் .......... 196**
மத்திகா மொழி .......... 196
இந்திய சீரம் நிறுவனம் - CEPI கூட்டாண்மை .......... 197
390 ஆண்டுகள் பழமையான தீபஸ்தம்பம் .......... 197
தவளையின் பழமையான புதைபடிமம் .......... 198
தயானந்த சரஸ்வதி அவர்களின் 200வது பிறந்தநாள் .......... 198
இராணி சென்னம்மாவின் கிளர்ச்சியின் 200வது ஆண்டு நினைவு தினம் .......... 199
பாதாமி சாளுக்கியர் கல்வெட்டுகள் .......... 200

# TNPSC துளிகள்

- ஆல்கஹாலில் இருந்து ஜெட் விமான எரிபொருள் தயாரிப்பதற்கான இந்தியாவின் முதல் சோதனை முறை தொழில்நுட்பத் திட்டம் ஆனது புனேவில் தொடங்கப் பட்டு உள்ளது.
- டெல்லியில் உள்ள வருவாய் புலனாய்வு இயக்குனரகம் ஆனது, ஹாங்காங்கில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி கடத்தல் முயற்சியினை 'பிளாக் கோல்டு' என்ற நடவடிக்கை மூலமாக முறியடித்துள்ளது.
- நாகாலாந்தின் ருசோமா கிராமத்தில் இரண்டு நாட்கள் அளவிலான 4வது இயற்கை முறை ஆரஞ்சு உற்பத்தி திருவிழா நடத்தப் பட்டது.
- உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் 2020 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஜனவரி 30 அன்று அனுசரிக்கப்படுகிறது.
  - 2024 ஆண்டு அனுசரிப்பின் கருப்பொருள் 'ஒன்றுபடு. செயல்படு. ஒழி' என்பதாகும்
- தமிழக அரசானது, 12,000 கிராமப் பஞ்சாயத்துஅமைப்புகளில் உள்ள மாணவர்களுக்கு இலவச விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பினை வழங்கும் கலைஞர் விளையாட்டு உபகரணத் தொகுப்பு வழங்கீட்டுத் திட்டத்தினை அறிவித்துள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், இந்தியாவின் முன்னணிக் கல்வியாளரான சத்னாம் சிங் சந்துவை மாநிலங்களவைக்கு நியமித்துள்ளார்.
- 2024 ஆம் ஆண்டு கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளுக்கான உருவச் சின்னம் மற்றும் முத்திரையானது (லடாக்கிலும் காஷ்மீரின் குல்மார்க்கிலும் நடைபெற உள்ளது) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
  - 'ஷீன்-இ ஷீ' அல்லது ஷான் என்றழைக்கப்படும் பனிச்சிறுத்தையானது இந்தப் போட்டியின் அதிகாரப்பூர்வச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கார்ட்டர் டல்லாஸ் என்ற இரண்டு வயது சிறுவன், தனது தந்தையின் முதுகில் அவரோடு பயணித்தப் படி எவரெஸ்ட் சிகரத்தின் அடிவார முகாமைச் சென்றடைந்த இளம் நபர் என்ற சாதனையினைப் படைத்துள்ளார்.
- SADA TANSEEQ' எனப்படும் இந்தியா - சவுதி அரேபியா இடையிலான முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியானது ராஜஸ்தானில் தொடங்கியது.
- நெதர்லாந்து அணியானது, இந்திய அணியினை வீழ்த்தி ஓமனில் நடந்த முதலாவது ஹாக்கி 5s மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் கோப்பையினை வென்றது.
- இந்திய மொழிகளில் டிஜிட்டல் வடிவ ஆய்வுப் பொருட்களை வழங்கச் செய்வதற்காக செயற்கை நுண்ணறிவு சார்ந்து இயங்கும் தளமான 'அனுவாதினி' செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏர் இந்தியா நிறுவனமானது, பெங்களூருவிலிருந்து மும்பை வரை வழக்கமாக இயங்க உள்ள தனது முதல் திட்டமிடப்பட்ட ஏர்பஸ் A350-900 விமானத்தின் சேவையினைத் தொடங்கியுள்ளது.
- 5வது சர்வதேச மற்றும் 44வது அகில இந்தியக் குற்றவியல் மாநாடு ஆனது குஜராத் மாநிலம் காந்திநகரில் உள்ள தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
- இந்திய மராத்தான் ஓட்டப்பந்தய வீரர் மான் சிங், ஹாங்காங்கில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு ஆசிய மராத்தான் சாம்பியன்ஷிப் போட்டியில் 2 மணி, 14 நிமிடங்கள், 19 வினாடிகளில் பந்தய தூரத்தினைக் கடந்து தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

- கோபி தோனகலுக்குப் பிறகு (2017) இப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இரண்டாவது இந்தியர் இவரே ஆவார்.

❖ தமிழ்நாடு மாநிலம் ஆனது அதிகபட்ச ராம்சர் தளங்களைக் கொண்டுள்ள (16 தளங்கள்) மாநிலமாகத் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது, அதைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் (10 தளங்கள்) இடம் பெற்றுள்ளது.

❖ 2024 ஆம் ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் 'ஜனநாயகத்தின் தாய்' என்று பெயரிடப் பட்ட கலாச்சார அமைச்சகத்தின் அணிவகுப்புக் காட்சி வாகனம் ஆனது முதல் பரிசைப் பெற்றுள்ளது.

❖ ஒடிசா அரசு ஆனது, உலகிலேயே முதல் முறையாக கரு நிறமிகள் அதிகம் கொண்ட புலிகளை (கரும்புலிகள்) காண்பதற்காக சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் வகையிலான பூங்காவினை சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்தில் நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.

- சிமிலிபால் புலிகள் வளங்காப்பகம் தான் உலகிலேயே காட்டினுள் கரு நிறமிகள் கொண்ட புலிகளுக்குத் தாயகமாக உள்ளதாகும்.

❖ சாம்பியன் பட்டம் பெற்ற நேர் எறிதட்டு சுடுதல் வீராங்கனை ஆன ஹவில்தார் ப்ரீத்தி ரஜக், இந்திய இராணுவத்தில் சுபேதார் பதவியை வகிக்க தகுதி பெற்ற முதலாவது பெண்மணி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

❖ 84வது அகில இந்திய தலைமை அதிகாரிகள் மாநாடு மும்பையில் நடைபெற்றது.

❖ இரயில்வே வாரியத்தின் முன்னாள் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான அனில் குமார் லஹோட்டி இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகிய நாடுகள் இணைந்து அரபிக்கடலில் 'டெசர்ட் நைட்' எனப்படும் மாபெரும் விமானப் படைப் பயிற்சியை மேற்கொண்டன.

❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, அடுத்த கல்வியாண்டு முதல் தனது இளங்கலைப் படிப்புகளில் விளையாட்டுத் துறை சார்ந்த இட ஒதுக்கீடுகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

- நாட்டிலுள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்களில் அறிமுகப்படுத்தப் படும் இத்தகைய முதலாவது முன்னெடுப்பானது, 'விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்குவோருக்கான கல்விச் சேர்க்கையில்' இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட உள்ளது.

❖ ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM) கட்சித் தலைவர் சம்பாய் சோரன் ஜார்க்கண்ட் மாநிலத்தின் பன்னிரண்டாவது முதலமைச்சராக பதவியேற்றுள்ளார்.

❖ பெங்களூருவில் அமைந்துள்ள டைம்டூத் எனப்படும் பொறியியல் நிறுவனம் ஆனது, 2024 ஆம் ஆண்டு விங்ஸ் இந்தியா நிகழ்ச்சியில் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட முதல் பயணிகள் விமான இருக்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு முறை பதக்கம் வென்ற நௌரெம் ரோஷிபினா தேவி, சர்வதேச வுஷு கூட்டமைப்பின் (IWUF) விருதுகளுக்கான சாண்டா (வெவ்வேறு எடைப் பிரிவு) பிரிவில் ஆண்டின் சிறந்தப் பெண் தடகள வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- இந்த ஆண்டு அவருக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.

- ஆசியக் கிரிக்கெட் வாரியத் தலைவராக உள்ள இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் ஜெய் ஷாவின் பதவிக் காலம் ஆனது மூன்றாவது முறையாக ஒருமனதாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2வது மாநிலச் சுரங்கத்துறை அமைச்சர்கள் மாநாடு ஆனது மத்திய பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் நடைபெற்றது.
- இந்திய அரசானது குஜராத்தின் சூரத் விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாக அறிவித்துள்ளது.
- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் (MoC) கீழ் உள்ள தொலைத்தொடர்புத் துறையானது (DoT), '2024 ஆம் ஆண்டு பாரத் தொலைத்தொடர்பு கண்காட்சியின்' போது "பாரத் 5G இணைய தளம் எனும் ஓர் ஒருங்கிணைந்த இணைய தளத்தினை" அறிமுகப் படுத்தி உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பு, வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் (MoA&FW), மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து இந்தியாவில் பருவநிலை நெகிழ்திறன் கொண்ட வேளாண் உணவு முறைகளை மேம்படுத்தச் செய்வதற்கான முதலீட்டு மன்றத்தைத் தொடங்கியுள்ளன.
- ஜப்பானிய வாகனத் தயாரிப்பு நிறுவனமான டொயோட்டா 2023 ஆம் ஆண்டில் 11 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்களை விற்று, உலகிலேயே அதிக வாகன விற்பனை மேற்கொண்ட வாகனத் தயாரிப்பு நிறுவனமாக மாறியுள்ளது.
- THDC இந்தியா லிமிடெட் நிறுவனமானது, உத்தரகாண்ட் மாநிலத்தின் ரிஷிகேஷ் நகரில் நாட்டின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி சோதனைத் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் முதல் கடற்கரைசார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் விழாவான - Emerge 2024 என்ற திருவிழாவானது மங்களூருவில் உள்ள தண்ணீர்பவி என்ற கடற்கரையில் நடைபெறவுள்ளது.
- லால் கிருஷ்ண அத்வானி இந்தியாவின் உயரிய குடிமை விருதான பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளார்.
- வரவிருக்கும் பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு டிஜிட்டல் வழி ஷெங்கன் நுழைவு இசைவுச் சீட்டு வழங்கும் முதல் ஐரோப்பிய நாடாக பிரான்ஸ் மாற உள்ளது.
- மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய அறங்காவலர் குழுவின் புதிய தலைவராக S. ருக்மணி பழனிவேல் ராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நறுமணப் பொருட்கள் மற்றும் சமையல் நறுமண மூலிகைகளுக்கான கோடெக்ஸ் குழுவானது (CCSCH) அதன் 7வது அமர்வை கேரளாவின் கொச்சியில் நடத்தியது.
- மத்தியப் புவியியல் சார் நிரலாக்க வாரியத்தின் 63வது கூட்டமானது மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் நடைபெற்றது.
- 878 நாட்கள் அல்லது ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு, விண்வெளியில் அதிக நேரம் செலவழித்த ரஷ்ய விண்வெளி வீரர் என்ற உலகச் சாதனையினை ஒலேக் கோநோன்னேன்கோ என்பவர் படைத்துள்ளார்.
- ஐரோப்பிய ஒன்றியமானது, போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் கையாளப்படும் நடவடிக்கைகளையும் குற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் குழுக்களின் மைய நடவடிக்கை பகுதிகளின் பரவலை எதிர்த்துப் போராடச்

செய்வதற்குமான நடவடிக்கைகளையும் ஒத்திசைப்பதற்கும் "ஐரோப்பிய துறைமுகக் கூட்டணி" ஒன்றைத் தொடங்கியுள்ளது.

- ❖ முன்னாள் இந்திய விக்கெட் கீப்பர் ஃபரோக் எஞ்சினியர் மற்றும் ஆல்-ரவுண்டர் ரவி சாஸ்திரி ஆகியோருக்கு கர்னல் C.K. நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் பெண் எந்திர மனித விண்வெளி வீராங்கனையான வியோமித்ராவின் விண்வெளி பயணம் ஆனது இந்த ஆண்டின் மூன்றாவது காலாண்டில் திட்டமிடப்பட்டு உள்ளது.
- ❖ கடற்படை வீரர்கள் சார்ந்த நிர்வாகம், செயல்திறன் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்தியக் கடற்படையானது 2024 ஆம் ஆண்டினை 'கடற்படை வீரர்களைச் சார்ந்த மக்களின் ஆண்டாக' அறிவித்துள்ளது.
- ❖ மோடி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் தலைவரான டாக்டர் பினா மோடிக்கு '2023 ஆம் ஆண்டின் சிறந்த வணிகப் பெண்மணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ❖ பிராண்ட் ஃபைனான்ஸால் தொகுக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டு நிறுவனக் காப்பாளர்கள் (நிறுவனத்தின் வணிக மதிப்பினை நிலையான முறையில் கட்டமைத்துக் காக்கும் தலைமை நிர்வாக அதிகாரி) குறியீட்டில் முகேஷ் அம்பானி இந்திய அளவில் முதல் இடத்தையும், உலக அளவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார்.
- ❖ இந்தியாவில் வடகிழக்குப் பகுதியின் முதல் யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருத்துவமனையானது அசாமின் திப்ருகார் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது.
- ❖ ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் சார்ந்த பரிவர்த்தனைகள் ஆனது ஜனவரி மாதத்தில் 18.41 டிரில்லியன் ரூபாய் மதிப்பினை எட்டி, பரிவர்த்தனை மதிப்பின் அடிப்படையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.
- ❖ ஆயுதங்கள் பொருத்தப்பட்ட MQ-9B ஸ்கைகார்டியன் எனப்படும் 31 ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் சார்பு உபகரணங்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ கனடா நாட்டில், ஒவ்வோர் ஆண்டின் பிப்ரவரி மாதத்தின் முதல் வாரம் முழுவதும் சர்வதேச வளர்ச்சி வாரம் (IDW) ஆக நினைவு கூரப்படுகிறது.
- ❖ காமன்வெல்த் சட்டக் கல்வி சங்கத்தின் (CLEA) 2024 ஆம் ஆண்டு காமன்வெல்த் வழக்கறிஞர்கள் மற்றும் அரசுத் தலைமை வழக்கறிஞர்கள் பொது மாநாடு (CASGC) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
    - ○ இந்த நிகழ்வின் கருத்துரு, "பல்வேறு நாடுகளுக்கிடையே நீதி வழங்குவதில் உள்ள சவால்கள்" என்பதாகும்.
- ❖ முதல் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீரர் அபினவ் பிந்த்ரா வர உள்ள 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதியை ஏந்திச் செல்லும் வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ ஈபிள் டவர் தற்போது ஐரோப்பாவில் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (யுபிஐ) மூலமாக கட்டணங்களை ஏற்கும் முதல் தளமாக மாறியுள்ளதன் மூலம், ஐரோப்பியக் கண்டத்தில் இந்த எண்ணிம பண வழங்கீட்டுச் செயல்முறையை ஏற்றுக் கொண்ட முதல் நாடாக பிரான்ஸ் திகழ்கிறது.
- ❖ நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில், ஒரு கிலோ 29 ரூபாய் என்ற விலை வீதத்தில் பாரத் அரிசி வகையின் சில்லறை விற்பனையை அரசாங்கம் விரைவில் தொடங்கவுள்ளது.

- மத்தியப் பொதுத்துறை நிறுவனமான REC லிமிடெட், 'நிலையான நிதி முறைக்கான அசெட் டிரிபிள் A விருதுகளில்' 2024 ஆம் ஆண்டின் சிறந்தப் பசுமைப் பத்திரம்-பெரு நிறுவனங்கள் விருதைப் பெற்றுள்ளது.
- இந்தியா சமீபத்தில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அபியாஸ் எனப்படும் அதிவேக நீட்டிக்கப்படக் கூடிய வான்வழி இலக்கு அழிப்பு ஏவுகணையினை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தது.
- இந்திய வானியல் கழகத்தின் 42வது கூட்டம் பெங்களூரில் நடைபெற்றது.
- இந்தியா மற்றும் குவைத் அணி இடையிலான 2026 ஆம் ஆண்டு FIFA உலகக் கோப்பை போட்டியின் தகுதிச் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கான இடமாக ஹைதராபாத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- பாதுகாப்பான இணைய தினம் ஆனது ஆண்டுதோறும் பிப்ரவரி 08 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
  - 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Inspiring Change. Making a difference, managing influence and navigating change online" என்பதாகும்.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சங்கர் லால் குமாவத்தை தமிழகத்தில் கூடுதல் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமித்துள்ளது.
- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு நிதி மசோதாவினை நிறைவேற்றியதன் மூலம் 2024-25 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையினை நிறைவேற்றச் செய்வதற்கான செயல்முறையினை நிறைவு செய்தது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான அதிகாரமளிப்புத் துறையானது (திவ்யாங்ஜன்) திரிபுராவின் அகர்தலா நகரில் 2024 ஆம் ஆண்டு திவ்ய கலா மேளாவினை ஏற்பாடு செய்துள்ளது.
- டெல்லியில் பெண்களுக்கு வழங்கப்படுவது போல் மூன்றாம் பாலினத்தவருக்கும் பேருந்து சேவை இலவசமாக வழங்கப்படும் என்று டெல்லி அரசு அறிவித்துள்ளது.
- புகழ்பெற்ற இசையமைப்பாளரான பியாரேலால் ஷர்மா கலைத்துறையில் அவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக லக்ஷ்மி நாராயணா சர்வதேச விருது என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.
- கடற்பாசி சாகுபடியை ஊக்குவிப்பதற்கான தேசிய மாநாடு ஆனது குஜராத் மாநிலம் கட்ச் நகரில் நடைபெற்றது.
- டாடா அறக்கட்டளை நிறுவனமானது இந்தியாவின் முதல் அதிநவீன சிறிய விலங்குநல மருத்துவமனையை மும்பையின் மகாலக்ஷ்மி நகரில் தொடங்க உள்ளது.
- டெல்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (AIIMS) ஆனது, மார்பகம் மற்றும் கருப்பைப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய உதவும் iOncology.ai. எனப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலா சேவைக் கழகம் ஆனது, சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இராமாயணச் சுற்று வட்டாரச் சுற்றுலாச் சேவை இரயிலை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த 18 நாட்கள் அளவிலான பயணம் ஆனது டெல்லியில் இருந்து தொடங்கி, அயோத்தி, ஜனக்பூர் (நேபாளம்), சீதாமர்ஹி, வாரணாசி, நாசிக், இராமேஸ்வரம் உள்ளிட்ட பல இடங்களை உள்ளடக்கியதாகும்.

- உலக வங்கியின் தளவாடங்கள் செயல்திறன் குறியீட்டு அறிக்கையில் (2023) இடம் பெற்ற 139 நாடுகளில் இந்தியா 38வது இடத்தினைப் பெற்றுள்ளது.
    - இப்பட்டியலில் இந்தியாவின் தரநிலையானது 2018 ஆம் ஆண்டில் 44வது இடத்தில் இருந்து ஆறு இடங்களும், 2014 ஆம் ஆண்டில் 54வது இடத்தில் இருந்து பதினாறு இடங்களும் முன்னேறியுள்ளது.
- 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட மாநில அரசு ஊழியர்களுக்கான பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) மீண்டும் நடைமுறைப்படுத்துவதாக சிக்கிம் மாநில அரசு அறிவித்துள்ளது.
    - வடகிழக்கு மாநிலங்களுள் இந்த முடிவை அமல்படுத்திய முதல் மாநிலம் இதுவாகும்.
- கூகுள் நிறுவனமானது பார்டு எனப்படும் தனது செயற்கை நுண்ணறிவு உரையாடு மென்பொருளின் பெயரை ஜெமினி என மாற்றியுள்ளது.
- துபாய் நாடானது 2024 ஆம் ஆண்டு உலக அரசாங்கங்களின் உச்சி மாநாட்டினை 'எதிர்கால அரசாங்கங்களை வடிவமைத்தல்' என்ற கருத்துருவின் கீழ் நடத்தியது.
    - அது இந்தியா, துருக்கி மற்றும் கத்தார் ஆகிய நாடுகளை அந்த மாநாட்டின் கௌரவ விருந்தினர்களாக நியமித்தது.
- நார்வேயின் டெலினர் நிறுவனமானது, அண்டார்டிகாவில் உலகின் தென்கோடியில் அமைந்த தொலைபேசி சேவை வழங்கீட்டு நிலையத்தினைத் தொடங்கியுள்ளது.
    - இது முதல் முறையாக முழுவதும் உறைந்த இந்த கண்டத்தின் ஒரு முனையில் தொடர் தொலைபேசி தொடர்பு சேவைகளைக் கொண்டுவருகிறது.
- வங்க தேசத்தில் நடந்த SAFF 19 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் கால்பந்து போட்டித் தொடரின் கூட்டு வெற்றியாளர்களாக இந்தியா மற்றும் வங்காளதேசம் அறிவிக்கப் பட்டு உள்ளன.
- சிந்து கணபதி (37) என்பவர், தெற்கு இரயில்வே நிர்வாகத்தின் முதல் திருநங்கை பயணச் சீட்டு பரிசோதகராக (TTE) நியமிக்கப்பட்டுள்ளார் (திண்டுக்கல்லில் பணியில் அமர்த்தப் பட்டுள்ளார்).
- இந்தியக் குடியரசுத் தலைவர், ஆண்டுதோறும் நடைபெறும் ஆதி மஹோத்சவ் 2024 எனப்படும் தேசியப் பழங்குடியினர் திருவிழாவினைப் புது டெல்லியில் தொடங்கி வைத்தார்.
- 23வது உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடானது புது டெல்லியில் உள்ள ஆற்றல் மற்றும் வளங்கள் ஆய்வு நிறுவனத்தினால் (TERI) ஏற்பாடு செய்யப்பட்டது.
- உலகளாவிய வழிகாட்டுதல் செயற்கைக்கோள் அமைப்பின் (GNSS) அடிப்படையிலான குறுக்கீடுகள் குறைவான எவ்வித தடையுமின்றி சுங்க வரி வசூலிப்பு மேற்கொள்ளும் முறையானது, 10-வழித்தட மைசூரு-பெங்களூரு விரைவுச்சாலையில் (நெடுஞ்சாலை) கட்டுப்படுத்தப்பட்ட அணுகல் என்ற அடிப்படையில் ஒரு சோதனைத் திட்டமாக செயல் படுத்தப் பட்டுள்ளது.
- ஆஸ்திரேலிய அணியானது, தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்டோருக்கான ICC உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய அணியினை வீழ்த்தி 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் தனது நான்காவது பட்டத்தை வென்றுள்ளது.
- இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, ICC ஆடவர் டெஸ்ட் போட்டியின் பந்துவீச்சு தரவரிசையில் முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஆனார்.

- வாகனப் பதிவு எண் பலகைகளில் மாநிலத்தின் பெயரைக் குறிக்கும் வகையில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 'TS' என்பதற்குப் பதிலாக 'TG' என்ற குறியீட்டைப் பயன்படுத்துவதற்கு தெலுங்கானா அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- சர்வதேச நீதிமன்றத்தின் புதிய தலைவராக 3 ஆண்டு காலத்திற்கு லெபனான் நீதிபதி நவாப் சலாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் முதல் எண்ணிம வழியிலான தேசியக் கல்வெட்டு அருங்காட்சியகம் ஆனது ஐதராபாத்தில் உள்ள சாலார் ஜங் அருங்காட்சியகத்தின் ஒரு பிரிவில் நிறுவப் பட உள்ளது.
- சீனாவில் அமைந்துள்ள சர்வதேச சிறு தேயிலை தொழில் உரிமையாளர்கள் கூட்டமைப்பின் (CITS) தலைமையகம் ஆனது இந்தியாவிற்கு மாற்றப்பட உள்ளது.
- சீன கிராண்ட் மாஸ்டர் வெய் யி, நெதர்லாந்தில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டு டாடா எஃகு நிறுவனத்தின் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகச் சேவைகள் ஆனது இலங்கை மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 7வது இந்தியப் பெருங்கடல் மாநாடானது ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரில் நடைபெற்றது.
  - இந்த நிகழ்வின் கருத்துருவானது, "நிலைத்தன்மை மிக்க மற்றும் நிலையான இந்தியப் பெருங்கடலை நோக்கி" என்பதாகும்.
- திருப்பத்தூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உள்ள மலையாளிப் பழங்குடியினத்தைச் சேர்ந்த 23 வயது பெண் V.ஸ்ரீபதி, தனது சமூகத்திலிருந்து முதல் உரிமையியல் நீதிபதியாக தேர்வு பெற்று வரலாறு படைத்துள்ளார்.
- பர்கூர் கால்நடை ஆராய்ச்சி நிலையம் ஆனது பர்கூர் இனத்தைக் காத்ததற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் தேசிய விலங்கின மரபணு வள வாரியத்தின் (NBAGR) பெரிய அசை போடும் கால்நடைகள் பிரிவில் (நிறுவனங்கள்) மூன்றாவது இடத்தைப் பெற்றது.
- 2026 ஆம் ஆண்டில் தேர்தல் தொகுதிகளை மறுசீரமைப்பதற்கான திட்டமிடப்பட்ட எல்லை மறுநிர்ணய நடவடிக்கை மற்றும் மத்திய அரசினால் முன்மொழியப்பட்ட "ஒரு நாடு, ஒரு தேர்தல்" கொள்கையை எதிர்த்து தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.
- மத்திய நீர் வளத் துறை அமைச்சகமானது, கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் மறு பயன்பாட்டில் மேற்கொண்ட சிறந்த பல்வேறு முயற்சிகளுக்காக நொய்டா என்ற நகரத்தினை "சிறந்த தண்ணீர் போராளி" நகரமாக அறிவித்து கௌரவித்துள்ளது.
- முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் அனில் கும்ப்ளேவுக்குப் பிறகு டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுகளை வீழ்த்திய இரண்டாவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை சுழல் பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் முன்னணி ஆடவர் ஒற்றையர் பிரிவு டென்னிஸ் வீரர் சுமித் நாகல் தனது சென்னை ஓபன் சேலஞ்சர் போட்டியில் வெற்றி பெற்றதையடுத்து ATPயின் முதல் 100 இடங்களில் 98வது இடத்தைப் பெற்றுள்ளார்.
  - 1973 ஆம் ஆண்டில் ATP தரவரிசை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து இதுவரை 10 இந்திய ஆண்கள் மட்டுமே முதல் 100 இடங்களை எட்டியுள்ளனர்.

- தெலுங்கானா சட்டமன்றம் ஆனது, மாநிலம் முழுவதும் விரிவான குடும்பவாரியான சாதி வாரிக் கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.
  - பீகார் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களை அடுத்து இது மூன்றாவது மாநிலமாகும்.
- அருணாச்சலப் பிரதேச மாநிலம் ஆனது, ஜல் ஜீவன் திட்டத்தின் (JJM) கீழ் அந்த மாநிலத்தின் 98 சதவீத வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு மூலம் குடிநீர் சேவை வழங்கி வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.
  - இதனை எட்டும் முதல் வடகிழக்கு மாநிலம் இதுவே ஆகும்.
- இந்தியாவின் முதல் ஹெலிகாப்டர் மூலமான அவசர மருத்துவச் சேவை (HEMS) ஆனது உத்தரகாண்டில் தொடங்கப்பட உள்ளது.
  - விபத்துக்குள்ளான எந்தவொரு நபரையும் சுமார் 150 கி.மீ. சுற்றளவில் அமைந்த எந்தவோரு மருத்துவமனைக்கும் விமானத்தில் ஏற்றிச் செல்வதற்காக எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் இது அனுப்பப் படும்.
- கொச்சின் சர்வதேச விமான நிலைய லிமிடெட் (CIAL) நிறுவனமானது கொச்சி விமான நிலைய வளாகத்தில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையை அமைப்பதற்காக BPCL நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
  - இது ஒரு விமான நிலையத்திற்குள் அமைந்துள்ள உலகின் முதல் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலை மற்றும் எரிபொருள் நிலையம் ஆக விளங்கும்.
- தற்போதைய மாரத்தான் உலகச் சாதனையாளர் கெல்வின் கிப்டம் மற்றும் அவரது பயிற்சியாளர் கெர்வைஸ் ஹகிசிமானா ஆகியோர் சமீபத்தில் கென்யா நாட்டில் உயிரிழந்தனர்.
- துபாய் அரசு ஆனது, 2026 ஆம் ஆண்டிற்குள் உலகிலேயே முதல் முறையாக நகர முழுவதுமான மின்சார வான்வழி வாடகை வாகனச் சேவைகள் மற்றும் வான்வழி வாடகை வாகன நிலையங்கள் (வெர்டிபோர்ட்) வலையமைப்புகளை உருவாக்க உள்ளது.
- துபாயில் நடந்த 2024 ஆம் ஆண்டு உலக அரசாங்க உச்சி மாநாட்டில், செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் பல்வேறு அரசு துறை சேவைகளில் முன்னோடியாக விளங்கியதற்காக இந்திய நாடானது, மதிப்புமிக்க 9வது GovTech (அரசு தொழில்நுட்ப சேவை) பரிசைப் பெற்றுள்ளது.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனமானது 20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சந்தை மூலதனத்தை எட்டிய முதல் இந்திய நிறுவனமாக மாறியுள்ளது.
- முதலாவது எண்ணிம இந்தியாவிற்கான எதிர்காலத் திறன்கள் உச்சி மாநாடு ஆனது அசாம் மாநிலத்தின் கௌகாத்தியில் நடைபெற்றது.
- 1951 முதல் 1962 ஆம் ஆண்டு வரை இந்தியாவிற்காக 11 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய இந்தியாவின் மிகவும் வயதான டெஸ்ட் கிரிக்கெட் வீரர் தத்தாஜிராவ் கெய்க்வாட் சமீபத்தில் குஜாரத்தின் பரோடாவில் காலமானார்.
- இந்தியாவின் முதல் முன்மாதிரியான ஓட்டுநர் இல்லாத மெட்ரோ இரயிலின் சோதனை ஓட்டமானது பெங்களூருவில் நடத்தப்பட உள்ளது.
- ஐக்கிய நாடுகளின் மத நல்லிணக்க வாரக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக திருவனந்தபுரத்தில் உலக அமைதி உச்சி மாநாடு நடைபெற்றது.

- இந்த உச்சி மாநாட்டின் கருத்துரு, 'ஒற்றுமை, அமைதியின் சக்தி மற்றும் மனித குலத்தின் நிலையான மேம்பாட்டினை மறுவரையறை செய்தல்' என்பதாகும்.

❖ கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவுவதற்கு ஆளில்லா விமானங்களை (DRISHYAA ஆளில்லா விமானங்கள்) பயன்படுத்திய இந்தியாவின் முதல் காவல் படைப் பிரிவு என்ற பெருமையை ஹரியானா காவல்துறை பெற்றுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) கண்ணீர்ப் புகை குண்டு பிரிவானது (TSU) ஆளில்லா விமானங்கள் அடிப்படையிலான இந்தக் கண்ணீர்ப் புகை குண்டு ஏவும் கருவியை உருவாக்கியது.

❖ ஐநாவிற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியான ருசிரா காம்போஜ் சமூக மேம்பாட்டு ஆணையத்தின் 62வது அமர்வுக்குத் தலைமை தாங்கினார்.

❖ ஜெர்மனி நாடானது உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறி ஜப்பான் நாட்டினைப் பின்னுக்குத் தள்ளியதோடு, ஜப்பான் நாட்டின் பொருளாதாரமானது மந்த நிலைக்குத் தள்ளப்பட்டது.

❖ குறிப்பிடப்படாத குற்றச்சாட்டுகளுக்காக, முன்னதாக மரண தண்டனை விதிக்கப் பட்டிருந்த எட்டு இந்தியக் கடற்படை அதிகாரிகளைக் கத்தார் நீதிமன்றம் விடுவித்து உள்ளது.

❖ இந்திய நாடானது, சதுரங்க ஒலிம்பியாட் போட்டியின் ஜோதியை 2024 ஆம் ஆண்டு போட்டியை நடத்த உள்ள ஹங்கேரி நாட்டிடம் வழங்கியது.

❖ தன்பாலின திருமணத்தைச் சட்டப்பூர்வமாக்கிய முதல் மரபுவழி (வைதீக) கிறிஸ்தவ நாடாக கிரீசு நாடு மாறியுள்ளது.

❖ அர்செனேல் குழுமம் மற்றும் சவுதி அரேபிய இரயில்வே (SAR) நிர்வாகமானது, சமீபத்தில் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுதும் பயணிக்கும் முதல் சொகுசு இரயிலை உருவாக்குவதற்காக கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

- பாலைவனத்தின் கனவு என்று அழைக்கப்படும் இந்த இரயில் ஆனது முழுவதுமாக சவுதி நாட்டின் பாணியிலும் மற்றும் பாரம்பரியத்தாலும் ஈர்க்கப்பட்ட வடிவமைப்பில் இத்தாலியில் தயாரிக்கப்பட உள்ளது.

❖ சவுதி அரேபியா நாடானது இரண்டாவது உலக பாதுகாப்பு கண்காட்சியை ரியாத் நகரில் நடத்தியது.

- இந்திய நாட்டின் சார்பாக முப்படைகளின் பெண்கள் படைப்பிரிவு இதில் பங்கேற்றது.

❖ பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கேளிக்கை விடுதிகள், நட்சத்திரத் தங்கும் விடுதிகள், மதுபான கூடங்கள் ஆகியவற்றில் கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகளை நிறுவி கண்காணிக்குமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

❖ நாட்டின் மிகவும் மதிப்புமிக்க பட்டியலிடப்படாத நிறுவனங்களின் பட்டியலில் இந்திய சீரம் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது.

- அதைத் தொடர்ந்து இந்தியாவின் தேசியப் பங்குச் சந்தை மற்றும் மேகா பொறியியல் மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம் ஆகியவை இடம் பெற்றுள்ளது.

❖ 100 வயதான ஈரானிய உள்நீச்சல் வீரர் தாகி அஸ்காரி தோஹாவில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டிற்கான உலக நீர் சார்ந்த சாம்பியன்ஷிப் போட்டிகளில் தொடக்க விளக்கக் காட்சி உள்நீச்சலை மேற்கொண்டார்.

- 1951 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை இவர் வென்றுள்ளார்.

- இந்தியக் கடற்படையின் மிகப்பெரிய பலதரப்புக் கடற்படைப் பயிற்சியான மிலன் 2024 என்ற பயிற்சியானது ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வருகிறது.
- வேம்பு உச்சி மாநாடு மற்றும் உலகளாவிய வேம்பு வர்த்தக கண்காட்சி ஆனது, ஜான்சி நகரில் அமைந்துள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் மத்திய வேளாண் வனவியல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து புது டெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 60வது முனிச் பாதுகாப்பு மாநாடு ஆனது ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெற்றது.
  - சர்வதேசப் பாதுகாப்புச் சமூகத்திற்குள் தொடர்ச்சியான, முறையாக ஏற்பாடு செய்யப் பட்ட மற்றும் முறைசாராப் பேச்சுவார்த்தைகளைத் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் நம்பிக்கையை கட்டமைப்பதற்கும், மோதல்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதற்கும் பங்களிப்பதையும் இது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய நாடானது, ஐக்கிய அரபு அமீரகத்தில் 100,000 சதுர மீட்டர் பரப்பளவில் 'பாரத் மார்ட்' என்ற கிடங்கு வசதியை நிறுவி வருகிறது.
- சண்டிகரில் உள்ள தாகூர் திரையரங்கில் 11வது சர்வதேச பொம்மலாட்ட திருவிழா தொடங்கியது.
- இந்திய விமானப்படையானது, ராஜஸ்தானின் பொக்ரான் சோதனைத் தளத்தில் நடைபெற்ற வாயு சக்தி-24 என்ற படைப் பயிற்சியில் பகல் மற்றும் இரவு நேரங்களில் மேற்கொள்ளக் கூடிய தனது தாக்குதல் திறன்களைக் காட்சிப்படுத்தியது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், இரயில்வே பாதுகாப்பு சிறப்புப் படை (RPSF) காவலர் சசிகாந்த் குமாருக்கு 2023 ஆம் ஆண்டிற்கான 'ஜீவன் ரக்சா பதக்' விருதை வழங்கினார்.
- சத்ரபதி சிவாஜி அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் 'டண்ட் பட்டா' அல்லது கை வாள் மகாராஷ்டிரா மாநிலத்தின் அரசு ஆயுதமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது, 1959 ஆம் ஆண்டின் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை சட்டத்தின் 66வது பிரிவின் (1) வது துணைப்பிரிவின் (j) என்ற விதியை நீக்குவதற்கான மசோதாவை அறிமுகப்படுத்தியது.
  - இந்த விதியானது, "ஒரு நபர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அவர் எந்தவொரு சமய அமைப்பின் அறங்காவலராக நியமிக்கப்படுவதற்கும், அந்தப் பொறுப்பினை வகிக்கவும் தகுதியற்றவர்" என்று கூறுகிறது.
- எழுத்தாளரும் காங்கிரஸ் அரசியல்வாதியுமான சசி தரூர் அவர்களுக்கு, பிரான்சு நாட்டின் உயரிய குடிமை விருதான "செவாலியர் டி லா லெஜியன் டி ஹானர்" விருது சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது.
- தவறான தகவல் பரவல் எதிர்ப்புக் கூட்டணி (MCA) மற்றும் மெட்டா ஆகியவை இணைந்து, வாட்ஸ்அப்பில் (புலனம் ஊடகத்தில்) பரவும் தகவல்களின் மெய்த் தன்மையைச் சரிபார்ப்பதற்கான பிரத்தியேக உதவி எண் சேவையினை அறிமுகம் செய்வதற்கான தனது திட்டங்களை அறிவித்துள்ளன.
- இந்தியாவின் முதல் திறன் இந்தியா மையம் ஆனது ஒடிசாவின் சம்பல்பூரில் திறக்கப் பட்டது.

- மத்தியப் பிரதேச மாநில அரசானது, 2024-25 ஆம் கல்வியாண்டிலிருந்து 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வாரம் ஒருமுறை 'புத்தகப்பை இல்லாத' தினமாக அறிவித்துள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோண்டா வனத்துறையானது, ஆமைகளின் செழுமையான பன்முகத் தன்மைக்குப் பெயர் பெற்ற சர்ஜு நதியில் ஆமைகள் வளங்காப்பகத்தினை நிறுவ திட்டமிட்டுள்ளது.
- சண்டிகர் தொழில்துறை மற்றும் சுற்றுலா மேம்பாட்டுக் கழகமானது சுக்னா ஏரிக்கு அருகில், வட இந்தியாவிலேயே முதல் முறையாக வெறும் மூன்றே நிமிடங்களில் பீட்சாக்களை தயார் செய்யும் வகையிலான பீட்சா ATM என்ற கருவியினை நிறுவியுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, எண்ணிம பண வழங்கீட்டுச் சேவை நிறுவனமான Mswipe Technologies நிறுவனத்திற்கு பண வழங்கீட்டுத் தொகுப்பு நிறுவன (PA) உரிமம் வழங்கப் பட்டுள்ளது.
- இந்திய நாடானது, 18 ஆண்டுகளுக்குப் பிறகு பருப்பு வகைகள் 24 எனப்படும் உலகளாவியப் பருப்பு வகைகள் மாநாட்டினைச் சமீபத்தில் புது தில்லியில் நடத்தியது.
- சுவீடன் நாட்டுப் புகைப்படக் கலைஞர் அலெக்ஸ் டாசன், அவரது 'திமிங்கல எலும்புகள்' (Whale Bones) என்ற புகைப்படத்திற்காக 2024 ஆம் ஆண்டின் சிறந்த கடலடிப் புகைப்படக் கலைஞராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- சர்வதேச சூரியசக்திக் கூட்டணி (ISA) ஆனது, சமீபத்தில் மால்டாவைத் தனது கூட்டமைப்பில் இணைந்த 119வது நாடாக அறிவித்துள்ளது.
- இந்தியா, வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் உட்பட 19 நாடுகளின் பங்கேற்புடன் 'சாந்தி பிரயாஸ் IV' எனப்படுகின்ற ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியானது நேபாளத்தில் தொடங்கியது.
- கிரிக்கெட்டில் பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் 271 இன்னிங்ஸ்களில் 10,000 டி20 ரன்களை எட்டிய விளையாட்டு வீரர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- புது டெல்லியில் நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுச் சபையின் (FSDC) 28வது கூட்டத்திற்கு மத்திய நிதி அமைச்சர் தலைமை தாங்கினார்.
- இந்தியா, மாலத்தீவுகள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த கடலோரக் காவல் படையினர் மாலத்தீவில் நான்கு நாட்கள் அளவிலான 'DOSTI-16' எனப்படுகின்ற ஒரு முத்தரப்புப் பயிற்சியில் பங்கேற்றுள்ளனர்.
- 'அமுல்' தயாரிப்பின் உரிமைதார நிறுவனமான குஜராத் கூட்டுறவு பால் சந்தைப் படுத்தல் கூட்டமைப்பு (GCMMF) ஆனது சமீபத்தில் தனது பொன்விழாவை (50வது ஆண்டு) கொண்டாடியது.
- உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவானது, நாட்டில் முதலாவது துணை நிலை மட்டப் பருவநிலை நெகிழ்திறன் பசுமை நிதியாக அமையப் போகின்ற நிதியை நிறுவச் செய்வதற்காக வேண்டி மாநில அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக கோவா வந்தடைந்தது.
- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT-G) ஆனது, இந்தியாவின் மிகப்பெரிய ஆளில்லா விமானங்களுக்கான விமானிகள் பயிற்சி நிறுவனத்தினைத் தொடங்கியுள்ளது.
- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் ஆனது, வரவிருக்கும் 7வது வடகிழக்கு இளையோர் திருவிழாவின் (2024) முத்திரைச் சின்னத்தினை வெளியிட்டுள்ளது.

- பியாரியின் இலைக் குரங்கு வகையானது இந்தத் திருவிழாவின் உருவச் சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

- தற்போது நடைபெற்று வரும் 2024 ஆம் ஆண்டு ரைசினா பேச்சுவார்த்தையினை ஒட்டி இந்தியா-நார்டிக்-பால்டிக் நாடுகளின் கூட்டத்தை இந்தியா நடத்தியது.
    - சுவீடன், பின்லாந்து, டென்மார்க், எஸ்டோனியா மற்றும் லாட்வியா ஆகிய ஐந்து நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மற்றும் நார்வே, ஐஸ்லாந்து மற்றும் லிதுவேனியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

- ஜசிந்தா கல்யாண், விளையாட்டுத் துறையின் வரலாற்றில் நாட்டின் முதல் பெண் கிரிக்கெட் ஆடுகள சீர்திருத்தப் பொறுப்பாளர் என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.


- மேகாலயாவின் ஷில்லாங்கில் உள்ள இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் (IIM) இந்தியாவின் முதல் 'கதி சக்தி ஆராய்ச்சி இருக்கை' நிறுவப்பட உள்ளது.

- 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உலகின் மிகவும் பிரபலமான T20 கிரிக்கெட்டின் வெற்றியைக் கொண்டாடுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட IPL போட்டிகளின் சிறந்த அணியின் தலைவராக M.S. தோனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது, உலகிலேயே முதல் முறையாக முழுவதும் மரப்பொருட்களால் தயாரிக்கப்பட்ட லிக்னோசாட் ஆய்வுக் கலம் எனப் படுகின்ற செயற்கைக் கோளினை இந்த ஆண்டின் கோடை காலத்தில் விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ளன.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் சடல உறுப்பு தானத்தில் புதிய சாதனை



A new high

T.N.'s deceased donor organ transplantation programme, which was launched in 2008, saw a record number of donations in a month with 30 donors from Jan.1 to 29 this year

HOSPITALS THAT REPORTED MORE THAN ONE DONOR

| Hospital | No. of donors |
|---|---|
| Government Rajaji Hospital, Madurai | 4 |
| Government Rajiv Gandhi Government General Hospital, Chennai | 4 |
| Government Namakkal Medical College Hospital | 2 |
| MIOT Hospitals | 2 |
| SIMS Hospital, Chennai | 2 |
| Government Mohan Kumaramangalam Medical College Hospital, Salem | 2 |

BREAKDOWN OF DONATIONS FOR JANUARY 2024

| Major/minor organs and tissues | Amount received |
|---|---|
| Kidney | 45 |
| Liver | 27 |
| Heart | 10 |
| Lung | 13 |
| Corneas | 50 |
| Skin | 10 |
| Bone | 17 |
| Heart valves | 14 |
| TOTAL | 183 |

27 non-transplant organ retrieval centres in government medical colleges

- தமிழகத்தில் சடல உறுப்பு தானம் ஆனது புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் 29 ஆம் தேதி வரை 30 உறுப்புத் தானம் பதிவானதை அடுத்து, ஒரு மாதத்தில் தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகமான சடல உறுப்பு தானம் பதிவாகியுள்ளது.
- 2008 ஆம் ஆண்டு முதல் சடல உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் தொடங்கப் பட்டதிலிருந்து, ஒரு மாதத்தில் பதிவான அதிகபட்ச சடல உறுப்புத் தானம் இதுவாகும்.

## ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’ திட்டம்




- ‘உங்களைத் தேடி, உங்கள் ஊரில்’ திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.
- இது பல்வேறு சேவைகளை நன்கு வழங்கச் செய்வதை மேம்படுத்துவதையும் திட்ட அமலாக்கத்தினை விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட அளவிலான மூத்த அதிகாரிகள் ஒவ்வொரு மாதத்தின் நான்காவது புதன்கிழமையன்று ஒரு தாலுக்காவில் 24 மணிநேரம் (காலை 9 மணி முதல் மறுநாள் 9 மணி வரை) முழுவதும் செலவிடுவார்கள்.
- அவர்கள் பல்வேறுத் திட்டங்களின் செயல்பாட்டை மதிப்பாய்வு செய்வதோடு, உள் கட்டமைப்பை ஆய்வு செய்து பொதுமக்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவார்கள்.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள், ரேஷன் பொருள் விற்பனைக் கடைகள், கூட்டுறவு சங்கங்கள், பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் போன்றவற்றில் அதிகாரிகள் மதிய வேளைகளில் ஆய்வு மேற்கொள்வர்.
- இந்த வருகையின் மூலம் பெற்ற கருத்துகளைப் பற்றி விவாதிப்பதற்காக மதியம் 2.30 முதல் மாலை 4.30 மணிக்குள் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படும்.
- மாலை 4.30 மணி முதல் மாலை 6 மணி வரையிலான ஒன்றரை மணி நேர காலமானது, பொதுமக்களுடன் தொடர்பு கொள்வதற்காகவும், அவர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்காகவும் பயன்படுத்தப்படும்.
- அவர்கள் மாலை 6 மணி முதல், சமூக நலத்துறையால் நிர்வகிக்கப்படும் பேருந்து நிலையங்கள் மற்றும் பொது கழிப்பறைகள் போன்ற பல பொதுச் சேவை வசதிகளை பார்வையிடுவார்கள்.

- மறுநாள் காலை, அதிகாரிகள் பல்வேறு கிராமங்களில் ஆய்வு செய்வதன் மூலம் அங்குள்ள அடிப்படை குடிமை சேவை வசதிகளை ஆய்வு செய்வதோடு, முதல் அமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த ஆய்வினையும் மேற்கொள்வர்.

## கோயில் நுழைவு குறித்து சென்னை உயர்நீதிமன்றம்





- இந்துக்கள் அல்லாதவர்கள் கோயில்களின் கொடிமரத்திற்கு அப்பால் அனுமதிக்கப் பட மாட்டார்கள் என்பதைக் குறிக்கும் பலகைகளைக் கோயில்களின் நுழைவாயிலில் உள்ள கொடிமரம் அருகே நிறுவுமாறு மாநில அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்து அல்லாத ஒருவர் கோயிலில் உள்ள ஒரு குறிப்பிட்ட தெய்வத்தைத் தரிசிக்க விரும்பினால், அதிகாரிகள் அவருக்கு தெய்வத்தின் மீது நம்பிக்கை இருப்பதாகவும், இந்து மதம் மற்றும் கோயிலின் பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவார்கள் என்றும் அந்த நபரிடமிருந்து உறுதிமொழி பெறுவார்கள்.
- அத்தகைய உறுதிமொழியின் அடிப்படையில் இந்து அல்லாத ஒருவர் நுழைய அனுமதிக்கப் படும் போதெல்லாம், அந்த உறுதிமொழி கோயில் நிர்வாகத்தினால் பராமரிக்கப் படும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- மதத்தில் நம்பிக்கை இல்லாத இந்துக்கள் அல்லாதவர்களைக் கொடிமரத்திற்கு அப்பால் அனுமதிக்கக் கூடாது என அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

## 18வது வனவிலங்கு சரணாலயம் – தமிழ்நாடு

- தமிழக அரசானது, ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் மலையில் உள்ள 80,114.80 ஹெக்டேர் பரப்பிலான காப்புக் காடுகளை தந்தை பெரியார் வனவிலங்குச் சரணாலயமாக அறிவித்துள்ளது.
- இந்தக் காப்புக் காடுகள் ஆனது, நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தினைக் காவேரி தெற்கு வனவிலங்கு சரணாலயத்துடன் இணைக்கிறது.

- இது மாநிலத்தின் 18வது வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது தேசிய புலிகள் வளங்காப்பு ஆணையத்தினால் அடையாளம் காணப்பட்ட புலிகள் வழித் தடங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது அதிக எண்ணிக்கையில் புலிகள் காணப்படும் பகுதியும் ஆகும்.




## 'சாதி மதம் அற்றவர்' சான்றிதழ்






COMMUNITY CERTIFICATE

- வருவாய்த்துறை அதிகாரிகளால் 'சாதி மதம் அற்றவர்' சான்றிதழை வழங்க முடியாது என சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- அத்தகையதொரு சான்றிதழை வழங்குவதற்கு அவர்களுக்கு எந்தவொரு அதிகாரமும் வழங்கப் படவில்லை.
- மேலும், அத்தகைய சான்றிதழானது, முக்கியமாக சொத்துக்களின் பரம்பரை உரிமம் கோருவது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு பெறுதல் தொடர்பான தனிப்பட்ட மதம் சார் சட்டங்களின் பயன்பாடுகளில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும்.
- 1973 ஆம் ஆண்டு அரசு ஆணையானது, ஒரு நபர் தனது சாதி அல்லது மதத்தை பள்ளிச் சான்றிதழில் குறிப்பிடக் கூடாது என்ற அனுமதியினை மட்டுமே வழங்குகிறது.
- 2000 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் தேதியன்று வெளியிடப்பட்ட மற்றொரு அரசாணை மூலமாக 1973 ஆம் ஆண்டின் அரசாணை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

- மேலும் அவை இரண்டுமே ஒரு பள்ளியில் சேர்க்கை பெறும் போது சாதி மற்றும் மதம் தொடர்பான பத்திகளை காலியாக விட அனுமதிக்கின்றன.
- சாதி மற்றும் மதம் குறிப்பிடாமல் மாற்றுச் சான்றிதழைப் பெறவும் இந்த ஆணை அனுமதிக்கிறது.

## தமிழ்நாட்டில் சேர்க்கை விகிதம் 2021-22

- இந்தியாவின் பெரிய மாநிலங்களில், 2017-18 மற்றும் 2021-22 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஐந்து கல்வியாண்டுகளில் உயர்கல்வியில் (கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள்) அதிக மொத்தச் சேர்க்கை விகிதத்தினைக் (GER) கொண்ட மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்கிறது.
- சமீபத்தில், கல்வித் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட உயர்கல்வி குறித்த அகில இந்தியக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்தச் சேர்க்கை விகிதம் 47 சதவீதமாக இருந்தது.
- மொத்தச் சேர்க்கை விகிதம் என்பது உயர்கல்வியில் சேர்ந்த மாணவர்களின் (18 முதல் 23 வயதிற்குட்பட்ட தகுதியுள்ள மக்கள்தொகை) எண்ணிக்கையைக் குறிக்கிறது.
- 2021-22 ஆம் ஆண்டிற்கான காலகட்டத்தில், அகில இந்திய சராசரி மொத்தச் சேர்க்கை விகிதம் ஆனது 28.4 சதவீதமாக இருந்தது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில், சண்டிகர் 64.8 % என்ற அளவில் மொத்தச் சேர்க்கை விகிதத்தினைக் கொண்டுள்ளது.
- அதனைத் தொடர்ந்து 61.5 சதவீதத்துடன் புதுச்சேரியும், 49 சதவீதத்துடன் டெல்லியும் இடம் பெற்றுள்ளன.
- இமாச்சலப் பிரதேசம் (43.1 சதவீதம்), உத்தரகாண்ட் (41.8 சதவீதம்), கேரளா (41.3 சதவீதம்) மற்றும் தெலுங்கானா (40 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் சிறப்பான செயல் திறனைக் கொண்டுள்ளன.





## 2023/24 ஆம் ஆண்டில் மத்திய வரிகளின் பங்கு

- 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மத்திய நிதிநிலை அறிக்கையின் மதிப்பீட்டின்படி, மத்திய வரிகளில் தன் பங்காக தமிழக மாநிலமானது 44,760.83 கோடி ரூபாயை பெற உள்ளது.
- இது ஆரம்ப மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட 41,664.86 கோடி ரூபாயை விட சுமார் 7.4% அதிகமாகும்.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மதிப்பீடுகளில், மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்கு 49,754.95 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட சுமார் 11.2% அதிகம் ஆகும்.
- மத்திய நிதிநிலை அறிக்கை ஆவணங்களின்படி, 2022-23 ஆம் ஆண்டிற்கான மத்திய வரிகளின் உண்மையான பகிர்வு 38,685.47 கோடி ரூபாயாக இருந்தது.




## 2023 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பதிவான கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்புகள்




- 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 8,534 கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்புகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- தேசியப் புற்றுநோய் பதிவுத் திட்ட அறிக்கையின்படி, 2023 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 36,014 என மதிப்பிடப்பட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் 45,682, மகாராஷ்டிரா 30,414 மற்றும் மேற்கு வங்காளத்தில் 25,822 பேர் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- சென்னையில் பதிவான மக்கள்தொகையின் வயது வேறுபாடு காரணமாக இரு வெவ்வேறு ஆண்டுகளுக்கு இடையில் உள்ள கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்ப் பாதிப்பு வேறுபாடு விகிதம் (1,00,000க்கு) ஆனது 14.8 ஆக இருந்தது.

## முதல் இயந்திர யானை




- Voices for Asian Elephants எனப்படும் (ஆசிய யானைகளுக்கான முன்னெடுப்புகள்) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனமானது ஊட்டியின் கூடலூரில் உள்ள தேவர்சோலையில் அமைந்துள்ள சிவன் கோவிலுக்கு இயந்திர யானை ஒன்றினை வழங்கியுள்ளது.
- கோவில்களில் யானைகளானவை சுகாதாரமற்ற முறையிலும், மனிதாபிமானமற்ற முறையிலும் பராமரிக்கப் படுவது குறித்து அடிக்கடி வெளியாகும் விமர்சனங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக இந்த இயந்திர யானைகள் ஏற்கனவே கேரளா முழுவதும் உள்ள கோயில்களுக்கு நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளன.
- தமிழகத்தில் உள்ள ஒரு கோவிலுக்கு வழங்கப்படும் முதல் இயந்திர "யானை" இது ஆகும்.
- கேரளாவில் 2023 ஆம் ஆண்டில் மட்டும் தனியாரால் பராமரிக்கப்பட்ட 25 யானைகள் இறந்துள்ளன என்பதோடு, 2024 ஆம் ஆண்டில் ஏற்கனவே மூன்று யானைகள் இறந்து உள்ளன.
- யானைகளை அடைத்து வைத்து துன்புறுத்தாமல், அதே சமயம் நாட்டின் கலாச்சாரம் இன்றும் பேணப் படுவதை இந்த இயந்திர யானைகள் உறுதி செய்ய உதவும்.

## கரியாச்சல்லி தீவுகள் மீட்பு திட்டம்

- தமிழ்நாடு கடலோர மீட்புப் பணியின் ஒரு பகுதியாக கரியாச்சல்லி பகுதியை மீட்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- 16 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த இத்தீவு ஆனது தற்போது 5.97 ஹெக்டேராக குறைந்துள்ளது.

- ❖ எந்தவொரு நடவடிக்கையும் இல்லாமல் இருந்தால், கரியாச்சல்லி மற்றும் கசுவாரி தீவுகள் ஆகிய இரண்டும் 2035 ஆம் ஆண்டில் கடலில் மூழ்கும்.
- ❖ மன்னார் வளைகுடாவானது, 21 தாழ்வான மக்கள் வசிக்காத பவளப்பாறைத் தீவுகளின் தொடர் சங்கிலி அமைப்பினைக் கொண்டுள்ளது.
- ❖ இதுவரை 4,300 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் இங்கு காணப் படுவதாக பதிவு செய்யப் பட்டுள்ளன.
- ❖ அவற்றில் 132 பவளப்பாறைகள் இனங்கள் ஆகும்.
- ❖ தமிழ்நாடு அரசானது, ஏற்கனவே 10,000 செயற்கை பவளப்பாறைத் தொகுதிகளை நிறுவியதன் மூலம் வான் தீவு என்ற தீவைக் காத்துள்ளது.




## பொன்னை ஆற்றில் தடுப்பணை

- ❖ வேலூரில் பொன்னை ஆற்றின் குறுக்கே தமிழ்நாடு - ஆந்திரா எல்லையில் அமைய உள்ள முதல் தடுப்பணையினைக் கட்டமைக்கும் பணி சமீபத்தில் தொடங்கியது.
- ❖ தென்பெண்ணை என்று அழைக்கப் படும் பொன்னை ஆறு பாலாற்றின் ஒரு கிளை நதியாகும்.
- ❖ இது கர்நாடகாவில் சிக்கபல்லபுரா என்ற மாவட்டத்தில் உள்ள நந்தி மலைகள் என்ற இடத்தில் உற்பத்தி ஆகின்றது.
- ❖ 497 கிலோமீட்டர் நீளத்துடன் இது தமிழ்நாட்டில் இரண்டாவது நீளமான நதியாகும்.
- ❖ இதன் மூலம் பாலாற்றின் 61,000 கன அடி உபரி நீரை பொன்னை ஆற்றில் வெளியேற்ற முடியும்.
- ❖ இந்தப் புதிய தடுப்பு அணையானது, பொன்னை ஆற்றின் குறுக்கே அமைக்கப்படும் இரண்டாவது தடுப்பணையாகும்.




## தமிழ்நாடு ஒருங்கிணைந்த பறவைகள் மதிப்பீடு

- தமிழ்நாடு ஒருங்கிணைந்த பறவைகள் மதிப்பீடு என்பது தமிழ்நாடு மாநில வனத் துறையால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- 6,80,028 என்ற மொத்தப் பறவை எண்ணிக்கையில் சுமார் 79 சதவீதம் நீர் வாழிடம் சார்ந்த பறவைகள் ஆகும்.
- சுமார் 21 சதவீதம் நிலம் சார் வாழிடப் பறவைகள் ஆகும்.
- வனப்பகுதிகளில் 179, கிராமப்புறங்களில் 555 மற்றும் நகர்ப்புறங்களில் 170 உள்ளிட்ட சதுப்பு நிலங்கள் /நீர்நிலைகள்/பறவைகள் சரணாலயங்களில் 894 சாதகமானப் பகுதிகளை இந்த மதிப்பீடு உள்ளடக்கியது.
- 389 பறவை இனங்களைச் சேர்ந்த மொத்தம் 6,80,028 பறவைகள் இந்த மதிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ளன.
- இவற்றில் 120 இனங்கள் நீர் வாழிடப் பறவைகளாகவும் மீதமுள்ள 269 இனங்கள் நில வாழிடப் பறவை இனங்களாகவும் கண்டறியப்பட்டுள்ளன.



## தென்னிந்தியாவின் முதல் திரையரங்கம்

- கோயம்புத்தூரில் வெரைட்டி ஹால் சாலையில் உள்ள தென்னிந்தியாவின் முதல் திரையரங்கம் ஆன டிலைட் திரையரங்கம் இடிக்கப்பட உள்ளது.
- முதலில் 'வெரைட்டி ஹால்' திரையரங்கம் என்று அழைக்கப்பட்ட இது 1914 ஆம் ஆண்டில் சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவரால் நிறுவப்பட்டது.
- 1930 ஆம் ஆண்டுகளில் மிதிக்கட்டை மூலம் இயக்கப்படும் அச்சுப்பொறி இயந்திரத்தைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட திரைப்பட நுழைவு அனுமதிச் சீட்டுகளை வழங்கி வந்த முதல் திரையரங்கம் இதுவாகும்.
- வெரைட்டி ஹால் என்ற பெயர் ஆனது 1950 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் டிலைட் திரையரங்கம் என மாற்றப்பட்டது.
- இந்தத் திரையரங்கில் கடைசியாக 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 1980 ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் வெளியான மனிதன் திரைப்படம் திரையிடப்பட்டது.


## செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான இருப்புப்பாதை கடப்பு முன்னெச்சரிக்கை அமைப்பு




- பயண இயக்கத்தில் உள்ள இரயில்களால் யானைகள் தாக்கப்படாமல் இருப்பதற்காக செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான முன்கூட்டியே எச்சரிக்கை வழங்கும் அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது தமிழ்நாடு வனத் துறையால் அறிமுகம் செய்யப் பட்டது.
- செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மற்றும் இயந்திரக் கற்றல் மூலம் இயக்கப் படும் இந்த அமைப்பு ஆனது, இரட்டை ஒற்றைக் கோட்டிற்கு அருகில் வரும் அல்லது தண்டவாளங்களைக் கடக்கும் காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கண்டறிந்து எச்சரிக்கைகளை உருவாக்கும்.
- நாட்டிலேயே இந்த வகையிலான முதல் வகை முன்னெச்சரிக்கை அமைப்பான இது சுமார் 7 கி.மீ. தொலைவிலான "அதிக எண்ணிக்கையில் யானைகள் பாதிக்கப்படக் கூடிய பகுதியில்" நிறுவப்பட்டுள்ளது.

- இது கோயம்புத்தூர் பிரிவில் நடைமுறையில் உள்ளது.
- நாளொன்றுக்கு சுமார் 130 இரயில்கள் A மற்றும் B இரயில் பாதைகள் வழியாகச் செல்கின்றன என்ற நிலையில் ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பாதைகளில் சுமார் 1,000 யானைகள் கடந்து செல்கின்றன.

## சாலை விபத்துகளின் போக்குகள்




- 2022 ஆம் ஆண்டில் 64,105 விபத்துகள் பதிவானதுடன் தேசிய நெடுஞ்சாலைகளின் வலையமைப்பில் அதிக எண்ணிக்கையில் சாலை விபத்துகள் பதிவான மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
- தமிழகத்தில் சாலை விபத்துக்களால் 17,884 பேர் உயிரிழந்துள்ளனர்.
- 2022 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் மொத்தம் 4,61,312 சாலை விபத்துகள் பதிவாகி உள்ளன.
- இந்த சாலை விபத்துகளால் 1,68,491 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதோடு, மேலும் 4,43,366 நபர்கள் காயமடைந்துள்ளனர்.
- கடந்த ஆண்டு நாட்டில் நடந்த விபத்துகளில் 13.9% ஆனது தமிழ்நாட்டில் 64,105 விபத்துக்கள் பதிவாகியுள்ளன.
- அதைத் தொடர்ந்து 54,432 விபத்துகளுடன் மத்தியப் பிரதேசம் இடம் பெற்றுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலம் ஆனது தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- தேசிய நெடுஞ்சாலைகளில் 2018 ஆம் ஆண்டில் 22,961 விபத்துகளும், 2019 ஆம் ஆண்டில் 21,489 விபத்துகளும், 2020 ஆம் ஆண்டில் 18,372 விபத்துகளும், 2021 ஆம் ஆண்டில் 16,869 விபத்துகளும், 2022 ஆம் ஆண்டில் 18,972 விபத்துகளும் பதிவாகி உள்ளன.

## கையகப்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்ட விதிகள், 2024

- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கையகப்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்ட விதிகளைத் தமிழ்நாடு அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது.

- இத்திட்டமானது புதிய பகுதிகளின் திட்டமிட்ட மேம்பாட்டைச் செயல்படுத்துவதோடு, அடிப்படை வசதிகளை வழங்குவதோடு, உயர் ரக உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிலப் பகுதிகளையும் இது திரட்டுகிறது.
- 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரம் மற்றும் கிராமப்புறத் திட்டமிடல் (மூன்றாவது திருத்தம்) திருத்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள படி, தனிநபர் /தனி நபர்களுக்குச் சொந்தமான நிலத்தை ஒருங்கிணைத்து, அதற்கான திட்டமிடல் ஆணையம் அதை மேம்படுத்துவதற்கான வசதியினை வழங்குகிறது.
- அத்தகைய மேம்படுத்தப்பட்ட நிலத்தின் ஒரு பகுதி மீது அந்த நிலத்தின் அசல் உரிமையாளருக்கு அணுகல் வழங்கப்படும். மீதமுள்ள பகுதி பொதுப் பயன்பாட்டு மையங்கள் மற்றும் வசதிகளை நிறுவ அல்லது விற்பனைக்கு பயன்படுத்தப்படுகிறது.
- இறுதி செய்யப்பட்ட திட்டம் ஆனது வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் நில உரிமையாளர்களுக்கு கையகப்படுத்தப்பட்ட நில உரிமைச் சான்றிதழை ஆணையம் வழங்க வேண்டும்.
- 2018 ஆம் ஆண்டில், அப்போதைய அரசாங்கம் ஆனது 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர மற்றும் கிராமப்புறத் திட்டமிடல் சட்டத்தில் திருத்தம் செய்து, 'கையகப்படுத்தப்பட்ட பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது என்ற நிலையில், அதைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டில் வரைவு விதிகளை அறிவித்தது.




## தமிழக சட்டசபை தீர்மானம் 2024

- தமிழக ஆளுநர் அவர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான தொடக்க உரையை நிகழ்த்தினார்.
- மேலும் அவர் தனக்கான உரையை முழுவதுமாகப் படிக்க மறுத்ததற்கான காரணங்களைக் கூறி தனது உரையையும் கருத்துக்களையும் சுருக்கி கூறினார்.

- ஆனால் தமிழ்நாடு சட்டசபை ஆனது, சுருக்கப்பட்ட உரைக்குப் பதிலாக மாநில அரசு தயாரித்த முழு உரையை மட்டுமே ஆவணப்படுத்துவதற்கான ஒரு தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றியது.
- பேரவையின் 17வது விதியைத் தளர்த்துவதற்காக இந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
- அரசமைப்புச் சட்டத்தின் 175வது அல்லது 176வது சட்டப் பிரிவின் கீழ் ஆளுநர் உரையாற்றும் போது அவையின் உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி இது கூறுகிறது.


## கொந்தகையில் நிலத்தடி நீர் ஊற்றெடுப்பு

- சிவகங்கை மாவட்டத்தில் உள்ள கீழடி அகழாய்வுத் தளத்தின் ஒரு பகுதியான கொந்தகை அகழ்வாராய்ச்சி தளம் ஆனது, நிலத்தடி நீர் ஊற்றெடுத்ததால் தண்ணீரில் மூழ்கியது.
- இந்த தளம் ஆனது கீழடி தளத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- இரண்டு முதுமக்கள் தாழிகள் 2022 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டன.
- அவற்றில் ஒன்றில் இறந்தவர்களுடன் சேர்த்து புதைக்கப்பட்ட சிறிய குழியம் கொண்ட கிண்ணங்கள், சிறிய பானைகள் மற்றும் ஒரு வளைய வடிவ நிலை தாங்கி உட்பட 20 பாத்திரங்கள் இருந்தன.
- 2022 ஆம் ஆண்டில் அந்த இடத்தில் 40 சென்டிமீட்டர் அளவுள்ள இரும்பு வாள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
- மேலும் அது 'கல்லறைப் பொருட்களின்' ஒரு பகுதியாக இருப்பதாக நம்பப் படுகிறது.

## தமிழ்நாடு அரசின் 10 சாதனைகள்

- தமிழக முதல்வர் அவர்கள் தற்போதைய அரசின் 10 சாதனைகளைப் பட்டியலிட்டார்.
- இந்தியப் பொருளாதாரத்தில் தமிழகத்தின் ஒன்பது சதவீதப் பங்களிப்பானது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகிறது.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவீதமாக இருக்கும் பட்சத்தில் மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் 8.19 சதவீதமாக உள்ளது.
- மாநிலத்தில் பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தேசிய அளவிலான பண வீக்கம் 6.65 சதவீதமாக இருக்கும் பட்சத்தில் இம்மாநிலத்தின் பண வீக்கம் 5.97 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டின் பட்டியலில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது மாநில அரசின் ஐந்தாவது சாதனையாகும்.
- மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது
- தொழில் துறை முதலீட்டுக்கு ஏற்ற சூழலை அரசு உருவாக்கி, நாட்டிலேயே 14வது இடத்தில் இருந்த தமிழகம் தற்போது மூன்றாவது இடத்தை அடைய உதவியது.
- கல்வித் துறையில் தமிழகம் இரண்டாம் இடத்திற்கு உயர்ந்துள்ளது.

- புதுமைமிக்கத் தொழில்துறைகளிலும் மாநிலம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- பெண்கள், இளையோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்புநிலை மற்றும் ஒடுக்கப் பட்டவர்களின் நிலையை மேம்படுத்தியதே அரசின் 10வது சாதனையாகும்.




## TNPSC ஆணையத்தில் புதிய உறுப்பினர்கள் நியமனம்

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் (TNPSC) நியமிக்கப்பட்டுள்ள ஐந்து புதிய உறுப்பினர்களின் பெயரை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ஆணையத்தின் புதிய உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி M.P. சிவனருள், R.சரவணக்குமார், இந்திய வருவாய்ப் பணி அதிகாரி A.தவமணி, உஷா சுகுமார், R.பிரேம்குமார் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.
- அவர்கள் ஆறு ஆண்டுகள் அல்லது தனது 62 வயதை எட்டும் வரை பதவி வகிப்பர்.

## முதலாவது சிறிய TIDEL பூங்கா


- விழுப்புரத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழகத்தின் முதலாவது TIDEL தொழில்நுட்பப் பூங்காவை முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இந்தப் பூங்கா ஆனது வானூர் தாலுகாவில் அமைந்த திருச்சிற்றம்பலம் கிராமத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் 63,000 சதுர அடி பரப்பளவில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக, 2023-2024 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின்படி, மாநிலம் முழுவதும் 7 சிறிய TIDEL பூங்காக்களை அரசாங்கம் அமைத்து வருகிறது.
- தஞ்சாவூர், சேலம், தூத்துக்குடி, வேலூர், காரைக்குடி, நாமக்கல், திருப்பூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் ஏற்கனவே கட்டமைக்கப்பட்டு வரும் இது போன்ற எட்டுப் பூங்காக்களுடன், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் சிறிய TIDEL பூங்காக்கள் நிறுவப் பட்டு வருகின்றன.




## மாநிலத் தேர்தல் ஆணையத்தின் பதவிக்காலம் – தமிழ்நாடு

- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் சட்டத்தில் மேலும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான மசோதாவை தமிழ்நாடு சட்டமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- மாநிலத் தேர்தல் ஆணையரின் பதவிக் காலத்தை "ஐந்து/ஆறு ஆண்டுகள் அல்லது அறுபத்தைந்து வயதாகவும் (இவற்றுள் எது முந்தையதோ), அதனை நீட்டிப்பதற்கான எந்த வழிவகையும் இல்லாத" வகையில் நிர்ணயிப்பதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- பெரும்பாலான மாநிலங்களில், மாநில தேர்தல் ஆணையர்களின் பதவிக்காலம் ஆனது ஐந்து ஆண்டுகள் அல்லது அவர்கள் தங்களது அறுபத்தைந்து வயதை எட்டும் வரை இவற்றுள் எது முந்தையதோ அதன்படி பின்பற்றப் படுகிறது.
- 1994 ஆம் ஆண்டு சட்டத்தின் 239வது உட்பிரிவின் 2வது துணைப்பிரிவின் தற்போதைய (b) சட்டப்பிரிவின் படி, மாநிலத் தேர்தல் ஆணையரின் பதவிக் காலம் ஆனது இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதோடு அவர் இரண்டு தொடர்ச்சியான பதவிக் காலங்களில் பணியாற்றத் தகுதியுடையவரும் ஆவார்.




## மாற்றுத் திறனாளிகளுக்கான சேவை மற்றும் தீர்வு வழங்கீட்டு மையங்கள் – தமிழ்நாடு

- ❖ மாநில மாற்றுத் திறனாளிகள் நலத்துறையானது விரைவில் துணைப்பிரிவு மட்டத்திலான பகுதிகளில் 39 மாற்றுத் திறனாளிகளுக்கான சேவை மற்றும் தீர்வு வழங்கீட்டு மையங்களை (OSCs) நிறுவவுள்ளது.
- ❖ இது உலக வங்கியின் நிதியுதவியினைப் பெறும் RIGHTS திட்டத்தின் கீழ் உருவாக்கப் படுகிறது.
- ❖ மாற்றுத் திறனாளிகள் (PwD) குறை தீர்ப்பிற்காகப் பயணிக்கும் தூரத்தை அவை குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இந்த மையங்களில் உளவியலாளர், உடல் இயன்முறை மருத்துவர், பேச்சு ஒலியியல் நிபுணர், தொழில்முறை சிகிச்சை நிபுணர் மற்றும் சிறப்புக் கல்வியாளர்கள் உட்பட ஒன்பது நிபுணர்கள் இருப்பர்.
- ❖ RIGHTS என்பது உண்மையான மனித முன்னேற்ற ஆதரவுக்கான மறுவாழ்வு முன்னெடுப்பு என்பதைக் குறிக்கிறது.

## தமிழ்நாட்டில் மகாவீரரின் சிலை

- ❖ விருதுநகர் மாவட்டம் திருச்சுளி அருகே உள்ள மணவராயனேந்தலில் 1,000 ஆண்டுகள் பழமையான தீர்த்தங்கார மகாவீரரின் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ சிற்ப நுட்பத்தின் அடிப்படையில், இந்த சிலையானது கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- ❖ கிரானைட் கற்களால் ஆன இந்த சிலையானது நுணுக்கமான உருவ அமைப்புகள் கொண்டு செதுக்கப் பட்டுள்ளது.
- ❖ இருபுறமும் மகர-தோரணங்கள் கொண்ட (புராண கால உயிரினங்களுடன் கூடிய நுழைவு வாயில் வளைவுகள்) சிம்மாசனத்தில் மகாவீரர் அமர்ந்திருப்பதை இது சித்தரிக்கிறது.
- ❖ அவரது தலைக்கு மேலே ஒரு மூன்று குடை உள்ள நிலையில், அதில் படர்கொடிகள் செதுக்கப் பட்டுள்ளன.



## கொற்றவை சிற்பம்

- தொல்லியல் ஆய்வாளர்கள், உளுந்தூர்பேட்டை அருகே எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கொற்றவை சிற்பத்தைக் கண்டெடுத்துள்ளனர்.
- இது 1,200 ஆண்டுகள் மிகப் பழமையானது என்றும் அது வழிபாட்டிற்குப் பயன்படுத்தப் பட்டது என்றும் உறுதி செய்துள்ளனர்.
- இந்த சிலை எட்டு கைகளுடன் சித்தரிக்கப்பட்டுள்ளதால், இது பல்லவர் காலத்தில் எட்டாம் நூற்றாண்டின் போது உருவாக்கப்பட்டது என்பதைக் குறிக்கிறது.
- இப்பகுதியில் காணப்படும் மற்ற எட்டாம் நூற்றாண்டு கொற்றவை சிற்பங்களுடன் ஒப்பிடுகையில் இந்த சிற்பத்தின் கிரீடம் தனித்துவம் வாய்ந்தது.



## தமிழ்நாட்டில் சிறுபான்மை நல நடவடிக்கைகள் 2024


- மதச் சிறுபான்மையினருக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில், சாத்தியமான இட ஒதுக்கீடுகள் மற்றும் அதிகரித்த கல்விக் கடன்கள் உள்ளிட்ட பல்வேறு தொடர் நடவடிக்கைகளை முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- மாநில அரசானது, 10 ஆம் முந்தைய வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கான (ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை) உதவித் தொகை திட்டத்தின் கீழ் முஸ்லீம் மாணவிகளுக்கு வக்ஃப் வாரியத்தின் மூலம் நிதி உதவிகளை வழங்கும்.

- கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறுபான்மையின மாணவர்களுக்கு தமிழ்நாடு சிறு பான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்படும் கல்விக் கடன் 5 லட்சமாக உயர்த்தப்படும்.
- அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயிலும் மாணவிகளுக்கு, 'புதுமைப் பெண்' திட்டத்தின் கீழ் மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும்.
- ஆசிரியர் நியமனத்தில், அரசுப் பள்ளிகளில் தற்போதுள்ள பொதுப்பிரிவு ஆசிரியர் நியமனத்திற்கான 53 வயது வரம்பு மற்றும் இதர பிரிவினரைச் சேர்ந்த ஆசிரியர் நியமத்திற்கான 58 வயது வரம்பு ஆனது சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப் படும்.
- சமய சிறுபான்மையினர் சான்றிதழ்களில் காலாவதி தேதி குறிப்பிடப்பட மாட்டாது.
- சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கப்படும்.
- கிராமப் புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் பயிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நீட்டிப்பதற்கான ஆணை விரைவில் வெளியிடப் படும்.
- இஸ்லாமியச் சட்டப்படி திருமணம் செய்து கொண்ட இரண்டாவது மனைவி மற்றும் அவர்களது மகன்கள் மற்றும் மகள்களுக்கு சட்டப்பூர்வ வாரிசு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கல்வி, மருத்துவம் மற்றும் சமூக இலக்குகளை மேம்படுத்தும் நோக்கத்திற்காக வக்ஃப் வாரியத்திற்கு அதன் நிலங்களை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்க அரசு அனுமதி வழங்கும்.
- தற்போது சென்னையில் செயல்பட்டு வரும் தீர்ப்பாயம் போன்று வக்ஃப் வாரியச் சொத்துக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மதுரையில் ஒரு தீர்ப்பாயத்தினை அமைக்க உயர்நீதிமன்றத்தின் அனுமதியையும் அரசு பெறும்.

## தமிழகத்தின் 2024 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

- 'தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கிச் செல்லுதல்' என்ற கருத்துருவுடன் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- இது சமூக நீதி, விளிம்பு நிலையில் உள்ளவர்களின் நலன், தமிழ் இளைஞர்களை உலக சாதனையாளர்களாக மாற்றுதல், தகவல் சார்ந்த பொருளாதாரம், சமத்துவம், பெண்கள் நலன், நிலையான எதிர்காலம் மற்றும் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் ஆகிய மாபெரும் 7 தமிழ்க் கனவுகள் மீது கவனம் செலுத்தும் நிதிநிலை அறிக்கை ஆகும்.
- மத்திய நிதிப் பரிமாற்றங்கள் உட்பட மொத்த வருவாய் வரவுகள் 2,99,009.98 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதில் முந்தைய ஆண்டை விட ஒரு சிறிய அதிகரிப்பு பதிவாகியுள்ளதைக் குறிக்கிறது.
- மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ஆனது 1,95,172.99 கோடி ரூபாயாகப் பதிவாகியுள்ள நிலையில், இது சிறப்பான வளர்ச்சியைக் குறிக்கிறது.
- இதற்கிடையில், சம்பளம், ஓய்வூதியம் மற்றும் நலத்திட்டங்களுக்கான குறிப்பிடத் தக்க ஒதுக்கீடுகளுடன் வருவாய்ச் செலவினம் ஆனது 3,48,288.72 கோடி ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ பலவித சவால்கள் இருந்த போதிலும், நிதிப் பற்றாக்குறையானது, நிதி ஒருங்கிணைப்பு இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் மொத்த உள்மாநில உற்பத்தியில் 3.44% ஆக உள்ளது.
- ❖ முதலமைச்சரின் தாயுமானுவர் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ், வறுமையில் வாடும் ஐந்து லட்சம் குடும்பங்களைக் கண்டறிந்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.
- ❖ உலகளாவிய திறன் மையங்களில் (GCCs) அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட புதிய ஊதிய மானிய முன்னெடுப்புகளை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ், 1 லட்ச ரூபாய்க்கு மேல் மாதச் சம்பளம் கிடைக்கப் பெறும் பணியிடங்களுக்கு முதல் ஆண்டில் 30% மானியமும், இரண்டாம் ஆண்டில் 20% மானியமும், மூன்றாம் ஆண்டில் 10% மானியமும் வழங்கப்படும்.
- ❖ உலக அளவில் தமிழ் இலக்கியத்தை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.
- ❖ திருநர்களுக்கு இலவச உயர்கல்வியை அறிவித்துள்ளது.




- ❖ இந்த முன்னெடுப்பு ஆனது, திருநர்களுக்கு உயர்கல்வியில் உள்ளடக்கம் மற்றும் சம வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ 23,000 தொடக்கப் பள்ளிகளிலும் திறன்மிகு வகுப்பறைகள் அமைப்பது உள்ளிட்ட அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

- தற்காலத் தொழில்துறை தேவைகளுக்கேற்ப தொழில்நுட்பக் கல்வியை மிகவும் நன்கு சீரமைக்கும் நோக்கத்தில் 45 பாலிடெக்னிக் கல்லூரிகளை தொழில்துறை 4.0 என்ற தரத்திற்கு மேம்படுத்த அரசு திட்டமிடப்பட்டுள்ளது.
- பணிபுரியும் பெண்களுக்காக மூன்று புதிய தோழி விடுதிகளைக் கட்டமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- கோவையில் இரண்டு மில்லியன் சதுர அடியில் புதிய தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும்.
- தமிழ்நாடு மாநில தொழில்துறைகள் மேம்பாட்டுக் கழகத்துடன் (SIPCOT) சேர்த்து தஞ்சாவூரில் ஒரு புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு திட்டமிட்டு உள்ளது.
- அண்ணல் அம்பேத்கர் வணிக வாகையர்கள் திட்டத்திற்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு திட்டத்தினை தமிழ்நாடு அரசு தொடங்க உள்ளது.
- இது மாநிலத்தின் பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதை பெரு நோக்கமாகக் கொண்டது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உலகப் புத்தொழில் நிறுவனங்கள் உச்சி மாநாட்டை நடத்த தமிழ்நாடு அரசு தயாராகி வருகிறது.
- அரசுப் பள்ளி மாணவர்களை உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் நோக்கில், 'தமிழ்ப் புதல்வன்' திட்டத்தை அரசு அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், உயர்கல்வி நிறுவனங்களில் அதிக மாணாக்கர்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களின் கல்வி முயற்சிகளுக்கு ஆதரவாக 1,000 ரூபாய் மாதாந்திர உதவித் தொகையானது வழங்கப்படும்.
- 100 அரசு கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் புதிய தொழில் திறன் மையங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.
- தமிழக அரசு நான்கு ஒலிம்பிக் அகாடமிகளை (பயிற்சி மையங்களை) உருவாக்க உள்ளது.
- திருப்பரங்குன்றம் மற்றும் திருநீர்மலையில் கம்பி வடம் மூலம் இயங்கும் தொங்கு ஊர்தி (ரோப்கார்) வசதி ஏற்படுத்தப்பட உள்ளது.
- சௌராஷ்டிரா மற்றும் படுகா மொழிகள் மற்றும் தோடர், கோத்தர், சோளகர், காணி மற்றும் நரிக்குறவர் உள்ளிட்ட பழங்குடியினரின் மொழிகளை இனவரைவியல் என்ற வடிவில் ஆவணப்படுத்துவதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கீழடி அகழாய்வுத் தளத்தில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- ‘தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம்’ அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ‘குடிசைகள் இல்லாத தமிழ்நாடு’ ஆக மாற்றுதல் என்ற திட்டத்தை அரசு அறிவித்துள்ளது.
- ஏழைகளுக்கு வீட்டு வசதி வழங்க 3,500 கோடியில் ‘கலைஞரின் கனவு இல்லம்’ என்ற திட்டமானது செயல்படுத்தப்படும்.
- சொத்து வரி திருப்பிச் செலுத்தும் திட்டம் ஆனது, அனைத்து முன்னாள் இராணுவ வீரர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

- இது மாநிலத்தின் 14 மாவட்டங்களில் கடலோர வளங்களை மீட்டெடுக்கும் திட்டமான TN-SHORE (நெய்தல் மீட்சி இயக்கம்) வெளியிட்டது.
- பூந்தமல்லியில் 500 கோடி ரூபாய் செலவில் அதிநவீனத் திரைப்பட நகரம் அமைக்கப் படும்.

## ரோடமைன்-B




- தமிழ்நாடு அரசானது, சமீபத்தில் பஞ்சு மிட்டாய் என்றும் அழைக்கப்படுகின்ற இனிப்பு மிட்டாய் விற்பனை மற்றும் உற்பத்தியைத் தடை செய்துள்ளது.
- இந்தப் பஞ்சு மிட்டாய்களில், புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனங்கள் இருப்பதை ஒரு ஆய்வக சோதனை உறுதிப்படுத்தியதையடுத்து இந்த நடவடிக்கையானது மாநில அரசினால் எடுக்கப்பட்டுள்ளது.
- உணவுப் பகுப்பாய்வு ஆய்வகத்தினால் நடத்தப்பட்ட சோதனையில், இந்தப் பஞ்சு மிட்டாய்களில் ரோடமைன்-B என்ற ஒரு செயற்கை நிறமூட்டிக் காரணி இருப்பது கண்டறிந்தது.
- நீல, இளஞ்சிவப்பு மற்றும் பச்சை ஆகிய நிறங்களைக் கொடுக்கும் ரோடமைன்-B என்ற நிறமூட்டுக் காரணியானது பாதுகாப்பற்றது என்பதோடு இது மனிதர்கள் உட்கொள்வதற்கும் உகந்ததன்று.
- ரோடமைன்-B அல்லது RhB என்பது ஜவுளி, காகிதம், தோல் பொருட்கள் மற்றும் வண்ணப் பூச்சுகள் ஆகிய தொழில் துறையில் ஒரு நிறமூட்டுக் காரணியாக சாயமிட பயன்படுத்தப்படும் ஒரு வேதிப்பொருள் ஆகும்.

## வேளாண் நிதிநிலை அறிக்கை 2024




- 2024-25 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்ட அடுத்த நாள் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் சட்டமன்றத்தில் 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநில வேளாண் வரவு செலவுத் திட்டத்தினை தாக்கல் செய்துள்ளார்.
- முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப் படுத்துவதாக அவர் அறிவித்துள்ளார்.
- இது மண்ணின் தரத்தை மேம்படுத்துவதையும், சமூகத்தின் நல்வாழ்விற்காக நிலையான மற்றும் வேதிப்பொருட்கள் இல்லாத வேளாண் நடைமுறைகளை நோக்கி நகர்வதையும் நோக்கமாகக் கொண்டது.
- நெல் பயிர் உற்பத்தியில் இரசாயன உரங்களின் பயன்பாட்டினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் இதில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- 'ஒரு கிராமம், ஒரு பயிர்' திட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்க உதவுவதற்காக வேண்டி கிராமங்களை மேம்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளும் இதில் அறிவிக்கப்பட்டுள்ளன.
- எதிர்பாராத இயற்கைப் பேரழிவுகள் காரணமாக விவசாயிகள் எதிர்கொண்ட வருமான இழப்பிலிருந்து அவர்களை மீட்க உதவுவதற்காக, பயிர் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.
- கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டு திட்டமும் இதில் அறிவிக்கப் பட்டுள்ளது.
- வேளாண்மையினை முதன்மைத் தொழிலாக மேம்படுத்துவதில் பெரும் கவனம் செலுத்துவதன் மூலமும், நிகரச் சாகுபடி நிலப்பரப்பினை அதிகரிப்பதற்காக தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்றுவதன் மூலமும் ஒவ்வொரு கிராமத்தையும் தன்னிறைவு மிக்க மாதிரி கிராமங்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விவசாயிகள் மற்றும் பங்குதாரர்கள் மத்தியில் விழிப்புணர்வை பரப்புவதோடு, பருவ நிலை மாற்றத் தணிப்பு தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கி காட்டுவதற்காக சிறப்பு பருவநிலை-திறன்மிகு கிராமங்கள் உருவாக்கப்படும்.

- நகர்ப்புற நுகர்வோர்கள் தரமான வேளாண் உற்பத்திகள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புப் பொருட்களை எளிதாக அணுகுவதற்கு வழிவகை செய்வதற்காக மாநில நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் செலவில் உழவர் சந்தைகள் போன்றே 100 உழவர் அங்காடிகள் நிறுவப்பட உள்ளன.
- மாநில அரசானது, மாநில வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வங்கி கடன்களைப் பெறுவதன் மூலம் வேளாண் சார்ந்த வணிகத்தையும் நிறுவும் 100 பட்டதாரிகளுக்கு அதிகபட்சமாக 1 லட்சம் ரூபாய் நிதி உதவியை வழங்கும்.
- தானியங்கி நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவுவதற்கு மானியம் வழங்கப்பட உள்ளன.
- வேம்பு மரங்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக, விவசாயிகளுக்கு 10 லட்சம் வேப்பங் கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படும்.
- விவசாயத்திற்குப் போதுமான மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்ய, நடப்பு ஆண்டில் 50,000 மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- முக்கனி (மா, வாழைப்பழம், பலா) புதிய தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் முல்லைத் தோட்டங்கள் (கன்னியகுமரி), மருதம் பூங்கா (தஞ்சாவூர்), சூரியத் தோட்டம் (கன்னியாகுமரி), செம்பருத்தி நாற்றுப் பண்ணைத் தோட்டம் (செங்கல்பட்டு), மாநிலத் தோட்டக்கலைப் பண்ணை (தென்காசி) நிறுவப்பட உள்ளது.
- தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஒரு இணைப்பை உருவாக்குவதற்காக, 'தனியார் வேளாண் இயந்திரங்கள் தனிப் பயனாக்கப் பட்ட வாடகை சேவை கைபேசி செயலி' உருவாக்கப்பட உள்ளது.
- 10 வேளாண் உற்பத்திப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பெறப்பட உள்ளது.
- வேளாண் தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள் அடையாளம் காணப் பட்டு அவற்றின் நோக்கங்கள், நிலைப்புத் தன்மை மற்றும் வணிகத் திட்டங்களின் அடிப்படையில் மானியங்கள் வழங்கப்படும்.

## தமிழ்நாடு மாநில அரசின் மகளிருக்கான கொள்கை 2024


- 2024 ஆம் ஆண்டு மகளிருக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கையினை முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.
- இது அனைவருக்கும் சமூக நீதிக் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதையும், பெண்கள் அவர்களின் உரிமைகளை அணுகுவதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது பெண்களின் உண்மையான ஆற்றல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்கான பேரார்வங்கள் ஆகியவற்றினை அடைவதற்கான சமமான வாய்ப்புகளுடன், இணக்கமான மற்றும் அமைதியான வாழ்க்கையை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உதவும்.
- இக்கொள்கையானது பத்து வருடக் காலத்திற்கு நடைமுறைப்படுத்தப்படும்.
- விழிப்புணர்வு, கல்வி, ஆதாயமிகு வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் பெண்களின் நிலையை உயர்த்த அரசு முயல்கிறது.
- இந்தக் கொள்கை கட்டமைப்பின் குறிக்கோள்
  - சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்ற சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்,

   - பாலினம் சார்ந்த விதிமுறைகள் மற்றும் நடத்தை தொடர்பான மாற்றங்களை மறுகட்டமைக்கும் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குதல்,
   - பெண்களுக்கு எதிரான எந்த விதமான பாகுபாடு, அத்துமீறல்கள் மற்றும் வன்முறைகள் ஆகியவற்றினை முற்றிலும் எதிர்த்தல்,
   - பாலினம் சார்ந்த பழமையான கருத்துக்களை முறிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும்
   - ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கும் வகையில் அவர்களை ஊக்குவித்தல்.
- இக்கொள்கையானது, பணியிடங்களில் அவர்களின் பங்கேற்பினை அதிகரிப்பதுடன், இளம் பருவ வயது சிறுமிகள் மற்றும் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தும்.
- டிஜிட்டல் வெளியில் நிலவும் பாலின இடைவெளியைக் குறைப்பதற்காக எண்ணிம கல்வியறிவை ஊக்குவிப்பதன் மூலமும், ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளில் பணியமர்வதற்கு பெண்களை ஆதரிப்பதன் மூலமும், இந்தக் கொள்கையானது பெண்கள் அரசியலில் பெரிய அளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கிறது.
- இக்கொள்கையானது பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் (தனிப்பட்ட பெண்கள், விதவைகள் மற்றும் கைவிடப்பட்ட பெண்கள்), ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள், பாதிப்புகள் ஏற்படக் கூடிய தொழில்துறைகளில் ஈடுபடும் பெண்கள், மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் முறைசார் மற்றும் முறை சாரா துறைகளில் உள்ள பெண்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இந்தக் கொள்கையின் அமலாக்கத்தினை மதிப்பாய்வு செய்வதற்கும், இடைக்காலத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பரிந்துரைப்பதற்காகவும் அனைத்து துறைகள் உட்பட தலைமைச் செயலாளர் தலைமையிலான உயர்மட்ட மகளிர் அதிகாரமளித்தல் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படும்.
- இதே போல் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவானது, இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அமலாக்கத்தினை மதிப்பாய்வு செய்ய வேண்டும்.
- இந்தக் கொள்கையானது, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மதிப்பாய்வு செய்யப்படும்.


## சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை 2024

- சென்னை பெருநகர மாநகராட்சிக் கழகத்தின் 2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது, ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவில் மிகக் குறைவான பற்றாக்குறையுடன் தாக்கல் செய்யப்பட்டது.
- வருவாய் வரவுகள் ஆனது, கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிக பட்சமாக 4,464.60 கோடி ரூபாயாக இருந்தாலும், இந்த நிதியாண்டில் மூலதன வரவுகள் சிறிதளவு குறைவாக 3,455 கோடி ரூபாயாக உள்ளது.
- கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீடு ஆனது 3,554.5 கோடி ரூபாய் ஆக இருந்தது.
- நகரில் உள்ள 419 தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் LKG முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப் படும்.
- மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு 255 பள்ளிகளில் தலா நான்கு கண்காணிப்பு ஒளிப்படக் கருவிகள் பொருத்தப்படும்.

- 208 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் LKG முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 64,022 மாணவர்களுக்கு முதல் முறையாக ஒரு ஜோடி காலணிகள் மற்றும் இரண்டு ஜோடி காலுறைகள் வழங்கப்படும்.
- நகரில் உள்ள அனைத்துத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் நகர சபை உறுப்பினர்கள் தலைமையிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப் படும்.
- இடரில் உள்ள தாய்மார்கள் உதவி அழைப்பு அணுகல் மையங்கள் நகரில் அமைக்கப் படும்.
- மாநகராட்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்காக 4 பேருந்துகளை மாநகராட்சி வாங்கும்.
- நகரில் உள்ள 200 (வட்டாரங்களிலும்) வார்டுகளிலும் EmpowHER எனப்படும் பெண்களுக்கான பிரத்யேக உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்படும்.




## தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்க மறுக்கும் அதிகாரம்




(2) Rules made under clause (c) of sub-section (1) may empower the panchayat union council in panchayat villages and panchayat unions to set apart specified areas for industrial purposes and provide for the refusal of permissions under section 160 in respect of any factory, workshop, workplace or premises outside such areas and also, subject to the sanction of the prescribed authority for the removal to such areas, of any factory, workshop or workplace which has been already established at any place, or any machinery which has already been installed in any premises, situated outside such areas:

Provided that no such rule shall authorise the removal of any factory, workshop or workplace or machinery installed in any premises, in the occupation or under the control of the Central or the State Government or of a market committee established under the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987.

- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது கிராமப் பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து ஒன்றிய அமைப்புகளின் அதிகாரங்களை குறைக்கும் மசோதாவை ஏற்றுக் கொண்டுள்ளது.
- தொழில்துறை நோக்கங்களுக்காக குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கவும் அல்லது தொழிற் சாலைகளுக்கு அனுமதி வழங்க மறுப்பதற்கும் முன்பு அவற்றிடம் அதிகாரம் இருந்தது.

- இந்த மசோதா வணிகம் செய்வதை எளிதாக்குதல் என்ற நோக்கினை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- தற்போது தாக்கல் செய்யப்பட்ட மசோதாவானது, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் சட்டத்தில் திருத்தம் செய்து, 'பஞ்சாயத்து ஒன்றிய சபைக்கு' பதிலாக உரிமங்கள் மற்றும் அனுமதிகளை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்குமான அதிகாரியாக ஓர் 'ஆய்வாளரை' நியமிக்கும் விதியை சேர்த்துள்ளது.
- விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கும் விதிகளில் "சட்டத்திற்குப் புறம்பான அல்லது ஆபத்தான வர்த்தகம்" என்ற வார்த்தைகளை நீக்கவும் இது முயல்கிறது.

## 'தொல்குடி' திட்டம்




- 'தொல்குடி' எனப்படும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கான ஒரு புதிய திட்டத்திற்கு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அடுத்த நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் பகுதிகளில் சாலை வசதிகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் நிரந்தர வீடுகள் போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்படும்.
- இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக பழங்குடியினச் சமூகங்களின் அங்கத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

## TN Umagine 2024

- ஆஸ்திரேலியா, 2024 ஆம் ஆண்டிற்கான TN Umagine 2024 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டிற்கான புத்தாக்கப் பங்குதார நாடு ஆகும்.
- இது தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்ணிம சேவைகள் துறையால் நடத்தப்படுகிறது.
- மேற்கு ஆஸ்திரேலியா மாகாணமானது, Umagine உச்சி மாநாட்டின் ஒரு பங்குதார மாகாணமாக இடம் பெறுகிறது.

## அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதி

- தமிழ்நாடு அரசானது, "தமிழ்நாடு அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதி" என்ற பிரத்யேக நிதியை உருவாக்கியுள்ளது.
- அழிவின் விளிம்பில் இருக்கும் சில பல்லுயிர்களை மீட்டெடுப்பதற்காக, 50 கோடி ரூபாய் தொகுப்பு நிதியாக இது இருக்கும்.
- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் ஆனது, தமிழகத்தில் அழிவின் விளிம்பில் உள்ள 23 தாவரங்கள் மற்றும் 16 விலங்கினங்களின் பட்டியலை வெளியிட்டது.
- தமிழ்நாடு மாநில பல்லுயிர் வாரியத்தின் அனுமதியின்றி இந்த அறிவிக்கப்பட்ட உயிரினங்களிலிருந்து அறிவியல் ஆராய்ச்சிக்காகவோ அல்லது வேறு ஒரு முக்கிய நடவடிக்கைக்காகவோ மாதிரிகளைச் சேகரிப்பதை அமைச்சகம் தடை செய்துள்ளது.




## தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2024

- தமிழகச் சட்டசபையானது, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக இரண்டு வெவ்வேறு மசோதாக்களைத் தாக்கல் செய்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் (நான்காவது திருத்தம்) சட்டம் ஆனது, கழிவுநீர் தொட்டிகளில் இருந்து இருந்து வடித்தல் செயல்முறை மூலமாக கழிவுநீரை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் லாரிகள் (சுமையுந்துகள்) அல்லது பிற வாகனங்களின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துவதற்கான விரிவான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.
- கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில் மலக் கசடு மற்றும் கழிவுநீரைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதை உறுதி செய்யும் வகையில் அவற்றை இடம் மாற்றி கொண்டு செல்வதற்கு மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகளும் இதில் அடங்கும்.

- இந்த புதிய பிரிவில் கூறியுள்ளபடி, "1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட செல்லுபடியாகும் உரிமம் எதுவும் இல்லாமல், எந்தவொரு நபரும், பஞ்சாயத்து அமைப்புகளின் எல்லைகளுக்குள், குடியிருப்பு அல்லது வணிக அல்லது நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட எந்த ஒரு கட்டிடத்திலிருந்தும் மலக் கசடுகள் அல்லது கழிவு நீரினைச் சேகரிக்கவோ, இடம் மாற்றிச் செல்லவோ அல்லது அகற்றவோ கூடாது.
- ஆனால், உள்ளாட்சி அமைப்பின் எந்தவொரு அமைப்பு அல்லது அரசாங்கத்தின் சட்டப் பூர்வ வாரியமானது, அந்தக் கசடுகள் அல்லது கழிவுநீர் சேகரிப்பு, இடம் மாற்றம் மற்றும் அகற்றுவதற்கு அத்தகைய உரிமம் தேவையில்லை.
- 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து அமைப்புகள் (ஐந்தாவது திருத்தம்) சட்டமானது, "கழிவுகள் உருவாக்கப்படும் இடங்களிலிருந்தே பிரிக்கப் பட்ட கழிவுகளைச் சேகரிக்கும் செயல்முறையைப் பின்பற்றி, அதற்காகப் பிரத்தியேகமாக ஒதுக்கப் பட்ட இடத்தில் திடக்கழிவுகளை அறிவியல் பூர்வமான முறைகளில் இடம் மாற்றம் செய்து, செயல்முறைக்கு உட்படுத்தி, அகற்றுதல் மூலமாக பொது இடங்களைத் தூய்மையாக வைத்திருப்பதற்காக திடக்கழிவுகளை மேலாண்மை முறையை கையாள்வது பஞ்சாயத்து அமைப்புகளின் முதன்மை கடமையாகும்" என்று கூறுகிறது.

## இந்தியாவின் முதல் 360 கோணத்திலான குவிமாட வடிவிலான மூழ்குவிப்பு திரையரங்கம்



- இந்தியாவின் முதல் 360 கோணத்திலான குவிமாட வடிவிலான மூழ்குவிப்பு திரையரங்கம் ஆனது சென்னையின் கேளம்பாக்கம் சாலையில் திறக்கப்பட்டுள்ளது.
- அலாவுதீன், பீட்டர் பான், சேவிங் டிங்கர்பெல் மற்றும் மோபி டிக் போன்ற பல்வேறு திரைப்படங்களைப் பார்வையாளர்கள் இங்கு கண்டு களிக்கலாம் என்ற வகையில். ஒவ்வொரு காட்சிகளும் சுமார் 20-30 நிமிடங்கள் வரை திரையிடப்படும்.
- நாட்டிலேயே முதன்முறையாக, குவிமாட வடிவிலான திரையரங்கமானது கதை சொல்லல் மற்றும் பார்வையாளர்களின் ஈடுபாடு ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் எதிர்கால முயற்சிகளுக்கு ஒரு முன்னோடியாக அமைகிறது.

## நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை

- தமிழக முதல்வர் அவர்கள் நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு ஆலையைத் திறந்து வைத்தார்.

- இது சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள 9 லட்சம் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் வகையில் ஒரு நாளைக்கு 150 மில்லியன் லிட்டர் கொள்ளளவு (mld) நீரை சுத்திகரிப்பு செய்யக் கூடியது.
- மீஞ்சூரில் ஒரு நாளைக்கு 100 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலை மற்றும் நெம்மேலியில் ஒரு நாளைக்கு 110 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலைக்கு அடுத்தபடியாக நகரில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது கடல் நீர் சுத்திகரிப்பு ஆலை இதுவாகும்.
- இந்தியாவில் சென்னை நகரம் மட்டும் தான் 750 மில்லியன் லிட்டர் அளவிற்குக் கடல் நீரைக் குடிநீராக்கும் முதல் நகரமாகும்.
- இது நெம்மேலி மற்றும் மீஞ்சூர் ஆகியவற்றில் தலா 100 மில்லியன் லிட்டர் ஆலை, நெம்மேலியில் மற்றுமொரு 150 மில்லியன் லிட்டர் ஆலை, நெம்மேலி அருகில் பேரூரில் கட்டப் பட்டு வரும் 400 மில்லியன் லிட்டர் ஆலை ஆகியவற்றைக் கொண்டதாகும்.

## சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா - விஜயதாரணி

- விளவங்கோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் S.விஜயதாரணியின் ராஜினாமா ஏற்கப் பட்டதாக தமிழக சட்டசபை சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.
- தமிழ்நாடு சட்டமன்றத்தின் 21 (F) என்ற விதியின் படி, ஒரு சட்டமன்ற உறுப்பினர் ராஜினாமா செய்யும் போது ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து தான் ராஜினாமா செய்யும் தேதியுடன் சேர்த்து அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும்.
- 2011 ஆம் ஆண்டு தேர்தலில் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியிலிருந்து முதன் முதலில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 2016 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றார்.
- அவர் சமீபத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்து பாஜக கட்சியில் சேர்ந்தார்.


## VinFast நிறுவனத்தின் மின்சார மகிழுந்து உற்பத்தி அலகு

- தமிழக முதல்வர் அவர்கள், வியட்நாமினைத் தலைமையிடமாகக் கொண்ட VinFast வாகன உற்பத்தி லிமிடெட் நிறுவனத்தின் மின்சார மகிழுந்து உற்பத்தி ஆலையைத் தூத்துக்குடியில் கட்டமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டினார்.
- இந்த முன்னெடுப்பின் மூலம், சென்னை மற்றும் ஒசூருக்கு அடுத்தபடியாக தமிழகத்தின் மூன்றாவது வாகன உற்பத்தி மையமாக தூத்துக்குடி மாறியுள்ளது.
- இந்தியாவில் மூன்று முக்கிய வாகன உற்பத்தி மையங்களைக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

## வழக்கு விசாரணையினை மாற்றுவதற்கான அதிகாரம்

- ஒரு வழக்கினை விசாரிக்கும் முதல் முகமையானது தனது விசாரணையை முடித்து, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் தனது இறுதி அறிக்கையை தாக்கல் செய்த பிறகு, அந்த வழக்கின் விசாரணையை ஒரு முகமையிலிருந்து மற்றொரு முகமைக்கு மாற்றச் செய்வதற்கு காவல்துறை தலைமை இயக்குநருக்கு அதிகாரம் இல்லை.

- சென்னை உயர் நீதிமன்றம் ஆனது இந்திய தண்டனைச் சட்டத்தின் 354C (நோக்கியுவத்தல்) என்ற பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கைக் கையாளும் போது இந்த கூற்றினை வெளியிட்டது.
- 2019 ஆம் ஆண்டில், இந்திய தண்டனைச் சட்டத்தின் 354C பிரிவு, தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் 4வது பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66Eவது பிரிவு ஆகியவற்றின் கீழ் காவல்துறை முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளது.
- விசாரணை முடிந்ததும், காவல்துறை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததையடுத்து, அது குற்றவியல் நீதிபதியால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
- ஆனால், அப்போதைய காவல்துறை தலைமை இயக்குநர் இந்த வழக்கை நகரக் காவல்துறையிலிருந்து குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவிற்கு மாற்றினார்.
- குற்றவியல் நீதிபதி அல்லது காவல்துறை தலைமை இயக்குநர்களுக்கு எந்தவொரு வழக்கிலும் மறு விசாரணை மேற்கொள்வதற்கு (டி நோவோ) உத்தரவிடச் சட்டத்தில் அனுமதியில்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.




## கலைஞரின் நினைவிடம்

- மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களின் நினைவாக சென்னை மெரினா கடற்கரையில் கட்டமைக்கப்பட்டுள்ள புதிய நினைவிடத்தினைத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.
- இது நிலத்தடியில் அமைந்த அதிநவீன டிஜிட்டல்மயமாக்கப்பட்ட அருங்காட்சியகம் உட்பட பல கண்கவர் அம்சங்களைக் கொண்டுள்ளது.
- 'கலைஞர் உலகம்' எனப் பெயரிடப்பட்ட இந்த அருங்காட்சியகம் ஆனது திராவிடத்தின் சின்னமாக விளங்கிய கலைஞர் அவர்களின் வாழ்க்கை மற்றும் சாதனைகளைக் காட்சிப்படுத்துகிறது.
- 5 முறை தமிழக முதல்வராக பணியாற்றிய கருணாநிதி, 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று காலமானார்.

## தமிழகத்தின் கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பு 2024

- 2024 ஆம் ஆண்டின் இந்திய கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பின் (GBBC) போது தமிழ்நாட்டில் 350க்கும் மேற்பட்ட வகையான பறவைகள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
- மாநிலம் முழுவதும் உள்ள 37 மாவட்டங்களில் 355 பறவை இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- கோவையில் அதிக எண்ணிக்கையிலான பறவை இனங்கள் (268) பதிவு செய்யப் பட்டுள்ளன, அதைத் தொடர்ந்து சேலம் (203), செங்கல்பட்டு (172), ஈரோடு (147) ஆகிய மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான பறவை இனங்கள் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில் உள்ள 37 மாநிலங்களுள், 348 இனங்கள் மற்றும் 3,804 பட்டியல்களுடன் தமிழ்நாடு 7வது இடத்தில் உள்ளது.





## தேசிய முதியோர் மையம்

- இந்தியாவின் முதல் தேசிய முதியோர் மையமானது சென்னையில் உள்ள கிண்டியில் திறக்கப்பட்டுள்ளது.
- ஆயுஷ் மற்றும் சித்த மருத்துவ சேவைகளும் இந்த மையத்தில் நிறுவப்பட்டுள்ளன.
- இந்த மையத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நோயாளிகளுக்குமான தனித்தனி அறைகள் உட்பட எலும்பியல் (மூட நீக்க) மருத்துவ சேவை, காது, மூக்கு & தொண்டை மருத்துவ சேவை, முதியோர் நல சேவைகள் மற்றும் இயல்பு நிலை மீட்பு அறைகள் ஆகியவை அமைந்துள்ளன.


## தமிழ்நாடு புல்வெளி மறுசீரமைப்புத் திட்டத்திற்கான மாதிரிப் பகுதி

- தமிழ்நாடு மாநில வனத்துறையானது, மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (FCRI) இணைந்து, கோவை மாவட்டத்தில் உள்ள சிறுமுகை வனச்சரகத்தில் மாதிரிப் புல்வெளி மறுசீரமைப்புப் பகுதியினை அமைப்பதற்கான பணிகளைத் துவக்கியுள்ளது.
- FCRI குழுவானது, சிறுமுகை பகுதி வனச்சரகத்தின் உலர்-இலையுதிர் வனப்பகுதியான பெத்தி குட்டை என்ற காப்புக் காட்டில் ஒரு ஹெக்டேர் பரப்பிலான நிலத்தை இதற்காக அடையாளம் கண்டுள்ளது.
- இது மாதிரிப் புல்வெளி மறுசீரமைப்புத் திட்டமாக மாற்றப்படும்.

- இது தமிழக அரசின் மெய்ப்புலம் என்ற திட்டத்திற்கான தமிழ்நாடு பல்லுயிர்ப்பெருக்க வளங்காப்பு மற்றும் பருவநிலை மாற்றங்கள் நடவடிக்கைகளுக்கான ஒரு பசுமைத் திட்டத்திற்கான (TBGPCCR) மாதிரிப் பகுதியாகச் செயல்படும்.




## கொடுங்கையூர் உயிரி முறை கழிவு பிரித்தெடுப்பு




- சென்னை பெருநகர மாநகராட்சி ஆனது, 50 ஆண்டுகள் பழமையான கொடுங்கையூர் குப்பைக் கிடங்கை உயிரி முறையில் வளங்களைப் பிரித்தெடுப்பதற்காக மூன்று நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கியுள்ளது.
- திட்ட மதிப்பீட்டில் 41% செலவினத்தினை மாநில மற்றும் மத்திய அரசுகள் ஏற்கும் என்ற நிலையில் மீதமுள்ள செலவினங்களை மாநகராட்சிக் கழகம் ஏற்கும்.
- தற்போது, 2030 ஆம் ஆண்டானது 100% கழிவுப் பிரிப்பிற்கான இலக்கு ஆண்டாக நிர்ணயிக்கப் பட்டது என்பதோடு, அந்த இலக்கானது இன்னும் நிறைவு செய்யப் படாமல் உள்ளது.
- உயிரியல் முறையிலான வளப் பிரித்தெடுப்பு என்பது கழிவுப் பொருட்களில் இருந்து மறுசுழற்சி செய்யக் கூடிய பொருட்கள் மற்றும் பிற வருவாய் ஈட்டும் பொருட்களை உருவாக்க தொழில்நுட்ப உதவியுடனும் பொருளாதார ரீதியாகவும் மேற்கொள்ளப் படும் செயல் முறையாகும்.

# தேசியச் செய்திகள்

## உச்ச நீதிமன்றத்தின் 75வது ஆண்டு விழா


- இந்திய உச்ச நீதிமன்றமானது டெல்லியில் தனது வைர விழாவினை கொண்டாடியது.
- இந்த நிகழ்வின் போது, எண்ணிம வழி உச்ச நீதிமன்ற அறிக்கைகள் (Digi SCR), எண்ணிம நீதிமன்றங்கள் 2.0 மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கான புதிய இருமொழி இணைய தளம் ஆகியவை தொடங்கப்பட்டன.
- இணையவழி நீதிமன்றத் திட்டத்தின் கீழான எண்ணிம நீதிமன்றங்கள் 2.0 ஆனது, நிகழ்நேர நகலெடுப்பிற்காக செயற்கை நுண்ணறிவினை ஒருங்கிணைப்பதன் மூலம் மாவட்ட நீதிமன்ற நீதிபதிகளுக்கு மின்னணு நீதிமன்றப் பதிவுகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறது.
- 1950 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் உச்ச நீதிமன்றத்தில் பதிவான 36,308 வழக்குகளைக் கொண்டுள்ள எண்ணிம வழி உச்ச நீதிமன்ற அறிக்கைகள் எண்ணிம வடிவத்தில் பொதுமக்களுக்கு அணுகக் கூடிய வகையில் உள்ளது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன் உச்ச நீதிமன்றம் நடைமுறைக்கு வந்தது.
- இது ஆரம்பத்தில் 1937 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரையிலான 12 ஆண்டு காலத்திற்கு பழைய பாராளுமன்றக் கட்டிடத்தில் இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றமாக செயல்பட்டு வந்தது.
- இது 1958 ஆம் ஆண்டில் புது டெல்லியில் உள்ள தற்போதைய கட்டிடத்திற்கு மாற்றப் பட்டது.

## சிறந்த தேர்தல் நடைமுறைகளுக்கான விருது 2023

- தேர்தல் ஆணையத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான 'சிறந்த தேர்தல் நடைமுறைகள் விருதுகள்' மொத்தம் 16 தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- சத்தீஸ்கர் மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரி ரீனா பாபாசாகேப் கங்கலே, கடந்த ஆண்டு அந்த மாநிலத்தில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்தியதற்காக 'சிறந்த செயல்திறன் கொண்ட மாநில விருதை' வென்றுள்ளார்.
- பெங்களூருவின் ரேடியோ மிர்ச்சி, கடந்த ஆண்டு கர்நாடகா தேர்தலின் போது மேற்கொண்ட வாக்காளர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்திற்காக ஊடகப் பிரிவில் விருது பெற்றுள்ளது.
- நக்சலிசத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் அதிக வாக்குகள் பதிவாகியதற்காக தண்டேவாடா ஆட்சியர் வினித் நந்தன்வாருக்கு விருது வழங்கப்பட்டது.
- கடந்த ஆண்டு மாநிலத் தேர்தல் எந்தவித தேர்தல் வன்முறையும் இன்றி நடைபெறச் செய்வதை உறுதி செய்ததற்காக திரிபுராவின் தலாய் மாவட்டத்தின் காவல் துறை ஆய்வாளர் ரமேஷ் சந்த்திற்கு விருது வழங்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு கர்நாடகத் தேர்தலில் முறையான வாக்காளர் பட்டியல் நிர்வாகத்திற்கான விருது சித்ரதுர்கா மாவட்ட தேர்தல் அதிகாரி திவ்ய பிரபுவுக்கு வழங்கப் பட்டது.

- ராஜஸ்தானின் ஸ்ரீகங்காநகர் மாவட்ட ஆட்சியர் அன்ஷ் தீப் தனது 'தேர்தல் நண்பர்' (எலெக்சன் படி) என்ற செயலிக்காக தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் பிரிவில் விருது பெற்றுள்ளார்.
- தேர்தலில் மக்களின் பங்கேற்பை மேம்படுத்தியதற்காக நாக்பூர் மாவட்டத் தேர்தல் அதிகாரி விபின் இடங்கருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- தேர்தல் பாதுகாப்பு மேலாண்மைக்காக மிசோரம் மாநிலத்தின் சம்பையின் மாவட்ட காவல்துறை துணை ஆய்வாளர் வினீத் குமார் மற்றும் திரிபுரா மாநிலத்தின் தலாய் மாவட்ட காவல்துறை ஆய்வாளர் ரமேஷ் சந்த் ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டு உள்ளது.
- தேர்தல் மேலாண்மைக்கான (செலவினம்) விருதை கர்நாடகாவின் வணிக வரித்துறை ஆணையர் ஷிகா.C வென்றுள்ளார்.

## இடைக்கால நிதிநிலை அறிக்கை 2024




TIGHTENED PURSE STRINGS (IN ₹ CR)

| 2023-24 | BE | RE |
|---|---|---|
| Education | 1,16,417 | 1,08,878 |
| Health | 88,956 | 79,221 |
| Social Welfare | 55,080 | 46,741 |

OUTLAY ON MAJOR SCHEMES TRIMMED

| 2023-24 | BE | RE |
|---|---|---|
| PMAY | 79,590 | 54,103 |
| PMGSY | 19,000 | 17,000 |
| PMKSY | 10,787 | 8,781 |
| Urban Rejuvenation Mission | 16,000 | 13,200 |
| Swachh Bharat Mission | 5,000 | 2,550 |
| PMABHIM | 4,200 | 2,100 |
| Mission Shakti | 3,144 | 2,326 |

Sources: NITI Aayog; Budget document
BE: Budget Estimates; RE: Revised Estimates

INTERIM BUDGET

PRESENTED WHEN a government is close to the end of its term and a Lok Sabha election lies ahead. Every election year sees an Interim Budget, also called a Vote on Account.

ESTIMATES OF revenues and expenditures in the coming year are presented in the Interim Budget as well. But since the full Budget is presented in July by the new government, the purpose of an Interim Budget is to seek Parliament's authorisation to tax and spend in the intervening months.

GIVEN THAT BUDGET Estimates of the coming year are likely to change, it is better to focus on the Revised Estimates (of the current financial year) because they complete the picture for the past 5 or 10 years.

- மக்களவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கையினை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் தாக்கல் செய்தார்.
- அவர் ஐந்து வருடாந்திர நிதிநிலை அறிக்கை, ஒரு இடைக்கால அறிக்கை உட்பட தொடர்ச்சியாக ஆறாவது நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து சாதனை படைத்தார்.
- இதன் மூலம் தொடர்ச்சியாக ஐந்து நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்த மன்மோகன் சிங், அருண் ஜெட்லி, ப.சிதம்பரம் மற்றும் யஷ்வந்த் சின்ஹா போன்றோரின் சாதனைகளை அவர் முறியடித்தார்.
- மொரார்ஜி தேசாய், நிதி அமைச்சராகச் செயலாற்றிய போது, 1959-1964 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஐந்து வருடாந்திர பட்ஜெட் மற்றும் ஒரு இடைக்காலப் பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார்.
- இறக்குமதி வரிகள் உட்பட நேரடி மற்றும் மறைமுக வரிகளுக்கு ஒரே வரி விகிதங்களைப் பராமரிக்க வேண்டுமென அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.


- 2023-24 ஆம் ஆண்டில் பெற்ற தொகையினை விட குறைவாக ரூ. 14.13 லட்சம் கோடி மற்றும் ரூ. 11.75 லட்சம் கோடிகளை முறையே 2024-25 ஆம் ஆண்டிற்கான மொத்த மற்றும் நிகர அடிப்படையிலான தொகையினை அரசாங்கம் கடனாக பெறுகிறது.
- 2024-25 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களுக்கான செலவு தொகையானது, ₹11.11 லட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையை 4.5% ஆகக் குறைக்க தேவையான நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான பாதையில் அரசு தொடர்ந்து செயல்படும்.
- வாடகை வீட்டில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினர் சொந்த வீடு வாங்கவோ அல்லது கட்டவோ உதவும் வகையிலான திட்டங்களும் தொடங்கப்படும்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை 1 புத்தொழில் தொடக்கங்களுக்குக்கான வரிச் சலுகைகள் மற்றும் அரசின் உத்தரவாதம் கொண்ட செல்வம் அல்லது ஓய்வூதிய நிதி ஆகியவற்றினைக் கொண்டு செய்யப்பட்ட முதலீடுகள் ஆகியவற்றிற்கான வரிச் சலுகைகள் 1 வருடம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- FY25 ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறையானது சுமார் 5.1% என்று கணிக்கப்பட்டுள்ள நிலையில், FY24 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை (5.8%) விட இது குறைவு ஆகும்.
- FY24 ஆம் ஆண்டிற்கான கடன் தொகையான சுமார் ₹15.43 லட்சம் கோடியினை விட குறைவாக, அடுத்த நிதியாண்டிற்கான கடன் தொகையாக அரசாங்கம் ₹14.13-லட்சம் கோடியைக் கடனாகப் பெற உள்ளது.
- FY25 ஆம் ஆண்டிற்கான பெயரளவு GDP வளர்ச்சியானது 10.5% என்று கணிக்கப் பட்டு உள்ளது.
- FY24 ஆம் ஆண்டில் ₹34.37 லட்சம் கோடியாக இருந்த நிகர வரி வருவாய் இலக்கானது, FY25 ஆம் ஆண்டில் 11.46 சதவீதம் அதிகரித்து ₹38.31-லட்சம் கோடியாக உள்ளது.
- நேரடி வரி வசூல் இலக்கானது ₹21.99-லட்சம் கோடியாகவும், மறைமுக வரி குறித்த இலக்கானது ₹16.22-லட்சம் கோடியாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டுத் தொகையானது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து, ₹109,493.08 கோடியினை எட்டியுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு நிதிநிலையானது, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ₹5.25 லட்சம் கோடியில் இருந்து 4.72 சதவீதம் அதிகரித்து ₹6.21 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டது.
- பயணிகள் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கான நிதி ஒதுக்கீடானது ₹2,300 கோடியாக குறைந்துள்ளது.
- 2024-25 நிதியாண்டில் வேளாண்துறை அமைச்சகத்திற்கு ₹1,27,469.88 கோடி நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2024-25ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பள்ளிக் கல்விக்காக ₹73,000 கோடிக்கு மேல் அரசு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.
- உதவித் துறையின் மிகப்பெரிய பங்குத் தொகையான 2,068 கோடி ரூபாய் பூடானுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பழங்குடியினர் நல விவகாரங்கள் துறை அமைச்சகத்திற்கு ₹13,000 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் இது முந்தைய நிதியாண்டை விட 70 சதவீதம் அதிகமாகும்.
- அனைத்து ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்களுக்கும் ஆயுஷ்மான் பாரத் திட்டமானது விரிவுபடுத்தப்படும்.
- மத்திய அரசானது, கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசியை ஊக்குவிக்கும் மற்றும் தாய் மற்றும் குழந்தை நலப் பாதுகாப்புத் திட்டங்களை ஒரு விரிவான திட்டமாக இணைக்கவுள்ளது.
- கிராமப்புறங்களில் 30 மில்லியன் மலிவு விலை வீடுகளை கட்ட அரசு மானியம் வழங்கும்.
- பிரதமர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் மேலும் இரண்டு கோடி வீடுகள் கட்டித் தரும் அளவில் விரிவாக்கம் செய்யப்படும்.
- வீடுகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கும் வகையில் குறைந்தபட்சம் 300 அலகுகள் மின் உற்பத்திக்கான கூரை மீதான சூரிய மின்சக்தி தகடுகள் வழங்கப்படும்.
- பத்து ஆண்டுகளில் 25 கோடி மக்களை அரசு வறுமையிலிருந்து மீட்டுள்ளது.
- மத்திய அரசானது பல்வேறு திட்டங்கள் மூலம் 80 கோடி மக்களுக்கு இலவச உணவு வழங்கியதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.
- பிரதமர் ஜன்தன் யோஜனா கணக்குகள் மூலம் 34 லட்சம் கோடி ரூபாய் நேரடிப் பயன் பரிமாற்றங்கள் செய்யப்பட்டு, அதன் மூலம் 2.7 லட்சம் கோடி ரூபாய் சேமிப்புக்கு வழி வகுத்தது.
- பிரதமர் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் 43 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.
- கிராமப்புறப் பெண்களுக்கு மிகவும் அதிக அதிகாரம் அளிப்பதற்காகவும், கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்துவதற்காகவும் 'லக்பதி திதி' திட்டத்தினை அரசாங்கம் விரிவுபடுத்தும்.
- பெண் தொழில்முனைவோருக்கு 30 கோடி ரூபாய் தொகையானது முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் கடனாக வழங்கப்பட்டுள்ளது.
- மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு புதிய அரசு பதவியேற்றவுடன் அடுத்த 'முழு நிதி நிலை அறிக்கையானது' ஜூலை மாதம் தாக்கல் செய்யப்படும்.

## பிச்சைத் தொழில் செய்பவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் தேசிய அளவிலான முன்னடுப்பு

- இந்திய அரசானது, நாடு தழுவியக் கணக்கெடுப்பு மற்றும் மறுவாழ்வு வழங்கீடு முன்னெடுப்பிற்காக 30 நகரங்களை இலக்காக நிர்ணயித்துள்ளதோடு இது இளம் பருவத்தினர், பெண்கள் மற்றும் குழந்தைகள் பிச்சை எடுத்தலை ஒழிக்கச் செய்யவும் முனைகிறது.
- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ஆனது, உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து, 2026 ஆம் ஆண்டிற்குள் பிச்சைத் தொழில் செய்பவர்கள் இல்லாத மண்டலங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, 'விளிம்புநிலை தனிநபர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் தொழில்நிறுவனங்களுக்கான ஆதரவு' என்ற துணைத் திட்டத்தின் (SMILE) ஒரு பகுதி ஆகும்.

- இது நிகழ்நேரத் தகவல் புதுப்பிப்புகளுக்கான தேசிய இணையதளம் மற்றும் கைபேசி செயலியை உள்ளடக்கியது.




## கனிம (ஏலம்) திருத்த விதிகள், 2024

- மத்திய அரசானது,சமீபத்தில் கனிம ஏல விதிகளில் மாற்றங்களை அறிவித்துள்ளது.
- இது முன்பணத்திற்கான வரம்பினை 500 கோடி ரூபாயாக நிர்ணயிப்பதோடு, துணை நிறுவனங்கள் ஒரே கனிமத் தொகுதியினை ஏலம் கோருவதில் இருந்து தடுக்கிறது.
- ஒரு ஏலதாரர் ஒரு கனிமத் தொகுதியின் ஏலத்தில் ஒரு ஏலத்திற்கான கோரிக்கையை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- ஏலதாரரின் எந்தவொரு துணை நிறுவனமும் அதே ஏலத்தில் மற்றொன்றைச் சமர்ப்பிக்கக் கூடாது.
- ஒரு துணை நிறுவனம் என்பது ஏலத்தில் மற்றொரு ஏலதாரரின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு நபர் (அல்லது நிறுவனம்) என வரையறுக்கப்படுகிறது.
- இந்த விதிகள் மாநில அரசாங்கங்கள் கனிம ஆய்வு உரிமங்களை (EL) வழங்குவதற்கும் வழி செய்கிறது.
- கனிம ஆய்வு உரிமங்களை மாநிலம் மற்றும் மத்திய அரசும் ஏலம் எடுக்கலாம்.
- 500 சதுர கிலோமீட்டருக்கு மேலான (ச.கி.மீ), ஆனால் 1000 சதுர கிலோ மீட்டருக்கு குறைவான அல்லது அதற்கு சமமானத் தொகுதிகளுக்கான கனிம ஆய்வு உரிமத்திற்கான செயல்பாட்டு பிணைத் தொகை 2 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## 16வது நிதி ஆணையத்தின் உறுப்பினர்கள்




- ❖ சமீபத்தில், மத்திய அரசானது அரவிந்த் பனகாரியாவை 16வது நிதிக்குழுவின் தலைவராக நியமித்தது.
- ❖ தற்போது அந்த ஆணையத்தின் மூன்று முழுநேர உறுப்பினர்களையும் ஒரு பகுதி நேர உறுப்பினரையும் நியமிப்பதாக அறிவித்துள்ளது.
- ❖ 15வது நிதி ஆணையத்தின் உறுப்பினராக இருந்த முன்னாள் நிதி மற்றும் செலவினத் துறை செயலாளர் அஜய் நாராயண் ஜா இந்த ஆணையத்தின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ அன்னி ஜார்ஜ் மேத்யூவுடன் நிரஞ்சன் ராஜத்யக்சாவும் இதன் முழுநேர உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ சௌமியா காந்தி கோஷ் இந்த ஆணையத்தில் பகுதி நேர உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- ❖ ஜா, 14வது நிதி ஆணையத்தின் உறுப்பினர் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.
- ❖ 16வது நிதிக்குழு தனது பரிந்துரைகளை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் ஐந்து ஆண்டு காலச் செயல்பாட்டுக் காலத்தை உள்ளடக்கியது.


## நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி ஆணையம்

- ❖ நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையிலான ஆணையம் ஆனது, தனது அறிக்கையை இறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதால் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளது.
- ❖ இந்த ஆணைக் குழுவானது வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணங்கள் தொடர்பான பிரச்சினைகளை ஆய்வு செய்யவும், சர்வதேச பொதுச் சட்டம் மற்றும் தனியார் சட்டங்கள் தொடர்பான சட்டமுறைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் பணிக்கப் பட்டுள்ளது.
- ❖ வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணங்களில் குழந்தைகள் மற்றும் மனைவிகளை கைவிடுதல், கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்தல், நாடு கடத்துதல், குழந்தைகளின்

பாதுகாப்பு மற்றும் மனைவியைத் தவறாக நடத்துதல் போன்ற கடுமையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

- வெளிநாடுவாழ் இந்தியர்களின் திருமணங்களை பதிவு செய்வது மற்றும் வெளிநாட்டு திருமணச் சட்டம் பற்றிய 2019 ஆம் ஆண்டு மசோதாவையும் இந்த ஆணையம் ஆய்வு செய்துள்ளது.

## இந்தியாவின் மராத்திய இராணுவ நிலப்பரப்புகள்



- 2024-25 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ அமைப்பின் உலக பாரம்பரிய பட்டியலில் 'மராத்திய இராணுவ நிலப்பரப்புகளை' சேர்ப்பதற்குப் பரிசீலிக்குமாறு கலாச்சாரத் துறை அமைச்சகம் கோரிக்கை வைத்துள்ளது.
- இது இந்த அறிக்கை மொத்தம் 12 கட்டமைப்புகளை உள்ளடக்கியது.
- மகாராஷ்டிராவில் உள்ள சல்ஹேர் கோட்டை, ஷிவ்னேரி கோட்டை, லோகாட், கந்தேரி கோட்டை, ராய்காட், ராஜ்காட், பிரதாப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா கோட்டை, விஜய் துர்க், சிந்துதுர்க் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள செஞ்சிக் கோட்டை போன்ற வரலாற்று நினைவுச் சின்னமாக விளங்கும் கோட்டைகள் இதில் அடங்கும்.
- மராத்திய இராணுவக் கருத்தாக்கத்தின் ஆரம்பம் ஆனது 1670 ஆம் ஆண்டில் மராத்திய மன்னர் சத்ரபதி சிவாஜியின் ஆட்சியின் போது தொடங்கி 1818 ஆம் ஆண்டு வரையிலான பேஷ்வா ஆட்சி வரை தொடர்ந்து நீடித்தன.
- தற்போது, இந்தியாவில் 42 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ள நிலையில் இதில் 34 கலாச்சாரத் தளங்கள், ஏழு இயற்கைத் தளங்கள் மற்றும் ஒரு கலப்புத் தளம் ஆகியன உள்ளன.

## உச்ச நீதிமன்றத்தின் பதிவுரு வழக்கறிஞர் (AoR) 2024

- உச்ச நீதிமன்றம் ஆனது ஒரே நாளில் 56 வழக்கறிஞர்கள் மற்றும் பதிவுரு வழக்கறிஞர்களை (AoR) மூத்த வழக்கறிஞர்களாக நியமித்துள்ளது.

- இந்த 56 பேரில் 11 பெண்களும் 34 முதல் தலைமுறை வழக்கறிஞர்களும் அடங்குவர்.
- உச்சநீதிமன்றம் ஆனது இரண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகள் உட்பட இதுவரை 14 பெண்களுக்கு மட்டுமே - மூத்த வழக்கறிஞர் அந்தஸ்தை வழங்கியுள்ளது.
- இது தவிர, உச்ச நீதிமன்றத்தில் 198 புதிய பதிவுரு வழக்கறிஞர்கள் நியமிக்கப் பட்டு உள்ளனர்.
- அரசியலமைப்பின் 145வது சட்டப் பிரிவின் கீழ் உச்ச நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட விதிகளின்படி, பதிவுரு வழக்குரைஞராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் மட்டுமே உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியும்.
- உச்ச நீதிமன்றம் ஆனது ஆண்டிற்கு இரண்டு முறை பதிவுரு வழக்கறிஞர் தேர்வுகளை நடத்துகிறது.
- உச்ச நீதிமன்றத்தினால் மூத்த வழக்கறிஞராக நியமிக்கப்பட்ட முதல் பெண் வழக்கறிஞர் நீதிபதி இந்து மல்ஹோத்ரா ஆவார்.

## இந்திய இராணுவத்தின் புதிய உடற்தகுதி கொள்கை

- இந்திய இராணுவம் ஆனது, "அதிகாரிகளிடையே உடற்தகுதி தரம் குறைந்து வருவதை" கருத்தில் கொண்டு புதிய உடற்தகுதிக் கொள்கையை அறிமுகம் செய்து உள்ளது.
- இந்தப் புதியக் கொள்கையானது சோதனை நடைமுறையில் நிலைத்தன்மையைக் கொண்டு வருவதையும், வாழ்க்கை முறை சார்ந்து ஏற்படும் நோய்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அதிகாரிகள் உடல் தகுதி இழத்தல் அல்லது உடல் பருமன் பிரச்சினைகளைத் தீர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தற்போதைய விதிகளின்படி, காலாண்டுக்கு ஒருமுறை போர் முறை சார்ந்த உடல் தகுதித் திறன் தேர்வு (BPET) மற்றும் உடற்தகுதித் தேர்ச்சித் தேர்வு (PPT) நடத்தப்பட வேண்டும்.
- உடற்தகுதி முன்னேற்றக் காலத்திற்குப் பிறகு சோதனையில் தோல்வியுற்றால், அந்தப் பணியாளர்களுக்கு எதிராக இராணுவ ஒழுங்குமுறை (AR) சட்டம் 15 மற்றும் இராணுவச் சட்டம் 22 ஆகியவற்றின் கீழ் தண்டனை நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**THE NEW RULES**

Age group: 28 to 32 years

| Height | Weight Min | Weight Ideal | Weight Max |
|---|---|---|---|
| 170 | 55.8 | 62.0 | 68.2 |
| 172 | 57.2 | 63.5 | 69.9 |
| 174 | 59.0 | 65.5 | 72.1 |
| 176 | 60.3 | 67.0 | 73.7 |
| 178 | 61.7 | 68.5 | 75.4 |
| 180 | 63.5 | 70.5 | 77.6 |



Age group: 33 to 37 years

| Height | Weight Min | Weight Ideal | Weight Max |
|---|---|---|---|
| 170 | 57.6 | 64 | 70.4 |
| 172 | 59 | 65.5 | 72 |
| 174 | 61 | 67.5 | 74 |
| 176 | 62.1 | 69 | 76 |
| 178 | 63.5 | 70.5 | 78 |
| 180 | 65.3 | 72.5 | 80 |

Age group: 43 to 47 years

| Height | Weight Min | Weight Ideal | Weight Max |
|---|---|---|---|
| 170 | 59 | 65 | 71.5 |
| 172 | 60 | 66.5 | 73.2 |
| 174 | 62 | 68.5 | 75.4 |
| 176 | 63 | 70 | 77 |
| 178 | 65 | 72 | 79.2 |
| 180 | 66.6 | 74 | 81.4 |


Age group: 38 to 42 years

| Height | Weight Min | Weight Ideal | Weight Max |
|---|---|---|---|
| 170 | 58.1 | 64.5 | 71 |
| 172 | 59.4 | 66 | 72.6 |
| 174 | 61.2 | 68 | 74.8 |
| 176 | 62.6 | 69.5 | 76.6 |
| 178 | 64 | 71.5 | 78.7 |
| 180 | 66 | 73 | 80.3 |

Age group: 48 and above

| Height | Weight Min | Weight Ideal | Weight Max |
|---|---|---|---|
| 170 | 59 | 65.5 | 72.1 |
| 172 | 60.8 | 67.5 | 74.3 |
| 174 | 62.1 | 69 | 75.9 |
| 176 | 63.9 | 71 | 78.1 |
| 178 | 65.3 | 72.5 | 79.8 |
| 180 | 67.1 | 74.5 | 82 |

## கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி




- இடைக்கால நிதிநிலை அறிக்கையானது, 9 முதல் 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பூசி வழங்குதலை ஊக்குவிக்கும் அரசின் முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.
- இது HPV (மனித சடைப்புத்துத் தீநுண்மம்) வைரஸ் தடுப்பூசி வழங்கும் திட்டத்தினை உள்ளடக்கியது.
- இந்த தடுப்பூசியானது கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயின் குறிப்பிட்ட திரிபுகளுக்கு எதிராக பாதுகாப்பை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்திய மக்கள் தொகையில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய 511.4 மில்லியன் பெண்கள் இந்நோயினால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்.
- ஒவ்வோர் ஆண்டும் 1,23,907 பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் பாதிக்கப் படுகின்றனர் என்பதோடு மேலும் 77,348 பேர் இந்த நோயால் உயிரிழக்கின்றனர்.
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், இந்தியாவில் பெண்களிடையே அடிக்கடி ஏற்படும் புற்றுநோய்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

## AYUSH திட்டத்தின் கீழ் சுகாதாரநலப் பாதுகாப்பு

- காப்பீட்டு ஒழுங்குமுறை முகமையான இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது, காப்பீட்டு வழங்கீட்டு நிறுவனங்களானது, AYUSH திட்டத்தின் கீழான சிகிச்சையை தங்களது சுகாதாரக் காப்பீட்டின் கீழ் சேர்ப்பதற்கு ஏப்ரல் 01 ஆம் தேதியைக் காலக்கெடுவாக நிர்ணயித்துள்ளது.
- தங்களது சுகாதாரக் காப்பீட்டுக் கொள்கைகளில் இதர மருத்துவச் சிகிச்சைகளுக்கு இணையாக ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி (AYUSH) போன்ற மருத்துவச் சிகிச்சைகளை சேர்க்குமாறு பொதுக் காப்பீட்டு நிறுவனங்களைக் காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம் வலியுறுத்தி உள்ளது.
- இலவச சிகிச்சை வலையமைப்பு வழங்குநர்களாக ஆயுஷ் மருத்துவமனைகள் அல்லது பகல்நேர மருத்துவச் சேவை மையங்களைச் சேர்ப்பதற்கான தர நிர்ணய தர நிலைகள் மற்றும் நடைமுறைகளை அவற்றிற்கான வழிகாட்டுதல்கள் உள்ளடக்கி இருக்க வேண்டும்.




## பல்கலைக்கழக மானியக் குழுவின் வரைவு இடஒதுக்கீடு விலக்கு மீதான வழி காட்டுதல்கள்


- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) சமீபத்திய வரைவு வழிகாட்டுதல்கள் ஆனது, "விதிவிலக்காக விளங்கும் சில சந்தர்ப்பங்களில்" ஒதுக்கப்பட்ட இடங்களை ரத்து செய்யலாம் என்று கூறுகிறது.
- விதிவிலக்கான சூழ்நிலைகளில், நேரடி ஆட்சேர்ப்பு விவகாரத்தில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட ஆசிரியர் காலிப் பணியிடங்களை ரத்து செய்வதற்கு பொதுத் தடை இருக்கும் போது, ஒரு பல்கலைக்கழகம் போதுமான விளக்கத்தினை வழங்கினால் அந்த நடவடிக்கையினை மேற்கொள்ள இயலும் என்று வழிகாட்டுதலின் இந்தப் பகுதி கூறுகிறது.
- இதில், நேரடி ஆட்சேர்ப்பு என்பது பொது மக்கள் மத்தியில் பணியிடங்கள் குறித்து விளம்பரப் படுத்திய பின்னர் விண்ணப்பங்கள் கோருவதன் மூலம் ஆசிரியர்களை நியமிக்கும் செயல்முறையாகும்.
- மறுபுறம், இட ஒதுக்கீடு ரத்து என்பது, ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரிவினருக்காக (SC, ST, OBC, EWS பிரிவினர்) ஒதுக்கப்பட்ட, நிரப்புவதற்குப் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டும் காலியாகவே உள்ள ஆசிரியப் பதவிகளை, பொதுப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்குக் கிடைக்கப் பெறும் என்று அறிவித்தல் ஆகும்.
- பல்கலைக்கழக மானியக் குழுவானது, ஏற்கனவே 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இட ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்துவதற்கான வழிகாட்டுதல்களைக் கொண்டு உள்ளது.

## இந்தியப் பெண்களிடையே கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகள்

- இந்தியாவில் பதிவான புதிய பாதிப்புகளில் 32 சதவிகிதம் ஆனது, மார்பகம், வாய் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பாதிப்புகள் ஆகும்.
- இந்தியாவில் 2022 ஆம் ஆண்டில் 14.13 லட்சத்துக்கும் அதிகமான புதிய புற்றுநோய் பாதிப்புகள் மற்றும் 9.16 லட்சம் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

- ஆண்களில் பதிவாகியுள்ள 6,91,178 பாதிப்புகளுடன் ஒப்பிடும் போது, பெண்களில் பதிவாகியுள்ள 7,22,138 புற்றுநோய் பாதிப்புகள் சற்று அதிகமாக உள்ளது.
- மார்பகம், கருப்பை வாய், கருப்பை, வாய் மற்றும் பெருங்குடல் புற்றுநோய்கள் ஆகியவை இந்தியப் பெண்கள் மத்தியில் அதிகம் பரவும் ஐந்து புற்றுநோய் பாதிப்புகள் ஆக கண்டறியப் பட்டுள்ளது.
- வாய்க்குழி, நுரையீரல், உணவுக்குழாய், பெருங்குடல் மற்றும் வயிறு ஆகியவை இந்திய ஆண்கள் மத்தியில் அதிகம் பரவும் ஐந்து புற்றுநோய்கள் ஆகும்.
- இந்தியாவில் 1% பெண்களுக்கு மட்டுமே கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான பரிசோதனை செய்யப் படுகிறது.
- பல தென் மாநிலங்கள் மற்றும் வடகிழக்கில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாநிலங்கள் பெண்கள் மத்தியில் அதிகளவில் பரிசோதனை மேற்கொள்வதற்கு முனைப்பு காட்டியுள்ளன.
- உதாரணமாக, தமிழ்நாட்டில் 7% பெண்கள் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்காகவும், 3.8% பேர் மார்பகப் புற்றுநோய்க்காகவும் பரிசோதனை மேற்கொண்டதாகவும் கூறி உள்ளனர்.
- பல்வேறு மாநிலங்களில் இந்த இரண்டு வகைகளில் பதிவான பரிசோதனைப் பதிவில் இது மிக அதிகம் ஆகும்.

Chart 2 | *The chart shows the share of women aged 30-49 who were screened for cervical cancer as of 2019 in BRICS nations (in %).*




- கேரளா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களும் இந்த இரண்டு வகைகளின் கீழ் 1% அளவை மட்டுமே கடந்துள்ளன.
- ஆந்திரப் பிரதேசத்தில், 5% பெண்கள் வாய்வழிப் புற்றுநோய்க்காகப் பரிசோதனை மேற்கொண்டதாகவும் கூறியுள்ள நிலையில் பல்வேறு மாநிலங்களில் இந்த வகைப் புற்றுநோயில் பதிவான பரிசோதனைப் பதிவில் இது மிக அதிகம் ஆகும்.
- அதே சமயம், இந்தியாவில் மிகக் குறைவாக மேற்கு வங்காளத்தில் 0.1% பெண்கள் மட்டுமே ஏதேனும் ஒரு வகையான புற்றுநோய்க்காக பரிசோதனை மேற்கொண்டதாக கூறியுள்ளனர்.
- குஜராத் மாநிலமும் 0.2% அளவுடன் மோசமான செயல்திறனைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் ஒட்டு மொத்தமாக, 2019-21 ஆம் ஆண்டு நிலவரப்படி, கர்ப்பப்பை வாய், மார்பகம் மற்றும் வாய்க்குழி புற்றுநோய்க்காக பரிசோதனை மேற்கொண்ட பெண்களின் பங்குகள் முறையே 1.2%, 0.6% மற்றும் 0.7% ஆக உள்ளது.

- இதற்கு மாறாக, சுவீடன், அயர்லாந்து, அமேரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு போன்ற முன்னேறிய நாடுகளில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்காகப் பரிசோதனை மேற் கொண்ட பெண்களின் பங்கு 70% க்கும் அதிகமாக இருந்தது.
- இதில் 93% உடன் ரஷ்யா முன்னிலை வகிக்கிற நிலையில், பிரேசில் 58% பங்கினையும், தென்னாப்பிரிக்கா 52% பங்கினையும் கொண்டுள்ளன.
- இந்தியா, எகிப்து மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் இந்தப் பரிசோதனை அளவு 5 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

## RoSCTL திட்டம் நீட்டிப்பு

- மத்திய அமைச்சரவையானது, 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை, ஆடைகள் மற்றும் பல்வேறு வகை துணி வகைகளின் ஏற்றுமதிக்கான மாநில மற்றும் மத்திய வரிகள் மற்றும் சுங்க வரிகளை (RoSCTL) தள்ளுபடி செய்வதற்கான திட்டத்தைத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- வேறு எந்த நெறிமுறையின் கீழும் தற்போது தள்ளுபடி செய்யப்படாத அனைத்து வரிகள்/சுங்க வரிகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் இது ஜவுளித் துறையை போட்டித் தன்மை வாய்ந்ததாக மாற்றும்.
- உள்ளடக்கிய மாநில மற்றும் மத்தியச் சுங்க வரிகள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி மூலம் திரும்பப் பெறப்படாத வரிகளுக்கு RoSCTL வழங்கப்பட்டது.
- இது ஆடைகள் மற்றும் பல்வேறு வகை துணி வகைகளுக்கு மட்டுமே கிடைத்தது.
- இது ஜவுளி அமைச்சகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

| List of state taxes and levies that will be refunded | List of Central taxes and levies that will be refunded |
|---|---|
| • VAT on transportation fuel.<br>• Captive Power.<br>• Mandi Tax.<br>• Electricity Duty.<br>• Stamp Duty on all the Export Documents.<br>• SGST levied on inputs of production of cotton (raw) like fertilizers, pesticides.<br>• Any other kind of product purchases made from unregistered dealers.<br>• The material used for the transport sector.<br>• The Coal used for production. | • Central excise duty on fuel used in transportation<br>• Embedded CGST paid on inputs like pesticides, fertilizers.<br>• Any other material purchases from unregistered dealers.<br>• Inputs for the transport sector and<br>• CGST and compensation Cess on Coal used in the production of electricity |

## ஹமாரா சம்விதன் ஹமாரா சம்மான்

- குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர், 'ஹமாரா சம்விதான், ஹமாரா சம்மான்' என்ற ஓர் ஆண்டு கால நாடு தழுவிய பிரச்சாரத்தைத் தொடங்கி வைக்க உள்ளார்.

- அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் மீது இந்தியா கொண்டுள்ள கூட்டு உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதையும், தேசத்தைப் பிணைக்கும் பகிரப்பட்ட மதிப்புகளைக் கொண்டாடுவதையும் இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாடு தழுவிய முன்னெடுப்பானது, அரசியலமைப்பு கட்டமைப்பில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கைகளை நிலை நிறுத்தச் செய்வதற்கான பெருமை மற்றும் பொறுப்புணர்வு உணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## முதலாவது ஆய்வுக் கப்பல் - ஐஎன்எஸ் சந்தாயக்




- இந்தியக் கடற்படையானது, சந்தாயக் எனப்படும் அதன் சமீபத்திய ஆய்வுக் கப்பலை படையில் இணைத்துள்ளது.
- இது நான்கு ஆய்வுக் (பெரிய) கப்பல்களின் தொடரில் முதல் கப்பலாகும்.
- இந்தக் கப்பலின் முதன்மைப் பயன்பாடானது துறைமுகம் சார்ந்த பெரும் அணுகுமுறைகளுக்கான விரிவான கடலோர மற்றும் ஆழ்கடல் நீர் பரப்பியல் சார்ந்த ஆய்வுகளுடன் கப்பல் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் பெரு வழித்தடங்களைத் தீர்மானிப்பதும் ஆகும்.
- இந்த கப்பல் ஆனது, கடல்சார் மற்றும் புவி இயற்பியல் தரவுகளைச் சேகரிக்கவும், பாதுகாப்பு மற்றும் பொது பயன்பாடுகளுக்குச் சேவை வழங்கும் வகையிலும் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கப்பல் ஆனது, 2021 ஆம் ஆண்டில் படையிலிருந்து நீக்கப்பட்ட பழைய சந்தாயக் கப்பலிலிருந்து தற்போதைய வடிவத்திற்கு மறுவடிவம் பெற்றுள்ளது.

## அதிகபட்ச பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடு – 2024

- மத்திய நிதிநிலை அறிக்கையின் ஒரு தனி அறிக்கையானது, பெண்கள் மற்றும் சிறுமிகளை இலக்காகக் கொண்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் மீதான மதிப்பீட்டை வழங்குகிறது.
- மத்திய நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாக வருடாந்திரப் பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையை (GBS) வெளியிடும் நடைமுறை 2005-06 ஆம் ஆண்டில் தொடங்கியது.

- பல்வேறு அமைச்சகங்களில் அமைக்கப்படும் பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கை தயாரிப்புப் பிரிவுகள் பற்றிய சாசனம் ஆனது 2007 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- இந்த ஆண்டு, பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு 3 லட்சம் கோடி ரூபாயாக உள்ள நிலையில், இது மொத்தச் செலவினங்களில் சுமார் 6.5% ஆகும்.
- இது முந்தைய ஆண்டிற்கான பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப் பட்டதை விட சுமார் 40% அதிகம் என்பதோடு கடந்த பத்தாண்டுகளில் இல்லாத மிக அதிகமான உயர்வும் ஆகும்.
- கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழான ஒதுக்கீட்டின் 87% அதிகரிப்பானது 7 அமைச்சகங்கள்/துறைகள், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான தனது ஒதுக்கீடுகளை நன்கு அதிகரித்ததன் காரணமாகப் பதிவாகியுள்ளது.
- மொத்தப் பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழான ஒதுக்கீட்டில் சுமார் 35%, அதாவது 1 லட்சம் கோடி ரூபாய் ஆனது, MGNREGA திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவது பெரிய ஒதுக்கீடு ஆனது சுமார் 40,000 கோடி ரூபாய் அல்லது பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் ஒதுக்கீட்டில் 13% ஆனது கல்வி அமைச்சகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.
- குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் ஜல் ஜீவன் திட்டத்திற்கு 36,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் திட்டங்களுக்குச் சுமார் 35,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழான ஒதுக்கீட்டில் இவை இரண்டிற்கும் தலா 11%-12% பங்கு ஒதுக்கப் பட்டுள்ளது.
- பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறம்) திட்டத்திற்கான சுமார் 26,000 கோடி ரூபாய் ஒதுக்கீடானது பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழான ஒதுக்கீட்டில் 8.5% பங்காகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது பாலினம் சார்ந்த நிதிநிலை அறிக்கையின் கீழான ஒதுக்கீட்டில் 6.6% பங்கினைப் பெறுகிறது.



## இந்திய எரிசக்தி வாரம் 2024

- இரண்டாவது இந்திய எரிசக்தி வாரக் கொண்டாட்டமானது கோவாவில் நடைபெற்றது.
- ஒட்டு மொத்த எரிசக்தி துறையின் மதிப்புச் சங்கிலியையும் ஒன்றிணைத்து, இந்தியாவின் எரிசக்தி மாற்ற இலக்குகளுக்கு ஒரு ஊக்கியாகச் செயல்படுகின்ற இது இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரே எரிசக்தி கண்காட்சி மற்றும் மாநாடு ஆகும்.
- மிகப்பெரிய எரிசக்தி நிறுவனங்களில் ஒன்றான சவுதி அராம்கோ இந்த நிகழ்விற்கு நிதி ஆதரவு வழங்கும் நிறுவனமாகும்.

## UGC - உயர் கல்வியில் சம வாய்ப்புகள்

- பல்கலைக்கழக மானியக் குழுவானது (UGC), உயர்கல்வி நிறுவனங்களுக்கான வழி காட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள சமூக-பொருளாதார ரீதியாக பின்தங்கியப் பிரிவினருக்கு (SEDGs) சம வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் சில முக்கிய நடவடிக்கைகள்:
    - கற்றல் மற்றும் வருவாய் ஈட்டுவதில் பெறுதலில் நெகிழ்வுத்தன்மை
    - கல்வி வளாகத்திலேயே பகுதி நேர வேலைவாய்ப்பினை அடையாளம் காணுதல்
    - கற்கும் போதே வருவாய் ஈட்டுதல்
    - வெளிப்படையான தேர்வு நடைமுறை
    - நிதியுதவிக்கான ஒத்துழைப்பு
    - மதிப்பீடு மற்றும் அங்கீகாரத்தில் சிறப்பு மதிப்பீடு.
- சமூக-பொருளாதார ரீதியாக பின்தங்கியப் பிரிவினைச் சேர்ந்த (SEDGs) மாணவர்கள், உள்ளடக்கிய, சமமான மற்றும் தரமான உயர்கல்விக்கான அணுகலைப் பெறுவதை உறுதி செய்வதற்காக அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் பிரத்தியேக சமூக-பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான சிறப்புப் பிரிவுகள் அமைக்கப் படும்.


Guidelines to Provide Equitable Opportunity for the Socio-Economically Disadvantaged Groups (SEDGs) in the HEIs

January 2024

The University Grants Commission
Bahadur Shah Zafar Marg
New Delhi – 110002

## கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

- ❖ கால்நடை பராமரிப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியை (AHIDF) 2025-26 ஆம் நிதியாண்டு வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியானது உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (IDF) கீழ் 29,610.25 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளது.
- ❖ பால் பதப்படுத்துதல், இறைச்சி பதப்படுத்துதல், தயாரிப்புகளைப் பல்வகைப் படுத்துதல், கால்நடை தீவனத் தாவரங்கள், இனப் பெருக்கப் பண்ணைகள், விலங்கு கழிவுகளைப் பயன்படுத்திப் பொருட்கள் உருவாக்குதல், செயல்முறை மேலாண்மை (வேளாண் கழிவு மேலாண்மை), கால்நடை தடுப்பூசிகள் மற்றும் மருந்து உற்பத்தி வசதிகள் ஆகியவற்றில் முதலீடுகளை ஊக்குவிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ பட்டியலிடப்பட்ட வங்கி மற்றும் தேசியக் கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி மற்றும் தேசியப் பால்பண்ணை மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் 90% வரையிலான கடனுக்கான இரண்டு வருட கால அவகாசம் உட்பட, எட்டு ஆண்டுகளுக்கு 3% வட்டி மானியத்தை அரசாங்கம் வழங்க உள்ளது.

## GHAR இணைய தளம்

- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது "டிராக் சைல்ட் இணைய தளத்தினை" (குழந்தைகளை கண்காணித்தல்) உருவாக்கியுள்ளது.
- ❖ இது மகாராஷ்டிரா, சத்தீஸ்கர், வடகிழக்குப் பகுதி மாநிலங்கள் மற்றும் ஜார்க்கண்ட் உள்ளிட்ட அனைத்து மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் காணாமல் போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்காணிக்க உதவுகிறது.
- ❖ மேலும், GHAR - GO Home and Re-Unite (குழந்தைகளை மீட்டெடுத்து அவர்களது குடும்பங்களுடன் அவர்களைத் திருப்பி இணைப்பதற்கான இணைய தளம்) என்ற இணைய தளம் ஒன்றும் தேசியக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தினால் உருவாக்கப்பட்டு தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ சிறார் நீதி அமைப்பில் உள்ள குழந்தைகள் மற்றும் வேறு நாடு /மாநிலம் / மாவட்டத்திற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டிய எண்ணிம தடமறிதல் மற்றும் கண்காணிப்பிற்கும் இது உதவுகிறது.

## ஊழியர் மதிப்பீடு கணக்கெடுப்பு

- ❖ ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது, இந்தியாவில் பயன்பாட்டில் உள்ள கைபேசி சாதனங்களுக்கு ஒரு கணக்கெடுப்பு இணைப்பினை அனுப்பத் தொடங்கியுள்ளது.
- ❖ குறுஞ்செய்தி, புலனம் (வாட்ஸ்அப்) மற்றும் மின்னஞ்சல்கள் மூலமாகவும் இந்தக் கணக்கெடுப்பு இணைப்பு அனுப்பப்படுகிறது.
- ❖ இந்த இணைப்பினைப் பெறுநர்களின் பணியிடங்கள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு அவர்கள் வழங்கும் ஆதரவு பற்றிய கேள்விகளைக் கொண்ட கேள்வித்தாள் இந்தக் கணக்கெடுப்பு இணைப்பில் அடங்கும்.

- இந்தக் கணக்கெடுப்பு இணைப்பில், பெறுநர்கள் அவர்களின் பணியிடங்களை மதிப்பிடுதல், இரவு நேர போக்குவரத்து வசதிகள், பாலியல் துன்புறுத்தல் புகார்களைக் கையாள்வதற்கான உள் நிறுவனக் குழு, குழந்தைப் பராமரிப்பு மையங்கள் மற்றும் பலவற்றைப் பற்றிய வினாக்கள் அடங்கும்.
- இந்த "ஊழியர்களின் மதிப்பீடு சார்ந்த கணக்கெடுப்பு ஆனது, குறிப்பிட்ட வசதிகளின் அடிப்படையில் முதலாளிகளின் முன்னேற்றம் மற்றும் முயற்சிகளை மதிப்பிடுவதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பொதுச் சொத்து சேதம் தொடர்பான சட்ட ஆணைய அறிக்கை





- ஓய்வு பெற்ற நீதிபதி ரிதுராஜ் அவஸ்தி தலைமையிலான சட்டக் குழு, பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவதில் ஈடுபடுபவர்கள் பிணை ஆணை பெறுவதில் கடுமையான விதிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழிந்துள்ளது.
- பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்துவதில் ஈடுபட்டவர்கள், அவர்களால் ஏற்படும் இழப்புக்கு இணையான பணத்தை வைப்பு வைத்த பின்னரே பிணை ஆணை பெற வேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- 1984 ஆம் ஆண்டு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- பொதுச் சொத்துக்களுக்கு நீண்டகாலமாக வேண்டுமென்றே இடையூறு விளைவித்தல் போன்ற பல செயல்களைக் கையாள்வதற்காக ஒரு தனிச் சட்டம் இயற்றுவதற்குப் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

## குற்றவியல் அவதூறு பேச்சு தொடர்பான சட்டம்

- இந்தியாவின் 22வது சட்ட ஆணையம் ஆனது, "குற்றவியல் அவதூறு பேச்சு தொடர்பான சட்டம்" என்ற தலைப்பிலான தனது 285வது அறிக்கையினை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.
- இந்தியாவில் குற்றவியல் சட்டங்களின் கட்டமைப்பிற்குள் குற்றவியல் அவதூறு வழக்குகள் தொடர வேண்டும் என்று இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- நற்பெயருக்கான உரிமை என்பது வாழ்வுரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை ஆகியவற்றினை உறுதி செய்யும் அரசியலமைப்பின் 21வது சட்டப் பிரிவிலிருந்து பெறப்பட்டது.

- குற்றவியல் அவதூறு தொடர்பான சட்டத்தைச் சார்ந்துள்ள சட்டவியல் கோட்பாடுகள் ஆனது ஒருவரின் நற்பெயரையும் அதன் அம்சங்களையும் பாதுகாக்கும் சாராம்சத்தைக் கொண்டுள்ளன.
- அவதூறான பேச்சுகளுக்கு குற்றவியல் வழக்குத் தொடரப்படுவது பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கு எதிரானது என்ற வாதத்திற்கு உள்ளாகக் கூடும் என்பது குறிப்பிடத் தக்கது.
- தீங்கு விளைவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அவதூறு பேச்சினால், அத்தகைய தீங்கு உண்மையில் ஏற்படும் போது மட்டுமே அந்த அவதூறு பேச்சு சட்டவிரோதமாக கருதப்பட வேண்டும்.
- 2023 ஆம் ஆண்டு பாரதிய நியாய சன்ஹிதா ஆனது, சமூக சேவை செய்தலை இந்தக் குற்றத்திற்கான கூடுதல் தண்டனையாக சேர்த்துள்ளது.




## மேரா கௌன் மேரி தரோஹர் திட்டம்



- நாடு முழுவதும் உள்ள கிராமங்களின் கலாச்சாரச் செழுமையை எடுத்துரைக்கும் நோக்கில் மத்திய அரசு புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.
- "மேரா கௌன், மேரி தரோஹர்" என்று அழைக்கப்படும் இந்த முன்னெடுப்பு ஆனது, இந்தியக் கிராமங்களின் வாழ்க்கை முறை, வரலாறு மற்றும் நெறிமுறைகளை ஆராய முயல்கிறது.
- தேசியக் கலாச்சார வரைபடமாக்கலின் முக்கிய அங்கமாக, நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் பொதிந்துள்ள கலாச்சாரப் பன்முகத் தன்மையை ஆவணப் படுத்தச் செய்வதற்கும் வரைபடமாக்கச் செய்வதற்கும் மத்திய அரசு மேற்கொண்டுள்ள உறுதிப்பாட்டை இந்த திட்டம் பிரதிபலிக்கிறது.

## பழங்குடியினர் விவகாரங்கள் திருத்த மசோதாக்கள் 2024



**BOOST FOR VULNERABLE GROUPS**

- 4 of 13 PVTGs in state – Pauri Bhuyan, Chuktia Bhunjia, Bondo and Mankidia – who did not find place in the ST list, will be included now. The rest 9 groups are already in the ST list
- As per the Bill, Muka Dora, Mooka Dora, Nuka Dora, Nooka Dora in Koraput, Nabarangapur, Rayagada and Malkangiri districts will be declared the 63rd community in the state ST list
- Konda Reddy, Konda Reddi will form a separate 64th community in the ST list
- Tamadia and Tamudia, listed as SCs, will be shifted to the ST list. They will be considered a sub-group of Bhumij


- மாநிலங்களவையானது அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்) ஆணை திருத்த மசோதா, 2024 மற்றும் அரசியலமைப்பு (பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர்) ஆணை திருத்த மசோதா, 2024 ஆகியவற்றை நிறைவேற்றியுள்ளது.
- ஒடிசாவின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் பல புதிய சமூகங்களைச் சேர்ப்பதற்கான வழிமுறையை இது தெளிவுபடுத்துகிறது.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஒடிசா ஆகிய இரு மாநிலங்களின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் தற்போதுள்ள பழங்குடியினரின் ஒத்த (இணை பொருள்) சொற்கள் மற்றும் ஒலிப்பு மாறுபாடுகளைச் சேர்ப்பதற்கும் இது உதவுகிறது.
- இந்தக் கூடுதல் சேர்க்கையில் ஒடிசாவில் நான்கு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் மூன்று என ஏழு எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழுக்கள் (PVTG - (பட்டியலிடப்பட்ட பழங்குடியினரின் உட்பிரிவு) சேர்க்கப்பட்டுள்ளன.
- ஒடிசாவின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள PVTG சமூகங்கள்
  - புயான் பழங்குடியினக் குழுவிற்கு இணையான சொற்களாக பௌரி புயான் மற்றும் பௌடி புயான்;
  - புன்ஜியா பழங்குடியினருக்கு இணையான சொல்லாக சுக்டியா புஞ்சியா;

- போண்டோ போராஜா பழங்குடியினரின் உட்பிரிவாக போண்டோ; மற்றும்
- மன்கிர்டியா பழங்குடியினருக்கு இணையான சொல்லாக மன்கிடியா.

❖ ஆந்திரப் பிரதேசத்தின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள PVTG சமூகங்கள்

- போர்ஜா பழங்குடியினருக்கு இணையான சொற்களாக போண்டோ போர்ஜா மற்றும் கோண்ட் போர்ஜா;
- சவராஸ் பழங்குடியினருக்கு இணையான சொல்லாக கொண்டா சவராஸ்.

## எஃகுத் தொழில் துறையில் பசுமை ஹைட்ரஜன் குறித்தப் பயன்பாட்டிற்கான வழிகாட்டுதல்கள்




❖ எஃகுத் தொழில் துறையில் பசுமை ஹைட்ரஜனை பயன்படுத்துவதற்கான சோதனை திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான திட்ட வழிகாட்டுதல்கள் என்ற தலைப்பிலான இந்த வழிகாட்டுதல்கள் வெளியிடப் பட்டுள்ளன.

❖ புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது எஃகுத் தொழில் துறையில் சோதனைத் திட்டங்களைச் செயல்படுத்த உள்ளது.

❖ இது புதைபடிவ எரிபொருள்கள் மற்றும் புதைபடிவ எரிபொருள் சார்ந்த உள்ளீடுகளுக்கு மாற்றாக பசுமை ஹைட்ரஜன் மற்றும் அதன் விளைபொருட்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்த சோதனைத் திட்டங்கள் ஆனது, எஃகு அமைச்சகம் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப் பட்ட அமலாக்க முகமைகள் மூலம் செயல்படுத்தப்படும்.


❖ எஃகுத் தொழில் துறையில் மேற்கொள்ளப்பட உள்ள சோதனைத் திட்டங்களுக்கு உந்துதலாக விளங்கும் பகுதிகளாக மூன்று பிரிவுகள் அடையாளம் காணப் பட்டு உள்ளன.

❖ அவை

- இரும்புத் தயாரிப்பில் மேற்கொள்ளப்படும் நேரடி ஆக்சிஜன் குறைப்பு செயல்பாட்டில் ஹைட்ரஜனைப் பயன்படுத்துதல்;
- ஊது உலையில் ஹைட்ரஜனைப் பயன்படுத்துதல்; மற்றும்

- புதை படிம எரிபொருட்களுக்குப் பதிலாகப் பசுமை ஹைட்ரஜனைப் படிப்படியாக பயன்படுத்துதல்.
- இரும்பு மற்றும் எஃகு உற்பத்தியில் வெளியாகும் கார்பன் உமிழ்வைக் குறைக்கச் செய்வதற்காக ஹைட்ரஜன் சார்ந்த வேறு ஏதேனும் ஒரு புதுமையான பயன்பாட்டை உள்ளடக்கிய சோதனைத் திட்டங்களை மேற்கொள்ளவும் இந்தத் திட்டம் உதவும்.

## பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) மசோதா, 2024




- 2024 ஆம் ஆண்டு பொதுத் தேர்வுகள் (முறைகேடுகள் தடுப்பு) மசோதாவானது, மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- பொதுத் தேர்வு முறைகளில் அதிக வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் நம்பகத் தன்மையை கொண்டு வருவதற்காக, "முறைகேடுகளை" தடுப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மசோதாவின் 3வது பிரிவு ஆனது, பொதுத் தேர்வுகளில் "பணம் சார்ந்த அல்லது தவறான ஆதாயத்திற்காக" நியாயமற்ற வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கான குறைந்தபட்சம் 15 செயல்களைப் பட்டியலிடுகிறது.
- இந்த செயல்களில் பின்வருவன அடங்கும்:
    - வினாத்தாள் அல்லது விடைக்குறிப்பு அல்லது அதன் ஒரு பகுதி வெளியாதல் மற்றும் அத்தகைய வெளியாதல் மோசடியில் கூட்டு சேர்தல்
    - அங்கீகாரம் இல்லாமல் வினாத்தாள் அல்லது ஒளிக்குறி உணரிப் பதிலளிப்புத் தாளை அணுகுதல் அல்லது கையகப்படுத்துதல்";
    - ஒளிக்குறி உணரிப் பதிலளிப்புத் தாள்கள் உள்ளிட்ட விடைத்தாள்களைச் சிதைத்தல்
    - பொதுத் தேர்வின் போது அங்கீகரிக்கப்படாத நபரால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்குதல் மற்றும்

   - பொதுத் தேர்வில் தேர்வர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவுதல்.

- இந்த மசோதாவின் 9வது பிரிவு ஆனது, அனைத்து குற்றங்களும் பிடியாணையற்ற, பிணையில் வெளி வர முடியாத மற்றும் கூட்டுப்படுத்த முடியாத குற்றங்கள் என்று கூறுகிறது.
- "முறைகேடுகள் மற்றும் குற்றங்களில் ஈடுபடும் எந்தவொரு நபருக்கும் அல்லது நபர்களுக்கும்" மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் 10 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப் படலாம்.

## பாரத ரத்னா 2024




- முன்னாள் பிரதமர்கள் P.V. நரசிம்மராவ் மற்றும் சௌத்ரி சரண் சிங், வேளாண் அறிவியலாளர் M.S. சுவாமிநாதன் ஆகியோருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வுள்ளது.
- முன்னதாக, பீகார் முன்னாள் முதல்வர் கர்பூரி தாக்கூர், முன்னாள் துணைப் பிரதமர் லால் கிருஷ்ண அத்வானி ஆகியோருக்கு இந்தியாவின் உயரியக் குடிமை விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.
- இந்த ஆண்டு வழங்கப்பட உள்ள ஐந்து விருதுகள் ஆனது 1999 ஆம் ஆண்டில் ஒரே ஆண்டில் வழங்கப்பட்ட நான்கு விருதுகள் என்ற எண்ணிக்கையினை ஓராண்டில் அதிக எண்ணிக்கையில் வழங்கப்பட்ட பாரத ரத்னா விருதுகள் என்ற வகையில் விஞ்சி உள்ளது.
- அத்வானி அவர்கள் 1999 முதல் 2004 ஆம் ஆண்டு வரை அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் தலைமையில் உள்துறை அமைச்சராகவும், துணைப் பிரதமராகவும் பணியாற்றியுள்ளார்.

- ❖ தெலுங்கு தலைவர் P.V. நரசிம்ம ராவ் அவர்கள், 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டுகள் பிரதமராக பதவி வகித்தார்.
- ❖ பொருளாதாரச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதில் அவர் முக்கியப் பங்கு வகித்ததற்காக பெருமளவில் புகழப்படுகிறார்.
- ❖ மான்கொம்பு சாம்பசிவன் சுவாமிநாதன் அவர்கள், வேளாண்மை மற்றும் விவசாயிகளின் நலனில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காக புகழ் பெற்றவர் ஆவார்.

## இந்தியாவின் எண்ணெய் தேவை 2030




- ❖ இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையின் வளர்ச்சியானது 2027 ஆம் ஆண்டிற்குள் சீனாவை முந்தி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இந்தியாவின் எண்ணெய் தேவையானது, 2030 ஆம் ஆண்டிற்குள் குறிப்பிடத்தக்க அளவில் 3.7% என்ற சராசரி வருடாந்திர விகிதத்தில் வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இது 1.1% என்ற உலகளாவிய சராசரியைக் கணிசமான அளவில் விஞ்சுகிறது.
- ❖ நாட்டின் உள்நாட்டு உற்பத்தியானது 22 சதவீதம் குறையும் என கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ ஆனால் நாட்டின் எண்ணெய் தேவையானது 2023 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஒரு நாளைக்குச் சுமார் 1.2 மில்லியன் பீப்பாய்கள் (bpd) அதிகரிக்கும்.
- ❖ இந்தியாவில் தற்போது மூன்று இடங்களில் உள்ள உத்திசார் பயன்பாட்டிற்கான கச்சா எண்ணெய் கையிருப்பு அளவு 5.33 மில்லியன் டன்கள் ஆகும்.

## ஜம்மு & காஷ்மீருக்கான சட்டத் திருத்த மசோதாக்கள்

- ❖ 2024 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் ஆணை (திருத்தம்) மசோதாவிற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்து உள்ளது.
- ❖ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்தை வழங்குவதன் மூலம் பஹாரி இனக்குழு, பதாரி பழங்குடியினர், கோலி மற்றும் காடா பிராமணர் ஆகியோருக்கு அதிகாரம் அளிப்பதை இந்த மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஜம்மு மற்றும் காஷ்மீர் உள்ளாட்சி அமைப்புகள் சட்டங்கள் (திருத்தம்) மசோதா, 2024 மற்றும் அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பட்டியலிடப்பட்டச் சாதியினர் ஆணை (திருத்தம்) மசோதா, 2024 ஆகியவற்றிற்கும் மேலவை ஒப்புதல் அளித்துள்ளது.
- உள்ளாட்சி அமைப்புகள் மசோதா-2024 ஆனது, ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் நகராட்சி அமைப்புகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்க முயல்கிறது.
- இது அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளுடன் சேர்த்து ஒன்றியப் பிரதேசத்தின் உள்ளாட்சிச் சட்டங்களில் நிலைத் தன்மையையும் அறிமுகம் செய்கிறது.
- தற்போது, ஜம்மு காஷ்மீரில் உள்ள பஞ்சாயத்து அமைப்புகள் மற்றும் நகராட்சி அமைப்புகளில் இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு எந்த வித விதிமுறையும் இல்லை.
- பட்டியலிடப்பட்டச் சாதியினர் ஆணை திருத்த மசோதாவானது, ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள பட்டியலிடப்பட்டச் சாதியினர் பட்டியலில் சூரா, பால்மிகி, பாங்கி மற்றும் மேத்தர் சமூகங்களின் இணைச் சொல்லாக வால்மீகி என்ற சமூகத்தினைச் சேர்க்கிறது.
- 1956 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (ஜம்மு மற்றும் காஷ்மீர்) பட்டியலிடப்பட்ட சாதியினர் ஆணையைத் திருத்த இந்த மசோதா முயல்கிறது.




## கில்காரி திட்டம்





- கில்காரி திட்டம், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் உள்ளூர் பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்காகச் சமீபத்தில் தொடங்கப்பட்ட கைபேசி சுகாதார நலச் சேவை (m-health) முன்னெடுப்பு ஆகும்.

- 'கில்காரி' ('குழந்தையின் ஓசை' என்று பொருள்) என்பது ஒரு மையப்படுத்தப்பட்ட இரு வழித் தொடர்பிலான குரல்வழி செய்திகளை (IVR) வழங்கும் வகையிலான கைபேசி சுகாதார நலச் சேவையாகும்.
- இது பயனாளிகளின் கைபேசிகளை கர்ப்பம், பிரசவம், குழந்தைப் பராமரிப்பு பற்றிய இலவச, வாராந்திர, நேரத்திற்குத் தகுந்த 72 ஒலி/ஒளி சார் செய்திகளை வழங்குகிறது.
- தற்போது கில்காரி திட்டம் 18 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

## வருடாந்திர மரண தண்டனை அறிக்கை 2023

- திட்டம் 39A என்ற ஆலோசனை வழங்கீட்டுக் குழுவினால், 'இந்தியாவில் மரண தண்டனைகள்: வருடாந்திரப் புள்ளிவிவரங்கள் 2023' என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் ஒரு உயர் நீதிமன்றத்தினால் ஒரே ஒரு மரண தண்டனை மட்டுமே உறுதி செய்யப்பட்ட நிலையில், இது 2000 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் பதிவான குறைவான விகிதத்தைக் குறிக்கிறது.
- உறுதிப்படுத்தப்பட்ட கொலை (ஒரு நபரைத் திட்டமிட்டு வேண்டுமென்றே கொலை செய்தல்) வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றம் ஒரு மரண தண்டனையை உறுதி செய்தது.
- 2023 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் எந்தவொரு மரண தண்டனையையும் உறுதி செய்யவில்லை என்ற வகையில், 2021 ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாவது முறையாக உச்ச நீதிமன்றத்தில் எந்த மரண தண்டனையும் உறுதி செய்யப் பட வில்லை.
- 2023 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றங்களில் நடைபெற்ற வழக்காடுதல்களில் மரண தண்டனையை உறுதிப்படுத்துவதற்கான தீர்ப்பு வழங்குதல் என்பது 15% குறைந்து உள்ளது குறிப்பிடத் தக்கது ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் பதிவான 68 வழக்குகளுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் 57 மரண தண்டனை வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் இருந்ததை விட, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் மரண தண்டனையின் கீழ் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 45.71% அதிகரித்துள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளைப் போலவே, விசாரணை நீதிமன்றங்களில் வழக்காடப்படும் பெரும்பாலான மரண தண்டனை வழக்குகளானது பாலியல் குற்றங்கள் தொடர்பான குற்றங்களை உள்ளடக்கியது ஆகும்.



## பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சஹ்-யோஜனா





- மத்திய அமைச்சரவையானது "பிரதான் மந்திரி மத்ஸ்ய கிசான் சம்ரிதி சா-யோஜனா (PM-MKSSY)" திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது மத்திய அரசின் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா திட்டத்தின் கீழான துணைத் திட்டமாகும்.
- இது மீன்வளத் துறையை முறைப்படுத்துவதையும், குறு மற்றும் சிறு மீன்வளத் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியானது 2022-23 ஆம் ஆண்டில் 174 லட்சம் டன்னாக இருந்தது.
- உலகின் மொத்த மீன் உற்பத்தியில் 8% பங்குடன் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய மீன் உற்பத்தியாளராக உள்ளது.

## 17வது மக்களவையின் அமர்வு நாட்கள்

- 17வது மக்களவையானது 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை அதன் அமர்வுகளை நடத்தியது.
- இந்த ஐந்து ஆண்டுகளில், மக்களவையானது அதன் திட்டமிடப்பட்ட நேர காலத்தில் 88% வரை செயல்பட்டுள்ள அதே சமயம் மாநிலங்களவையானது 73% வரை செயல் பட்டுள்ளது.
- 17வது மக்களவையானது 274 அமர்வுகளை நடத்தியது.

- முந்தைய நான்கு மக்களவைகள் மட்டுமே குறைவான அமர்வுகளை மேற்கொண்டன.
- அவை அனைத்தும் தனது ஐந்தாண்டு பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்கு முன்பே கலைக்கப் பட்டு விட்டன.
- இந்த மக்களவையில் மிகக் குறைவான அமர்வுகள் ஆனது 2020 ஆம் ஆண்டில் (33 நாட்கள்) கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் நடைபெற்றன.
- இந்த மக்களவையின் போது நடைபெற்ற 15 அமர்வுகளில் 11 அமர்வுகள் முன்கூட்டியே ஒத்தி வைக்கப்பட்டன.
- இதன் விளைவாக, 40 திட்டமிடப்பட்ட அமர்வுகள் நடத்தப்படவில்லை (13% திட்டமிடப் பட்ட அமர்வுகள்).
- 17வது மக்களவையின் போது, பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும், 206 வழக்குகளில், பாராளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.
- 2023 ஆம் ஆண்டு குளிர்கால அமர்வில், 146 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் தவறான நடத்தை காரணமாக இடைநீக்கம் செய்யப்பட்டனர்.
- 179 மசோதாக்கள் (நிதி மற்றும் நிதிப்பகிர்வு மசோதாக்கள் தவிர்த்து) நிறைவேற்றப் பட்டன.
- நிதி மற்றும் உள்துறை அமைச்சகங்கள் அதிக எண்ணிக்கையிலான மசோதாக்களை முன்வைத்தன (ஒவ்வொன்றும் 15%). அதைத் தொடர்ந்து சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் (9%), மற்றும் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (9%) ஆகியவை உள்ளன.
- 16% மசோதாக்கள் விரிவான மதிப்பாய்விற்காக குழுக்களுக்கு அனுப்பப்பட்டன.
- இது முந்தைய மூன்று மக்களவைகளின் புள்ளிவிவரங்களைக் காட்டிலும் குறைவு ஆகும்.
- இந்த மக்களவை கலைக்கப்படுவதன் மூலம் நான்கு மசோதாக்கள் காலாவதியாகும்.
- இதுவரையில் இருந்த அனைத்து மக்களவைகளிலும் இதுவே குறைந்த எண்ணிக்கை ஆகும்.
- 729 தனிநபர் உறுப்பினர் மசோதாக்கள் (PMBs) 17வது மக்களவையில் அறிமுகப் படுத்தப் பட்ட நிலையில் இது 16வது மக்களவையைத் தவிர, முந்தைய அனைத்து மக்களவைகளிலும் அறிமுகப் படுத்தப்பட்டதை விட அதிகமாகும்.
- இருப்பினும், இரண்டு PMB மசோதாக்கள் மட்டுமே விவாதிக்கப்பட்டன.
- அதே காலகட்டத்தில், மாநிலங்களவையில் 705 PMB மசோதாக்கள் அறிமுகப்படுத்தப் பட்டு அதில் 14 மசோதாக்கள் விவாதிக்கப்பட்டன.
- இன்றுவரை, 14 PMB மசோதாக்கள் மட்டுமே நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு உள்ளன.
- 1970 ஆம் ஆண்டு முதல் எந்தவொரு மசோதாவும் இரு அவைகளிலும் நிறைவேற்றப் படவில்லை.
- 16வது மக்களவை அல்லது 17வது மக்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.
- ஆனால் 15வது மக்களவையில் இது போன்ற இரண்டு தீர்மானங்களும் மற்றும் 14வது மக்களவையில் இது போன்ற 7 தீர்மானங்களும் விவாதிக்கப்பட்டன.




## தண்ணீர் (மாசுபடுத்துதல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா, 2024




- தண்ணீர் (மாசுபடுத்துதல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த மசோதா, 2024 ஆனது அது தொடர்பான சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக முன்மொழியப் பட்டு, 72 மணி நேரத்திற்குள் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப் பட்டது.
- 50 ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறைக்கு வந்த அசல் சட்டத்தின் விதிகளை இந்தச் சட்டம் தளர்த்துகிறது.
- மத்திய மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்கள் (SPCB) ஆனது 1974 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.
- இந்த சட்டத்தின் திருத்தப்பட்ட வடிவம் ஆனது தற்போது இமாச்சலப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு பொருந்தும்.
- 1974 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அசல் சட்டமானது 25 மாநிலங்களுக்குப் பொருந்தும்.
- இதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மிக முக்கியமான மாற்றம் என்னவென்றால், "சிறிய அளவானது" எனக் கருதப் படும் பல விதி மீறல்களுக்கான சிறைத்தண்டனை விதிகளை

நீக்கி, அவற்றிற்குப் பதிலாக 10,000 ரூபாய் முதல் 15 லட்சம் ரூபாய் வரையிலான அபராதம் ஆக மாற்றியுள்ளது.

- இந்தத் திருத்தங்கள், சில சந்தர்ப்பங்களில் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களின் விதிகளை ரத்து செய்ய மத்திய அரசிற்கு அதிக அதிகாரம் அளிக்கின்றன.
- SPCB அனுமதியின்றி ஒரு தொழில்துறைப் பிரிவை இயக்கினால் அல்லது நிறுவினால், அபராதத்துடன் ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்படும்.
- SPCB வழங்கிய ஒப்புதலை வழங்குதல், மறுத்தல் அல்லது ரத்து செய்வதற்கான வழி காட்டுதல்களை மத்திய அரசு வெளியிடலாம் என்றும் இந்த மசோதா கூறுகிறது.
- மேலும் இது எந்தவொரு தொழிற்துறை அல்லது சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் கண்காணிப்பு சாதனங்களை சேதப்படுத்தும் குற்றத்திற்கு அபராதத்தினைத் தண்டனையாக விதிக்கிறது.

## தேர்தல் பத்திரங்கள் ரத்து




- உச்ச நீதிமன்றமானது குடிமக்களின் தகவல் அறியும் உரிமையை மீறுகிறது என்று கூறி தேர்தல் பத்திரங்கள் திட்டத்தை ரத்து செய்து அது அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்று கூறியுள்ளது.
- இது அரசியல் கட்சிகள் மற்றும் நன்கொடையாளர்களிடையே சரியீடு அல்லது கையூட்டு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.
- இந்தப் பத்திரங்களை வழங்குவதை நிறுத்தவும், இதுவரை அளிக்கப்பட்ட நன்கொடை விவரங்களை தேர்தல் ஆணையத்திற்கு வழங்கவும் பாரத ஸ்டேட் வங்கிக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- அரசியல் கட்சிகள் இந்த வழியில் பெறப்பட்டப் பங்களிப்புகள் குறித்தத் தகவல்களை வெளியிடத் தேவையில்லை, அதாவது நிறுவனங்கள் வரம்பற்ற நிதி பரிமாற்றங்களை செய்யலாம், என்ற வசதியினை இது வழங்கியது..

- தேர்தல் ஆணையத்தின் தரவுகளின்படி, 2016 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 16,437.63 கோடி ரூபாய் மதிப்புள்ள 28,030 தேர்தல் பத்திரங்கள் விற்கப் பட்டு உள்ளன.
- இத்திட்டத்தின் தொடக்கத்தில் 2017-2018 ஆம் ஆண்டில் 210 கோடி ரூபாயைப் பெற்ற பாஜக, 2022-23 ஆம் ஆண்டில் 1,294.14 கோடி ரூபாயைப் பெற்றது.
- 2022-2023 ஆம் ஆண்டில் அகில இந்திய திரிணாமுல் காங்கிரஸ் (AITC) 325 கோடி ரூபாயும், திமுக 185 கோடி ரூபாயும் பெற்ற நிலையில் இந்திய தேசிய காங்கிரஸ் 171.02 கோடி ரூபாய்க்கும் குறைவாகவே பெற்றது.

## பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனா




- பிரதம மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனாவைத் தொடங்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்த திட்டம் 75,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட உள்ளது.
- ஒவ்வொரு மாதமும் 300 அலகு வரை இலவச மின்சாரம் வழங்குவதன் மூலம் 1 கோடி வீடுகளுக்கு ஒளியூட்டுவதை இத்திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது.
- 2 கிலோவாட் வரை திறன் கொண்ட சூரிய சக்தி உற்பத்தி தகடுகளை வாங்குவதற்கு, குடும்பங்கள் ஒரு கிலோவாட்டிற்கு 30,000 ரூபாய் வரையிலும் மற்றும் 3 கிலோவாட் வரையிலான கூடுதல் திறன் கொண்ட சூரியசக்தி உற்பத்தி தகடுகளை வாங்குவதற்கு ஒரு கிலோவாட்டிற்கு 18,000 ரூபாய் வரையிலும் மானியம் பெறலாம்.

## சேமிப்பு திட்டங்களின் பெயர் மாற்றம்

- மத்திய அரசு ஆனது, சுகன்யா சம்ரித்தி யோஜனாவை சுகன்யா சம்ரித்தி கணக்குத் திட்டம் 2024 என்றும், தபால் அலுவலக கால வைப்புநிதித் திட்டத்தை திருத்தப்பட்ட வட்டி விகிதங்களுடன் தேசிய சேமிப்பு கால வைப்புநிதித் திட்டம் என்றும் மறுபெயர் இட்டுள்ளது.
- இந்தத் திட்டம் சுகன்யா சம்ரித்தி கணக்கு (திருத்தம்) திட்டம், 2024 என்று அழைக்கப் படும் என்பதோடு, இது 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்ததாகக் கருதப்படும்.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு கணக்கில் வைக்கப் படும் வைப்பு நிதிகளுக்கு 8.2 சதவிகிதம் வட்டி கிடைக்கப் பெறும்.




## ASI 2020-21 மற்றும் ASI 2021-22

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் ஆனது, 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான தொழில்துறை வருடாந்திர கணக்கெடுப்பு (ASI) முடிவுகளை வெளியிட்டுள்ளது.
- இந்தக் கணக்கெடுப்புகள் ஆனது, மின்சாரப் பயன்பாட்டுடன் சேர்த்து 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை நியமிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வசதி இல்லாமல் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்ற தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும்.

- ஒட்டு மொத்த மதிப்பில், முந்தைய ஆண்டில் மொத்த மதிப்புக் கூட்டலில் வீழ்ச்சிப் பதிவானதையடுத்து 2020-21 ஆம் ஆண்டில் (தற்போதைய விலையில்) 8.8 சதவிகிதம் அதிகரித்துள்ளது.
- விளைபொருள் வெளியீட்டை விட (1.9 சதவீதம் சரிந்தது) மூலப்பொருள் உள்ளீட்டில் (4.07 சதவீதம்) அதிக வீழ்ச்சி பதிவானதால் மதிப்பு கூட்டலின் அதிகரிப்பு தூண்டப் பட்டது.
- 2021-22 ஆம் ஆண்டில், பொருளாதாரம் மீண்டு வந்ததால் மதிப்பு கூட்டல் ஆனது 26.6 சதவிகிதம் உயர்ந்து, உற்பத்தி 35.4 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.
- இந்த இரண்டு ஆண்டுகளிலும், பதிவு செய்யப்பட்ட முறைசார் உற்பத்தித் துறையானது, முறைசாரா துறையை விட வேகமாக வளர்ச்சியடைந்தது.
- 2021-22 ஆம் ஆண்டில் வளர்ச்சிக்கு உந்துதலாக அமைந்த தொழில்துறைகள் அடிப்படை உலோக உற்பத்தி, கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்கள், மருந்துகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ரசாயனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி ஆகும்.
- இந்தத் தொழில்துறைகளின் மதிப்பு கூட்டல் 34.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- வேலைவாய்ப்பின் மதிப்பீடுகள் ஆனது, பெருந்தொற்று காலத்தின் முதல் ஆண்டில், வேலைவாய்ப்பில் இருந்த நபர்களின் எண்ணிக்கையானது 3.2 சதவீதம் குறைந்து உள்ளது.

**ANNUAL SURVEY OF INDUSTRIES 2020-21 & 2021-22**

| | 2019-20 | 2020-21 | 2021-22 | CAGR For 2021-22 |
|---|---|---|---|---|
| Number Of Factories | 2,46,504 | 2,50,454 | 2,49,987 | 0.7 |
| Number Of Workers | 1,30,58,156 | 1,25,94,563 | 1,36,09,931 | 2.1 |
| Number Of Employees | 1,65,68,526 | 1,60,25,118 | 1,71,51,172 | 1.7 |
| **FINANCIALS** | | | | |
| Wages To Workers | 2,28,90,520 | 2,22,61,548 | 2,64,55,930 | 7.5 |
| Total Emoluments | 4,91,72,897 | 4,83,89,031 | 5,60,82,801 | 6.8 |
| Net Fixed Capital Formation | 1,43,61,795 | 32,25,819 | 30,42,540 | -54.0 |
| Gross Fixed Capital Formation | 4,16,71,537 | 3,13,61,805 | 3,30,07,225 | -11.0 |
| Profits | 4,69,47,269 | 6,14,05,752 | 9,50,71,368 | 42.3 |


*Value figures in Rs lakh* Source: MoSPI

- 2019-20 ஆம் ஆண்டில் 1.66 கோடியாக இருந்த இந்த எண்ணிக்கையானது 2020-21 ஆம் ஆண்டில் 1.6 கோடியாக குறைந்தது.
- அதன்பிறகு 7 சதவீதம் அதிகரிப்புடன் 2021-22 ஆம் ஆண்டில் வேலைவாய்ய்ப்பில் இருந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை 1.7 கோடியாக உயர்ந்துள்ளது
- 2017-18 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 49.8 சதவீதமாக இருந்த தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (15 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்) ஆனது 57.9 சதவீதமாக உயர்ந்து ஒரு நிலையான உயர்வைக் கண்டது.

- 2017-18 ஆம் ஆண்டில் 52.2 சதவீதமாக இருந்த சுயதொழில் செய்யும் தொழிலாளர்களின் பங்கு ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 57.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- அதே காலக்கட்டத்தில், உற்பத்தித் துறையில் இருந்த தொழிலாளர்களின் பங்கு 12.1 சதவீதத்திலிருந்து 11.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

## உலகளாவிய டிஜிட்டல்மயமாக்கல் நடவடிக்கையில் புதிய சாதனை


- "இந்திய அரசின் டிஜிட்டல் பொருளாதார நிலை குறித்த அறிக்கை, 2024" என்ற அறிக்கையானது, டெல்லியில் உள்ள புகழ்பெற்ற ஆலோசனை வழங்கீட்டுக் குழுவான இந்திய சர்வதேச பொருளாதார உறவுகள் சபையினால் (ICRIER) வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகளின்படி, உலகின் மூன்றாவது பெரிய டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நாடாக இந்தியா தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது.
- இது அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய தொழில்நுட்ப திறன் மிகு நாடுகளுக்கு அடுத்த படியாக உள்ளது.




## வருடாந்திர NeSDA முன்னேற்ற அறிக்கை 2023

- நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்பு துறை (DARPG) ஆனது 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர தேசிய மின்னாளுகை சேவை வழங்கீட்டு மதிப்பீடு (NeSDA) முன்னேற்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- NeSDA கட்டமைப்பின் கீழ் வழங்கப்படும் கட்டாய இணையச் சேவைகள் மற்றும் மொத்த இணையச் சேவைகளின் கீழ் இந்த ஆண்டில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் எட்டிய ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இந்த அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.
- தற்போது 76% கட்டாய தேவையான இணைய சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன என்ற நிலையில் இது 2019 ஆம் ஆண்டு NeSDA மதிப்பீட்டின் கீழ் 48% ஆக இருந்ததை விட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகும்.
- சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மொத்தம் 16,487 என்ற இணையதளச் சேவைகளை வழங்குகின்றன என்ற நிலையில் இது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 11,614 ஆக இருந்தது.

- அதிகபட்சமாக 1,117 இணையதளச் சேவைகளை வழங்கும் மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களின் பட்டியலில் ஜம்மு மற்றும் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் தவிர கேரளா, அசாம் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் அந்தந்த ஒருங்கிணைந்த இணைய தளங்கள் மூலம் நூறு சதவீதம் இணையதளச் சேவைகளை வழங்குகின்றன.
- 36 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுள் 23 மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களில் அனைத்து கட்டாய தேவையான இணையதளச் சேவைகளை வழங்குவதில் சுற்றுலாத் துறை அதிக நிறைவு நிலையினைக் கொண்டுள்ளது.



1400Mandatory e-services
69% Saturation in NeSDA 2021

1528 Mandatory e-services
76% Saturation in NeSDA Way Forward, December 2023

## இந்தியாவின் மிகவும் வரவேற்புமிக்க பகுதி 2024




- பிரபல இயங்கலை பயண ஏற்பாட்டு முகமையான Booking.com நிறுவனம், அதன் 12வது வருடாந்திர பயணியர் மறுமதிப்பாய்வு விருதுகள் (2024) என்ற பட்டியலை வெளியிட்டது.
- இது இந்தியாவில் உள்ள மிகவும் வரவேற்புமிக்க பகுதிகள் மற்றும் நகரங்களை முன்னிலைப்படுத்துகிறது.

- இமாச்சலப் பிரதேசம் 'இந்தியாவின் அதிக வரவேற்புமிக்க பகுதி' என்ற பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- அதைத் தொடர்ந்து கோவா, கேரளா, ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 'இந்தியாவில் மிகவும் வரவேற்புமிக்க பத்து நகரங்கள்' பட்டியலில் மாராரிக்குளம் (கேரளா) முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ஜெய்சால்மர் (ராஜஸ்தான்), பிர் (மகாராஷ்டிரா) மற்றும் லே (ஜம்மு & காஷ்மீர்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டம்

- பயறு போன்ற பருப்பு வகைகளை உள்நாட்டில் பயிரிடுவதை ஊக்குவிக்கவும், வழக்கமாகப் பயிரிடும் பயிர்களுக்குப் பதிலாக பருப்பு வகைகளைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்கவும் மத்திய அரசு புதியக் கொள்கையை வகுத்துள்ளது.
- பருப்பு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காகவும், ஒவ்வோர் ஆண்டும் மேற் கொள்ளப்படும் பெருமளவிலான இறக்குமதியை நன்கு குறைக்கச் செய்வதற்காகவும், இந்தியாவின் பருப்பு உற்பத்தியை உயர்த்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியத் தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு (NAFED) மற்றும் தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஆதரவு விலையில் (MSP) கொள்முதல் செய்வதை உறுதி செய்வதற்காக விவசாயிகளுடன் 5 ஆண்டு கால ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்.
- 2027 ஆம் ஆண்டிற்குள் பருப்பு வகைகளின் உற்பத்தியில் மிகத் தன்னிறைவு அடையச் செய்வதற்கான ஒரு செயல் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது.





## காடுகள் என்பதன் வரையறை - உச்ச நீதிமன்றம்

- உச்ச நீதிமன்றம் ஆனது, 'காடு' என்ற சொல் ஆனது தற்போதைக்கு "பரந்த மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய" பொருள் கொண்டதாக இருக்கும் என்றும், 1.97 லட்சம் சதுர கி.மீ. பரப்பளவுள்ள அறிவிக்கப்படாத வன நிலங்களையும் உள்ளடக்கும் என்றும் உத்தரவிட்டது.

- 1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தில் 2023 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களை எதிர்த்து முன்வைக்கப்படும் மனுக்களைத் தொடர்ந்து இது அறிவிக்கப் பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 1A என்ற சட்டப் பிரிவானது, காடுகள் என்ற சொல்லின் வரையறையை 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு 'அரசாங்கப் பதிவேடுகளில்', அறிவிக்கப்பட்ட காடுகள் மற்றும் நிலங்கள் என பதிவு செய்யப்பட்ட காடுகள் ஆகிய இரண்டு வகைகளுக்குள் "சுருக்கியது அல்லது பொருளிழக்கச் செய்தது".
- திரும்பவும் தெளிவு பெறுவதற்காக, 1996 ஆம் ஆண்டு T.N. கோதவர்மன் திருமுல்பாடு வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியத் தீர்ப்பில் உறுதி செய்யப்பட்ட 'காடு' என்ற சொல்லிற்கு "அகராதியில் உள்ள பொருளினை" கருத்தில் கொள்ளுமாறு நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டது.
- நீதிமன்றமானது, 'காடு' என்ற சொல்லிற்கு அதன் இயல்பு, வகைப்பாடு அல்லது உரிமையைப் பொருட்படுத்தாமல், பசுமையான பரப்புகளைப் பாதுகாப்பதற்காக ஒரு விரிவான பொருள் வழங்கியுள்ளது.
- 'காடு' என்ற சொல்லானது அரசுப் பதிவேடுகளில் காடுகள் என்று பதிவு செய்யப் பட்டுள்ள நிலங்களை மட்டும் சாராது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.
- மேலும், உச்ச நீதிமன்றத்தின் இறுதி ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு அரசாங்கமும் அல்லது ஆணையமும் "விலங்கியல் பூங்காக்கள் அல்லது வனச் சுற்றுலாப் பூங்கா" ஆகியவற்றினை நிறுவுவதற்கு ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று நீதிமன்ற அமர்வு அறிவுறுத்தியுள்ளது.

## உலகின் மிக உயரமான இரயில் பாலம்




- உலகின் மிக உயரமான ஒற்றை வளைவு இரயில் பாலமான செனாப் பாலம் சமீபத்தில் திறக்கப்பட்டது.
- ஜம்மு காஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் உள்ள பக்கல் மற்றும் கௌரி ஆகிய பகுதிகளுக்கு இடையே இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது.
- இது கத்ராவிலிருந்து பனிஹாலுக்கு இடையிலான ஒரு முக்கியத்துவம் வாய்ந்தப் போக்குவரத்து இணைப்பாக அமைகிறது.

- இது ஆற்றங்கரையில் இருந்து 1,178 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், இது பாரீஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரத்தை விட 35 மீட்டர் உயரம் கொண்டதாக உள்ளது.

## நியாயமான மற்றும் இலாபகரமான விலை 2024-25


- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது, 2024-25 ஆம் ஆண்டின் சர்க்கரை உற்பத்திப் பருவத்திற்கான கரும்பு உற்பத்தியின் நியாயமான மற்றும் இலாப விலையை (FRP) 10.25% என்ற சர்க்கரை மீள்கையகப் படுத்தல் என்ற விகிதத்தில் குவிண்டாலுக்கு 340 ரூபாயாக அறிவித்து ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டின் நடப்புப் பருவ கரும்பு உற்பத்திக்கான நியாயமான மற்றும் இலாப விலையை விட சுமார் 8% அதிகமாகும்.
- திருத்தப்பட்ட FRP ஆனது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.
- நாடு முழுவதும் வழங்கப் படும் FRP ஆனது 1966 ஆம் ஆண்டு கரும்புக் கட்டுப்பாட்டு ஆணையின் படி நிர்வகிக்கப் படுகிறது.




## தேசியக் கால்நடைத் திட்ட விரிவாக்கம்

- கால்நடைத் துறையை மேம்படுத்துவதற்காக கூடுதல் செயல்பாடுகளை உள்ளடக்கிய தேசியக் கால்நடைத் திட்டத்தில் (NLM) மேலும் புதிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தனிநபர்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO), சுய உதவிக் குழுக்கள் (SHG), கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLG), உழவர் கூட்டுறவு அமைப்புகள் (FCOs) மற்றும் 8 வது பிரிவில் சேர்க்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவை குதிரைகள், கழுதைகள், கோவேறுக் கழுதைகள் மற்றும் ஒட்டகங்கள் தொடர்பான பல தொழில்முனைவு முயற்சிகளை நிறுவுவதற்காக தற்போது 50 லட்சம் ரூபாய் வரையில் 50% மூலதன மானியத்தினைப் பெறும்.

- குதிரை, கழுதை மற்றும் ஒட்டக இனங்களின் வளங்காப்பிற்காக மாநில அரசுகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.
- குதிரைகள், கழுதைகள் மற்றும் ஒட்டகங்களுக்கான பிரத்தியேக விந்து சேமிப்பு நிலையங்கள் மற்றும் உட்கரு பெருக்கப் பண்ணைகள் அமைப்பதற்காக மத்திய அரசானது 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்க உள்ளது.
- தனியார் நிறுவனங்கள், புத்தொழில் நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், FPO, FCO, JLG, உழவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தீவன விதைகளைப் பதப்படுத்தும் உள் கட்டமைப்பில் ஈடுபட்டுள்ள 8வது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள நிறுவனங்கள் 50% அளவு மூலதன மானியத்தைப் பெறும்.
- விவசாயிகளுக்கான காப்பீட்டில் பயனாளியின் பங்கை 15% என்ற அளவாக குறைத்து, கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் நெறிமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- தற்போதைய விகிதங்கள் 20%, 30%, 40% மற்றும் 50% ஆகும்.
- மீதமுள்ள காப்பீட்டுத் தொகையானது அனைத்து மாநிலங்களுக்கும் 60:40 என்ற விகிதத்திலும், ஒன்றியப் பிரதேசங்களில் 90:10 என்ற விகிதத்திலும் மத்திய மற்றும் மாநில அரசுகளும் பகிர்ந்து கொள்ளும்.
- மாடு, செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு காப்பீடு பெறுவதற்கு என்று தகுதியாக நிர்ணயிக்கப் பட்ட கால்நடை எண்ணிக்கையானது 10 கால்நடைகளாக உயர்த்தப் பட்டுள்ளது.



## விண்வெளித் துறையில் 100 சதவிகித அந்நிய முதலீடு




- விண்வெளித் துறையில் சில நடவடிக்கைகளுக்கு 100% அந்நிய நேரடி முதலீட்டுக்கு (FDI) மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- விண்வெளித் துறையில் மேற்கொள்ளப்படும் அந்நிய நேரடி முதலீடு என்பது மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- முதல் வகையானது, செயற்கைக்கோள் உற்பத்தி மற்றும் செயல்பாடு, செயற்கைக் கோள் தரவுத் தயாரிப்புகள் மற்றும் தரைக் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் பயனர் பிரிவில் தன்னியக்கம் (இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் தேவைப்படாத) என்ற வழிமுறையின் கீழ் 74% FDI வரை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
- இந்த வகையில், 74 சதவீதத்திற்கு மேற்பட்ட அந்நிய நேரடி முதலீட்டிற்கு அரசு சார் (இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் தேவைப்படும்) என்ற வழிமுறையின் கீழ் அனுமதி வழங்கப் படும்.
- இரண்டாவது பிரிவில், ஏவு கலங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைப்புகள் அல்லது துணை அமைப்புகள், விண்கலங்களை ஏவுவதற்கும் திரும்பப் பெறுவதற்கும் பயன்படும் விண்வெளித் தளங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தானியங்கி என்ற வழிமுறையின் மூலம் 49 சதவீதத்திற்கு மிகாமல் FDI மேற்கொள்வதற்கு அனுமதிக்கப் படும்.
- இந்த வகையில், 49 சதவீதத்திற்கு மேற்பட்ட அந்நிய நேரடி முதலீட்டிற்கு அரசு சார் (இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் தேவைப்படும்) என்ற வழிமுறையின் கீழ் அனுமதி வழங்கப்படும்.
- மூன்றாவது பிரிவில், 100% வரை அந்நிய நேரடி முதலீடு மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது செயற்கைக் கோள்கள், தரைக் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் பயனர்-பிரிவுக்கான கூறுகள் மற்றும் அமைப்புகள் அல்லது துணை அமைப்புகளின் தயாரிப்பிற்கான அந்நிய நேரடி முதலீடுகளுக்குத் தானியங்கி என்ற ஒரு வழிமுறையின் கீழ் அனுமதி வழங்கப் படும்.

## இரப்பர் உற்பத்தித் துறைக்கான நிதி உதவி





- இரப்பர் உற்பத்தித் துறைக்கான நிதி உதவியானது 23% உயர்த்தப்பட்டு, 576.41 கோடி ரூபாயில் இருந்து 708.69 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இது அடுத்த 2 நிதியாண்டுகளுக்கு (2024-25 மற்றும் 2025-26) கிடைக்கப் பெறும்.
- இது 'இயற்கை இரப்பர் உற்பத்தித் துறையின் நிலையான மற்றும் உள்ளார்ந்த மேம்பாடு' என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
- 2024-25 மற்றும் 2025-26 ஆம் ஆண்டுகளில் வழக்கமான உற்பத்திப் பகுதிகளில் 12,000 ஹெக்டேர் பரப்பில் 43.50 கோடி ரூபாய் செலவில் இரப்பர் செடி நடவு மேற்கொள்ளப் படும்.
- இதற்காக உதவித் தொகையானது ஒரு ஹெக்டேருக்கு 25,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## இணையவெளிக் குற்றங்கள் குறித்த அறிக்கை

- 2023 ஆம் ஆண்டில் உள்நாட்டு அச்சுறுத்தல்களை மையமாகக் கொண்ட அறிக்கையில் இந்தியா 80வது இடத்தில் உள்ளது.
- கூடுதலாக, இந்தியாவில் சுமார் 34% பயனர்கள் உள்நாட்டு அச்சுறுத்தல்களால் (சுமார் 74,385,324 உள்நாட்டு அச்சுறுத்தல் சம்பவங்கள்) பாதிக்கப் பட்டுள்ளனர்.
- இந்தியாவின் இணையப் பாதுகாப்பு சந்தையானது 2023 ஆம் ஆண்டில் 6.06 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.

## ‘பெண்களின் பாதுகாப்பு’ 2025-26

- 2025-26 ஆம் ஆண்டு வரையில் பெண்கள் பாதுகாப்பிற்கான அதன் மிகவும் முதன்மை திட்டத்தைத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) சமீபத்திய பதிவின்படி, 2022 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக மொத்தம் 4,45,256 வழக்குகள் -சராசரியாக ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 51 முதல் தகவல் அறிக்கைகள் - பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்த எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டில் 4,28,278 ஆகவும், 2020 ஆம் ஆண்டில் 3,71,503 ஆகவும் இருந்தது.
- 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டு காலங்களில் இந்தியாவில் 13.13 லட்சத்திற்கும் அதிகமான இளம் பெண்கள் மற்றும் பெண்கள் காணாமல் போனதாக பதிவாகியுள்ளது.
- இது போன்ற சம்பவங்கள் மத்தியப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையில் பதிவாகி உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து மேற்கு வங்காளத்தில் பதிவாகியுள்ளது.




## வெள்ள மேலாண்மை மற்றும் எல்லைப் பகுதிகள் திட்டம் (FMBAP) 2025-26

- “வெள்ள நீர் மேலாண்மை மற்றும் எல்லைப்புறப் பகுதிகள் திட்டத்தினை (FMBAP)” தொடர்வதற்கான முன்மொழிதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 2021-2026 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் அரிமான எதிர்ப்பு நடவடிக்கைகளின் முக்கியமான அம்சங்களைக் கையாளச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- FMBAP திட்டம் ஆனது, வெள்ள மேலாண்மைத் திட்டம் (FMP) மற்றும் நதி மேலாண்மை & எல்லைப்புறப் பகுதிகள் (RMBA) ஆகிய இரண்டு முக்கியக் கூறுகளை உள்ளடக்கியது.




## ரைசினா பேச்சு வார்த்தை மாநாடு 2024

- ஒன்பதாவது ரைசினா பேச்சு வார்த்தையானது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தப் பேச்சுவார்த்தையின் தொடக்கக் கூட்டத்தின் போது, கிரீஸ் நாட்டின் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் தலைமை விருந்தினராக அதில் கலந்து கொண்டார்.
- ரைசினா பேச்சுவார்த்தை என்பது புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரம் பற்றிய வருடாந்திர மாநாடு ஆகும்.
- இது உலகம் எதிர்கொள்ளும் மிகவும் சவாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான பேச்சுவார்த்தையின் கருத்துரு, "சதுரங்கம்: மோதல், போட்டி, கூட்டுறவு, புத்தாக்கம்" என்பதாகும்.

## செலினா ஜான் வழக்கு

- பெண் ஊழியர்கள் திருமணம் செய்து கொள்வதற்காக தண்டனை விதிக்கும் விதிகள் அரசியலமைப்பிற்கு முரணானவை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- மேலும் எட்டு வாரங்களுக்குள் திருமதி ஜானுக்கு 60 இலட்சம் ரூபாயினை இழப்பீடாக வழங்குமாறு மத்திய அரசுக்கு அது உத்தரவிட்டுள்ளது.
- இராணுவ செவிலியர் பணியின் (MNS) நிரந்தர ஆணைய அதிகாரி (படைப்பிரிவின் நிலையான பணி நிலைப் பெற்றவர்) முன்னாள் லெப்டினன்ட் செலினா ஜான் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இராணுவப் பணியில் இருந்து நீக்கப்பட்டார்.
- அந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அவர் திருமணம் செய்து கொண்டார் என்பதற்காகவும், வருடாந்திர இரகசிய மதிப்பீட்டு அறிக்கையில் (ACR) குறைந்த மதிப்பெண் பெற்றதாகவும் கூறி அவர் பணி நீக்கப்பட்டதாக அந்த உத்தரவில் கூறப் பட்டது.
- 1977 ஆம் ஆண்டில் இராணுவ விதிமுறைகளில் சேர்க்கப்பட்ட விதியின் படி , "இராணுவ செவிலியர் பணி நீக்கம்" ஆனது ஒருவர் அந்தப் பணிக்குத் தகுதியற்றவர் என்று மருத்துவக் குழு அளிக்கும் அறிக்கை, திருமணம் செய்து கொள்வது மற்றும் தவறான நடத்தை ஆகிய மூன்று காரணங்களால் மேற்கொள்ளப் படும்.

### இராஷ்ட்ரிய உத்யமிதா விகாஸ் பரியோஜனா

- இது பிரதான் மந்திரி SVANidhi யோஜனா திட்டத்தின் பயனாளிகளுக்காக என்று மிகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த தனித்துவமான தேசிய தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ஆனது, நாடு முழுவதும் முதலாளிகளை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் நிலையான உறுதிப் பாட்டை குறிப்பிட்டுக் காட்டுகிறது.
- இது தனிநபர்களுக்கு விரிவான தொழில்முனைவோர் பயிற்சியை வழங்கி, வேலை வாய்ப்பு தேடும் குழுவிற்குப் பதிலாக வேலை வாய்ப்புகளை வழங்கும் முதலாளிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த சோதனைத் திட்டத்தின் கீழ், நாட்டின் 10 பெரு நகரங்களின் தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் தொழில்களை விரிவுபடுத்துவதற்கான பயிற்சியுடன் சேர்த்து உதவித் தொகையும் வழங்கப்படும்.




## சர்வதேசச் செய்திகள்

### G77 + சீனா மூன்றாவது தெற்கு உச்சி மாநாடு 2024

- 3வது தெற்கு உச்சி மாநாடு உகாண்டாவின் கம்பாலா நகரில் நிறைவடைந்தது.
- இந்த மாநாட்டில், ஏறக்குறைய 100 நாடுகளின் உயர்நிலைப் பிரதிநிதிகளும், ஐக்கிய நாடுகள் சபையின் முகமைகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.
- "ஒருவரும் விடுபட்டு விடக் கூடாது" என்ற கருத்துருவில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
- வர்த்தகம், முதலீடு, நிலையான மேம்பாடு, பருவநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் எண்ணிமப் பொருளாதாரம் ஆகிய துறைகளில் தெற்கு-தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பை மேம்படுத்துவதை இந்த உச்சிமாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தெற்கு உச்சி மாநாடு ஆனது, 77 (G77) நாடுகளின் குழுமத்தின் உயர்நிலை முடிவெடுக்கும் அமைப்பாகும்.

- இது 1964 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறுவப்பட்டது.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து, சீனா நாடானது, "G77 மற்றும் சீனா" முன்னெடுப்பு மூலம் G77 அமைப்புடன் ஒருங்கிணைத்து ஒத்துழைப்பினை நல்கி வருகிறது.
- இது G77+சீனா என்ற அடையாளத்தைப் பேணினாலும், இந்தக் குழு தற்போது 134 உறுப்பினர் நாடுகளைக் கொண்டுள்ளது.

## மலேசியாவின் 17வது மன்னர்

- மலேசியாவின் 17வது மன்னராக தெற்கு ஜோகூர் மாகாணத்தினைச் சேர்ந்த பில்லியனர் சுல்தான் இப்ராஹிம் இஸ்கந்தர் பதவியேற்றுள்ளார்.
- இவர் பஹாங் மாகாணத்தின் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷாவிடம் இருந்து ஆட்சியைப் பெற்றுள்ளார்.
- தனது ஐந்தாண்டு பதவிக் காலத்தின் முடிவில் தனது பூர்வீக மாகாணமான பஹாங் மாகாணத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்க உள்ள அல்-சுல்தான் அப்துல்லா சுல்தான் அஹ்மத் ஷாவுக்கு அடுத்த படியாக இவர் பதவியேற்றுள்ளார்.
- நிர்வாக அதிகாரம் ஆனது பிரதமரிடமும், பாராளுமன்றத்திடமும் வழங்கப்படுவதால், மலேசியாவின் மன்னர் பெருமளவில் பெயரளவுத் தலைமைப் பொறுப்பினையே வகிக்கிறார்.
- அரசு மற்றும் ஆயுதப் படைகளின் பெயரளவிலான தலைவராக மன்னர் இருக்கிறார். என்பதோடு இஸ்லாமியம் மற்றும் மலாய் பாரம்பரியத்தின் பாதுகாவலராகவும் அவர் கருதப்படுகிறார்.



## குழந்தைகளுக்கான உலகின் முதல் மலேரியா தடுப்பூசி வழங்கீட்டுத் திட்டம்

- ஆப்பிரிக்காவில் முதல் முறையாக மலேரியா தடுப்பு மருந்தினை குழந்தைகளுக்கு அளிக்க உள்ள முதல் நாடு கேமரூன் நாடு ஆகும்.
- உலகில் மலேரியா காரணமாக ஏற்படும் உயிரிழப்புகளில் 95% பங்கினைக் கொண்டு உள்ள இந்தக் கண்டத்தில், கொசுக்களால் பரவும் மலேரியா நோயைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ஆப்பிரிக்காவில், இந்த ஒட்டுண்ணி நோயால் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 250 மில்லியன் நோய்ப் பாதிப்புகள் பதிவாகின்ற நிலையில், இதில் 6,00,000 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதொடு இவற்றில் மிகப் பெரும்பாலும் சிறு குழந்தைகளில் பதிவானவை ஆகும்.
- கேமரூன் நாடானது, சமீபத்தில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு மலேரியா தடுப்பூசிகளில் முதலாவதாக மாஸ்கியூரிக்ஸ் தடுப்பூசியினைப் பயன்படுத்த உள்ளது.




## கென்யாவில் கோல்டான் இருப்புகள்





- கென்யா, தனது நாட்டில் கோல்டான் இருப்புகளைக் கண்டறிந்துள்ளதாக உறுதிப் படுத்தியுள்ளது.
- கொலம்பைட்-டான்டலைட் என்பதன் பெயர் சுருக்கமாக கூறப்படும் கோல்டான், பல்வேறு தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு மதிப்புமிக்க கனிமம் ஆகும்.

- ❖ கோல்டானில் இருந்து பெறப்பட்ட டான்டலம், மின்தேக்கிகள் தயாரிப்பில் வெகுவாக பயன்படுத்தப் படுகிறது.
- ❖ கோல்டானுக்கான உலகளாவியத் தேவை வேகமாக அதிகரித்து வருவதோடு, அதன் டான்டலம் உள்ளடக்கத்தைப் பொறுத்து அதன் விலை சராசரியாக ஒரு கிலோவிற்கு 48 டாலராக உள்ளது.
- ❖ காங்கோ ஜனநாயகக் குடியரசு நாடானது, உலகின் கோல்டான் இருப்புக்களில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான இருப்பினைக் கொண்டுள்ளது.

## தொழிற்சாலையால் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்கக் கொழுப்புகளை நீக்குதல்

- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, தொழிற்துறையில் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்க கொழுப்பு அமிலங்களை (iTFA) அகற்றுவதில் முன்னேற்றம் பெற்றதற்கான சான்றிதழ்களை ஐந்து நாடுகளுக்கு வழங்கியுள்ளது.
- ❖ இந்த சான்றிதழ்களைப் பெற்ற நாடுகள் டென்மார்க், லிதுவேனியா, போலந்து, சவுதி அரேபியா மற்றும் தாய்லாந்து ஆகியனவாகும்.
- ❖ 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் உலகளாவிய உணவு விநியோகத்திலிருந்து மாறுபக்க கொழுப்பு அமிலங்களை முற்றிலுமாக அகற்றுதல் என்ற உலக சுகாதார அமைப்பின் இலட்சியமிகு இலக்கு முழுமையாக அடையப்படவில்லை.
- ❖ 2023 ஆம் ஆண்டில் மட்டும் எகிப்து, மெக்சிகோ, மால்டோவா, நைஜீரியா, வடக்கு மாசிடோனியா, பிலிப்பைன்ஸ் மற்றும் உக்ரைன் ஆகிய ஏழு நாடுகள் மாறுபக்க கொழுப்பு அமிலங்களை அகற்றுவதற்கான புதிய மற்றும் மிகச் சிறந்த நடைமுறைக் கொள்கைகளை அமல்படுத்தின.
- ❖ தற்போதைய நிலையில், 53 நாடுகள் உணவில் உள்ள மாறுபக்க கொழுப்பு அமிலங்களை நீக்குவதற்கான மிக பயனுள்ள சிறந்த நடைமுறைக் கொள்கைகளைக் கொண்டுள்ளன.
- ❖ இந்தக் கொள்கைகள் ஆண்டுதோறும் சுமார் 183,000 உயிர்களைக் காப்பாற்றும் என மதிப்பிடப் பட்டுள்ளது.



## ரெட்பா ஏரி நெருக்கடி





- ❖ சில நுண்ணிய ஆல்கா (பாசிகள்) மற்றும் பாக்டீரியாவைத் தவிர்த்து இந்த ஏரியின் நீரில் எந்த உயிர்களும் இல்லை.
- ❖ லாக் ரோஸ் (இளஞ்சிவப்பு ஏரி) என்று அழைக்கப்படும் ரெட்பா ஏரி, ஆப்பிரிக்காவில் செனேகலின் டகார் நகரிலிருந்து 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ இது கடல் மட்டத்திலிருந்து 6.5 மீட்டர் தூர கரையோரத்துடன் ஒரு தாழ்வான இடத்தில் அமைந்துள்ளது.
- ❖ இந்த ஏரி சுமார் 1 கிலோமீட்டர் பரப்பிலான மணல் திட்டுகளால் கடலில் இருந்து பிரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்த ஏரியை விட உயரமான இடத்தில் அமைந்த குன்றுகளில் உள்ள பருவகால நீர் நிலைகளில் இருந்து அதற்கு நன்னீர் வருகிறது.
- ❖ இதனால், ஏரியின் பெரும்பான்மையான நீரானது கடலிலிருந்து வருவதால் அதன் நீர் முழுவதும் உப்பு நீராக உள்ளது.
- ❖ டகார் பகுதியில் உள்ள இந்த ஏரியின் நீரானது, இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ளதால் அது முக்கியச் சுற்றுலாத் தளங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

## UNRWA நிதி இடைநிறுத்தம்

- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன அகதிகளுக்கான முகமைக்கு (UNRWA) நிதியுதவி வழங்குவதை அமெரிக்காவும் மற்ற எட்டு மேற்கத்திய நாடுகளும் இடை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளன.
- ❖ காஸாவில் இரண்டு மில்லியன் பாலஸ்தீனியர்கள் UNRWA நிதிச் சேவைகளை சார்ந்து இருக்கின்றனர்.
- ❖ அமெரிக்கா மற்றும் இதர எட்டு மேற்கத்திய நாடுகள் ஆனது UNRWA முகமையின் 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பாதிக்கும் மேலான தொகையை வழங்கி உள்ளன.

- 1948 ஆம் ஆண்டு அரேபிய-இஸ்ரேல் போரின் போது, தற்போது இஸ்ரேல் என்று அழைக்கப் படும் தங்களது தாயகத்திலிருந்து வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட 700,000 பாலஸ்தீனியர்களுக்கு உதவுவதற்காக 1949 ஆம் ஆண்டில் UNRWA நிறுவப் பட்டது.
- UNRWA ஆனது அமெரிக்கா போன்ற நிதி வழங்கீடு நாடுகளின் தன்னார்வப் பங்களிப்புகள் மூலமாக முழுமையாக நிதியளிக்கப்படுகிறது.
- இது ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து வரையறுக்கப்பட்ட மானியத்தையும் பெறச் செய்வதோடு இது நிர்வாகச் செலவுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.




## மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் கூட்டணி - ECOWAS




- புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜரில் உள்ள இராணுவ ஆட்சிகள் ECOWAS எனப் படும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் கூட்டணியில் இருந்து உடனடியாக வெளியேறுவதாக அறிவித்துள்ளன.

- ECOWAS என்பது மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகத்தைக் குறிக்கிறது.
- நைஜர் மற்றும் மாலி கடுமையான பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்வதால், இந்த மூன்று நாடுகளும் ECOWAS பிரிவிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டன.
- சஹேலில் இருந்து பிரான்சு நாட்டு இராணுவம் வெளியேறுவது கினி வளைகுடா நாடுகளான கானா, டோகோ, பெனின் மற்றும் ஐவரி கோஸ்ட் வரையிலான தெற்கு நாடுகள் வரை மோதல்கள் பரவுவது குறித்த கவலையை அதிகரித்துள்ளது.
- மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகிய நாடுகளின் இராணுவத் தலைவர்கள் சமீபத்தில் சஹேல் நாடுகளின் கூட்டணியின் கீழ் ஒன்றுபட்டனர்.

## சீனாவில் 'சந்திரப் புத்தாண்டு'




- சீனக் கலாச்சாரத்தில், அடுத்து வரவிருக்கும் ஆண்டானது டிராகன் ஆண்டு என்றும், சந்திரப் புத்தாண்டு ("விதவை ஆண்டு") என்றும் அழைக்கப்படுகிறது.
- சீனாவில் ஒரு விதவை ஆண்டு என்பது லிச்சுன் எனப்படும் வசந்தக் காலத்தின் பாரம்பரிய தொடக்கத்தைக் கொண்டிருக்காத ஒரு சந்திர ஆண்டாகும்.
- வசந்த காலத்தின் வரவைக் குறிக்கும் சந்திர ஆண்டைப் பிரிக்கும் 24 சூரிய சொற் கூறுகளில் லிச்சுன் என்பதும் ஒன்றாகும்.
- சீனர்களின் நம்பிக்கைகளின்படி, லிச்சுன் என்பது யாங் (ஆண்பால்) ஆற்றலின் காலம் எனவும், லிச்சுன் இல்லாத ஆண்டு யாங் ஆற்றல் இல்லாத ஆண்டு ஆகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்திர நிதிநிலை அறிக்கை

- 2024 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்திர நிதிநிலை அறிக்கை ஒதுக்கீட்டிற்கு இந்தியா 32.89 மில்லியன் அமெரிக்க டாலர்களை செலுத்தியுள்ளது.
- தனது வருடாந்திர நிதிநிலை ஒதுக்கீட்டின் நிலுவைத் தொகையினைச் சரியான நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையிடம் செலுத்தியுள்ள 36 உறுப்பினர் நாடுகளின் "மதிப்புமிக்க நாடுகளின் பட்டியலில்" இணைகிறது.
- ஐக்கிய நாடுகள் சபையின் வரவு செலவுத் திட்டத்திற்கு (நிதிநிலை அறிக்கை) தனது பங்களிப்பை சரியான நேரத்தில் மற்றும் முழுமையாகச் செலுத்தும் நாடுகளில் இந்தியா தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.

Monthly statistical information concerning the number of Member States which paid in full:

| As at month end | 2024 | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 | 2004 | 2003 | 2002 | 2001 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Number of Member States | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| January | 36 | 25 | 41 | 25 | 35 | 34 | 35 | 25 | 25 | 25 | 20 | 23 | 26 | 25 | 26 | 21 | 36 | 31 | 41 | 34 | 32 | 40 | 42 | 39 |
| February | | 59 | 65 | 63 | 62 | 69 | 62 | 49 | 42 | 50 | 45 | 42 | 48 | 47 | 53 | 44 | 61 | 50 | 59 | 51 | 46 | 56 | 52 | 54 |
| March | | 86 | 81 | 83 | 77 | 79 | 73 | 73 | 62 | 67 | 61 | 56 | 69 | 67 | 66 | 55 | 77 | 65 | 72 | 62 | 59 | 69 | 63 | 64 |
| April | | 97 | 96 | 98 | 87 | 89 | 88 | 92 | 79 | 84 | 79 | 76 | 89 | 83 | 73 | 76 | 81 | 75 | 83 | 71 | 75 | 76 | 70 | 69 |
| May | | 114 | 104 | 103 | 92 | 102 | 102 | 102 | 85 | 94 | 93 | 90 | 96 | 97 | 86 | 81 | 90 | 79 | 87 | 76 | 82 | 86 | 79 | 85 |
| June | | 121 | 109 | 113 | 101 | 105 | 107 | 110 | 93 | 102 | 102 | 103 | 108 | 108 | 93 | 94 | 98 | 85 | 94 | 88 | 89 | 91 | 82 | 92 |
| July | | 126 | 113 | 117 | 107 | 109 | 114 | 116 | 98 | 108 | 109 | 113 | 111 | 111 | 101 | 100 | 105 | 90 | 101 | 97 | 92 | 97 | 88 | 101 |
| August | | 133 | 120 | 124 | 112 | 116 | 125 | 124 | 105 | 115 | 114 | 122 | 114 | 118 | 107 | 106 | 116 | 97 | 104 | 110 | 98 | 101 | 95 | 112 |
| September | | 137 | 131 | 130 | 124 | 127 | 141 | 134 | 126 | 128 | 124 | 134 | 128 | 131 | 119 | 115 | 124 | 112 | 113 | 125 | 106 | 109 | 104 | 122 |
| October | | 137 | 135 | 135 | 131 | 134 | 148 | 137 | 134 | 138 | 131 | 137 | 134 | 137 | 125 | 126 | 129 | 123 | 117 | 130 | 111 | 120 | 112 | 126 |
| November | | 139 | 137 | 138 | 135 | 138 | 149 | 143 | 138 | 139 | 135 | 140 | 135 | 137 | 130 | 128 | 132 | 130 | 122 | 130 | 118 | 123 | 115 | 130 |
| December | | 142 | 146 | 153 | 144 | 146 | 152 | 145 | 145 | 142 | 144 | 146 | 143 | 143 | 138 | 136 | 146 | 140 | 139 | 140 | 121 | 127 | 117 | 135 |

## இந்தியர்களுக்கு ஈரான் அரசின் இலவச நுழைவு இசைவுச் சீட்டு

- ❖ தனது நாட்டிற்கு வருகை தரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத 15 நாட்கள் வரையிலான பயண அனுமதிக் கொள்கையை ஈரான் அரசு அறிவித்துள்ளது.
- ❖ இந்தியக் குடிமக்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வழக்கமான அரசு அங்கீகாரம் கொண்ட கடவுச் சீட்டுடன் அதிகபட்சமாக 15 நாட்கள் (மேலும் நீட்டிக்கப்பட இயலாத) தங்கியிருக்கும் வகையில் ஈரான் நாட்டிற்குப் பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.
- ❖ முன்னதாக, வியட்நாம், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டு விதிகளை தளர்த்தியுள்ளன.
- ❖ இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாத பயணத்தினை மேற்கொள்ள இலங்கை அனுமதித்துள்ளது.



## இந்தோ-மியான்மர் எல்லையில் தடுப்பு வேலி





- இந்தியா மியான்மர் நாடுகளுக்கு இடையேயான 1,643 கி.மீ. நீள எல்லை முழுவதும் வேலி அமைத்து அதனருகில் ஒரு ரோந்துப் பாதையை அமைக்க உள்ளது.
- மொத்த எல்லை நீளத்தில், மணிப்பூரின் மோரே என்னுமிடத்தில் 10 கி.மீ. நீள பகுதியில் ஏற்கனவே வேலி அமைக்கப்பட்டுள்ளது.
- மேலும், கலப்பு முறைக் கண்காணிப்பு அமைப்பு மூலம் வேலி அமைக்கும் இரண்டு சோதனை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 1 கி.மீ. நீளத்திற்கு வேலி அமைக்கப்படும்.
- மேலும், மணிப்பூரில் தோராயமாக 20 கி.மீ தூரத்திற்கு வேலி அமைக்கவும் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் மியான்மர் ஆகியவை வேலி இல்லாத எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.
- இருபுறமும் உள்ள மக்கள் குடும்ப மற்றும் இனம் சார்ந்த உறவுகளைக் கொண்டு ள்ள நிலையில், இது 1970 ஆம் ஆண்டுகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டியது.
- தடையற்ற நடமாட்ட (இடம் பெயர்வு) பகுதி (FMR) வசதி இந்தியாவால் சமீபத்தில் ரத்து செய்யப்பட்டது.

## மெக்ஸிகோவில் ஃபெண்டானில் நெருக்கடி

- மெக்சிகோவின் எல்லை நகரங்கள் முழுவதும் மருந்துகளின் தவறான பயன்பாடுகளின் தாக்கத்தின் பிடியில் உள்ளன.
- ஃபெண்டானில் எனப்படும் செயற்கை ஒபியாய்டு (ஓபியம்) ஆனது மார்ஃபினை விட 100 மடங்கு அதிக சக்தி வாய்ந்தது மற்றும் ஹெராயினை விட சுமார் 50 மடங்கு அதிக ஆற்றல் கொண்டது.
- இது கடுமையான வலியைப் போக்க மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்தாகும்.
- இருப்பினும், வெறும் 2 மில்லிகிராம் அளவிலான ஃபெண்டானில் கூட உயிரிழப்பிற்கு வழி வகுக்கும்.

- கடந்த ஆண்டு 70,000 பேர் அளவுக்கதிகமான மருந்து உட்கொள்ளலால் உயிரிழந்து உள்ளனர்.




## அணு உலைகள் ஒப்பந்தம் மீதான நெறிமுறை

- கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கூடுதல் அணு உலைகள் அமைப்பதற்கும், இந்தியாவில் புதிய இடங்களில் ரஷ்யா வடிவமைத்த அணுமின் நிலையங்களை அமைப்பதற்கும் ஒத்துழைப்பு மேற்கொள்வது தொடர்பான 2008 ஆம் ஆண்டு அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளச் செய்வதற்கான ஒரு நெறிமுறையில் இந்தியாவும் ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன.
- ரஷ்ய அணுசக்தி நிறுவனம் ஆனது 1,000 MWe திறன் கொண்ட இரண்டு VVER எனப்படும் ஒருவகை அழுத்த கன நீர் அணு உலைகளை உருவாக்கியுள்ளது என்பதோடு, மேலும் இதே திறன் கொண்ட மேலும் நான்கு உலைகளையும் கட்டமைத்து வருகிறது.
- இந்தியாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான கூடங்குளத்தில் மொத்தம் 6,000 மெகாவாட் நிறுவப்பட்ட திறன் கொண்ட 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- இதில், முதல் உலையானது 2013 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கியது என்ற நிலையில், இரண்டாவது உலையானது 2016 ஆம் ஆண்டில் செயல்பாட்டுக்கு வந்தது.
- மீதமுள்ள நான்கு ஆலைகள் கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.
- இந்த உலைகள் அனைத்தும் VVER-1000 வகுப்பைச் சேர்ந்தவை ஆகும்.
- இது முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் உருவாக்கப்பட்ட நீரை குளிர்விப்பானாகவும், வினைவேக மட்டுப்படுத்தியாகவும் பயன்படுத்தும் ஆற்றல் உற்பத்தி உலையின் ஒரு வடிவமைப்பாகும்.

## BAPS இந்து கோவில்

- ❖ ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் இந்து கற்கோயிலான BAPS இந்து மந்திர் சமீபத்தில் திறக்கப் பட்டது.
- ❖ அபுதாபியின் முதல் இந்து கோவில் நகரா கட்டிடக்கலை பாணியில் உருவாக்கப்பட்டு உள்ளது.
- ❖ இது புதிய அறிவியல் நுட்பங்களுடன் தொன்மையான கட்டடக்கலை முறைகளைப் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ❖ BAPS இந்து மந்திர் வெப்பநிலை மற்றும் நில அதிர்வு நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் வகையில் 300க்கும் மேற்பட்ட உயர் தொழில்நுட்ப உணர்விகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தக் கோயில் கட்டுமானத்தில் எந்த உலோகமும் பயன்படுத்தப்படவில்லை.
- ❖ இந்தக் கோவிலுக்கான நிலம் ஐக்கிய அரபு அமீரக அரசால் நன்கொடையாக வழங்கப் பட்டது.
- ❖ துபாயில் உள்ள ஐக்கிய அரபு அமீரகத்தில் இது தவிர மூன்று இந்து கோவில்கள் உள்ளன.



## சர்வதேச எரிசக்தி முகமையின் அமைச்சர்கள் கூட்டம் 2024

- ❖ சர்வதேச எரிசக்தி முகமையின் (IEA) உறுப்பினர் நாடுகள் ஆனது, அமைப்பின் முழு உறுப்பினராக ஆவதற்காக இந்திய அரசினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மீதான விவாதங்களைத் தொடங்க ஒப்புக் கொண்டுள்ளன.
- ❖ இந்திய நாடானது 2017 ஆம் ஆண்டில் சர்வதேச எரிசக்தி முகமையில் ஒரு இணை உறுப்பினராக சேர்ந்ததோடு, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அதன் முழு உறுப்பினருக்கான முறையான கோரிக்கையையும் அனுப்பியது.
- ❖ சர்வதேச எரிசக்தி முகமை என்பது 31 தொழில்மயமான நாடுகளை உள்ளடக்கிய ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- ❖ சிலி, கொலம்பியா, இஸ்ரேல் மற்றும் லிதுவேனியா ஆகிய நான்கு நாடுகள் இதில் முழு உறுப்பினராக சேர முயன்று வருகின்றன.

- 31 உறுப்பினர் நாடுகளும் 13 இணை உறுப்பினர் நாடுகளும் உலகளாவிய எரிசக்தித் தேவையில் 75% பங்கினைக் கொண்டுள்ளன.
- ஒரு நாடு IEA அமைப்பில் முழு உறுப்பினராக ஆவதற்கு, அந்நாடு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) உறுப்பினர் நாடாக இருக்க வேண்டும்.
- உறுப்பினர் நாடுகள் முந்தைய ஆண்டின் நிகர இறக்குமதியின் 90 நாட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்குச் சமமான கச்சா எண்ணெய் மற்றும்/அல்லது விளைபொருள் இருப்புக்களை (மூலோபாய எண்ணெய் இருப்புக்கள்) வைத்திருக்க வேண்டும் என்ற கட்டாய விதிமுறையை IEA விதிக்கிறது.
- இந்தியாவின் தற்போதைய மூலோபாய எண்ணெய் இருப்பு ஆனது, அதன் தேவையில் 9.5 நாட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே உள்ளது.
- மேலும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் கிடங்குகளில் உள்ள சேமிப்புடன், 66 நாட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு என்று சமமான ஒரு கையிருப்பைக் கொண்டுள்ளது.
- IEA அமைப்பின் உறுப்பினர் நாடுகள் குறிப்பிடத் தக்க உலகளாவிய எண்ணெய் விநியோக சீர்குலைவுக்கான அவசரகால எதிர் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கச் செய்கின்றன.




## இணைப்பு துண்டிக்கும் உரிமை – ஆஸ்திரேலியா


- ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆனது, "இணைப்பு துண்டிக்கும் உரிமை" என்ற சட்டத்தை இயற்ற முயல்கிறது.
- பணி நேரத்தைக் கடந்தும் தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள் அல்லது மின்னஞ்சல்கள் மூலம் முதலாளிகள் பணியாளர்களை தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படும் நேரத்தை ஒழுங்குமுறைப் படுத்துவதை இது பெரு நோக்கமாகக் கொண்டு ள்ளது.

- இந்த மசோதாவின் கீழ், தேவைப்பட்டால் தவிர, பணியாளர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலை நேரத்திற்குப் பிறகு முதலாளியுடன் தகவல் தொடர்பினை மேற்கொள்ள மறுப்பதற்கு உரிமை உண்டு.
- பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் இதே போன்ற சட்டங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன.
- வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையிலான எல்லைகளை நவீன தொழில் நுட்பம் குறைக்கிறது என்ற கருத்திலிருந்து இந்த 'இணைப்பு துண்டிக்கும் உரிமை' என்ற கருத்து உருவாகிறது.
- இந்தியாவில், 2018 ஆம் ஆண்டு இணைப்பைத் துண்டிப்பதற்கான உரிமை மசோதா ஆனது, பாரமதி பாராளுமன்ற உறுப்பினர் சுப்ரியா சுலே என்பவரால் தயாரிக்கப் பட்டது.
- இது வேலை சாராத தகவல்தொடர்புகளுக்கான பல்வேறு விதிமுறைகள் குறித்த ஒப்பந்தத்தினை மேற்கொள்ள ஊழியர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது.




## வெய்மர் முக்கோணம்

- போலந்து, பிரான்சு மற்றும் ஜெர்மனி அரசாங்கங்கள், உக்ரைன் நாட்டினை ஆதரிக்கும் அதிக திறன் கொண்ட இடர்காப்பு மற்றும் பாதுகாப்புச் சக்தியாக ஐரோப்பாவினை மாற்ற உறுதி மேற்கொண்டுள்ளன.
- வெய்மர் முக்கோணம் என்று அழைக்கப்படும் ஒரு கூட்டமைப்பினை மீண்டும் உடனே உயிர்ப்பிப்பது குறித்து இதில் விவாதிக்கப்பட்டது.
- இது பிரான்சு, ஜெர்மனி மற்றும் போலந்து இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தச் செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட நீண்ட காலமாக செயலற்று இருந்த ஒரு பிராந்திய குழுவாகும்.
- போலந்து நாடானது, பல தசாப்தகால கம்யூனிச கட்டமைப்பிலிருந்து வெளிப்பட்டு மூன்று நாடுகளுக்கிடையேயான அரசியல் ஒத்துழைப்பிற்கான ஒரு தளமாக விளங்கியதால் 1991 ஆம் ஆண்டில் வெய்மர் முக்கோணம் உருவாக்கப்பட்டது.




## உலகின் நான்காவது பெரிய பொருளாதாரம்

**Top 10 Largest Economies**

| Rank/ Country | GDP ($ billion) | GDP Per Capita ($ thousand) |
|---|---|---|
| 1. USA | 27,974 | 83.06 |
| 2. China | 18,566 | 13.16 |
| 3. Germany | 4,730 | 56.04 |
| 4. Japan | 4,291 | 34.55 |
| 5. India | 4,112 | 2.85 |
| 6. UK | 3,592 | 52.43 |
| 7. France | 3,182 | 48.22 |
| 8. Italy | 2,280 | 38.93 |
| 9. Brazil | 2,272 | 11.03 |
| 10. Canada | 2,242 | 55.53 |

- ஜப்பான் நாடானது அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக உலகின் நான்காவது பெரிய பொருளாதாரம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளது.
- ஜப்பான் நாட்டின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கடந்த ஆண்டு மொத்தம் 4.2 டிரில்லியன் டாலர் அல்லது சுமார் 591 டிரில்லியன் யென் ஆக இருந்தது.
- ஜெர்மனி நாட்டின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நாணய மதிப்பு மாற்றத்தைப் பொறுத்து 4.4 டிரில்லியன் டாலர் அல்லது 4.5 டிரில்லியன் டாலர் ஆக உள்ளது.
- ஜப்பானிய மக்களின் வயது முதிர்வு மற்றும் குறைவான குழந்தைகள் பிறப்பு காரணமாக ஜப்பான் நாட்டின் மக்கள் தொகை குறைந்து வருவதால் ஜப்பான் நாட்டின்

பொருளாதாரம் ஆனது படிப்படியாக அதன் போட்டித்திறன் மற்றும் உற்பத்தித் திறனை இழந்துள்ளது.

- 2010 ஆம் ஆண்டில், சீனாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததால் ஜப்பான் இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது.
- வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி சுருங்கி வருகிறது என்ற நிலையில் சில ஆண்டுகளில் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஜப்பானை இந்தியா முந்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## ஆஸ்பைட்ஸ் பாதுகாப்புத் திட்டம்




- ஐரோப்பிய ஒன்றியம் ஆனது ஏமன் நாட்டின் ஹௌதி கிளர்ச்சியாளர்களிடமிருந்து செங்கடல் வழியாகப் பயணிக்கும் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக ஒரு கடற்படைத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- பண்டைய கிரேக்க மொழியில் "கவசம்" என்று பொருள்படும் ஆஸ்பைட்ஸ் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டத்தில் பங்கேற்க பல உலக நாடுகள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளன.
- ஹௌதி குழுக்கள் முதலில் தாக்கினால் மட்டுமே அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதோடு, முன்கூட்டியே துப்பாக்கி சூடு நடத்த அதிகாரம் எதுவும் கிடையாது.
- நவம்பர் மாதத்தில் இருந்து, ஹௌதி குழுக்கள் உலக வர்த்தகத்தில் 12 சதவீத வர்த்தகப் பொருட்கள் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் பரபரப்பான செங்கடலில் பயணிக்கும் வணிக மற்றும் இராணுவக் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர்.

## IBSA நிதி

- 2004 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, 2006 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்ததில் இருந்து IBSA நிதிக்கான இந்தியாவின் பங்களிப்பு ஒட்டுமொத்தமாக 18 மில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டியுள்ளது.
- UNOSSC அமைப்பானது, IBSA நிதியின் நிதி மேலாண்மை மற்றும் செயலகமாக செயல்படுகிறது.
- IBSA கூட்டமைப்பு நாடுகளான இந்தியா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவை ஒவ்வொன்றும் ஆண்டுதோறும் இந்த நிதிக்காக ஒரு மில்லியன் டாலர் வழங்குகின்றன.
- ஒற்றுமையின் உறுதியான வெளிப்பாடுகளாக விளங்கும் திட்டங்களுக்கு IBSA நிதி உதவி வழங்குகிறது.
- இது உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல், எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோய் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது முதல் பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலை விரிவுபடுத்துவது வரையிலான நோக்கங்களைக் கொண்டுள்ளது.
- IBSA நிதியானது, உலகின் தெற்கு நாடுகளுள் 37 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட 45 திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக, இன்று வரை 50.6 மில்லியன் டாலர் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.


## பாகிஸ்தானின் புதிய பிரதமர்

- அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு ஷேபாஸ் ஷெரீப் பிரதமராகவும், ஆசிப் அலி சர்தாரி அதிபராகவும் மீண்டும் பதவியேற்க உள்ளனர்.
- இவர் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் புதிய தேர்தலுக்காக தேசிய சட்டமன்றம் கலைக்கப் பட்டது வரையில் பாகிஸ்தானின் பிரதமராக இருந்தார்.
- அதற்கு முன்பு, அவர் மூன்று முறை பஞ்சாபின் முதல்வராக (1997-1999 வரை) பணி ஆற்றினார்.
- 72 வயதான ஷெரீப், மூன்று முறை பாகிஸ்தானின் பிரதமராக பணியாற்றிய முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் இளைய சகோதரர் ஆவார்.

## கடல்சார் போக்குவரத்து 2023

- ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாட்டு (UNCTAD) அமைப்பானது 2023 ஆம் ஆண்டிற்கான கடல்சார் போக்குவரத்து மதிப்பாய்வினை வெளியிட்டுள்ளது.
- சர்வதேசக் கப்பல் போக்குவரத்து மூலமான பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றம் ஆனது ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்ததை விட 2023 ஆம் ஆண்டில் 20% அதிகமாக இருந்தது.
- கப்பல் போக்குவரத்துத் துறையானது உலகின் வர்த்தகத்தில் சுமார் 80% பங்கினைக் கொண்டுள்ளதோடு, உலகளாவிய GHG வாயு உமிழ்வுகளில் சுமார் 3% பங்கினை அளிக்கிறது.
- உலகளாவியக் கப்பல்களில் 8 சதவீதக் கப்பல்கள் கனரக எரிபொருள் எண்ணெய், மித ரக எரிபொருள் எண்ணெய் மற்றும் டீசல்/எரிவாயு எண்ணெய் போன்ற வழக்கமான எரிபொருட்களைப் பயன்படுத்துகின்றன.

- 1.2% கப்பல்கள் மட்டுமே LNG, LPG, மெத்தனால், மற்றும் குறைந்த அளவில் மின் கலம் / கலப்பு எரிபொருள் போன்ற மாற்று எரிபொருள்களைப் பயன்படுத்துகின்றன.
- கொள்கலன் ஏற்றுக் கப்பல் வர்த்தகம் ஆனது 2023 ஆம் ஆண்டில் 1.2 சதவீதமும், 2024-2028 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 3 சதவீதமும் வளரும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- எண்ணெய் மற்றும் எரிவாயு வர்த்தக அளவுகளில் 2022 ஆம் ஆண்டில் அதீத வளர்ச்சிப் பதிவானது.
- 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் தொடக்கத்தில், வணிகக் கப்பல்கள் சராசரியாக 22.2 ஆண்டுகள் பழமையானவையாகவும், உலகின் பாதிக்கும் மேற்பட்ட கப்பல்கள் 15 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரீதியில் பழமையானவையாகவும் இருந்தன.




## 37வது ஆப்பிரிக்க ஒன்றிய உச்சி மாநாடு, 2024

- மாகாணத் தலைவர்கள் சபை மற்றும் ஆப்பிரிக்க ஒன்றிய (AU) அரசாங்கத்தின் 37வது அமர்வு ஆனது சமீபத்தில் எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் நிறைவடைந்தது.
- இது 2024 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்க ஒன்றியத்தின் (AU), "21 ஆம் நூற்றாண்டிற்குப் பொருந்தும் வகையில் ஆப்பிரிக்க மக்களுக்குக் கல்வி வழங்குதல்: ஆப்பிரிக்காவில் உள்ளார்ந்த, வாழ்நாள் முழுவதுமான, தரமான மற்றும் தொடர்புமிக்க கற்றலுக்கான அணுகலை அதிகரிப்பதற்கான மிகவும் நெகிழ்திறன் மிக்க கல்வி கட்டமைப்புகளை உருவாக்குதல்" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்பட்டது.
- இது உத்வேகத்தின் தசாப்தம் என்றும் அழைக்கப்படும் செயல்பாட்டு நிரல் 2063 என்ற இரண்டாவது 10 ஆண்டுகால (2024-2033) அமலாக்கத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது.
- ஆப்பிரிக்க ஒன்றியம் (AU) என்பது 55 உறுப்பினர் நாடுகளைக் கொண்ட ஒரு கண்ட அமைப்பாகும்.
- 1963 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்காவின் சுதந்திர நாடுகளால் ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு நிறுவப்பட்டது.
- 2002 ஆம் ஆண்டில், ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பு ஆப்பிரிக்க ஒன்றியமாக மாற்றப் பட்டது.


## 5 ஆண்டு கால பல்பயண நுழைவு இசைவுச் சீட்டு

- துபாய் அரசானது வணிகம், ஒய்வு நேரப் பயணம் போன்றவற்றிற்கான அனுமதி வழங்கீட்டுச் செயல்முறையில் நெகிழ்வுத் தன்மையை வழங்கும் விதமாக பல்வேறு நுழைவுகள்/வெளியேற்றங்களை ஊக்குவிப்பதற்காக இந்தியர்களுக்கு 5 ஆண்டு பல நுழைவு இசைவுச் சீட்டினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், ஒரே இரவில் 2.46 மில்லியன் இந்தியர்கள் துபாய்க்குப் பயணம் மேற்கொண்டனர் என்ற நிலையில், இது பெருந்தொற்றிற்கு முந்தைய காலகட்டத்தில் இருந்த எண்ணிக்கையை விட 25 சதவீதம் அதிகமாகும்.
- முந்தைய ஆண்டு காலத்தில், இந்தியாவில் இருந்து சுமார் 1.84 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் துபாய்க்குப் பயணம் மேற்கொண்டனர் என்ற நிலையில் அது 2019 ஆம் ஆண்டில், இந்த எண்ணிக்கை 1.97 மில்லியன் ஆக பதிவானது.




## கினியா புழு நோய் ஒழிப்பு

- கினியா புழு நோயை ஒழிப்பதற்கான இலக்கினை உலக நாடுகள் நன்கு நெருங்கி வருகின்றன.
- 1980 ஆம் ஆண்டுகளில் 3.5 மில்லியனுக்கும் அதிகமானோர் இந்நோயால் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- உலக சுகாதார அமைப்பின் வாராந்திரத் தொற்றுநோயியல் அறிக்கையின்படி, இந்த நோய்ப் பாதிப்புகளானது 2021 ஆம் ஆண்டில் 14 ஆகவும், 2022 ஆம் ஆண்டில் 13 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் வெறும் 6 ஆகவும் குறைந்துவிட்டன.
- டிராக்குன்குலியாசிஸ் என்றும் அழைக்கப்படுகின்ற கினியா புழு நோய் ஆனது கினியா புழுவால் (டிராகுங்குலஸ் மெடினென்சிஸ்) ஏற்படுகின்றது.
- 90 சதவீதத்திற்கும் அதிகமான கினியா புழு நோய்த்தொற்றுகள் கால்கள் மற்றும் பாதங்களில் ஏற்படுகின்றன.
- இந்திய நாடானது 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இந்த நோயை முற்றிலுமாக ஒழித்ததையடுத்து, 2000 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் நரம்பு சிலந்தி நோய்த் தொற்று இல்லாத நாடு என்ற சான்றிதழைப் பெற்றது.




## பணியிட வன்முறைகள் மற்றும் பணியிட துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ILO உடன்படிக்கை

- பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ILO உடன்படிக்கையினை அங்கீகரித்த முதல் ஆசிய நாடாக பிலிப்பைன்ஸ் மாறியுள்ளது.
- உடன்படிக்கை எண் 190க்கு ஒப்புதல் வழங்கப்பட்ட நிகழ்வானது, பணியிடச் சூழலில் உள்ள வன்முறை மற்றும் துன்புறுத்தலைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்கும் ஒரு முக்கியமான படிநிலையைக் குறிக்கிறது.
- இதன் மூலம், பணியிட வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு எதிராக செயல்படும் 37 நாடுகளுடன் பிலிப்பைன்ஸ் நாடும் இணைந்துள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## 'இந்தியப் பொருளாதாரம் – ஒரு மறுமதிப்பாய்வு'

- அரசாங்கத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் V. ஆனந்த நாகேஸ்வரன் தயாரித்துள்ள "இந்தியப் பொருளாதாரம் – ஒரு மறுமதிப்பாய்வு" என்ற 74 பக்க ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு நான்காவது ஆண்டாக, நாட்டின் பொருளாதாரம் 7% அல்லது அதற்கு மேல் வளர்ச்சி அடைய உள்ளது.
- உலகப் பொருளாதாரம் ஆனது 4% வளர்ச்சி அடையும் சமயத்தில் இந்தியா 8-9% வளர்ச்சியினை அடையும்.
- ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் உள்ள 51 கோடி வங்கிக் கணக்குகளில் தற்போது மொத்தம் 2.1 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வைப்புத் தொகை வைக்கப்பட்டுள்ள நிலையில் இதில் 55 சதவீதத்திற்கும் அதிகமானவை பெண்களின் வங்கிக் கணக்குகள் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், குடும்ப நிதிச் சொத்துக்கள் மதிப்பு ஆனது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86.2% ஆகவும், கடன் இருப்புகள் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 33.4% ஆகவும் இருந்தது.
- மேலும், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இந்த எண்கள் முறையே 103.1% மற்றும் 37.6% ஆக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52.8% ஆக இருந்த குடும்பங்களின் நிகர நிதிச் சொத்துக்கள் ஆனது, 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 65.5% ஆக உயர்ந்துள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 23.3 சதவீதமாக இருந்த பெண் தொழிலாளர் வள பங்கேற்பு விகிதம் ஆனது, 2022-23 ஆம் ஆண்டில் 37 சதவீதமாக உயர்ந்துள்ளது.


Chart 18: India's External Debt Position and Vulnerability Indicators




Source: RBI; Note: PR - Partially Revised, P - Provisional; ED – external debt, FER – foreign exchange reserves, TED – total external debt

## 1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதி இலக்கு

- 2022-2023 ஆம் நிதியாண்டில் நாட்டின் மொத்தச் சரக்கு ஏற்றுமதி 447 பில்லியன் டாலர் ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.
- முந்தைய நிதியாண்டில் பதிவான 422 பில்லியன் டாலருடன் ஒப்பிடுகையில் இதுவரை எட்டப்பட்ட அதிகபட்ச மதிப்பு இதுவாகும்.
- 2030 ஆம் நிதியாண்டில் 1 டிரில்லியன் டாலர் மதிப்பிலான சரக்குப் பொருள் ஏற்றுமதி என்ற நாட்டின் இலக்கில் 70 சதவீதத்தினை அடைய உதவும் வகையிலான மின்னணுப் பொருட்கள், பொறியியல் பயன்பாடு சார்ந்த பொருட்கள், ஜவுளி, கடல் மற்றும் வேளாண்மை, பொம்மைகள் மற்றும் மருந்துகள் ஆகிய ஆறு தொழில் துறைகளை இந்தியா அடையாளம் கண்டுள்ளது.
- 2023 ஆம் நிதியாண்டில் பதிவான 451 பில்லியன் டாலர் மதிப்பிலான இந்தியாவின் மொத்தப் பொருட்கள் ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில், இந்தத் துறைகள் 2030 ஆம் நிதியாண்டிற்குள் 670 பில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதியை எட்டும் ஆற்றலைக் கொண்டுள்ளன.
- 2023 ஆம் நிதியாண்டில் 107 பில்லியன் டாலராக இருந்த பொறியியல் பயன்பாடு சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி, 2030 ஆம் நிதியாண்டில் 300 பில்லியன் டாலர் மதிப்பிலான ஏற்றுமதி நிலையை எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- தற்போது 25 பில்லியன் டாலர் மதிப்பில் உள்ள மருந்து ஏற்றுமதியானது 2030 ஆம் நிதி ஆண்டிற்குள் 57 பில்லியன் டாலராக உயரும்.
- மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியானது, 100 பில்லியன் டாலர்களை எட்டும் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஜவுளித் துறையானது 97.7 பில்லியன் டாலர் மதிப்பினைத் தொடும் என எதிர்பார்க்க ப்படுகிறது.
- 2030 ஆம் நிதியாண்டில் கடல் சார் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி 118 பில்லியன் டாலர் மதிப்புகளை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.




## சுவிட்சர்லாந்து-இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

- 16 ஆண்டு கால பேச்சுவார்த்தைக்குப் பிறகு சுவிட்சர்லாந்து மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் ஒருமித்த கருத்தை எட்டியுள்ளன.

- சுவிட்சர்லாந்து நாட்டில் வரலாற்று ரீதியாக மாபெரும் அளவில் தங்க இறக்குமதி நடைபெறுவதோடு, இது பெரும்பாலும் முதன்மையாக இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தை சுத்திகரிக்கிறது.
- 2022-23 ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்து நாட்டில் இருந்து இந்தியாவிற்கு மேற்கொள்ளப் பட்ட இறக்குமதி மதிப்பு ஆனது 15.79 பில்லியன் டாலராக இருந்தது, அதற்கு மாறாக அதன் ஏற்றுமதி 1.34 பில்லியன் டாலராக இருந்தது.
- இது 14.45 பில்லியன் டாலர் அளவிலான வர்த்தகப் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடி வரி விகிதம் 2023

**DIRECT TAX COLLECTIONS** (In ₹ Rs Cr)

| Financial Year | Corporate Tax | Personal Income Tax* | Other Direct Tax | Total | YoY growth |
|---|---|---|---|---|---|
| 2018-19 | 6,63,572 | 4,73,179 | 967 | 11,37,718 | 13.5% |
| 2019-20 | 5,56,876 | 4,92,717 | 1,088 | 10,50,681 | -7.7% |
| 2020-21 | 4,57,719 | 4,87,560 | 1,897 | 9,47,176 | -9.9% |
| 2021-22 | 7,12,037 | 6,96,604 | 3,781 | 14,12,422 | 49.1% |
| 2022-23 | 8,25,834 | 8,33,307 | 4,545 | 16,63,686** | 17.8% |

*includes Securities Transaction Tax **Provisional
Source: CBDT

**TAX BUOYANCY**

| Financial Year | Direct tax-GDP ratio | Buoyancy factor |
|---|---|---|
| 2018-19 | 6.02% | 1.29 |
| 2019-20 | 5.23% | -1.21 |
| 2020-21 | 4.78% | -* |
| 2021-22 | 5.97% | 2.52 |
| 2022-23 | 6.11% | 1.18 |


*As both GDP growth rate were negative, tax buoyancy has not been computed for FY 2020-21

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நேரடி வரி விகிதம் ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 6.11 சதவீதத்தை எட்டியுள்ளது.
- இது 2007-08 ஆம் ஆண்டில் அதன் உயர்ந்த அளவான 6.3 சதவீதத்தை எட்டியது.
- இது முதன்மையாகப் பெரு நிறுவனங்கள் வரி மற்றும் தனிநபர் வருமான வரியை உள்ளடக்கியது.
- 2022-23 ஆம் ஆண்டில், அரசின் மொத்த வரி வருவாயில் 54.62 சதவீதம் ஆனது நேரடி வரிகள் ஆகும்.
- இது 2021-22 ஆம் ஆண்டில் 52.27 சதவீதமாகவும், 15 ஆண்டுகளில் இல்லாத மிகக் குறைவான அளவிற்கு 2020-21 ஆம் ஆண்டில் 46.84 சதவீதமாகவும் இருந்தது.

## நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளை உட்சேர்ப்பதற்கான திருத்தப்பட்ட தகுதி விதிமுறைகள்


- 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளைச் சேர்ப்பதற்கான தகுதி விதிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் திருத்தியமைத்துள்ளது.

- தகுதியான நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் ஆனது, நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தக் கூடிய குறைந்தபட்சத் தேவையை விட கூடுதலாக குறைந்த பட்சம் 3% வரையிலான இடர் உண்டாக்கும் சொத்துக்கள் மீதான மூலதன விகிதத்தை (CRAR) கொண்டிருக்க வேண்டும்.
- கூடுதலாக, அவற்றிற்கு எந்தவொரு பெரிய ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை சிக்கல்கள் இருக்கக் கூடாது.





## மாநில அரசுகளின் கடன் பெறுவதற்கான உத்தரவாதங்கள் குறித்த வழிகாட்டுதல்கள்

- இந்திய ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட ஒரு பணிக்குழுவானது, மாநில அரசுகளால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்க்க சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது.
- இது நீட்டிக்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு (மாநில அரசுகளால்) ஒரே மாதிரியான அறிக்கையிடல் கட்டமைப்பையும், ஒரே மாதிரியான உத்தரவாத உச்சவரம்பையும் பரிந்துரைத்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, இதன் செயலாக்கமானது "மாநில அரசுகளின் சிறந்த நிதி மேலாண்மையை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது".
- ஒரு 'உத்தரவாதம்' என்பது ஒரு மாநில அரசானது பணம் செலுத்துவதற்கும், முதலீட்டாளர்/கடன் வழங்குபவரைக் கடனாளி கடனைத் திருப்பிச் செலுத்ததால் ஏற்படும் அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்குமான ஒரு சட்டப்பூர்வக் கடமையாகும்.
- இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (1872) படி, இது "ஒரு மூன்றாம் தரப்பினர் கடனைத் திரும்பிச் செலுத்தாமல் தவறினால் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவது அல்லது கடன் பொறுப்பினை பூர்த்தி செய்தல்" என்ற ஒப்பந்தமாகும்.
- முதன்மையாக, மாநில அளவில் மூன்று சூழ்நிலைகளில் உத்தரவாதங்கள் பயன்படுத்தப்படுகின்றன:
  - முதலாவதாக, இருதரப்பு அல்லது பலதரப்பு நிறுவனங்களிடமிருந்துப் பெறப்படும் (பொதுத் துறை நிறுவனங்களுக்கு) சலுகைக் கடன்களுக்கு இறையாண்மை உத்தரவாதம் முன்நிபந்தனையாக இருக்கும்;
  - இரண்டாவதாக, முக்கியமான சமூக மற்றும் பொருளாதார நலன்களை வழங்கச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் கொண்ட பல்வேறு திட்டங்கள் அல்லது செயல்பாடுகளின் நம்பகத் தன்மையை மேம்படுத்துதல்; மற்றும்
  - கடைசியாக, பொதுத் துறை நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டிக் கட்டணங்களில் அல்லது மிகவும் சாதகமான விதிமுறைகளில் நிதி வளங்களைத் திரட்டுவதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.




## டாடா குழுமத்தின் புதிய சாதனை

- ❖ டாடா குழுமத்தின் ஒருங்கிணைந்தச் சந்தை மூலதனம் ஆனது 30 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டி உயர்ந்து, இந்திய வணிகத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தைக் குறித்துள்ளது.
- ❖ டாடா ஆலோசனை வழங்கீட்டு குழுமத்தின் பங்குகள் 4 சதவிகிதம் உயர்ந்து 15 லட்சம் கோடி ரூபாய் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.
- ❖ மும்பை பங்குச் சந்தையின் இணையதளத்தின் படி, குறைந்தது எட்டு நிறுவனங்களின் சந்தை மூலதனத்தின் மதிப்பு ஆனது 6 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் உள்ளது.
- ❖ ரிலையன்ஸ் நிறுவனம் அதிகபட்சமாக அதன் சந்தை மூலதன மதிப்பை 19.32 லட்சம் கோடி ரூபாயாகக் கொண்டுள்ள நிலையில், அதைத் தொடர்ந்து டாடா ஆலோசனை வழங்கீட்டுக் குழுமம் (15.12 லட்சம் கோடி ரூபாய்) மற்றும் HDFC வங்கி (10.96 லட்சம் கோடி ரூபாய்) இடம் பெற்றுள்ளன.



## புதிய பண வழங்கீட்டுத் தொகுப்பு நிறுவனங்களுக்கான ஒப்புதல்

- சோஹோ மற்றும் ஐஸ்பே மற்றும் டெசென்ட்ரோ ஆகிய நிதி தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கியானது பண வழங்கீட்டுத் தொகுப்பு நிறுவன உரிமத்தினை வழங்கியுள்ளது.
- முன்னதாக ஸ்ட்ரைப், சோமாட்டோ மற்றும் டாடா பே ஆகியவை 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த ஒப்புதலைப் பெற்றன.
- ரேசர்ப்பே மற்றும் கேஷ்ஃப்ரீ போன்ற பெரிய நிதி தொழில்நுட்ப நிறுவனங்கள் 2022 ஆம் ஆண்டில் உரிமம் பெற்றன.
- இதுவரை, மொத்தம் 8 நிறுவனங்கள், இந்திய ரிசர்வ் வங்கியிடம் இருந்து பண வழங்கீட்டு தொகுப்பு நிறுவனங்கள் உரிமத்தைப் பெற்றுள்ளன.
- இந்த உரிமம் ஆனது, நிறுவனங்கள் ஆனது இயங்கலை வணிகங்கள் மற்றும் இணைய வர்த்தக நிறுவனங்களுக்கு பண வழங்கீட்டுச் சேவைகளை வழங்க அனுமதிக்கிறது.
- இவை வணிகர்கள் சார்பாக வாடிக்கையாளர்களிடமிருந்து பணம் பெற்று, ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குப் பிறகு அவற்றை வணிகர்களுக்குப் பரிமாற்றுவதற்கு முன் அந்த கட்டணங்களைத் திரட்டி தொகுக்கும்.




## இந்தியப் பொருளாதாரம் பற்றிய வெள்ளை அறிக்கை

- மத்திய நிதியமைச்சர் அவர்கள், இந்தியப் பொருளாதாரம் குறித்த வெள்ளை அறிக்கையை மக்களவையில் தாக்கல் செய்துள்ளார்.
- இது நிதி அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்டது.
- இது காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி (UPA) அரசாங்கத்தின் 10 ஆண்டு காலப் பொருளாதாரச் செயல்திறனைத் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசாங்கத்தின் 10 ஆண்டு கால ஆட்சியுடன் ஒப்பிடுகிறது.


- 2014 ஆம் ஆண்டில் NDA அரசாங்கம் பதவியேற்ற போது இருந்த ஆளுகைத் திறன், பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகளின் தன்மை மற்றும் பரவலை நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் இது தெரிவிக்க முயல்கிறது.
- 2014 ஆம் ஆண்டு முதல் பொருளாதாரத்தின் நலத்தினை மீட்டெடுக்க (NDA) அரசாங்கம் எடுத்த கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றி இது தெரிவிக்கிறது.
- இது மூன்று முக்கியப் பகுதிகளைக் கொண்டுள்ளது.
    - முதல் பகுதியானது, 10 ஆண்டுகால UPA ஆட்சியின் போதான பேரியப் பொருளாதார நிலைமைகள் குறித்து விவாதிக்கிறது.
    - இரண்டாவது அறிக்கையானது UPA அரசாங்கத்தின் பல்வேறு ஊழல் மோசடிகளின் தற்போதைய நிலை குறித்தத் தகவல்களை வழங்குகிறது.
    - மூன்றாவது பகுதியானது, NDA அரசாங்கம் எப்படி பொருளாதாரத்தை மாற்றி அமைத்தது என்பதைக் காட்டுகிறது.
- 2004 ஆம் நிதியாண்டில் 31% ஆக இருந்த மொத்தச் செலவினங்களின் சதவீதமாக (வட்டிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து) குறிப்பிடப்படும் மூலதனச் செலவினமானது 2014 ஆம் நிதியாண்டில் 16% ஆக பாதியாகக் குறைந்தது (இந்த விகிதம் நடப்பு ஆண்டில் 28% ஆக உள்ளது).
- அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 2004 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 17 மாதங்கள் வரையிலான இறக்குமதிகளுக்கு நிதியளிக்கத் தேவையானதாக இருந்த நிலையில், இது 2013 ஆம் ஆண்டில் 6 மாதங்களுக்கு மேலான காலம் வரையில் நிதி அளிப்பதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது.
- 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி, அந்நியச் செலாவணி கையிருப்பு ஆனது 10.6 மாத இறக்குமதிக்கு நிதியளிப்பதற்குப் போதுமானதாக இருந்தது.

**UPA AND NDA YEARS: WHAT SOME CRUCIAL NUMBERS SAY**

| Financial Year | Nominal GDP growth rate (%) | Real GDP growth rate (%) | Fiscal Deficit* | Financial Year | Nominal GDP growth rate (%) | Real GDP growth rate (%) | Fiscal Deficit* |
|---|---|---|---|---|---|---|---|
| 2004-05 | 14.10 | 7.92 | 3.95 | 2014-15 | 10.99 | 7.41 | 4.10 |
| 2005-06 | 13.99 | 7.92 | 4.03 | 2015-16 | 10.46 | 8 | 3.87 |
| 2006-07 | 17.14 | 8.06 | 3.35 | 2016-17 | 11.76 | 8.26 | 3.48 |
| 2007-08 | 15.14 | 7.66 | 2.59 | 2017-18 | 11.03 | 6.8 | 3.46 |
| 2008-09 | 12.56 | 3.09 | 6.11 | 2018-19 | 10.59 | 6.45 | 3.44 |
| 2009-10 | 15.46 | 7.86 | 6.57 | 2019-20 | 6.37 | 3.87 | 4.64 |
| 2010-11 | 19.92 | 8.5 | 4.89 | 2020-21 | -1.36 | -5.83 | 9.17 |
| 2011-12 | 14.43 | 5.24 | 5.91 | 2021-22 | 18.36 | 9.05 | 6.75 |
| 2012-13 | 13.82 | 5.46 | 4.93 | 2022-23 | 16.06 | 7.24 | 6.38 |
| 2013-14 | 12.97 | 6.39 | 4.48 | 2023-24 | 8.87 | 7.32 | 5.85 |
| AVERAGE OF UPA YEARS | | | | AVERAGE OF NDA YEARS | | | |
| 2004-2014 | 14.95 | 6.80 | 4.7 | 2014-2024 | 10.31 | 5.9 | 5.1 |

## வீட்டு உபயோகச் செலவினக் கணக்கெடுப்பு

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSSO) ஆனது வீட்டு உபயோகச் செலவின (குடும்ப நுகர்விற்கான செலவினங்கள்) கணக்கெடுப்பை (HCES) நடத்தியது.
- தனிநபர் மாதாந்திர குடும்பச் செலவினமானது 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022-23 ஆம் ஆண்டில் இருமடங்காக அதிகரித்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 2011-12 ஆம் ஆண்டில் தற்போதைய (உண்மை) அசல் விலையில் (தோராயமாக்கப் படாத) 2,630 ரூபாயாக இருந்த சராசரி தனிநபர் மாதாந்திர குடும்பச் செலவினமானது (MPCE) 2022-23 ஆம் ஆண்டில் இருமடங்காக உயர்ந்து 6,459 ரூபாயாக உயர்ந்துள்ளது.
- இதே போல் கிராமப்புறங்களில், உண்மை விலையில் 1,430 ஆக இருந்த சராசரி தனி நபர் மாதாந்திரக் குடும்பச் செலவினமானது 3,773 ஆக உயர்ந்துள்ளது.
- நகர்ப்புறங்களில் 2011-12 ஆம் ஆண்டின் உண்மை விலையில் (தோராயமாக்கப்படாத), 2011-12 ஆம் ஆண்டில் 2,630 ரூபாயாக இருந்த சராசரி MPCE ஆனது 2022-23 ஆம் ஆண்டில் 3,510 ரூபாயாக அதிகரித்துள்ளது.
- இதே போல், கிராமப்புறங்களில் 2011-12 ஆம் ஆண்டின் உண்மை விலையில் 1,430 ஆக இருந்த சராசரி MPCE ஆனது 2,008 ஆக உயர்ந்துள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இன்ஜெனூட்டி செவ்வாய் ஆய்வு ஹெலிகாப்டர்

- இன்ஜெனூட்டி எனப்படும் நாசாவின் செவ்வாய்க் கிரக ஆய்விற்கான எந்திர ஹெலிகாப்டர் ஆனது, மற்றொரு கிரகத்தில் இயங்குகின்ற மற்றும் கட்டுப்படுத்தப் பட்ட விமான இயக்கத்தினை அடைந்த முதல் வாகனம் ஆகும்.
- இன்ஜெனுய்ட்டி, செவ்வாய்க் கிரகத்தின் நிலப்பரப்பில் முன்னதாக திட்டமிட்டதை விட 14 மடங்கு அதிகமாக இயங்கியது.
- இது 72 விமான இயக்கம் மூலமாக 10.5 மைல்கள் (17 கிமீ) தூரத்தை கடந்தது.
- இது எட்டிய உச்சக் கட்ட உயரம் 78.7 அடி (24 மீட்டர்) ஆக அளவிடப்பட்டுள்ளது.



## பெரிய வளைய வடிவ அமைப்பு

- அறிவியலாளர்கள் பெரிய வளையம் எனப்படுகின்ற ஒரு மிகப்பெரிய வளைய வடிவ அமைப்பைக் கண்டறிந்துள்ளனர்.
- இது வியக்கத்தக்க வகையில் பூமியிலிருந்து சுமார் 9.2 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த மாபெரும் வானியல் அமைப்பானது பல்வேறு அண்டங்கள் மற்றும் அண்டத் தொகுப்புகளால் ஆனது.



- இதன் விட்டம் தோராயமாக 1.3 பில்லியன் ஒளியாண்டுகள் ஆகும் என்பதோடு மேலும் இதன் மொத்தச் சுற்றளவு 4 பில்லியன் ஒளியாண்டுகள் ஆகும்.
- இது பூமியிலிருந்து பார்க்கும் போது இரவு வானில் தெரியும் நிலவினை விட தோராயமாக 15 மடங்கு பெரியதாக தோன்றுகிறது.
- லோபஸ் மற்றும் அவரது சகாக்களால் 2021 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்ட இரண்டாவது மாபெரும் அமைப்பு இதுவாகும்.
- மாபெரும் வில் அமைப்பு எனப்படும் முதலாவது அமைப்பான இது உண்மையில் அதே தொலைவில் வானில் அதே அளவு பரந்து விரிந்து காணப்படுகின்றது.

## சந்திரயான்-3 தரையிறங்கு விண்கலத்துடனான லேசர் தகவல் தொடர்பு


- நாசாவின் விண்கலம் ஆனது இந்தியாவின் சந்திரயான்-3 தரையிறங்கு கலத்தினுடன் தகவல் தொடர்பை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- நிலவின் மேற்பரப்பில் ஒரு லேசர் (சீரொளி) கற்றையானது அதன் சந்திர ஆய்வு சுற்றுக் கலம் மற்றும் விக்ரம் தரையிறங்கு கலம் ஆகியவற்றுக்கு இடையே முதல் முறையாக அனுப்பப்பட்டு பிரதிபலிக்கப் பட்டது.
- இந்த வெற்றிகரமானச் சோதனையானது சந்திரனின் மேற்பரப்பில் இலக்குகளைத் துல்லியமாகக் கண்டறியும் புதிய பாணிக்கான வாய்ப்பினை நல்குகிறது.
- நாசாவின் LRO கலம், அதன் லேசர் உயரமானிக் கருவியை விக்ரம் தரையிறங்கு கலத்தினை நோக்கி நிலைநிறுத்தியது.
- LRO லேசர் துடிப்புகளை அனுப்பிய போது 62 மைல்கள் அல்லது 100 கிலோமீட்டர் தொலைவில், சந்திரனின் தென் துருவப் பகுதியில் உள்ள மான்சினஸ் பள்ளத்திற்கு அருகில் தரையிறங்கு கருவியானது இருந்தது.
- விக்ரம் தரையிறங்கு கலம் ஆனது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று சந்திரனின் தென் துருவப் பகுதியில் தரையிறங்கியது.



## நியூராலிங்க் நிறுவனத்தின் முதல் மனித சோதனை

- நியூராலிங்க் எனப்படும் புத்தொழில் நிறுவனமானது, "நம்பிக்கைக்குரிய" ஆரம்பகட்ட முடிவுகளுடன் கூடிய மூளை உள்வைப்பை (சில்லுகளை) மனித உடலில் முதல் முறையாக வைத்துள்ளது.

- 2016 ஆம் ஆண்டில் மஸ்க் இணைந்து நிறுவிய நரம்பியல் தொழில்நுட்ப நிறுவனம் ஆனது மூளைக்கும் கணினிக்கும் இடையே நேரடித் தகவல் தொடர்பு தடத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "லிங்க்" எனப்படும் ஒரு சில்லு ஆனது, உட்காண் அறுவை சிகிச்சை மூலம் மனித மூளைக்குள் வைக்கப்படும் ஐந்து அடுக்கிய நாணயங்களின் அளவிலான ஒரு சாதனம் ஆகும்.





## ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட செயற்கை மீன் இறைச்சி

- மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI) ஆனது, ஆய்வகத்தில் மீன் இறைச்சியை வளர்த்து பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்துவதற்கான கூட்டு ஆராய்ச்சி ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது.
- இது ஆய்வகத்தில் வளர்க்கப்படுகின்ற - அல்லது உருவாக்கப்பட்ட / பண்படுத்தப்பட்ட இறைச்சியின் ஒரு வகை மட்டுமே ஆகும்.
- கடல் சூழலில் வளராத கடல் சார் உணவு ஆனது, இறைச்சிகளுக்காக ஆய்வகத்தில் உருவாக்கப்படும் மற்ற இனங்கள் போலவே ‘வளர்க்கப்படுகின்றன’.
- இதனால் ஒரு விலங்கினை வளர்த்து அதனை இறைச்சிக்காகக் கொல்ல வேண்டிய அவசியமற்றுப் போகிறது.
- ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட செயற்கை மீன் இறைச்சியானது, மீன்களிலிருந்து குறிப்பிட்ட உயிரணுக்களைப் பிரித்தெடுத்து விலங்குகளின் உடற்கூறுகள் இல்லாத ஓர் ஊடகத்தைப் பயன்படுத்தி அவற்றை ஆய்வகக் கட்டமைப்பில் வளர்ப்பதன் மூலம் தயாரிக்கப்படுகிறது.
- முழு தயாரிப்பு ஆனது 'உண்மையான' மீன் இறைச்சியின் சுவை, உருவமைப்பு மற்றும் ஊட்டச்சத்து பண்புகளைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- டச்சு நாட்டின் மருந்தியல் நிபுணர் மார்க் போஸ்ட் 2013 ஆம் ஆண்டில் வளர்ப்பு (செயற்கை) இறைச்சிக்கான கருத்தாக்கத்தை முதன்முதலில் முன்வைத்தார்.
- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், அமெரிக்க வேளாண்மைத் துறையானது அந்த நாட்டில் வளர்ப்பு (செயற்கை) கோழி இறைச்சியின் விற்பனைக்கு அனுமதி வழங்கச் செய்தது.

## eROSITA தரவு

- அறிவியலாளர்கள் பேரண்டத்தின் மிகப்பெரிய ஊடுகதிர் வரைபடத்தை வெளியிட்டு உள்ளதோடு 9,00,000 உயர் ஆற்றல் கொண்ட விண்வெளி (அண்டம்) மூலங்களையும் கண்டறிந்துள்ளனர்.
- ஸ்பெக்ட்ரம்-RG எனப்படும் ரஷ்ய-ஜெர்மன் செயற்கைக் கோளில் உள்ள eROSITA ஊடு கதிர் தொலைநோக்கி மூலம் சேகரிக்கப்பட்டத் தரவுகளை ஜெர்மனி நாட்டின் "ஈரோசிட்டா" கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.
- முதலாவது eROSITA வானியல் ஆய்வுப் பட்டியல் தொகுப்பு (eRASS1) ஆனது இது வரையில் வெளியிடப்பட்ட மிகப்பெரிய ஊடுகதிர் மூலங்களின் தொகுப்பாகும்.
- தொலைதூர அண்டங்களில் சுமார் 7,10,000 மீப்பெரும் கருந்துளைகள் உள்ளன.
- உயர் ஆற்றல் கொண்ட அண்ட மூலங்கள் (900,000க்கும் அதிகமானவை) ஊடு கதிர்களை வெளியிடும் 180,000 நட்சத்திரங்களையும் உள்ளடக்கியதாகும்.
- இது தவிர, 12,000 அண்டத் தொகுப்புகள் மற்றும் பிற வெளிப்புற அமைப்புகளைச் சேர்ந்த ஊடுகதிர் வெளியிடும் வானியல் பொருட்களையும் இது உள்ளடக்கியுள்ளது.




## PHANGS திட்டம்

- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, PHANGS திட்டத்திற்கான அதன் பங்களிப்பின் ஒரு பகுதியாக, அருகில் உள்ள அனைத்துக் கிளையமைப்புகளும் தெளிவாகப் புலப்படக் கூடிய 19 சுருள் அண்டங்களை சமீபத்தில் கண்காணித்தது.
- PHANGS ALMA ஆய்வானது, அருகிலுள்ள பேரண்டத்தில் நட்சத்திரத்தை உருவாக்கும் மாபெரும் அண்டங்களில் குறிப்பிடத் தக்க 90 அருகிலுள்ள அண்டங்களில் உள்ள மூலக்கூறு வாயு வட்டுகளில் கவனம் செலுத்துகிறது.

- PHANGS திட்டம் என்பது உலகளவில் 150க்கும் மேற்பட்ட வானியலாளர்களால் ஆதரிக்கப் படும் ஒரு பெரிய, நீண்ட கால முன்னெடுப்பாகும்.
- PHANGS என்பது அருகிலுள்ள அண்டங்களில் உள்ள உயர் கோணத் தெளிவுத்திறன் சார்ந்த இயற்பியல் என்பதைக் குறிக்கிறது.
- இந்தத் திட்டமானது வாயு மற்றும் நட்சத்திர உருவாக்கத்தின் ஒரு சிறிய அளவிலான இயற்பியலின் ஊடு விளைவினைப் புரிந்து கொள்வதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.





## INSAT-3DS செயற்கைக்கோள்

- GSLV-F14 ஏவு கலத்தினைப் பயன்படுத்தி INSAT-3DS ஏவுவதன் மூலம் இந்தியா தனது வானிலை கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்த உள்ளது.
- இந்த செயற்கைக்கோள் ஆனது வானிலை முன்னறிவிப்பு மற்றும் பேரிடர் எச்சரிக்கைக்காக மேம்படுத்தப்பட்ட வானிலை ஆய்வுகள் மற்றும் நிலம் மற்றும் பெருங்கடல் பரப்புகளை கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது தற்போது சுற்றுப்பாதையில் உள்ள INSAT-3D மற்றும் 3DR செயற்கைக் கோள்களுக்கு அடுத்து தொடர் சேவைகளை வழங்கும்.
- இது தடையில்லாத சேவைகளை வழங்கச் செய்வதையும், இன்சாட் செயற்கைக் கோள் அமைப்பின் ஒட்டுமொத்தத் திறன்களைக் கணிசமாக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



## TOI-715b



- நாசா நிறுவனமானது, 'சூப்பர் எர்த்' (புவியினை போன்ற அமைப்புகளைக் கொண்ட பெரிய கோள்) உயிர்கள் வாழ்வதற்கு உகந்த சூழல்களைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு கிரகத்தைக் கண்டறிந்துள்ளது.
- TOI-715 b என்று அழைக்கப்படும் இந்த கிரகம் ஆனது நமது புவியில் இருந்து 137 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது என்பதோடு இது பூமியை விட ஒன்றரை மடங்கு அகலமும் கொண்டதாகும்.
- இது பழமையான வாழ்விட மண்டலத்தில் உள்ள அதன் தோற்ற நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.
- TOI-715 b என்ற கிரகத்தின் தோற்ற நட்சத்திரம் ஆனது சூரியனை விட சிறிய மற்றும் குளிர்ச்சியான ஒரு சிவப்பு நிறக் குறு விண்மீன் ஆகும்.

## சிக்னஸ் X-1




- ஆஸ்ட்ரோ சாட் கலமானது, கடந்த எட்டு ஆண்டு செயல்பாட்டில் சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து சிக்னஸ் X-1 கருந்துளை அமைப்பின் மீதான ஊடுகதிர் துருவமுனை வாக்கத்தினை அளவிட்டுள்ளது.
- ஆஸ்ட்ரோ சாட் கலமானது இந்தியாவின் முதலாவது பிரத்தியேக பல் அலைநீள வானியல் ஆய்வுக் கலமாகும்.


- 40 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட சிக்னஸ் X-1 என்பது நமது அண்டத்தில் உள்ள முதல் உறுதிப்படுத்தப்பட்ட கருந்துளை அமைப்புகளில் ஒன்று ஆகும்.
- இது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தொலைவை விட 400 மில்லியன் மடங்கு அதிகமான தொலைவில் அமைந்துள்ளது.
- சிக்னஸ் X-1 அமைப்பில் உள்ள கருந்துளையானது சூரியனை விட 20 மடங்கு நிறை கொண்டது என்பதோடு இது இரட்டை மண்டல அமைப்பில் ஒரு கனமான மீப்பெரு நட்சத்திரத்தினை (சூரியனை விட 40 மடங்கு பெரியது) ஒரு துணை அமைப்பாகவும் கொண்டுள்ளதாகும்.

## ரோட்டோருவா ஏரியின் கீழ் காந்தத் திறன் முரண்பாடு


- ரோட்டோருவா ஏரியின் தண்ணீருக்கு அடியில் மறைந்திருக்கும் நீர்ம வெப்ப ஆற்றல் அமைப்பு காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மாவோரி புராணத்தில் கூறப்பட்டுள்ள இந்தத் தளம் ஆனது, நியூசிலாந்தின் வடக்கு தீவில் (நார்த் தீவு) செயல்பாட்டில் இல்லாத எரிமலை பள்ளத்தின் மேல் அமைந்துள்ளது.
- சுமார் 200,000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு எரிமலை வெடிப்பால் உருவாக்கப் பட்ட ரோட்டோருவா ஏரியானது இன்றும் பல புனல்வெப்ப ஆற்றல் நடவடிக்கைகள் காணப் படும் இடமாக உள்ளது.
- சராசரியாக சுமார் 10 மீட்டர் ஆழம் கொண்ட ஓர் ஆழமற்ற ஏரியான இந்த ஏரியானது டௌபோ எரிமலை மண்டலத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த எரிமலைப் பாறைகள் அங்கு மாக்னடைட் இருப்பதால் வலுவான நேர்மறையான காந்த எதிர் நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்றன.
- இருப்பினும், இங்கு கண்டறியப்பட்ட முரண்பாடு ஆனது நீர்ம வெப்ப ஆற்றல் கொண்ட திரவங்கள் மாக்னடைட் கனிமத்தினைப் பைரைட்டாக மாற்றியதாக வெளிப்படுத்தச் செய்கின்றன.
- இது காந்த சமிக்ஞையை கணிசமாகக் குறைக்கிறது.

## நிலவில் அணுக்கரு பிளவு உலை

- சந்திரனில் சிறிய மின்சாரம் உற்பத்தி செய்யும் அணு உலையை உருவாக்கும் இலட்சிய மிக்கத் திட்டத்தின் ஆரம்பக் கட்டத்தை நாசா நிறைவு செய்துள்ளது.
- அணுக்கருப் பிளவு மின் உற்பத்தித் திட்டம் ஆனது நிலவில் பாதுகாப்பான, சுத்தமான மற்றும் நம்பகமான ஆற்றல் மூலங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- நிலவில் சூரிய சக்தி ஆனது சில வரம்புகளைக் கொண்டுள்ளது, ஏனெனில் பூமியின் ஒரே துணைக் கோளில் நிலவும் இரவு நேரமானது 14 புவி நாட்களுக்குச் சமமான அளவு மட்டுமே நீடிக்கும்.
- அணு உலையானது, நிரந்தரமாக சூரிய ஒளி விழாத பகுதிகளில் நிறுவப்பட்டாலும், அது வானிலை மற்றும் பிற சூழ்நிலைகளைச் சார்ந்திருக்காமல் தொடர்ந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய இயலும்.



## GRAPES-3 பரிசோதனை




- GRAPES-3 பரிசோதனையானது காஸ்மிக்-கதிரின் புரோட்டான் அலைக்கற்றையில் சுமார் 166 டெரா-எலக்ட்ரான்-வோல்ட் (TeV) ஆற்றல் மட்டத்தில் ஒரு புதிய பண்புக் காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இது 50 TeV ஆற்றல் மட்டத்திலிருந்து ஒரு பீட்டா எலக்ட்ரான்-வோல்ட் (PeV) வரையிலான ஆற்றல் அளவீட்டு வரம்பைக் கொண்டுள்ளது.
- இந்தக் கண்டுப்பிடிப்பானது, காஸ்மிக் கதிரின் தோற்றம், அவற்றின் முடுக்க செயல் முறைகள் மற்றும் பால்வெளி அண்டத்திற்குள் அவை எவ்வாறு நகர்கின்றன என்பது பற்றிய நமது புரிதலில் சாத்தியமிகு மாற்றத்தை அறிமுகப்படுத்துகிறது.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட காஸ்மிக் கதிர்கள், பேரண்டத்தின் மிகவும் ஆற்றல் வாய்ந்த துகள்களைப் பிரதிபலிக்கின்றன.

## இந்தியாவின் முதல் செயல் திறன்மிகு தோட்டா

- சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் 155 மில்லி மீட்டர் குழல் விட்டம் கொண்ட வழிகாட்டுதலுடன் கூடிய திறன்மிகு வெடிமருந்துகளை உருவாக்குவதற்காக மியூனிஷன்ஸ் இந்தியா நிறுவனத்துடன் கைகோர்த்துள்ளது.
- இந்த கூட்டிணைவு ஆனது, பீரங்கித் துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் குழல்களின் துல்லியத்தன்மை மற்றும் தாக்குதல் தொலைவு வரம்பை மேம்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கூடுதலாக, வெடிமருந்துகள் இலக்கைத் தாக்கும் போது அந்த இலக்கின் மீது ஏற்படும் பாதிப்பு மற்றும் அழிவினை அதிகரிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவி

- CERN எனப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பானது மூன்று மடங்கு பெரிய (மற்றும் வேகமான) எதிர்கால நுட்ப வகையிலான வட்ட வடிவ மோதுவிக் கருவியை (FCC) உருவாக்க திட்டமிட்டுள்ளது.





- FCC என்பது 91-கிலோமீட்டர் வளையத்திற்குள் அமைந்த ஒரு துகள் முடுக்கி ஆகும் என்பதோடு இது ஒரு பெரிய ஹாட்ரான் மோதுவியை விட மூன்று மடங்கு சுற்றளவைக் கொடுக்கும்.
- FCC ஆனது "2045 ஆம் ஆண்டின் முதல் பாதியில் செயல்படத் தொடங்கும்.
- 100 டெரா எலக்ட்ரான் வோல்ட்களின் மோதல் ஆற்றல்களை அடையும் நோக்கத்துடன், துகள் மோதல்களின் ஆற்றல் மற்றும் தீவிர வரம்புகளை அதிகரிப்பதே FCC என்றக் கட்டமைப்பின் குறிக்கோள் ஆகும்.

## இந்தியாவின் முதல் அதி உயர் திசைவேக விரிவாக்க குழலமைப்பு பரிசோதனை மையம்



- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது (IITK), இந்தியாவின் முதல் அதி உயர் திசைவேக விரிவாக்க குழலமைப்புப் பரிசோதனை மையத்தினை மிகவும் வெற்றிகரமாக உருவாக்கி சோதனை செய்துள்ளது.
- இந்த மையமானது, மீயொலிவேகம் சார்ந்தச் சூழ்நிலைகளை உருவாக்கி, 3 முதல் 10 கிமீ/வி. வரையிலான வேகத்தை உருவாக்கும் திறன் கொண்டது.
- வளிமண்டலத்தில் விமானங்கள் நுழைதல், குறுங்கோள்களின் நுழைவு, ஸ்க்ராம்ஜெட் விமானங்கள் மற்றும் உந்துவிசை ஏவுகணைகள் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு இது முக்கியமானதாகும்.
- S2 எனப்படும் இந்த அமைப்பு ஆனது "ஜிகர்தண்டா" என்று அழைக்கப் படுகின்றது.


## PACE ஆய்வுத் திட்டம்




- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ஏவுகலம் மூலம் நாசாவின் நுண்ம உயிரிகள், தூசுப்படலம், மேகம், பெருங்கடல் சூழலமைப்பு (PACE) ஆய்வுக் கலம் ஆனது அடுத்த அடுத்த நிலை சுற்றுப்பாதையில் நுழைந்தது.

- பூமியின் பெருங்கடல்கள், காற்றின் தரம் மற்றும் பருவநிலை மாற்றம் பற்றிய ஆய்வில் இந்த ஆய்வுத் திட்டம் ஒரு படி முன்னேறியுள்ளது.
- நமது புவி கிரகத்தின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பெரும் முக்கிய நுணுக்கங்களைக் கண்காணிக்கப்பதற்காக வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட கருவிகள் இந்தக் கலத்தில் பொருத்தப் பட்டுள்ளது.
- மீன்வளத்தின் ஆரோக்கியத்தை முன்னறிவிப்பதற்கும், தீங்கு விளைவிக்கும் பாசி உருவாக்கங்களைக் கண்காணிப்பதற்கும், கடல் சார் சுற்றுச்சூழல் மாற்றங்களைக் கண்டறிவதற்கும் இந்தத் தரவு முக்கியமானது ஆகும்.

## தனிச்சுழி வெப்பநிலை கொண்ட அணுக்களின் வரைபடமாக்கல்




- பெங்களூருவின் இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தில் (RRI) இந்திய அறிவியலாளர்கள் ஒரு புதிய படத் திருத்த வழிமுறையை வடிவமைத்துள்ளனர்.
- இது தனிச்சுழி வெப்பநிலை கொண்ட அணுக்கள் பற்றிய ஒரு ஆய்வை கணிசமாக மேம்படுத்துகிறது.
- இது தனிச்சுழி வெப்பநிலை கொண்ட அணுக்களைப் பயன்படுத்தி ஆய்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களின் தெளிவை மேம்படுத்துகிறது.
- இந்தப் புதிய வழிமுறை ஆனது தேவையற்ற கருமையான மற்றும் பிரகாசமான வடிவங்களைக் கொண்ட, முக்கியமான தரவை மறைக்கும் குறுக்கீட்டுப் பட்டை வரிகளை 50 சதவிகிதம் வரை குறைக்கிறது.
- எண், வெப்பநிலை மற்றும் இயக்கவியல் போன்ற முக்கிய அணு அளவுருக்களை குறுகிய நேர அளவீடுகளில் தீர்மானிக்கும் போது இந்த பட்டை வரிகள் துல்லியமற்ற தன்மைக்கு வழிவகுக்கும்.
- இந்தத் தனிச்சுழி வெப்பநிலை கொண்ட அணுக்களை ஆய்வு செய்ய, ஆராய்ச்சியாளர்கள் பொதுவாக காந்த-ஒளியியல் பொறிகள் மற்றும் உயர் ஆற்றல் கொண்ட சீரொளி குளிரூட்டும் நுட்பங்களைப் பயன்படுத்துகின்றனர்.

## அதிக உயரத்தில் பறக்கும் சூடோ செயற்கைக்கோள் வாகனம்

- பெங்களூருவின் தேசிய விண்வெளி ஆய்வகமானது (NAL) ஒரு புதிய தலைமுறைத் தொழில்நுட்பத்திலான ஆளில்லா வான்வழி வாகனத்தின் (UAV) முன்மாதிரியை வெற்றிகரமாகப் பறக்கச் செய்து பரிசோதித்துள்ளது.
- இது தரையில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் அதிக உயரத்தில் பறக்கக் கூடியது என்பதோடு, முழுவதும் சூரிய சக்தியில் இயங்கக் கூடிய இது மாதக் கணக்கில் வான்வெளியில் இயங்கக் கூடியதும் ஆகும்.
- இத்தகைய ஆளில்லா வான்வழி வாகனங்கள் என்பவை HAPS என்ற அல்லது அதிக உயரத்தில் பறக்கும் போலி (சூடோ) செயற்கைக் கோள் வாகனங்கள் அல்லது HALE எனப்படுகின்ற, அதாவது அதிக உயரத்தில் நீண்ட நேரம் இயங்கும் திறன் கொண்ட வாகனங்கள் எனப்படுகின்ற பறக்கும் பொருட்களின் வகையைச் சேர்ந்தவை ஆகும்.



## அதி உயர் ஆற்றல் கொண்ட துகள் "அமேதராசு"



- அதி-உயர் ஆற்றல் கொண்ட மிகவும் பெரு சக்திவாய்ந்த துகளை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அது பால்வெளி அண்டத்திற்கு அப்பால் இருந்து பூமிக்கு பயணித்துள்ளதாக அவர்கள் கருதுகின்றனர்.
- இந்த மிக அசாதாரணமான ஒரு துகளுக்கு "சூரியக் கடவுள்" (ஜப்பானிய மொழியில் அமேதராசு) துகள் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த துகள் மிகவும் சக்திவாய்ந்த துகள் முடுக்கிகளில் உருவாக்கக்கூடிய ஆற்றல் மட்டத்தை விட ஒரு மில்லியன் மடங்கு அதிகமாக கொண்டுள்ளது.
- இது 1991 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட "Oh-My-God" என்ற துகள், இதுவரையில் கண்டறியப் படாத ஆற்றல் மிக்க காஸ்மிக் கதிரின் எதிர் மாற்றுப் பொருளாக உள்ளது.

## உறைந்த புகை கண்டுபிடிப்பு



- ஆராய்ச்சியாளர்கள் 'உறைந்த புகை' (புரைமக் கூழ்மம்) எனப்படும் அதிநுண்ணிய (அதிக ஊடுருவல் தன்மை கொண்ட) பொருட்களால் செய்யப்பட்ட உணர்விகளை உருவாக்கியுள்ளனர்.
- புரைமக் கூழ்மங்களில் உள்ள துளைகளின் வடிவத்தை துல்லியமாக வடிவமைப்பதன் மூலம், அறை வெப்பநிலையில் ஃபார்மால்டிஹைடின் படிமத்தினை உணர்விகளால் கண்டறிய முடிந்தது.

- ஃபார்மால்டிஹைட் என்பது ஒரு பொதுவான உட்புற காற்று மாசுபடுத்தியாகும்.
- இது செயற்கை நுண்ணறிவு நுட்பங்களைப் பயன்படுத்தி, ஒரு பில்லியனுக்கு எட்டு பாகங்கள் என்ற செறிவுகள் என்ற அளவில் நிகழ் நேரத்தில் ஃபார்மால்டிஹைடைக் கண்டறியும்.
- இது பெரும்பாலான உட்புறக் காற்றின் தர உணர்விகளின் உணர்திறனை விட மிகவும் அதிகமான திறனைக் கொண்டுள்ளது.

## ஒலி அடிப்படையிலான ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பு

- ஜம்முவின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பேராசிரியர், ஒலி தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு அற்புதமான ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பை உருவாக்கியுள்ளார்.
- ஒலியை அடிப்படையாகக் கொண்டு கண்டறிதல் எனப்படும் இந்த அமைப்பு ஆனது, ஆளில்லா விமானங்கள் வெளியிடும் தனித்துவமான ஒலியைக் கண்டறியும் முதல் வகை தொழில்நுட்பமாகும்.
- இந்த அமைப்பானது, இந்த ஒலி சார்ந்தத் தடயங்களை ஒரு தரவுதளத்துடன் ஒப்பிடச் செய்வதன் மூலம், ஆளில்லா விமானங்களை மிகவும் துல்லியமாக அடையாளம் காண முடியும்.
- இந்த அமைப்பு ஆனது 300 மீட்டர் எல்லைக்குள் பறக்கும் ஆளில்லா விமானங்கள், விமானங்கள், பன்முக ஆளில்லா விமானங்கள் அல்லது பறவைகளை அவற்றின் ஒலியை அடிப்படையாகக் கொண்டு அடையாளம் காணும் திறன் கொண்டது.

## INSAT-3DS ஆய்வுக் கலம்





- INSAT-3D வானிலை செயற்கைக்கோளை சுமந்து செல்லும் GSLV-F14 ஏவு கலமானது, ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து மிகவும் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.

- INSAT-3DS செயற்கைக்கோள் என்பது புவிநிலைச் சுற்றுப்பாதையில் இருந்து இயங்கும் மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பம் சார்ந்த வானிலை செயற்கைக்கோளை அடுத்து அனுப்பப்பட்ட செயற்கைக் கோளாகும்.
- இது மேம்பட்ட வானிலை ஆய்வு கண்காணிப்புகள், வானிலை முன்னறிவிப்புக்காக நிலம் மற்றும் கடல் மேற்பரப்புகளைக் கண்காணித்தல் மற்றும் பேரழிவு முன்னெச்சரிக்கைக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு செயற்கைக்கோள் ஆகும்.
- INSAT-3DS செயற்கைக்கோள் ஆனது தற்போது சுற்றுவட்டப் பாதையில் செயல்பட்டு வரும் INSAT-3D மற்றும் INSAT-3DR செயற்கைக்கோள்களுடன் இணைந்து வானிலை ஆய்வுத் திறனை அதிகரிக்கும்.
- GSLV-MkII எனப்படும் அதி திறன் ஏவு கலத்தினால் விண்ணில் ஏவப்படும் 16வது ஆய்வுக் கலமான இது 2001 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.
- முந்தைய 15 ஆய்வுப் பயணங்களில், 11 வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.
- GSLV ஏவு கலமானது, கடந்த காலங்களில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட தோல்விகளால் இந்திய விண்வெளித் துறையில் "naughty boy" என்று அழைக்கப்பட்டது.

## குறுங்கோள்களில் நீர்

- ஐரிஸ் மற்றும் மசாலியா ஆகிய குறுங்கோள்களின் மேற்பரப்பில் நீர் மூலக்கூறுகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் முதன்முறையாக கண்டறிந்துள்ளனர்.
- அகச்சிவப்பு வானியலுக்கான படை அடுக்கு மண்டல ஆய்வகத்தினால் (SOFIA) சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த கண்டுபிடிப்பு மேற் கொள்ளப் பட்டுள்ளது.
- ஐரிஸ் மற்றும் மசாலியா ஆகிய இரண்டிலும் சிலிக்கேட்டுகள் நிறைந்துள்ளன.
- ஐரிஸ் (199 கி.மீ. விட்டம் கொண்டது) மற்றும் மசாலியா (135 கி.மீ. விட்டம் கொண்டது) ஆகியவை ஒரே சுற்றுப்பாதைகளைக் கொண்டு, சராசரியாக 2.39 வானியல் அலகுகள் (AU) தொலைவில் பயணிக்கின்றன.



## உலகின் முதலாவது துவரம்பருப்பு உற்பத்தி விரைவாக்க நெறிமுறை

- பகுதியளவு வறட்சியான வெப்ப மண்டலத்திற்கான சர்வதேசப் பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) ஆனது உலகின் முதல் துவரம்பருப்பு உற்பத்தி விரைவாக்க நெறி முறையை அறிவித்துள்ளது.

- இந்த புதிய துவரம்பருப்பு உற்பத்தித் திட்டம் ஆனது ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவின் வறண்ட நிலங்களில் உணவுப் பாதுகாப்பைக் கொண்டு வருவதில் முக்கியமானதாக இருக்கும்.
- இதன் மூலம் சுமார் ஏழு ஆண்டுகள் ஆகும் இந்தப் பயிரின் வளர்ப்பு காலச் சுழற்சியை இரண்டு முதல் நான்கு ஆண்டுகளாக குறைக்கலாம்.
- துவரம் பருப்பானது அடிப்படையில் ஆறு-முதல் ஒன்பது மாதம் வரை வளர்ச்சி காலம் கொண்ட பயிர் ஆகும்.
- அறிவியலாளர்கள் இந்தத் தாவரத்தின் வளர்ச்சிக் காலத்தினை மிக வெற்றிகரமாக கட்டுப்படுத்தி, முன்கூட்டியே பூக்களைப் பூக்கச் செய்தனர்.
- துவரம் பருப்பில் குறைவான சர்க்கரை உயர்த்தல் குறியீட்டினைக் கொண்டுள்ளது.
- மேலும் இதில் தியாமின், ரிபோஃப்ளேவின், நியாசின், வைட்டமின் B-6, ஃபோலேட், வைட்டமின் A, கால்சியம், துத்தநாகம், இரும்பு, மெக்னீசியம் மற்றும் பாஸ்பரஸ் ஆகியவை அதிகமாக உள்ளது.




## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சீரொளிக் கற்றை ஆயுதம் DURGA-2

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது DURGA-2 எனப்படுகின்ற உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதன் சீரொளிக் கற்றை ஆயுதத்தின் அசல் முன் மாதிரியைப் பரிசோதிக்க தயாராகி வருகிறது.
- DURGA என்பது திசை சார்ந்தக் கட்டுப்பாடுகள் அற்ற சீரொளிக் கற்றை சார் ஆயுத அமைப்பு என்பதைக் குறிக்கிறது.
- தற்போதைய தலைமுறை தொழில்நுட்பத்திலான விமான எதிர்ப்பு அல்லது ஏவுகணை எதிர்ப்பு ஆயுத அமைப்புகள் பிழையுறாத் தன்மை கொண்டதாக கருதப் படவில்லை.
- ஆனால் சீரொளிக் கற்றை சார் ஆயுதம் ஆனது 100 சதவிகிதம் அழிப்பு வாய்ப்பினைக் கொண்டிருப்பதாக கருதப் படுகிறது.




## Assert AI நிறுவனம் - ப்ரதம்

- Assert AI நிறுவனமானது, கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவை பொதுப் பயனாக்குவதற்காக, அதன் புதுமையான அணுகுமுறைக்கு காப்புரிமை பெற்ற ப்ரதம் என்ற புதிய தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பயனர்கள், நிரலாக்கம் அல்லது செயற்கை நுண்ணறிவு நிபுணத்துவம் ஆகியவற்றின் அவசியமின்றி Vision AI தொழில்நுட்பத்தின் திறனைப் பயன்படுத்த முடியும்.
- ப்ரதம் என்பது இந்தி மொழியில் "முதல்" என்று பொருள்படுகிறது.
- இது கணினி அறிவியலின் ஆற்றலை நேரடியாக பயனர்களைச் சென்றடையச் செய்து, ஒளிப்படத் தரவுகளை சிரமமின்றிப் பகுப்பாய்வு செய்து பயன்படுத்த அனுமதிக்கின்ற ஒரு புதுமையான கட்டமைப்பைப் பயன்படுத்துகிறது.

## பாசிட்ரோனியத்தினை சீரொளிக் கற்றை மூலமாக குளிரூட்டல்

- முதன்முதலில், இயற்பியலாளர் கூட்டமைப்பின் ஒரு சர்வதேசக் குழுவானது பாசிட்ரோனியத்தினை சீரொளிக் கற்றை மூலமாக குளிரூட்டல் செயல்முறையினை செயல் விளக்கிக் காட்டியதன் மூலம் ஒரு திருப்புமுனையை அடைந்துள்ளது.
- இந்த உருவாக்கமானது இந்த அசாதாரணமான, ஆனால் எளிமையான பருப்பொருள்-எதிர் பருப்பொருள் கட்டமைப்பின் பண்புகள் மற்றும் ஈர்ப்பு செயல்பாடுகள் ஆகியவற்றின் அதி துல்லியமான அளவீடுகளை மதிப்பிட வழி வகுக்கும்.
- ஒன்றிணைந்த எலக்ட்ரான் (e-) மற்றும் பாசிட்ரான் (e+) ஆகியவற்றை உள்ளடக்கிய பாசிட்ரோனியம் ஒரு அடிப்படை அணு அமைப்பு ஆகும்.
- மிகக் குறுகிய ஆயுட்காலம் கொண்டுள்ளதன் காரணமாக, அது சுமார் 142 நானோ வினாடிகள் என்ற அரை- வாழ்வு காலத்துடன் அழிகிறது.
- எலெக்ட்ரான் நிறையில் இருமடங்கு நிறையைக் கொண்டுள்ள இது ஒரு தூய லெப்டோனிக் அணு என்ற தனித்துவமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது.
- உயர் ஆற்றல் நிலை மாற்றத்திற்கான பாதியளவு அதிர்வெண்களுடன் கூடிய, ஹைட்ரஜன் அணுவை ஒத்த இந்த அணு அமைப்பு ஆனது, சீரொளிக் கற்றை மூலமாக குளிரூட்டல் செயல்பாடுகளை மேற்கொள்ள முயற்சிப்பதற்கான ஒரு சிறந்த மாற்று அமைப்பாக அமைகிறது.
- ஜெனீவாவில் உள்ள CERN எனப் பிரபலமாக அறியப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி அமைப்பில் இது பரிசோதனை செய்யப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட வெள்ளை காண்டாமிருகம்

- ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட காண்டாமிருகக் கருவை மாற்றுத் தாய் முறையில் மற்றொரு காண்டாமிருகத்திற்கு மாற்றியதன் மூலம் முதல் முறையாக ஒரு காண்டாமிருகம் கர்ப்பம் தரித்திருப்பதாக அறிவியலாளர்கள் அறிவித்துள்ளனர்.
- 2009 ஆம் ஆண்டில், நான்கு வடக்கு வெள்ளை காண்டாமிருகங்கள் செக் குடியரசில் உள்ள உயிரியல் பூங்காவில் இருந்து கென்யாவில் உள்ள ஒரு வளங்காப்பு மையத்திற்கு கொண்டு வரப்பட்டன.
- 2018 ஆம் ஆண்டில், கடைசியாக எஞ்சியிருந்த ஆண் காண்டாமிருகத்தின் மரணம் ஆனது வடக்கு வெள்ளை காண்டாமிருகத்தின் அழிவிற்கு வழிவகுத்தது.
- செயற்கை முறை கருத்தரித்தல் அல்லது குருத்தணு தொழில்நுட்பங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், இந்த இனங்கள் அழிந்து நீண்ட காலத்திற்குப் பிறகு வடக்கு வெள்ளை காண்டாமிருகக் குட்டிகளை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையினை வழங்கியுள்ளன.
- ஆப்பிரிக்காவில் சராசரியாக ஒவ்வொரு 16 மணி நேரத்திற்கும் ஒரு காண்டாமிருகம் வேட்டையாடப்படுகிறது.
- தெற்கு வெள்ளை காண்டாமிருகங்கள் மிகப்பெரிய காண்டாமிருக இனமாக இருந்தாலும், ஆப்பிரிக்காவில் 7,000 ஆக உள்ள கருப்பு காண்டாமிருகங்களை விடக் குறைவாகவே உள்ளன.
- ஆசியாவில் 4,000 ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் மட்டுமே உள்ளன.
- ஜாவா மற்றும் சுமத்ரா காண்டாமிருகங்கள் ஆகிய மற்ற இரண்டு காண்டாமிருக இனங்களின் எண்ணிக்கை தலா 100க்கும் குறைவாகவே உள்ளது.



## இந்தியாவில் சிறிய தவிட்டுப் புறா



- சிறிய தவிட்டுப் புறா ஆனது, வட அமெரிக்காவிலிருந்து வலசை போகும் பறவை ஆகும்.
- இது நாட்டிலேயே முதன்முறையாக கேரளாவின் காசர்கோடு மாவட்டத்தில் உள்ள சித்தேரி கழிமுகத்தில் தென்பட்டுள்ளது.
- இது பழுப்பு-தலை கடற்காக்கையை விட சிறியதாக இருந்தது.
- இந்த கண்டுபிடிப்பு ஆனது இந்தியாவில் காணப்படும் இந்தப் பறவை இனங்களின் மொத்த எண்ணிக்கையை 1,367 ஆக உயர்த்துகிறது.
- மாநிலத்தில் 554 ஆக உள்ள மொத்த பறவை இனங்களில், காசர்கோடு மாவட்டத்தில் மட்டும் 400 இனங்கள் உள்ளன.

## இந்தியாவின் புதிய ராம்சர் சதுப்பு நிலங்கள்

- ராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களின் உலகளாவியப் பட்டியலில் மேலும் ஐந்து இந்தியச் சதுப்பு நிலங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.
- இது நாட்டிலுள்ள இத்தகைய உயரிய அங்கீகாரத்தினைப் பெற்ற நீர்நிலை சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளின் மொத்த எண்ணிக்கையை 80 ஆக உயர்த்தியுள்ளது.

- ராம்சர் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஐந்து சதுப்புநிலங்கள்,
  - மகடி கெரே வளங்காப்பகம் - கர்நாடகா
  - அங்கசமுத்ரா பறவைகள் வளங்காப்பு சரணாலயம் - கர்நாடகா
  - அகநாசினி கழிமுகம் - கர்நாடகா
  - கரைவெட்டி பறவைகள் சரணாலயம் - தமிழ்நாடு
  - லாங்வுட் சோலை காப்புக் காடு - தமிழ்நாடு.
- இந்த 2 புதியத் தளங்களுடன், நாட்டிலேயே மிக உயர்ந்த அதிக 16 ராம்சர் தளங்களுடன் தமிழ்நாடு தனது நிலையை முன்னிலைப்படுத்தியுள்ளது.
- ராம்சர் உடன்படிக்கை என்பது சதுப்பு நிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்மிகு முறையில் பயன்படுத்துவதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதியன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தான காஸ்பியன் கடலோரம் உள்ள ராம்சர் எனும் ஈரானிய நகரத்தின் பெயரால் இதற்கு இப்பெயர் இடப்பட்டது.




## காசிரங்காவில் இரண்டு புதிய பாலூட்டி இனங்கள்

- அசாம் மாநிலத்தில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங் காப்பகத்தில் (KNPTR) கரடிப் பூனை மற்றும் சிறிய நகங்கள் கொண்ட காட்டு நீர்நாய் ஆகிய இரண்டு புதிய பாலூட்டி இனங்கள் தென்பட்டுள்ளன.
- இந்தியாவின் மிகப் பெரிய புனுகுப் பூனை இனமான பிந்துரோங், வலசை போகும் பறவைகளின் கணக்கெடுப்பின் போது தென்பட்டது.
- சிறிய நகம் கொண்ட காட்டு நீர்நாய் ஆனது உலகின் மிகச்சிறிய நீர்நாய் இனமாகும்.

- இந்தப் பாலூட்டி இனமானது இந்தியா வழியாக கிழக்கு நோக்கி தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்கு சீனா வரையான பரவலான நிலப்பரப்புகளில் காணப்படுகிறது.
- இந்தியாவில், மேற்கு வங்காளம், அசாம், அருணாச்சலப் பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கேரளாவின் சில பகுதிகளின் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் இது பெரும்பாலும் காணப்படுகிறது.
- இந்தப் பூங்காவில் தற்போது 37 பாலூட்டி இனங்கள் உள்ளதோடு இது அந்தப் பூங்காவின் பல்லுயிர் பெருக்கத்தையும் மேம்படுத்துகிறது.




## புதிய கங்காரு பல்லி



- ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய வகை சிறிய பல்லி இனத்தினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது "மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள சிறிய டிராகன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- அகஸ்தியாகம எட்ஜ் அல்லது வடக்கு கங்காரு பல்லி என்பது அகமிடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- இது இலண்டனின் விலங்கியல் சங்கத்தின் பரிணாம அடிப்படையில் தனித்துவமான மற்றும் உலகளவில் அருகி வரும் விலங்கினங்கள் (EDGE) திட்டத்தின் பெயரால் பெயரிடப் பட்டது.
- இது A. பெட்டோமி அல்லது இந்திய கங்காரு பல்லி இனத்திற்குப் பிறகு அகஸ்தியாகமா இனத்தில் உள்ள இரண்டாவது இனமாகும்.
- A. பெட்டோமி முன்னதாக தமிழ்நாட்டின் சிவகிரி மலைகளில் தென்பட்டதாக பதிவாகி உள்ளது.


## இரண்டு புதிய விலாங்கு மீன் இனங்கள்

- இராமநாதபுரத்தில் உள்ள மன்னார் வளைகுடா மற்றும் கேரளாவின் கொச்சி கடற்கரையில் இருந்து தலா ஒரு புதிய விலாங்கு மீன் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த காங்கிரிட் விலாங்கு மீன் இனங்கள் என்பவை அரியோசோமா பேரினத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- மன்னார் வளைகுடாவில் இருந்து கண்டறியப்பட்ட இந்த இனங்களுக்கு 'அரியோ சோமா கன்னணி' என்று பெயரிடப் பட்டுள்ளது.
- கேரளக் கடற்கரையிலிருந்து கண்டறியப்பட்ட இனங்களுக்கு, அதன் உருவவியல் தன்மைகளுக்கு ஏற்ப 'அரியோசோமா கிரேசில்' என்று பெயரிடப்பட்டுள்ளன.
- இந்தப் புதியக் கண்டுபிடிப்புடன், தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து ஆறு விலாங்கு மீன் இனங்களையும், கேரளாவில் இருந்து 12 விலாங்கு மீன் இனங்களையும் கண்டறிந்ததற்கான பெருமை தேசிய மீன் மரபணு வள வாரியத்தினை சேர்ந்துள்ளது.




## இந்தியாவில் உள்ள பனிச் சிறுத்தைகளின் நிலை குறித்த அறிக்கை

- சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேசிய பனிச் சிறுத்தைகள் கணக்கெடுப்பு ஆனது இந்தியாவில் 718 பனிச் சிறுத்தைகள் இருப்பதாக கண்டறிந்துள்ளது.
- தற்போது உலகில் உள்ள மொத்த பனிச்சிறுத்தைகளில், இந்தியாவில் சுமார் 10-15% பனிச் சிறுத்தைகள் காணப்படுகின்றன.
- இது குறித்த முந்தைய மதிப்பீடுகள் ஆனது, இந்தியாவில் 400 முதல் 700 வரையிலான பனிச் சிறுத்தைகள் இருந்ததாக கூறுகின்றன.
- வெவ்வேறு மாநிலங்களில் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கைகள் பின்வருமாறு: லடாக் 477, உத்தரகாண்ட் 124, இமாச்சலப் பிரதேசம் 51, அருணாச்சலப் பிரதேசம் 36, சிக்கிம் 21, மற்றும் ஜம்மு காஷ்மீர் 9 ஆகியனவாகும்.
- IUCN அமைப்பானது பனிச் சிறுத்தைகளை எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனங்கள் என்ற பிரிவின் கீழ் வகைப்படுத்தியுள்ளது.




## காவிரி வடக்கு வனவிலங்குச் சரணாலயத்தில் புலிகள்

- ஓசூர் காவிரி வடக்கு வனவிலங்குச் சரணாலயத்தில் உள்ள ஜவளகிரி மலைத் தொடரின் காப்புக்காடுகளில் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஒளிப்படக் கருவியில் இரண்டு புலிகள் பதிவாகியுள்ளன.
- ஜவளகிரி மலைத்தொடர் ஆனது சமீபத்தில் அறிவிக்கப்பட்ட காவிரி தெற்கு வன விலங்குச் சரணாலயத்திற்கு அருகில் உள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் இணையும் இடத்தில் அமைந்துள்ள மேலகிரி மலைத் தொடரின் வனவிலங்கு வழித் தடத்தின் வரம்பிற்குள் இந்தச் சரணாலயம் வருகிறது.
- கர்நாடகாவின் பனேர்கட்டா தேசியப் பூங்கா மற்றும் அதன் அருகிலுள்ள பாதுகாக்கப் பட்ட பகுதிகளில் காணப்படும் அதிகபட்சப் புலிகளுக்கு வாழ்விடமாக விளங்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இங்கு உள்ளன.




## சைப்ரஸுக்கு அருகில் நீருக்கடியில் அமைந்த பள்ளத்தாக்கு

- சைப்ரஸ் அருகே இதுவரை அறிந்திராத நீருக்கடியில் அமைந்துள்ள பள்ளத்தாக்கு ஒன்றினை இஸ்ரேலிய அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பள்ளத்தாக்கு, அதன் அருகில் அமைந்த நீரடி மலையின் பெயரால் எரடோஸ்தீனஸ் என்று அழைக்கப்படுகிறது.
- இது சுமார் 5.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த மெசினியன் உவர்தன்மை அதிகரிப்பு நிகழ்வின் போது தோன்றியது.
- இந்தப் பள்ளத்தாக்கு சுமார் 10 கிமீ அகலமும் 500 மீ ஆழமும் கொண்டது என்பதோடு இது உப்புப் படிவுகள் படிவதற்கு முன்னதாக மெசினியன் காலத்தின் தொடக்கத்தில் புதையுண்டது.
- மெசினியன் காலத்தில் மத்தியத் தரைக் கடல் மட்டம் குறைந்ததால், கடல் நீரின் உப்புத்தன்மை அதிகரித்ததன் காரணமாக, எரடோஸ்தீனஸ் பள்ளத்தாக்கு உருவாகச் செய்தது.





## நகோயா நெறிமுறை - கேமரூன்

- மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள கேமரூன் நாடு ஆனது தற்போது அணுகல் மற்றும் பயன் பகிர்வுக்கான நகோயா நெறிமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இது மரபணு வளங்கள் மற்றும் பாரம்பரியத் தகவல்களைப் பயன்படுத்துவதன் பலன்கள் நியாயமான மற்றும் சமமான முறையில் பகிர்ந்து கொள்ளப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும்.
- நகோயா நெறிமுறை என்பது பல்லுயிர்ப் பெருக்கத்தின் அணுகலில் நியாயமான மற்றும் சமமான பலன் பகிர்வைப் பூர்த்தி செய்கின்ற உயிரியல் பன்முகத்தன்மை மீதான உடன்படிக்கையின் ஒரு பகுதியாகும்.
- ஒரு பல்லுயிர்ப்பெருக்கம் நிறைந்த பகுதியாக உள்ள கேமரூன் நாடானது, இங்கு 11,000 தாவரங்கள், விலங்குகள் மற்றும் நுண்ணுயிர்கள் இனங்கள் உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- நகோயா நெறிமுறையானது ஜப்பானின் நகோயா நகரில் உயிரியல் பன்முகத் தன்மை மீதான உடன்படிக்கையின் மூலம் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டு, 2014 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.




## அண்டார்டிக் ஆய்விற்கான குயின்லிங் நிலையம்




- ❖ அண்டார்டிக் பகுதியில் உள்ள சீனாவின் ஐந்தாவது அறிவியல் முகாமிற்கு குயின்லிங் நிலையம் என்று அதிகாரப் பூர்வமாகப் பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இது அண்டார்டிகாவில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது சீன ஆராய்ச்சி தளம் மற்றும் இது ஆண்டு முழுவதும் செயல்படும்.
- ❖ சீன நாடானது 1985 முதல் 2014 வரை அண்டார்டிக் பகுதியில் ஏற்கனவே சோங்ஷான், டைஷான், குன்லுன் மற்றும் கிரேட் வால் எனப்படும் நான்கு ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றைக் கட்டமைத்துள்ளது.


## GRI பல்லுயிர்ப் பெருக்கத் தரநிலை

- ❖ உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு பல்லுயிர்ப் பெருக்கத் தரநிலையானது உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்பு (GRI) அமைப்பினால் உருவாக்கப்பட்டது.

- ஒரு மில்லியனுக்கும் அதிகமான தாவர மற்றும் விலங்கினங்கள் அழிவை நோக்கித் தள்ளப்படுவதால், இயற்கை அமைப்புகள் மோசமான தாக்கங்களை எதிர் கொள்வதால் ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்து கொள்வதே இதன் நோக்கமாகும்.
- இந்தப் புதிய தரநிலைகள் ஆனது, பல்லுயிர்ப்பெருக்கத்தின் மீதான தாக்கங்கள் பற்றியத் தகவல்களுக்காக நிறுவனங்களிடம் பல பங்குதார அமைப்புகளால் முன் வைக்கப் படும் கோரிக்கைகளை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- நிலப்பயன்பாடு, மாசுபாடு, ஊடுருவும் அயல் இனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற பல்லுயிர் இழப்பினை உண்டாக்கும் நேரடிக் காரணிகள் பற்றிய பல்வேறு வெளிப்பாடுகளை இது கோருகிறது.




## இதுவரை இல்லாத வெப்பமிகு 12 மாதங்கள்




- கடந்த 12 மாதங்களில் (பிப்ரவரி 2023-ஜனவரி 2024) உலக சராசரி வெப்பநிலையானது மிக அதிகபட்சமாக பதிவாகி இருந்தது.
- இது 1850-1900 வரையிலான தொழில்துறைக்கு முந்தைய காலத்தில் பதிவான சராசரியை விட 1.52° செல்சியஸ் அதிகமாக உள்ளது.

- 2015 ஆம் ஆண்டில், தொழில்துறைக்கு முந்தைய காலத்தில் இருந்த நிலைகளுடன் (1850-1900) ஒப்பிடும் போது, இந்த சராசரி வெப்பநிலை உயர்வை 2° செல்சியஸ் என்ற வரம்பிற்கு குறைவாகவும், பெரும்பாலும் 1.5° செல்சியஸ் என்ற வரம்பிற்குள் வைத்து இருக்கவும் உலக நாடுகள் பாரீஸ் நகரில் ஒப்புக் கொண்டன.
- இந்த இலக்கை அடைய, உலக நாடுகள் ஒன்றிணைந்து 2030 ஆம் ஆண்டிற்குள் புவியை வெப்பமாக்கும் பசுமை இல்ல வாயுக்களான கார்பன் டை ஆக்சைடு மற்றும் மீத்தேன் போன்றவற்றின் உமிழ்வை 43% வரை குறைக்க வேண்டும்.

## ருமேனியாவில் உள்ள மஹ்முதியா ஈரநிலம்




- உலக வனவிலங்கு நிதியம் (WWF) ஆனது மஹ்முதியா ஈரநிலத்தை 'தேசிய நலன் சார்ந்த சூழலியல் மறுசீரமைப்புப் பகுதி'யாக வகைப்படுத்துமாறு ருமேனிய நாட்டு அரசாங்கத்தினை வலியுறுத்தியுள்ளது.
- அதன் இயற்கை முன்னேற்றத்தைப் பாதுகாத்து சமூகச் செழிப்பை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ருமேனிய தன்யுபு கழிமுகத்திற்குள் இயற்கையாகவே மறு உருவாக்கம் செய்யப்பட்ட ஈரநிலங்களின் குறிப்பிட்ட பகுதி வேளாண் நிலமாக மாற்றப்படுவதற்கான நிலையை எதிர்கொள்கின்றன.

- 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், தன்யுபு ஆற்றின் உயர் ஓதமானது, மஹ்முடியாவில் ஒரு சதுப்பு நிலத்தைச் சூழ்ந்திருந்த கரையை உடைத்தது.
- அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் ஆனது 1,000 ஹெக்டேர் வேளாண் நிலங்களை மூழ்கடித்து, அவற்றை கழிமுகச் சுற்றுச்சூழல் அமைப்பாக மாற்றியது.

## பருவநிலை மற்றும் பேரழிவுகள் குறித்த தகவல்கள் அறிக்கை

- இடர்-தணிப்பு சேவை வழங்கும் நிறுவனமான Aon PLC ஆனது, 2024 ஆம் ஆண்டு பருவ நிலை மற்றும் பேரழிவுகள் குறித்த தகவல்கள் அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் 380 பில்லியன் டாலர் மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்திய 398 இயற்கை பேரழிவுகள் ஏற்பட்டன.
- இது 2022 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட 355 பில்லியன் பொருளாதார இழப்பை விட அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 66 இயற்கைப் பேரழிவுகளில் 95 சதவீதப் பேரிடர்கள் வானிலை தொடர்பான பல காரணிகளால் ஏற்பட்டவை என்பதால் இதன் விளைவாக சுமார் 1 பில்லியன் டாலர் மதிப்பிலான சேதம் ஏற்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில் வானிலை மற்றும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புகளில் 40 சதவிகித இழப்புகளுக்கு மட்டுமே காப்பீடு செய்யப்பட்டது.
- ஏற்பட்ட மொத்த சேதங்களில் 118 பில்லியன் டாலர் அல்லது 31 சதவீதம் மட்டுமே காப்பீடு செலுத்தப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டில் வெள்ளப் பாதிப்பு இழப்புகளில் பெரும்பாலானவை தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலையில் அந்த நாடுகளில் காப்பீட்டு வழங்கீட்டு வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது.
- பருவகால வெள்ளப் பாதிப்பு ஆனது சுமார் 300 மில்லியன் டாலர் பொருளாதார இழப்பை ஏற்படுத்திய இந்திய நாடுகளும் இதில் அடங்கும்.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 2,653 பேர் கொல்லப் பட்டனர்.

| Region | Per cent of global economic loss in 2023 | Per cent of global insured loss in 2023 | Per cent of protection gap |
|---|---|---|---|
| US | 30 | 67 | 30 (gap in 2023 decreased from 21st century average of 47 per cent) |
| Americas (non-US) | 12 | 5 | 87 (gap in 2023 above 21st-century average of 85 per cent) |
| Europe, Middle East and Africa | 41 | 23 | 85 (gap in 2023 was above the 21st century average of 71 per cent) |
| Asia and Pacific | 17 | 5 | 91 (gap in 2023 was above the 21st-century average of 90 per cent) |

## தூத்துமக் கொத்தான் களைச்செடி


- ஒரு வேற்றிட வகை களைச்செடியானது, செங்கல்பட்டு காடுகளையும் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தையும் மெதுவாக சூழ்ந்து வருகின்றது.
- இது உள்நாட்டுத் தாவரங்கள், சூழலியல் மற்றும் வலசை போகும் பறவைகளின் வாழ்விடம் ஆகியவற்றிற்கு அச்சுறுத்துலாக உள்ளது.
- கஸ்க்யுட்டா டாடர் எனப்படுகின்ற இந்த வேர்கள் இல்லாத ஒட்டுண்ணிக் கொடி வகையானது வட அமெரிக்காவினை தாயகமாகக் கொண்டது.
- டாடர் இனத்தினை 25 நாடுகளில் உள்ள சட்டங்கள் ஆனது, விதைகள் மற்றும் தாவரப் பொருட்களுடன் கலப்பதற்கு மறுக்கப்பட்ட 'அறிவிக்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் களைச்செடி' என்று பட்டியலிட்டுள்ளது.
- அமெரிக்காவில், எல்லா மாகாணத்திலும் பயன்பாட்டிற்குத் தடை செய்யப்பட்ட ஒரே களை விதை இதுவாகும்.

## குப்தேஸ்வர் காடு

- ஒடிசாவின் கோராபுட் மாவட்டத்தில் உள்ள குப்தேஸ்வர் காடு, மாநிலத்தின் நான்காவது பல்லுயிர்-பாரம்பரிய தளமாக (BHS) அறிவிக்கப்பட்டுள்ளது.
- இத்தளம் ஆனது 350 ஹெக்டேர் பரப்பளவிலான வரையறுக்கப்பட்ட பகுதியில் பரவி உள்ளது.
- பாரம்பரியமாக உள்ளூர் சமூகத்தினரால் வணங்கப்படும் அதன் புனித பகுதிகளைக் கொண்டுள்ளது.
- குப்தேஸ்வரில் அமைந்த சுண்ணாம்புக் குகைகளில் தெற்கு ஒடிசாவில் காணப்படும் மொத்த 16 வகை வௌவால் இனங்களில் எட்டு வகை வௌவால்கள் இங்கு காணப் படுகின்றன.



## தெராய் வளைவரை நிலப்பரப்பு




- நேபாளத்தின் தெராய் வளைவரை நிலப்பரப்பு (TAL) முன்னெடுப்பு ஆனது, ஏழு உலக மறுசீரமைப்பு முதன்மைத் திட்டங்களில் ஒன்றாக ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- 2004 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த முன்னெடுப்பானது சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதையும் புலிகளுக்கான ஒரு வாழிடத்தினை உருவாக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டது.
- இந்த முன்னெடுப்பு ஆனது 66,800 ஹெக்டேர் (165,000 ஏக்கர்) பரப்பிலான காடுகளை மீட்டெடுத்து, பிராந்தியத்தில் வங்காளப் புலிகளின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரித்தது.

## தவளையின் உடலின் மீது வளரும் காளான்



- இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் காணப்படும் ஒரு தவளையின் உடலின் பக்கவாட்டில் வளரும் காளான் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஓர் உயிரியில் இருந்து காளான் வளர்வதைக் கண்டறிவது இதுவே முதல் முறையாகும்.
- இது கர்நாடகாவின் கர்காலாவின் மாலாவில் உள்ள குத்ரேமுகா மலைத்தொடரின் அடிவாரத்தில் உள்ள மழைநீர் தேங்கும் குளத்தில் "ராவ் தங்க முதுகு தவளைகளில்" இது வளர்வது கண்டறியப்பட்டது.
- இந்த காளான் வகையானது (சிப்பி) போனட் காளான் என அடையாளம் காணப்பட்டது. இது பொதுவாக பட்டுப்போன மற்றும் சிதையும் மரங்களில் வளரும்.

- ஒட்டுண்ணிகள் வகையிலான, "கருப்பு பூஞ்சை" என்று அழைக்கப்படும் மியூகோர்மைகோசிஸ் போன்ற தொற்றுநோய்களை ஏற்படுத்தக் கூடிய சில வகைகளும் உள்ளன.

## கேழல்மூக்கன் தவளை

- தமிழ்நாடு அருகி வரும் உயிரினங்கள் வளங்காப்பு நிதியின் கீழ், உப்பிய உடல், கூர்மையான மூக்கு மற்றும் தடிமனான மூட்டுகள் கொண்ட ஒரு அரிய தவளை இனமானது பாதுகாக்கப்பட உள்ளது.
- தமிழ்நாடு மாநிலத்தில் நாசிக்காபாட்ராக்கசு சஹ்யாட்ரென்சிஸ் மற்றும் நாசிக்கா பாட்ராக்கசு பூபதி என்ற இரண்டு வகையான ஊதா தவளை இனங்கள் (கேழல் மூக்கன்) காணப்படுகின்றன.
- இது டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்ததாக நம்பப் படுகிறது.
- செய்ஷெல்ஸ் நாட்டில் உள்ள தவளைகளின் சூக்லோசிடே குடும்பத்துடன் இது ஒன்றி இருப்பதால், இந்த ஊதா தவளை பெரும்பாலும் 'உயிர் வாழும் புதைபடிவம்' என்று அழைக்கப்படுகிறது.
- இது கோண்ட்வானா நிலப்பரப்பு கருதுகோளுக்கு ஆதாரமாக அமைகிறது.
- இந்த இருவாழ்வி இனம் ஆனது ஆரம்ப கட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் 2004 ஆம் ஆண்டில் IUCN அமைப்பின் செந்நிற பட்டியலில் 'அருகி வரும்' இனங்கள் பிரிவில் இருந்தது.
- இது 2020 ஆம் ஆண்டில் 'அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்' என்ற பிரிவிற்கு மாற்றப் பட்டது.



## STAR மதிப்பீட்டு முறை

- சர்வதேச இயற்கை வளங்காப்பு ஒன்றியம் (IUCN) ஆனது இனங்களின் அச்சுறுத்தல் குறைப்பு மற்றும் மறுசீரமைப்பு (STAR) மதிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது பெருங்கடல்களில் உள்ள பல்லுயிர் இழப்பைத் தடுக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது முதன்முதலில் 2021 ஆம் ஆண்டில் நிலப்பரப்பு பகுதிகளில் பயன்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

- STAR, உலகளாவிய பல்லுயிர்ப் பெருக்கம் சார்ந்த இலக்குகளை நோக்கிய ஒரு முக்கிய முன்னேற்றத்தை அளவிட உதவுகிறது என்பதோடு வளங்காப்பு முயற்சிகளில் அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் அமைப்புகளின் மீது முடிவெடுத்தல் என்ற நடவடிக்கையில் ஆதரவளிக்கிறது.





## பச்சை அனகோண்டாவின் இரண்டு புதிய இனங்கள்

- பூமியில் உள்ள மிகப்பெரிய மற்றும் அதிக எடை கொண்ட பாம்பு இனமான பச்சை அனகோண்டாவின் (ஆனைக் கொன்றான்) இதுவரையில் அறியப்படாத ஓர் இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பச்சை அனகோண்டா, நீண்ட காலமாக அமேசான் காடுகளில் காணப்படும் மிகவும் வலிமையான மற்றும் மர்மமான விலங்குகளில் ஒன்றாக கருதப்படுகிறது.
- பச்சை அனகோண்டாக்கள் உலகின் கனமான பாம்புகள் மற்றும் நீளமானவையாகும்.
- இவை பெரும்பாலும் தென் அமெரிக்காவில் உள்ள ஆறுகள் மற்றும் ஈரநிலங்களில் காணப் படுகின்றன.
- வரலாற்றில் இதுவரையில், பச்சை அனகோண்டாக்கள் (இராட்சத அனகோண்டாக்கள் என்றும் அழைக்கப் படுகின்றன) உட்பட தற்போது நான்கு அனகோண்டா இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- முதன் முறையாக கண்டறியப்பட்ட யூனெக்டெஸ் முரினஸ் என்ற இனமானது பெரு, பொலிவியா, பிரெஞ்சு கயானா மற்றும் பிரேசில் ஆகிய பல நாடுகளில் காணப் படுகின்றது.
- அவை "தெற்கு பச்சை அனகோண்டா" என்ற பொதுவான பெயர் கொண்டு அறியப் படுகின்றன.
- இரண்டாவது, புதிதாக அடையாளம் காணப்பட்ட இனமானது யூனெக்டெஸ் அகாயிமா அல்லது "வடக்கு பச்சை அனகோண்டா" என்று அறியப்படுகிறது.
- இது ஈக்வெடார், கொலம்பியா, வெனிசுலா, டிரினிடாட், கயானா, சூரினாம் மற்றும் பிரெஞ்சு கயானா ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2023


- 2023 ஆம் ஆண்டிற்கான ஊழல் கண்ணோட்டக் குறியீட்டில் மதிப்பிடப்பட்டுள்ள 180 நாடுகளில் இந்தியா 93வது இடத்தைப் பெற்றுள்ளது.
- ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் அமைப்பின் அறிக்கையின்படி, இந்தியாவின் ஒட்டு மொத்த மதிப்பெண் மாறாமல் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் டென்மார்க் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- பின்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் இதில் முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றன.
- 2023 ஆம் ஆண்டு குறியீட்டில் 11 மதிப்பெண்களுடன் சோமாலியா, வெனிசுலா (13), சிரியா (13), தெற்கு சூடான் (13), மற்றும் ஏமன் (16) கடைசி இடங்களைப் பெற்றன.
- தெற்காசியாவில் மியான்மர் (162), வங்காளதேசம் (149), பாகிஸ்தான் (133), இலங்கை (115) ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு பின்னதாகவே இடம் பெற்றுள்ளன.




## "மின்சாரம் 2024" அறிக்கை

- சர்வதேச எரிசக்தி முகமை ஆனது (IEA), "மின்சாரம் 2024" என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2024 முதல் 2026 ஆம் ஆண்டு வரை சராசரியாக 3.4% என்ற விகிதத்தில் மின்சாரத் தேவை அதிகரிக்க உள்ளதால், மின்சாரத் தேவையில் ஒரு வலுவான உலகளாவிய அதிகரிப்பு பதிவாக உள்ளதாக இந்த அறிக்கை கணித்துள்ளது.
- இந்த மின்சாரத் தேவை அதிகரிப்பில் சீனா, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் முன்னணியில் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில், உலகின் மின்சாரத்தில் சுமார் பாதியளவானது, புதுப்பிக்கத்தக்க மற்றும் அணுசக்தி உள்ளிட்ட குறைந்த மாசு உமிழ்வு கொண்ட மூலங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்தியாவின் வருடாந்திர சராசரி மின்சாரத் தேவை அதிகரிப்பானது 2024-2026 ஆம் ஆண்டு காலத்தில் 6.5% ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தனிநபர் மின்சாரப் பயன்பாடு வேகமாக அதிகரித்து வருகிறது.
- இது முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆப்பிரிக்காவில் தேக்க நிலையில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஐரோப்பிய ஒன்றியத்தில் மின்சாரத் தேவை குறைந்துள்ளது.
- உலகளாவிலான மின்சார உற்பத்தியில் இருந்து வெளிவரும் $CO_2$ உமிழ்வு ஆனது, 2023 ஆம் ஆண்டில் 1% அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் 2 சதவீதத்திற்கும் அதிகமான அளவு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில் மிகவும் தீவிர வானிலை நிகழ்வுகள் ஆனது அமெரிக்காவிலும் இந்தியாவிலும் பெரும் மின் தடைகளை ஏற்படுத்தின.





## டாம்டாம் போக்குவரத்துக் குறியீடு

| Rank by filter | World rank | City | Average travel time per 10 km | Change from 2022 | Congestion level % | Time lost per year at rush hours | Average speed in rush hour |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | Bengaluru India | 28 min 10 s | -1 min | 63 | 132 hours | 18 km/h |
| 2 | 7 | Pune India | 27 min 50 s | + 30 s | 57 | 128 hours | 19 km/h |
| 3 | 44 | New Delhi India | 21 min 40 s | - 30 s | 48 | 81 hours | 24 km/h |
| 4 | 54 | Mumbai India | 21 min 20 s | + 10 s | 43 | 92 hours | 23 km/h |

- பெங்களூரு (6வது) மற்றும் புனே (7வது) ஆகிய இரண்டு இந்திய நகரங்கள், 2023 ஆம் ஆண்டு உலகளவில் போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பத்து நகரங்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள நகரமாக இலண்டன் தொடர்ந்து முன்னணியில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் சிலிக்கான் நகரத்தில் (பெங்களூர் நகரம்) பயணம் செய்வதற்கு 'மிக மோசமான நாள்' ஆக செப்டம்பர் 27 ஆம் தேதி (புதன்கிழமை) குறிப்பிடப் பட்டது.
- இதில் டெல்லி 44வது இடத்தையும், மும்பை 52வது இடத்தையும் பெற்றன.

## உணவு முறை மாற்றத்தின் பொருளாதாரம் அறிக்கை




- உணவு முறை பொருளாதார ஆணையம் ஆனது உணவு முறை மாற்றத்தின் பொருளாதாரம் என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஆண்டிற்கு 500 பில்லியன் டாலர் செலவின மதிப்பீட்டில், தற்போதுள்ள உணவு முறைகளில் ஒரு நிலையான மாற்றம் மேற்கொள்வதற்கான அவசரத் தேவை உள்ளது.
- இந்தச் செலவினமானது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2–0.4 சதவீதத்திற்குச் சமமாகும் என்பதோடு அதனால ஏற்படக்கூடிய பல டிரில்லியன் டாலர் மதிப்பிலான பலன்களுடன் ஒப்பிடுகையில் இது மிகச்சிறியது.
- தற்போதைய உணவு முறைகளின் வருடாந்திர சுற்றுச்சூழல் செலவினம் 3 டிரில்லியன் டாலர் ஆகும் என்பதோடு, மேலும் ஆரோக்கியத்திற்கான கூடுதல் செலவினங்கள் குறைந்தது 11 டிரில்லியன் டாலர் ஆகும்.
- தற்போதைய செலவினப் போக்குகளானது 2050 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பின்மை நிலையானது உலகின் சில பகுதிகளில் மேலும் 121 மில்லியன் குழந்தைகள் உட்பட 640 மில்லியன் மக்களை உயரத்திற்கு ஏற்ற எடையற்ற நிலைக்குத் தள்ளும் என்பதோடு, அதே சமயம் உலகளவில் உடல் பருமன் 70 சதவீதம் அதிகரிக்கும் என்று கூறுகிறது.
- உணவு முறை மாற்றமானது உணவு தொடர்பான நோய்களின் விகிதங்களைக் குறைப்பதன் மூலம் 2020 ஆம் ஆண்டில் மோசமான உணவுப்பழக்கத்தால் ஆண்டிற்கு 12 மில்லியன் ஆகப் பதிவான உயிரிழப்பு எண்ணிக்கையினை 2050 ஆம் ஆண்டில் 7.7 மில்லியனாக குறைக்கக்கூடும்.

## ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2024


| PASSPORT | RANK IN 2024 | ACCESS |
|---|---|---|
| France | 1st | 194 |
| Germany | 1st | 194 |
| Italy | 1st | 194 |
| Japan | 1st | 194 |
| Singapore | 1st | 194 |
| Spain | 1st | 194 |

- பிரான்ஸ் நாட்டின் கடவுச் சீட்டு ஆனது 194 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இன்றி பயணிப்பதற்கான அணுகலை வழங்குவதால் இந்தப் பட்டியலில் பிரான்ஸ் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது.
- இந்தப் பட்டியலில் கடந்த ஆண்டில் 84வது இடத்திலிருந்த இந்தியா ஒரு இடத்தை தவற விட்டு, 85வது இடத்திற்கு நகர்ந்துள்ளது.
- கடந்த ஆண்டு இந்தியக் கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் 60 நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்க முடியும் என்ற நிலையில் இந்த ஆண்டு அந்த எண்ணிக்கையானது 62 ஆக அதிகரித்துள்ளது.
- 194 உலகளாவிய நாடுகளுக்கு நுழைவு இசைவுச் சீட்டு இல்லாமல் பயணிக்க அனுமதிப்பதால் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளும் பிரான்சுடன் முன்னணி இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- பாகிஸ்தான் கடந்த ஆண்டைப் போலவே 106வது இடத்தில் தனது நிலையைத் தக்க வைத்து கொண்டுள்ள அதே நேரத்தில் வங்காள தேசம் 101வது இடத்திலிருந்து 102வது இடத்திற்குச் சரிந்துள்ளது.

## உலக வளங்கள் குறித்த கண்ணோட்ட அறிக்கை

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் உலக வளங்கள் குறித்த கண்ணோட்ட அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உலகளவில் இயற்கை வளங்களின் நுகர்வு ஆனது 2060 ஆம் ஆண்டில் 60 சதவீதம் உயரும் என்பதை இது எடுத்துரைக்கிறது.
- தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல் மற்றும் மக்கள்தொகை வளர்ச்சியின் மீதான காரணமாக, 1970 ஆம் ஆண்டு முதல் இயற்கை வளங்களின் நுகர்வு கிட்டத்தட்ட 400% உயர்ந்துள்ளது.
- பூமியின் இயற்கையான வளங்கள் அகற்றப்படுவது, ஏற்கனவே 60% உலகளாவிய வெப்பம் சார்ந்த தாக்கங்களுக்கு காரணமாக உள்ளது.

- இதில் நிலப் பயன்பாட்டு மாற்றம், 40% காற்று மாசு பாதிப்பு மற்றும் 90%க்கும் அதிகமான உலகளாவிய நீர் நெருக்கடி மற்றும் நிலம் தொடர்பான பல்லுயிர்ப் பெருக்க இழப்பு ஆகியவை அடங்கும்.
- வழக்கமான மகிழுந்துகளை விட மின்சார வாகனங்கள் சுமார் 10 மடங்கு அதிக "முக்கிய மூலப்பொருட்களை" பயன்படுத்துகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ஆந்திர பிரதேசத்தில் சாதிவாரிக் கணக்கெடுப்பு



- ஆந்திரப் பிரதேச அரசானது, மாநிலத்தில் உள்ள அனைத்து சாதியினரையும் கணக்கெடுக்கும் விரிவான சாதிக் கணக்கெடுப்பினைச் சமீபத்தில் தொடங்கியது.
- இந்தக் கணக்கெடுப்பை நடத்துவதற்காக ஒரு சிறப்புத் தொலைபேசிச் செயலியினை அரசாங்கம் வடிவமைத்துள்ளது.
- பீகார் மாநிலத்திர்குப் பிறகு இது போன்ற சாதிவாரிக் கணக்கெடுப்பைத் தொடங்கும் இரண்டாவது மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் திகழ்கிறது.

## 4வது தேசிய சிலிகா பறவை திருவிழா

- ஒடிசா மாநிலத்தின் மங்களஜோதி என்னுமிடத்தில் 4வது தேசிய சிலிகா பறவை என்ற திருவிழா நடைபெற்றது.
- குளிர்காலத்தில் மங்களஜோதிக்கு வருகை தரும் 200 பறவை இனங்களைச் சேர்ந்த 10 லட்சம் பறவைகளை இந்த திருவிழா கொண்டாடுகிறது.
- சிலிகா ஏரி ஆனது பறவைகளுக்கான மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தில் அமைந்துள்ளது.
- மேலும் இது கிழக்குக் கரையோரமாக ஆர்க்டிக் மற்றும் ஆர்க்டிக் பகுதி சார்ந்த பிராந்தியங்களில் இருந்து புலம் பெயரும் பறவைகள் மேற்கொள்ளும் வலசைப் போக்கின் போதும், அவை திரும்பி வரும் போதும் அவற்றிற்கு ஒரு முக்கிய இடை நிறுத்த இடமாகவும் உள்ளது.
- ஆசியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியான சிலிக்காவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள மங்களஜோதி, "ஆசியப் பறவைகளின் சொர்க்கம்" என்று அழைக்கப் படுகிறது.

## சதக் சுரக்யா படை

- இந்தியாவின் இத்தகைய முதல் வகை ‘சதக் சுரக்யா படையின் (SSF) 129 அதிநவீன நுட்பம் கொண்ட வாகனங்களை பஞ்சாப் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1,300 பேர் கொண்ட இந்த சிறப்புப் படையானது போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தச் செய்வதையும், குடிபோதையில் வாகனம் ஓட்டுவதால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்பைக் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் 5,500 கி.மீ. தொலைவு வரையில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் 3,000 உயிர்களைக் காப்பாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- விபத்து அல்லது வாகனம் பழுதடைந்தால் பயணிகளுக்கு மருத்துவ உதவியையும் இது வழங்கும்.

## இந்திய முதியோர் அறிக்கை 2023: ஜம்மு காஷ்மீரின் ஆயுட்காலம்

- இது சர்வதேச மக்கள்தொகை அறிவியல் கல்வி நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தால் இணைந்து தயாரிக்கப்படுகிறது.

- ஜம்மு & காஷ்மீர், முதியோர்களின் வறுமைக்கு எதிராக (வறுமையினைப் போக்கும் நடவடிக்கை) மிகவும் குறிப்பிடத்தக்க நெகிழ்திறன் கொண்ட ஒரு பிராந்தியமாக உருவெடுத்துள்ளது.
- ஜம்மு &காஷ்மீரில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள முதியோர்களின் எண்ணிக்கை வெறும் 4.2 % ஆகும்.
- 60 வயதிற்குப் பின்னதான அதிகபட்ச ஆயுட்காலத்துடன் ஜம்மு காஷ்மீர் தனித்து நிற்கிறது.
- ஆண்களின் ஆயுட்காலம் 20.3 சதவீதமாகவும், பெண்களின் ஆயுட்காலம் 23.0 சதவீதமாகவும் உள்ளதால், இது 2015-19 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான இந்த மக்கள்தொகை குறிகாட்டியில் ஜம்மு காஷ்மீரை முன்னணியில் நிலை நிறுத்துகிறது.





## ஜாதுங் கிராமத்தின் மறுசீரமைப்பு

- "இத்தகைய முதல் வகை" முன்னெடுப்பில், உத்தரகாண்ட் மாநில அரசாங்கம் ஆனது உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள ஜாதுங் கிராமத்தை மீண்டும் கட்டமைத்து அதை மறு சீரமைப்பு செய்வதற்கு முடிவு செய்துள்ளது.
- இது 1962 ஆம் ஆண்டு இந்திய-சீனப் போருக்குப் பிறகு அங்கு தங்கியிருந்த மக்களால் கைவிடப்பட்டது.
- அன்றிலிருந்து இந்தக் கிராமம் ஆனது, இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்துறையின் (ITBP) கட்டுப்பாட்டில் உள்ளது.
- லடாக் போன்ற குளிர்ந்த பாலைவனப் பகுதியான இந்த இடமானது சரியான சாலை இணைப்பைக் கொண்டுள்ளதால், ஒரு சாத்தியமான சுற்றுலாத் தலமாக இது உள்ளது.
- இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,800 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

## மாற்றியமைக்கப்பட்ட PKC-ERCP இணைப்பு திட்டம்

- ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேச மாநில அரசுகளானது மாற்றியமைக்கப்பட்ட பர்பதி-காளிசிந்த்-சம்பால்-ERCP (மாற்றியமைக்கப்பட்ட PKC-ERCP) இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய ஜல் சக்தி அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- நீண்டகாலமாக நிலுவையில் உள்ள PKC நதி இணைப்புத் திட்டத்தினைக் கிழக்கு ராஜஸ்தான் கால்வாய் திட்டத்துடன் ஒருங்கிணைப்பதனை இந்தத் திட்டம் நன்கு வலியுறுத்துகிறது.
- மாற்றியமைக்கப்பட்ட PKC-ERCP என்பது மாநிலங்களுக்கு இடையேயான நதிகளை இணைக்கும் திட்டமாகும்.
- கிழக்கு ராஜஸ்தான் கால்வாய் திட்டம் (ERCP) ஆனது சம்பல் நதிப் படுகையில் உள்ள உள்படுகை நீரை இடம் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது காளிசிந்த், பர்பாதி, மேஜ் மற்றும் சக்கன் துணைப் படுகைகளில் கிடைக்கப் பெறும் பருவமழையின் உபரி நீரைப் பயன்படுத்தி, பனாஸ், கம்பீரி, பென்கங்கா மற்றும் பர்பாதி ஆகிய நீர்ப் பற்றாக்குறை மிக்க துணைப் படுகைகளுக்குத் திருப்பி விடும்.
- இது கிழக்கு ராஜஸ்தானின் 13 மாவட்டங்களுக்குக் குடிநீர் மற்றும் தொழில்துறை சார் பயன்பாட்டிற்கான நீரை வழங்கும்.




## பாட்னா பிரகடனம்

- சமீபத்தில் பீகார் தலைநகரில் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச பயிலரங்கம் நடைபெற்றது.
- இது வன மற்றும் வலசைப் பறவைகளை சட்டவிரோதமாக வேட்டையாடுவதைத் தடுப்பதையும், மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தில் (CAF) உள்ள நாடுகளில் அவற்றின் பாதுகாப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தப் பயிலரங்கில் பீகார் அரசானது, 'பாட்னா பிரகடனத்தை' முன் வைத்தது.
- மத்திய ஆசிய வலசைப் போக்கு வழித்தடத்தில் பயணிக்கும் பறவைகளைப் பாதுகாப்பதற்காக அந்த மாநிலத்தின் செயல் திட்டத்தைப் பற்றி இந்தப் பிரகடனம் கூறுகிறது.
- CAF பிராந்தியத்தில் பறவைகளை சட்டவிரோதமாக வேட்டையாடுதல், கைப்பற்றிச் செல்வது மற்றும் வர்த்தகம் செய்வதைத் தடுப்பதற்கான பல்வேறு உத்திகள் மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## சுபிகா ஓவிய நெருக்கடி – மணிப்பூர்

- சுபிகா ஓவியப் பாணியானது தற்போது எஞ்சியிருக்கும் அதன் ஆறு கையெழுத்துப் பிரதிகள் மூலம் மெய்தேய் சமூகத்தின் கலாச்சார வரலாற்றுடன் நுணுக்கமான விதத்தில் ஒன்றிணைந்துள்ளது.
- அவை சுபிகா, சுபிகா அச்சௌபா, சுபிகா லைஷாபா, சுபிகா சௌடித், சுபிகா செய்தில் மற்றும் தெங்ராகேல் சுபிகா ஆகியனவாகும்.
- துரதிர்ஷ்டவசமாக, இந்தத் தனித்துவமான கலை வடிவம் பற்றிய விழிப்புணர்வு பல ஆண்டுகளாக குறைந்து வருவதால், இது அதன் அழிவுக்கு வழி வகுக்கிறது.
- காட்சிப் படங்கள் மூலம் சித்தரிக்கப்பட்ட சுபிகா லைஷாபா, மெய்தே கலாச்சாரப் பாரம்பரியத்தின் நேரடி மற்றும் உண்மையான தொடர்ச்சியைக் குறிக்கிறது.
- கோடுகள், வடிவமைப்புகள், வடிவங்கள், வண்ணங்கள் மற்றும் பாங்குகள் போன்ற கூறுகளை உள்ளடக்கிய காட்சி மொழியைக் கொண்டுள்ளன.
- இந்தக் கையெழுத்துப் பிரதியில் காணப்படும் காட்சிப் படங்கள் கைவினை காகிதத்தில் வரையப்பட்டுள்ளன.
- இந்தக் கையெழுத்துப் பிரதிகள் கொண்ட பொருட்கள் கைவினை காகிதம் அல்லது மரங்களின் பட்டைகள் ஆகியவற்றில் உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுகின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.




## உத்தரகாண்ட் பொது உரிமையியல் சட்ட மசோதா




- பொது உரிமையியல் சட்ட (UCC) மசோதாவை நிறைவேற்றிய முதல் மாநிலமாக உத்தரகாண்ட் மாறியுள்ளது.
- UCC என்பது திருமணம், விவாகரத்து, பரம்பரைச் சொத்து உரிம மாற்றம் மற்றும் தத்தெடுப்பு மற்றும் பிற தனிப்பட்ட விவகாரங்கள் ஆகியவற்றைக் கையாள்வதில் பல்வேறு மதங்களின் அடிப்படையில் அமையாத, அனைத்து இந்திய குடிமக்களுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான சட்டங்களின் தொகுப்பைக் குறிக்கிறது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் மக்கள்தொகையில் 3 சதவீதத்தைக் கொண்ட பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இந்த மசோதாவிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.
- மூதாதையர் சொத்துக்கும் சுயமாக வாங்கிய சொத்துக்கும் இடையிலான வேறுபாடு இதில் நீக்கப்பட்டுள்ளது.
- உயில் எழுதி வைக்காத வாரிசு தொடர்பான சூழலில், குழந்தைகள், விதவை மற்றும் பெற்றோர் ஆகியோரை உள்ளடக்கிய வகுப்பு-1 வாரிசுகளுக்குச் சொத்துச் சேரும்.
- வகுப்பு-1 வகை வாரிசுகள் இல்லாத பட்சத்தில், உடன்பிறந்தவர்கள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் தாத்தா பாட்டி ஆகியோரை உள்ளடக்கிய வகுப்பு-2 வகை வாரிசுகளுக்குச் சொத்து சேரும்.
- மூதாதையர் சொத்துக்களில் பெண்களுக்கு சம உரிமை, தத்தெடுப்பதில் சம உரிமை, விவாகரத்து போன்றவற்றை இந்த மசோதா கொண்டுள்ளது.
- இருதார மணம் அல்லது பலதார மணம் இந்தச் சட்டத்திற்கு புறம்பானது.
- இது திருமணம் செய்யாமல் இணைந்து வாழும் உறவுகளுக்கான கட்டாயப் பதிவு/சுய அறிவிப்பு, திருமணங்கள் மற்றும் விவாகரத்து ஆகியவற்றின் கட்டாயப் பதிவு ஆகியவற்றினையும் வழங்குகிறது.
- UCC ஆனது முஸ்லிம் பெண்கள் மற்றும் ஆண்களுக்காண குறைந்தபட்சத் திருமண வயதை முறையே 18 மற்றும் 21 ஆக அறிவிக்கிறது.


## கேரளாவின் சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கை




- முதன்முறையாக, கேரள அரசு ஆனது சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கையினை மாநில அரசின் நிதிநிலை அறிக்கையுடனான தனி ஆவணமாக அறிமுகப்படுத்தி உள்ளது.
- இது நிதிநிலை அறிக்கை மற்றும் நிதிக் கொள்கைகளின் சுற்றுச்சூழல் தாக்கங்களை மதிப்பிட்டு, மாநிலத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் சுற்றுச்சூழல் சார்ந்த கருத்துக்களை ஒருங்கிணைக்கிறது.
- ஒன்பது துறைகளில் 81 திட்டங்களையும், சுற்றுச்சூழல் தொடர்பான பகுதிகளில் அவற்றின் நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடுகளையும் இந்த ஆவணம் எடுத்துரைக்கிறது.
- முதல் சுற்றுச்சூழல் சார் நிதிநிலை அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகள் வேளாண்மை, கால்நடைகள், மீன்வளம், காடுகள் மற்றும் வனவிலங்குகள், சுற்றுச்சூழல், நீர் வளங்கள், கூட்டுறவு, மண் ஆய்வு மற்றும் எரிசக்தி துறை ஆகியன ஆகும்.
- இந்தத் துறைகளுக்கான நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடுகளில் சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு தோராயமாக 668.88 கோடி ரூபாய் (2024-25) ஆகும்.

## தடோபா காவால் வளங்காப்பகம்

- தெலுங்கானா மாநில அரசானது, தடோபா-அந்தாரி புலிகள் வளங்காப்பகம் மற்றும் கவால் புலிகள் சரணாலயம் இடையே உள்ள வழித்தடப் பகுதியை வளங்காப்பகமாக அறிவித்துள்ளது.
- தடோபா-அந்திராரி புலிகள் வளங்காப்பகம் ஆனது மகாராஷ்டிராவில் அமைந்து உளது.
- வளங்காப்பு மற்றும் சமூக வளங்காப்பகங்கள் ஆனது, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட மேலும் இரண்டு பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் ஆகும்.
- இந்தச் சட்டத்தின் 36(A) என்ற பிரிவின்படி, மாநில அரசு தனக்குச் சொந்தமான எந்தப் பகுதியையும் வளங்காப்பகமாக அறிவிக்கலாம்.




## தேவி காமாக்யா திவ்ய பரியோஜனா




- தேவி காமாக்யா திவ்ய பரியோஜனா (மா காமாக்யா அணுகல் வழித்தடத்தின்) கட்டமைப்பிற்கான அடிக்கல் நாட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.
- இந்த திட்டம் ஆனது வடகிழக்குப் பிராந்தியத்திற்கான பிரதம மந்திரியின் மேம்பாட்டு முன்னெடுப்பு (PM-DevINE) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- முக்கியத்துவம் வாய்ந்த புனித யாத்திரைத் தளமான காமாக்யா கோவில் அசாம் மாநிலத்தின் கௌகாத்தியில் உள்ள நிலாச்சல் மலையில் அமைந்துள்ளது.

## அசாம் மாநில அரசின் பழம்

- அசாமின் தனித்துவமான எலுமிச்சை வகையான காஜி நெமு (அசாம் எலுமிச்சை), அம்மாநிலப் பழமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது தனது நறுமணம், சுவை மற்றும் ஆரோக்கிய நன்மைகளுக்குப் பெயர் பெற்றது.
- காஜி நெமு ஏற்கனவே புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- வேறு எந்த மாநிலத்திலோ அல்லது நாட்டிலோ விளையாத, மருத்துவ குணங்கள் மற்றும் சிறப்பு நறுமணம் கொண்ட பழங்களில் இதுவும் ஒன்று ஆகும்.
- காஜி நெமு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது என்பதோடு இது மனித உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்கிறது மற்றும் மன அழுத்தத்தை குறைக்கிறது என்பதும் நிரூபிக்கப் பட்டுள்ளது.




## ஹோரி ஹப்பா

- காளைப் பந்தயம் என்பது தீபாவளிக்குப் பிறகு கர்நாடகாவில் ஏற்பாடு செய்யப்படும் ஒரு பிரபலமான போட்டி நிகழ்வாகும்.
- மேலும் இது கர்நாடகாவின் கிராமப்புறங்களில் ஹோரி ஹப்பாவின் ஒரு பகுதியாக நடத்தப் படுகிறது.
- ஹோரி ஹப்பா ஹட்டி ஹப்பா என்றும் அழைக்கப்படுகிறது.
- நன்கு பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் அலங்கரிக்கப்பட்ட இழுவை மாடுகள் மற்றும் காளைகள் பெரும் ஆரவாரமான கூட்டத்தின் வழியாக ஓட விடப்படும்.
- இப்போட்டியில் பங்கு பெறும் மாடுகளில் கொப்பரை, பணம் மற்றும் பல்வேறு பரிசுப் பொருட்கள் கட்டப்பட்டு, மக்கள் அவற்றைப் பிடித்து, அவற்றிடமிருந்து அந்தப் பொருட்களைப் பறிக்க முயற்சிப்பர்.
- ஹோரி ஹப்பா என்பது பெரும்பாலும் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள ஜல்லிக் கட்டுக்கு மிகவும் ஒத்ததாக இருக்கிறது.

## சீர்மிகு கிராமப் பஞ்சாயத்து

- ‘சீர்மிகு கிராமப் பஞ்சாயத்து: கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளை எண்ணிம மயமாக்கும் புரட்சி’ என்ற சோதனை திட்டம் ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- பீகாரில் உள்ள பெகுசராய் மாவட்டம் முழுவதிலும் இருக்கும் அனைத்து கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளிலும் PM-WANI (பிரதமரின் அருகலை சேவை இணைப்பு அணுகல் வலையமைப்பு இடைமுகம்) சேவையை மிகவும் விரிவுபடுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- PM-WANI திட்டத்தின் கீழ் அனைத்து கிராமப் பஞ்சாயத்து அமைப்புகளிலும் அருகலை (WiFi) இணைப்புச் சேவைகளை கொண்ட பீகாரின் முதல் மாவட்டமாக பெகுசராய் மாறியுள்ளது.




## புதிய இரும்புத்தாது இருப்பு

- ராஜஸ்தான் மாநிலத்தின் சுரங்கத் துறையானது கோடா, தாதரோலி, டோடுபுரா மற்றும் கரௌலியின் ஹிண்டன் அருகே உள்ள லிலோட்டி ஆகிய இடங்களில் 840 மில்லியன் டன்களுக்கும் மேலான இரும்புத் தாதுக்கள் இருப்பதைக் கண்டுபிடித்து உள்ளது.
- இரும்புத் தாதுவின் மேக்னடைட் மற்றும் ஹேமடைட் ஆகிய இரண்டும் காணப் படுவதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வு அறிகுறிகள் கண்டறியப் பட்டுள்ளன.
- கரௌலியின் கோடாவில் 462.3 ஹெக்டேர் பரப்பிலும், தாதரோலியில் 754.38 ஹெக்டேர் பரப்பிலும், தொடுபுராவில் 260.71 ஹெக்டேர் பரப்பிலும் மற்றும் லிலோட்டியில் 410.94 ஹெக்டேர் பரப்பிலும் இரும்புத் தாதுப் படிவுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.




## பிர் லச்சித் போர்புகான் சிலை

- அசாமின் ஜோர்ஹாட்டில் உள்ள லாடோய்கர் என்னுமிடத்திற்கு அருகில் உள்ள ஹோலோங்கபார் என்ற இடத்தில் நிறுவப்பட்டுள்ள பிர் லச்சித் போர்புகான் அவர்களின் 125 அடி உயரச் சிலையானது மார்ச் மாதத்தில் திறக்கப்பட உள்ளது.
- முகலாயப் படையெடுப்பை முறியடித்த 1671 ஆம் ஆண்டு சராய்காட் போரில் அவர் ஆற்றியத் தலைமைத்துவத்திற்காக வேண்டி அவர் அறியப்படுகிறார்.
- இந்தச் சிலையானது அசாமிய மக்களின் வீரம் மற்றும் உத்வேகத்தின் அடையாளம் ஆகும்.



## சண்டிகர் மேயர் தேர்தல்

- சண்டிகர் மேயர் தேர்தல் முடிவை உச் சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- இதில் தலைமை தேர்தல் அதிகாரி அனில் மசிஹ், அளிக்கப்பட எட்டு வாக்குகளை வேண்டுமென்றே செல்லாததாக்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

- நீதிமன்றம் ஆனது அரசியலமைப்பின் 142வது சட்டப் பிரிவின் கீழ், "முழுமையான நீதியை" வழங்குவதற்காகவும் தேர்தல் ஜனநாயகத்தின் புனிதத்தைப் பாதுகாப்பதற்காகவும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது.
- மாநகராட்சி அமைப்பு ஐந்தாண்டு பதவிக் காலத்தினைக் கொண்டிருந்தாலும், இங்கு மேயர் ஓராண்டிற்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- இந்த மாநகராட்சி அமைப்பின் பதவிக் காலத்தின் முதல் மற்றும் நான்காம் ஆண்டில் ஒரு பெண் வேட்பாளருக்காக அந்த இடம் ஒதுக்கப்படுகிறது.
- இந்த மாநகராட்சிக்கான தேர்தல் ஆனது கடைசியாக 2021 ஆம் ஆண்டில் நடைபெற்றது.




## புதிய மராட்டியர் இட ஒதுக்கீடு மசோதா




- மராட்டியச் சமூகத்தினருக்கு கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மராட்டியர் இடஒதுக்கீட்டு மசோதாவினை மகாராஷ்டிரச் சட்ட சபை நிறைவேற்றியுள்ளது.
- கடந்தப் பத்தாண்டுகளில் மராட்டியர் இட ஒதுக்கீட்டு மசோதாவானது மூன்றாவது முறையாக அந்த மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- அதன் முந்தைய மசோதாவானது, 2021 ஆம் ஆண்டு மே 05 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டது.
- உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆனது, மராட்டியர் இடஒதுக்கீடு வழங்குவதற்காக, 50 சதவீத இட ஒதுக்கீட்டு வரம்பினை மீறுவதற்கான சரியான காரணங்கள் இல்லாததை எடுத்துரைத்தது.
- மகாராஷ்டிர மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் (MSBCC) மாநில அரசிடம் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவின் மக்கள்தொகையில் 28% பேர் மராட்டியர்கள் என்றும், அவர்கள் பின்தங்கிய நிலையில் "பொது நிலை கடந்தச் சூழ்நிலைகள் மற்றும் அசாதாரண நிலையில்" இருப்பதாகவும் இந்த அறிக்கை கூறியது.
- 50% இட ஒதுக்கீட்டு வரம்பை மீறும் ஒரு முயற்சியை நியாயப்படுத்தும் வகையில், தமிழகத்தில் 69% இடஒதுக்கீடு செய்யப்பட்டது குறித்து இந்த மசோதா எடுத்து உரைத்துள்ளது.
- தமிழ்நாடு மாநிலம் தவிர்த்து, ஹரியானாவில் 67%, பீகாரில் 69%, மேற்கு வங்கத்தில் 55%, குஜராத்தில் 59% இட ஒதுக்கீடுகள் வழங்கப் பட்டுள்ளன.

## சம்மக்கா சாரலம்மா ஜாதரா

- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, தெலுங்கானாவின் முலுகு மாவட்டத்தில் உள்ள மேடார்மில் பிரம்மாண்டமான சம்மக்கா சாரலம்மா ஜாதரா என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடுவதற்காக இந்தியா முழுவதிலும் இருந்து மில்லியன் கணக்கான ஆன்மீக பக்தர்கள் கூடுகிறார்கள்.
- இது நான்கு நாட்கள் வரையில் நீடிக்கும் இந்தியாவின் மிகப்பெரியப் பழங்குடியினர் திருவிழாவாகும்.
- கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார் மற்றும் மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் இருந்து சுமார் 15 மில்லியன் பழங்குடியினர் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்கின்றனர்.
- இந்தப் பழங்குடியினர் விழாவானது மகம் நட்சத்திரப் பௌர்ணமி தினத்தன்று, சம்மக்கா மற்றும் அவரது மகள் சரலம்மா ஆகியோர் தெய்வமாக போற்றப் படுகின்றனர்.
- அவர்கள் காக்கதீய வம்சத்தின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடியதற்காகவும், தங்கள் சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்து தங்கள் பழங்குடியினச் சமூகத்தையும் கலாச்சாரத்தையும் வெகுவாகப் பாதுகாத்ததற்காகவும் நினைவு கூரப் படுகிறார்கள்.

### பருவேட்டாத் திருவிழா




- ஆந்திரப் பிரதேசம், அஹோபிலம் நகரில் உள்ள ஸ்ரீ நரசிம்ம சுவாமி கோவிலில், 'சோதனை வேட்டைத் திருவிழா' என அழைக்கப்படுகின்ற இந்த விழா கொண்டாடப் படுகிறது.
- சாதி வேறுபாடின்றி அனைத்து தரப்பு மக்களும் இந்த விழாவினைக் கொண்டாடுவது இதன் தனிச்சிறப்பு ஆகும்.
- முஸ்லிம்கள் உட்பட பிற மத சமூகங்களைச் சேர்ந்த பக்தர்களும் இதனைக் கொண்டாடுவதால் இது மத நல்லிணக்கத் திருவிழாவாகக் கருதப்படுகிறது.
- இந்தியத் தேசிய கலை மற்றும் கலாச்சார பாரம்பரிய அறக்கட்டளை (INTACH) ஆனது இந்தத் திருவிழாவிற்கு யுனெஸ்கோ சான்றிதழைப் பெறுவதற்கு முயன்று வருகிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### டாக்டர் நித்யா ஆனந்த்

- 'சஹேலி' எனப்படும் இந்தியாவின் முதல் வாய்வழிக் கருத்தடை மாத்திரையினைக் கண்டுபிடித்த டாக்டர் நித்யா ஆனந்த் சமீபத்தில் காலமானார்.
- இவர் 1974 முதல் 1984 ஆம் ஆண்டு வரை மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தின் (CDRI) முன்னாள் இயக்குநராக இருந்தார்.
- இவர் 'சஹேலி' என்று பிரபலமாக அறியப்படும் சென்க்ரோமன் கண்டுபிடிப்பின் பின்னணியில் இருந்தவர் ஆவார்.

- இது உலகின் முதல் மற்றும் ஊக்கமருந்து சாராத, ஹார்மோன் சாராத, வாரத்திற்கு ஒரு முறை எடுக்கக்கூடிய ஒரே வாய்வழி கருத்தடை மாத்திரையாகும்.
- இது 1986 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால் அறிமுகம் செய்யப் பட்டது.
- இன்றும் உலகின் முதல் மற்றும் ஊக்கமருந்து சாராத, ஹார்மோன் சாராத கருத்தடை மாத்திரை இது மட்டுமே ஆகும்.

## ஐக்கியப் பேரரசின் பிளாவட்னிக் விருதுகள்

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மூன்று ஆராய்ச்சியாளர்கள் உட்பட ஒன்பது அறிவியலாளர்களை, அறிவியலை மேம்படுத்தி உலகை மேம்படுத்தும் இளம் அறிவியலாளர்களுக்கான மதிப்புமிக்க விருதைப் பெறுபவர்களாக ஐக்கியப் பேரரசு அறிவித்துள்ளது.
- இளம் அறிவியலாளர்களுக்கான ஐக்கியப் பேரரசின் பிளாவட்னிக் விருதுகள் ஆனது முதன்மை அறிவியல், இயற்பியல் அறிவியல் மற்றும் பொறியியல் மற்றும் வாழ்வியல் அறிவியல் ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சியை கௌரவிக்கும் விதமாக மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகின்றது.
- பேராசிரியர்கள் ராகுல் R. நாயர், மெஹுல் மாலிக் மற்றும் தன்மய் பாரத் உள்ளிட்டவர்களுக்கு இலண்டனில் விருது வழங்கப்பட உள்ளது.

## சூரஜ்குந்த் மேளா 2024

- ஹரியானாவின் சூரஜ்குந்த்தில் நடைபெற்று வரும் 2024 ஆம் ஆண்டு சூரஜ்குந்த் சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சியினை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் தொடங்கி வைத்தார்.
- இந்த 37வது கண்காட்சியானது நாடு முழுவதும் உள்ள கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்க்கிறது.
- இந்த ஆண்டு சூரஜ்குந்த் சர்வதேச கைவினை மேளாவின் பங்குதார நாடாக தான்சானியா நாடும் அதற்கான கருத்துரு (மேளாவில் சிறப்பு கவனம் வழங்கப்படும்) மாநிலமாக குஜராத் மாநிலமும் உள்ளன.

## சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கார்

- 2024 ஆம் ஆண்டிற்கான சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருதிற்கு உத்தரப் பிரதேசத்தின் 60 பாராசூட் ஃபீல்டு மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்த விருதானது பேரிடர் மேலாண்மையில் சிறப்பாகப் பணியாற்றிய அமைப்புகளுக்கு / நபர்களுக்கு மதிப்பளிக்கும் விதமாக மத்திய அரசால் வழங்கப் படுகிறது.
- 60 பாராசூட் ஃபீல்டு மருத்துவமனையானது 1942 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்திய ஆயுதப் படைகளின் ஒரே வான்வழி-மருத்துவ நிறுவனம் இதுவாகும்.
- உலகளாவிய நெருக்கடிகளில் அதன் மகத்தான சேவைக்காக இதை நிறுவனத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.




## அரசியல்/பொது வாழ்வில் நன்னடத்தைக்கான காயிதே மில்லத் விருது

- 2023 ஆம் ஆண்டிற்கான அரசியல் / பொது வாழ்வில் நன்னடத்தைக்கான காயிதே மில்லத் விருதை மூத்தப் பத்திரிகையாளர் N. ராம் மற்றும் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் அபுசலேஹ் ஷெரீப் ஆகியோர் வென்றுள்ளனர்.
- சச்சார் குழு அறிக்கையை தயாரிப்பதில் ஷெரீப் ஆற்றிய பங்கிற்காக வேண்டி இந்த விருதினை அவர் பெற்றுள்ளார்.
- முன்னதாக, தி வயர் மற்றும் கி.வீரமணி ஆகியோருக்கு 2022 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கப்பட்டது.
- இந்த விருது ஆனது, பிரபல தென்னிந்தியத் தலைவரான காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாஹேப்பின் நினைவாக 2015 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- சுதந்திர இந்தியா கட்டமைக்கப்பட்ட காலங்களில், மதராஸ் மாகாணத்தில் எதிர்க் கட்சித் தலைவராக அவர் பெரும் செல்வாக்கைச் செலுத்தினார்.
- அவர் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் (1952-58) பணியாற்றி உள்ளார் என்பதோடு அவர் மூன்று முறை மக்களவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## கிராமி விருதுகள் 2024

- 66வது ஆண்டு கிராமி விருது வழங்கும் விழாவானது (2024) அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது.
- இந்திய இசைக் கலைஞர்களான சங்கர் மகாதேவன் மற்றும் ஜாகிர் ஹுசைனின் கலப்புப் பாடல் இசைக் குழுவான 'சக்தி' 'சிறந்த உலகளாவிய இசைத் தொகுப்பு' என்ற பிரிவில் கிராமி விருதைப் பெற்றுள்ளது.

- ஜாகிர் ஹுசைன் 'பஷ்டோ' மொழியில் தான் வழங்கியப் பங்களிப்பிற்காக 'சிறந்த உலகளாவிய இசை நிகழ்ச்சி' என்ற பிரிவில் கிராமி விருதை பெற்றுள்ளார்.
- முன்னணி கிராமி விருதுகள்
  - ஆண்டின் சிறந்த பாடல் தொகுப்பு - டெய்லர் ஸ்விஃப்ட், மிட்நைட்ஸ்
  - ஆண்டின் சிறந்த பாடல் பதிவு - மைலி சைரஸ், ஃபிளவர்ஸ்
  - ஆண்டின் சிறந்த பாடல் - பில்லி எலிஷ், வாட் ஐ வாஸ் மேட் ஃபார்?
  - சிறந்த புதுமுகக் கலைஞர் - விக்டோரியா மோனெட்
- டெய்லர் ஸ்விஃப்ட், ஆண்டின் சிறந்த பாடல் தொகுப்பிற்கான விருதினை நான்கு முறை வென்ற முதல் கலைஞர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- தென்னாப்பிரிக்கப் பாடகி டைலா சிறந்த ஆப்பிரிக்க இசை நிகழ்ச்சி என்ற முதல் விருதைப் பெற்று வரலாறு படைத்துள்ளார்.

## பாரத் ரங் மஹோத்சவம் 2024

- இந்தியாவின் முதன்மையான நாடகத் திருவிழாவான 25வது பாரத் ரங் மஹோத்சவமானது நாடு முழுவதும் 13 நகரங்களில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- 21 நாட்கள் அளவிலான கலாச்சார நிகழ்வான இதில் 150க்கும் மேற்பட்ட நாடகங்கள், பயிலரங்கங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- இந்த ஆண்டு, 'ரங்தூத்' என்று அழைக்கப்படும் இந்த விழாவின் விளம்பரத் தூதர்கள், நடிகர் பங்கஜ் திரிபாதி மற்றும் நடிகர் பரேஷ் ராவல் ஆகியோர் ஆவர்.
- இதில் நாட்டுப்புற நாடகங்கள், தெரு நாடகங்கள், நவீன நாடகங்கள், வங்காளதேசம், நேபாளம், ரஷ்யா, இத்தாலி ஆகிய நாடுகளின் நாடகங்கள் இடம் பெற உள்ளன.

## ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக் கலைஞர்



- ஒரு சிறிய பனிப்பாறையில் உறங்கும் துருவக் கரடியின் படம் ஆனது 2023 ஆம் ஆண்டின் சிறந்த வனவிலங்குப் புகைப்படக்கலைஞருக்கான பீப்பிள்ஸ் சாய்ஸ் விருதைப் பெற்றுள்ளது.
- இது நார்வேயின் ஸ்வால்பார்ட் தீவுக்கூட்டத்தில் பிரிட்டிஷ் நாட்டினைச் சேர்ந்த நிமா சரிகானி என்பவரால் படம் பிடிக்கப்பட்டது.

- இயற்கை வரலாற்று அருங்காட்சியக அமைப்பானது ஒவ்வோர் ஆண்டும் இந்தப் புகைப்படப் போட்டியை நடத்துகிறது.

## தேசிய திரைப்பட விருதுகள் 2024



- தேசிய திரைப்பட விருதுகளுக்கான முன்னொட்டுப் பெயரில் இருந்து முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் மறைந்த நடிகை நர்கிஸ் தத் ஆகியோரின் பெயர்களை தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் (I&B) நீக்கியுள்ளது.
- 'சிறந்த அறிமுக இயக்குனருக்கான இந்திரா காந்தி விருது' ஆனது, 'சிறந்த அறிமுக இயக்குனருக்கான விருது' என்று அழைக்கப்படும்.
- 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற 28வது தேசிய திரைப்பட விருதுகள் விழாவின் போது இந்திரா அவர்களின் பெயர் இந்த விருதுடன் இணைக்கப் பட்டது.
- தேசிய ஒருமைப்பாடு குறித்த சிறந்தத் திரைப்படத்திற்கான நர்கிஸ் தத் விருது ஆனது தேசிய, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மதிப்புகளை ஊக்குவிக்கும் சிறந்த திரைப் படத்திற்கான விருது' என்று மாற்றப்பட்டுள்ளது.
- நர்கிஸ் அவர்களின் பெயர் ஆனது 1965 ஆம் ஆண்டில் நடைபெற்ற 13வது தேசிய திரைப்பட விருது விழாவில் சிறந்தத் திரைப்படத்திற்கான விருதுடன் இணைக்கப் பட்டது.
- தேசியத் திரைப்பட விருதுகள் ஆனது, முதன்முதலில் 1954 ஆம் ஆண்டில் இந்திய அரசால் வழங்கப்பட்டது.
- இது "தேசிய அளவில் இந்திய கலை மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் இந்தியா முழுவதும் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை கௌரவிப்பதை" நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஞானபீட விருது 2023

- உருது மொழிக் கவிஞரும் பாலிவுட் எழுத்தாளரும் இயக்குனருமான குல்சார் மற்றும் சமஸ்கிருத அறிஞர் ஜகத்குரு இராமபத்ராச்சார்யா ஆகியோர் 2023 ஆம் ஆண்டு ஞானபீட விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- குல்சார் அல்லது சம்பூரன் சிங் கல்ரா அவரது தலைமுறையின் சிறந்த உருது கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படுவதோடு, அவர் இந்தி மொழி திரைத் துறையின் சிறந்த இயக்குனர் மற்றும் எழுத்தாளர் ஆவார்.

- இராமபத்ராச்சார்யா, புகழ்பெற்ற இந்து ஆன்மீகத் தலைவர், கல்வியாளர் மற்றும் நான்கு இதிகாசங்கள் உட்பட 240க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் நூல்களை எழுதியவர் ஆவார்.
- இவர் மத்தியப் பிரதேசத்தில் உள்ள சித்ரகூடில் அமைந்த துளசி பீடத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் ஆவார்.
- 2002 ஆம் ஆண்டில் உருது மொழிக்கான சாகித்ய அகாடமி விருதையும், 2013 ஆம் ஆண்டில் தாதாசாகேப் பால்கே விருதையும், 2004 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் விருதையும் குல்சார் பெற்றுள்ளார்.
- அவர் தனது படைப்பிற்காக குறைந்தது ஐந்து தேசிய திரைப்பட விருதுகளை வென்று உள்ளார்.
- இந்த ஆண்டு விருதானது 1965 ஆம் ஆண்டு முதல் இந்திய இலக்கியத்திற்கான சிறந்த பங்களிப்புகளுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் ஞானபீட விருதின் 58வது பதிப்பு ஆகும்.
- இந்த விருதானது 1944 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பாரதிய ஞானபீட அமைப்பினால் வழங்கப் படுகிறது.

## கஜுராஹோ நடனத் திருவிழா

- 50வது கஜுராஹோ நடனத் திருவிழாவானது, மத்திய பிரதேச மாநிலத்தின் சத்தர்பூர் மாவட்டத்தில் உள்ள கஜுராஹோவில் தொடங்கியது.
- இந்தத் திருவிழாவானது 1975 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது ஒவ்வோர் ஆண்டும், போபால் நகரில் உள்ள உஸ்தாத் அலாவுதீனின் இசை மற்றும் கலைக் கழகத்தின் உதவியுடன் கலாச்சாரத் துறையினால் கஜுராஹோவில் ஏற்பாடு செய்யப்படுகிறது.
- கதக் கும்பமேளா திருவிழாவின் போது, கஜுராஹோ நகரம் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றது.
- 1484 பங்கேற்பாளர்கள், கஜுராஹோவின் பழமையான கோயில்களுக்கு மத்தியில் அமைந்த இடத்தில் ஒரே நேரத்தில் கூடி தங்கள் நடனத் திறமைகளை வெளிப்படுத்தி, நடன நிகழ்ச்சியை நிகழ்த்தினர்.
- இது ஏற்கனவே 1204 பங்கேற்பாளர்களால் நிகழ்த்தப்பட்ட ஒரு முந்தைய சாதனையை முறியடித்தது.

## ஃபாலி S. நரிமன்

- புகழ்பெற்ற சட்ட நிபுணரும், உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞருமான ஃபாலி நரிமன் சமீபத்தில் புது தில்லியில் காலமானார்.
- அவர் 1991 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் மற்றும் 2007 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் விருதுகளைப் பெற்றவர் ஆவார்.
- அவர் 1972 ஆம் ஆண்டில் இந்தியாவின் துணைத் தலைமை வழக்கறிஞராக நியமிக்கப் பட்டார், ஆனால் அவர் 1975 ஆம் ஆண்டில் தனது பதவியினை இராஜினாமா செய்தார்.

- அவர் 1991 முதல் 2010 ஆம் ஆண்டு வரை வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார்.
- அவரது காலத்தில், அவர் மாபெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளின் மூலம் சட்டம் மற்றும் வழக்கறிஞர் தொழிலில் ஓர் அடையாளத்தினைப் பதித்தார்.
    - இரண்டாவது நீதிபதிகள் வழக்கு : உச்ச நீதிமன்றத்தின் பதிவுரு வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் மத்திய அரசு இடையிலான வழக்கு.
    - தேசிய நீதிபதிகள் நியமன ஆணைய வழக்கு
    - பாராளுமன்றத்தினால் அடிப்படை உரிமைகளை ரத்து செய்ய முடியாது: I.C. கோலக் நாத் மற்றும் பஞ்சாப் மாநில அரசு இடையிலான வழக்கு.
    - போபால் விஷவாயு கசிவு துயரச் சம்பவம்: யூனியன் கார்பைடு கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் மத்திய அரசு இடையிலான வழக்கு (1989).
    - அமைச்சர்கள் சபை, முதலமைச்சர் ஆகியோரின் உதவி மற்றும் ஆலோசனையின் படி மட்டுமே ஆளுநர் செயல்பட வேண்டும்: நபம் ரெபியா & பாமாங் பெலிக்ஸ் மற்றும் துணை சபாநாயகர் இடையிலான வழக்கு.
    - காவிரி நதிநீர்ப் பிரச்சினை: கர்நாடகா மாநில அரசு மற்றும் தமிழ்நாடு மாநில அரசு இடையிலான வழக்கு.




## அலெக்ஸி நவல்னி

- ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி, தனது 19 ஆண்டு கால சிறைத் தண்டனையை அனுபவித்து வந்த ஆர்க்டிக் தண்டனைக் சிறையில் மரணமடைந்தார்.
- அவரது ஊழல் எதிர்ப்பு அறக்கட்டளை (FBK) ஆனது அதிகாரம் (அலுவல்) சார்ந்த ஊழல் பற்றி விரிவான அறிக்கைகளை வழங்கியது.
- 2011 ஆம் ஆண்டில், அதிபர் புடினுக்கு எதிரான மிகப் பெரிய போராட்டங்களுக்கு அவர் தலைமை தாங்கினார்.
- 2017 ஆம் ஆண்டில் அவர் பொதுத் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டது.
- அந்த நேரத்தில், ரஷ்ய அதிபருக்கு சவால் ஆக விளங்கிய ஒரே வேட்பாளராக அவர் கருதப் பட்டார்.

## நிதிசார் கல்வியறிவு வாரம் 2024

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 முதல் மார்ச் 01 ஆம் தேதி வரை இத்தினத்தினை அனுசரித்து வருகிறது.
- நிதிசார் செயல்பாடுகளில் பொறுப்புமிக்க வகையில் ஈடுபடுவதற்கும், தகவலறிந்து நிதிசார் முடிவுகளை எடுப்பதற்கும் மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக நிதிக் கல்வி சார் தகவல்களைப் பொதுமக்களிடம் பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டு நிதிசார் கல்வியறிவு வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "சரியான தொடக்கத்தை உருவாக்குதல்: நிதி ரீதியான திறன் கொண்டிருத்தல்" என்பதாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகள் 2024

| Rank | State | Gold | Silver | Bronze | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Maharashtra | 57 | 48 | 53 | 158 |
| 2 | Tamil Nadu | 38 | 21 | 39 | 98 |
| 3 | Haryana | 35 | 22 | 46 | 103 |
| 4 | Delhi | 13 | 18 | 25 | 56 |
| 5 | Rajasthan | 13 | 17 | 17 | 47 |
| 6 | Telangana | 13 | 4 | 7 | 24 |
| 7 | Uttar Pradesh | 11 | 13 | 18 | 42 |
| 8 | Punjab | 11 | 13 | 15 | 39 |
| 9 | Kerala | 11 | 9 | 15 | 35 |
| 10 | Manipur | 10 | 11 | 10 | 31 |

- இந்திய அரசாங்கத்தின் கேலோ இந்தியா திட்டத்தின் கீழான இந்த முதன்மை நிகழ்வின் ஆறாவது போட்டியானது சமீபத்தில் நிறைவடைந்தது.
- தமிழ்நாடு 2024 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளை (KIYG) சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய நான்கு நகரங்களில் நடத்தியது.
- மகாராஷ்டிரா 57 தங்கம், 48 வெள்ளி மற்றும் 53 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றதையடுத்து கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டியின் வாகைப் பட்டத்தை வென்றது.
- இது மகாராஷ்டிராவின் நான்காவது KIYG பட்டமாகும்.
- இந்தப் போட்டியை நடத்திய தமிழ்நாடு மாநிலம் 38 தங்கம், 21 வெள்ளி மற்றும் 39 வெண்கலத்துடன் இரண்டாவது இடத்தைப் பெற்றது.
- இரண்டு KIYG பட்டங்களை வென்றுள்ள ஹரியானா, 35 தங்கம், 22 வெள்ளி மற்றும் 46 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

- தமிழ்நாட்டில் நடைபெற்ற KIYG 2024 போட்டிகளில் நடத்தப்பட்ட மொத்தம் 26 விளையாட்டுகளில் மொத்தம் 926 பதக்கங்கள் - 278 தங்கம், 278 வெள்ளி மற்றும் 370 வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.
- இந்த ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் ஸ்குவாஷ் போட்டி அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் தமிழகத்தினைப் பூர்வீகமாக கொண்ட தற்காப்புக் கலைகளின் ஒரு வடிவமான சிலம்பம், ஒரு செயல்விளக்க விளையாட்டாக அதில் இடம் பெற்றது.
- தெலுங்கானாவைச் சேர்ந்த நீச்சல் வீராங்கனை விருத்தி அகர்வால் ஐந்து தனிநபர் தங்கப் பதக்கங்களை வென்று இதில் முதல் இடத்தினைப் பெற்றார்.

## ஆஸ்திரேலிய ஓபன் போட்டி 2024

- ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜானிக் சின்னர் (இத்தாலி) தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.
- மகளிர் ஒற்றையர் பிரிவில் அரினா சபலெங்கா (பெலாரஸ்) இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.
- ஆடவர் இரட்டையர் பிரிவில் ரோகன் போபண்ணா (இந்தியா) மற்றும் மேத்யூ எப்டன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.
- ரோகன் போபண்ணா, ஆடவர் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்ற அதிக வயதுடைய நபர் (43 வயது) என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மகளிர் இரட்டையர் பிரிவில் ஹெஸி சு-வெய் மற்றும் எலிஸ் மெர்டென்ஸ் ஆகியோர் வென்றனர்.
- ஹெஸி, ஜான் ஜீலின்ஸ்கியுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்றார்.
- சின்னர், 2008 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை இப்போட்டியில் வெற்றி பெற்ற இளம் ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியன் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.

## ISSF உலகக் கோப்பை போட்டி 2024

- எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்ற கலப்பு காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ரிதம் சங்வான் மற்றும் உஜ்வவால் மாலிக் தங்கப் பதக்கம் வென்றனர்.
- ஆடவருக்கான 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் திவ்யான்ஷ் சிங் பன்வார் தங்கப் பதக்கம் வென்றார்.
- மகளிருக்கான 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் சோனம் உத்தம் மஸ்கர் வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கி சுடுதல் போட்டியின் கலப்புப் பிரிவில் அர்ஜுன் பாபுதா/சோனம் உத்தம் மஸ்கர் வெள்ளிப் பதக்கம் வென்றனர்.
- மகளிருக்கான 10 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் அனுராதா தேவி வெள்ளிப் பதக்கத்தினை வென்றார்.
- ஆடவருக்கான 50 மீட்டர் காற்றழுத்தப் பீச்சுக்குழல் துப்பாக்கி சுடுதல் 3 நிலைகளில் அகில் ஷியோரன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

## சிறந்த விளையாட்டு நாயகருக்கான ஏசஸ் விருதுகள் 2024

- இந்தியக் கிரிக்கெட் வீரர் முகமது ஷமி மற்றும் சதுரங்க கிராண்ட் மாஸ்டர் R. வைஷாலி ஆகியோர் முறையே 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (அணி விளையாட்டு)' மற்றும் 'ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை (தனி நபர்)' விருதுகளை வென்றுள்ளனர்.
- அமுல் இன்டர்நேஷனல் ஐகான் விருது ஆனது முத்தையா முரளிதரனுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இதர வெற்றியாளர்கள்
    - ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர் (மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்): சுமித் ஆன்டில்
    - ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை (மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்): துளசிமதி முருகேசன்
    - ஆண்டின் சிறந்த பயிற்சியாளர்: ராகுல் டிராவிட்.
    - ஆண்டின் சிறந்த விளையாட்டு நாயகன் (ஆண்): நீரஜ் சோப்ரா
    - ஆண்டின் சிறந்த விளையாட்டு நாயகி (பெண்): ஷீத்தல் தேவி
    - விளையாட்டு ஊக்குவிப்பில் சிறந்து விளங்கும் மாநிலம்: தமிழ்நாடு
    - விளையாட்டு ஊக்குவிப்பில் சிறந்து விளங்கும் சிறந்தப் பல்கலைக்கழகம்: SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்
    - ஏஸ் ஆஃப் ஏசஸ் விருது: ரோஹன் போபண்ணா.

## கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் 2024

KIUG medal winners

| Rank | University | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Jain University, Karnataka | 8 | 6 | 5 | 19 |
| 2 | Chandigarh University | 6 | 8 | 10 | 24 |
| 3 | Guru Nanak Dev University, Amritsar | 6 | 2 | 2 | 10 |
| 4 | University of Kerala | 5 | 1 | 2 | 8 |
| 5 | Savitribai Phule Pune University | 4 | 6 | 9 | 19 |
| 6 | Adamas University | 4 | 2 | 0 | 6 |
| 7 | Utkal University | 4 | 1 | 1 | 6 |
| 8 | University of Mumbai | 3 | 3 | 5 | 11 |
| 9 | Saveetha Institute of Medical &Technical Sciences | 3 | 0 | 0 | 3 |
| 10 | University of Madras | 2 | 5 | 4 | 11 |

- 200க்கும் மேற்பட்ட இந்தியப் பல்கலைக்கழகங்கள் KIUG 2024 என்ற ஒரு போட்டியில் பங்கேற்கின்றன.

- 20 விளையாட்டுப் போட்டிகளில் 245 தங்கம், 245 வெள்ளி மற்றும் 332 வெண்கலம் உட்பட 822 பதக்கங்களுக்காக சுமார் 4,500 தடகள வீரர்கள் போட்டியிடுகின்றனர்.
- நாகாலாந்து, கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகளின் 4வது பதிப்பை அதன் தலைநகரமான கோஹிமாவில் நடத்துகிறது.
- KIUG போட்டிகள் வடகிழக்கு இந்தியாவில் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இதுவரையில் நடைபெற்ற மூன்று KIUG போட்டிகளில், சண்டிகரின் பஞ்சாப் பல்கலைக் கழகம் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று சாம்பியனாக உள்ளது.
- எஞ்சிய ஒரு பதிப்பில் கர்நாடகாவின் ஜெயின் பல்கலைக்கழகம் வெற்றி பெற்றது.

## உறைந்த ஏரி மீது நடத்தப்படும் மாரத்தான் போட்டி





- 2024 ஆம் ஆண்டு பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான் போட்டியானது லடாக்கின் லே நகரில் நடைபெற்றது.
- போபாலைச் சேர்ந்த பகவான் சிங் மற்றும் மகேஷ் குரானா ஆகியோர், பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான் போட்டியை நிறைவு செய்ததை அடுத்து, இத்தகையப் போட்டியில் வென்ற குறிப்பிட்ட விளையாட்டு வீரர்களின் பட்டியலில் இணைந்து உள்ளனர்.
- லடாக்கின் இரண்டாவது பாங்காங் உறைந்த ஏரி மாரத்தான் போட்டியானது, 'உலகின் மிக உயரமான இடத்தில் அமைந்த உறைந்த ஏரி மாரத்தான்' என்று அழைக்கப் படுகிறது.
- 18,680 அடி உயரத்தில் சுமார் -15 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கும் குறைவான கடுமையான பனிப்பொழிவுகளுக்கு மத்தியில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது.
- பகவான் என்பவர் உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த முதல் மலையேறும் வீரர் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை தினம் - பிப்ரவரி 01

- இந்தியக் கடலோரக் காவல்படையானது 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதியன்று நிறுவப் பட்டது.
- பொருளாதாரத்திற்கு இடையூறு விளைவிக்கும் கடல்வழி சரக்குப் பொருள் கடத்தல் நிகழ்வுகளை தடுப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடற்கரை அண்மைப் பகுதி பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடலோரப் பாதுகாப்பு மற்றும் இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தை (EEZ) பாதுகாப்பது கடலோரக் காவல்படையின் பொறுப்புகளில் அடங்கும்.
- 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று, இந்தியக் கடலோரக் காவல்படை (ICG) தினம் ஆனது பிப்ரவரி 01 ஆம் தேதியன்று கொண்டாடப்படும் என்று பாராளுமன்றம் அறிவித்தது.
- ICG துறையானது உலகின் நான்காவது பெரிய கடலோரக் காவல்படையாக உள்ளது.
- இது பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு கடற்சார் ஆயுதப் படை ஆகும்.





## உலக சதுப்பு நில தினம் - பிப்ரவரி 02

- மனித உயிர்களுக்கும் புவிக்கும் சதுப்பு நிலங்கள் கொண்டுள்ள பெரு முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சதுப்பு நிலங்கள் ஆனது சேற்று நிலங்கள், ஈரமான புல்வெளிகள், சதுப்பு நிலங்கள், பவளப் பாறைகள் மற்றும் அலையாத்தி நிலங்கள் ஆகியவற்றைக் கொண்ட நன்னீர் அல்லது கடல் அல்லது கடலோரப் பகுதிகளாக இருக்கலாம்.

- சதுப்பு நிலங்கள் பூமியின் ஆறு சதவீதப் பகுதியில் மட்டுமே காணப்படுகிறது, ஆனால் நாற்பது சதவீதத்திற்கும் அதிகமான விலங்கு மற்றும் தாவர இனங்கள் சதுப்பு நிலங்களில் வாழ்கின்றன மற்றும் இனப்பெருக்க நடவடிக்கையினை மேற்கொள்ளச் செய்கின்றன.
- ஈரான் நாட்டில் உள்ள ராம்சர் என்ற ஒரு நகரின் பெயரால் பெயரிடப்பட்ட ராம்சர் உடன்படிக்கை, சதுப்பு நிலங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதியன்று கையெழுத்தானது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, ஈரநிலங்களும் மனித நல்வாழ்வும் என்பதாகும்.




## முடக்கு வாதம் விழிப்புணர்வு தினம் - பிப்ரவரி 02




- முடக்கு வாதம் (RA) ஆனது மூட்டுகளில் தொடர் வலியுடன், உடலில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது.
- ஒரு தன்னுடல் எதிர்ப்பாற்றல் தாக்கு நோயான இதில் உடலானது மூட்டுகளின் புறணிகளை வெளிப்புறத் திசுக்கள் என்று கருதி, அவற்றைத் தாக்கி சேதப் படுத்தச் செய்வதால் வீக்கம் மற்றும் வலி ஏற்படுகிறது.

- இந்த நோயைப் பற்றிய உலகளாவியப் புரிதலை அதிகரிக்கும் முயற்சியில் முடக்கு வாத நோயாளிகள் அறக்கட்டளையால் இந்த நாள் நிறுவப்பட்டது.

## உலக சமய நல்லிணக்க வாரம்

- உலக சமய நல்லிணக்க வாரமானது ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் கொண்டாடப் படுகிறது.
- அமைதி மற்றும் புரிதலை மேம்படுத்துவதற்கான உலகளாவிய தளமாக இந்த வாரக் கொண்டாட்டம் திகழ்கிறது.
- வெவ்வேறு சமய நம்பிக்கைகளிடையேயான உரையாடல், மரியாதை மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கான மிக ஒரு சக்தி வாய்ந்த நினைவூட்டலாக இத்தினம் செயல்படுகிறது.

## உலகப் புற்றுநோய் தினம் - பிப்ரவரி 04

- இந்தத் தினமானது புற்றுநோய்ப் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- புற்றுநோய்ச் சிகிச்சை, கண்டறிதல், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சிகிச்சையை மேம்படுத்த முயற்சிக்கும் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் இது உதவுகிறது.
- புற்றுநோய் என்பது கட்டுப்பாடில்லாமல் பகுப்படையும் உயிரணுக்களின் அசாதாரண வளர்ச்சியைக் குறிக்கிறது.
- புற்றுநோய் ஒரு உடல் அங்கம் / உறுப்பு / திசுக்களில் இருந்து மற்றொன்றுக்கு பரவும் திறன் கொண்டது.
- 2020 ஆம் ஆண்டில் உலகளவில் 19.3 மில்லியன் புற்றுநோய்ப் பாதிப்புகள் இருந்தன.
- நுரையீரல் மற்றும் மார்பகப் புற்றுநோய்கள் ஆகியவை முறையே ஆண்கள் மற்றும் பெண்களில் அதிகம் காணப்படும் புற்றுநோய்ப் பாதிப்புகளாக இருந்தன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'மருத்துவ நலச் சேவையில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்தல்: புற்றுநோய்ச் சிகிச்சைக்கான அணுகலைப் பெற அனைவருக்கும் தகுதியுண்டு' என்பதாகும்.

## சர்வதேச மனித சகோதரத்துவத் தினம் - பிப்ரவரி 04

- வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தாக்கத்தின் சிறந்த முக்கியத்துவத்தையும், ஒற்றுமையாக வாழ்வதற்கு மக்கள் ஒன்றுபட வேண்டும் என்பதன் சிறந்த முக்கியத்துவத்தையும் கொண்டாடுவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 ஆம் தேதியன்று, உலக அமைதி மற்றும் ஒன்றுபட்டு வாழ்வதற்கான மனித சகோதரத்துவம் என்ற வரலாற்று ஆவணம் ஆனது அல்-அஸ்ஹரின் கிராண்ட் இமாம் (தலைவர்), அஹ்மத் அல்-தாய்ப் மற்றும் போப் பிரான்சிஸ் ஆகியோரால் கையெழுத்திடப் பட்டது.
- சர்வதேச மனித சகோதரத்துவத் தினம் ஆனது, 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.

## சர்வதேச பெண் பிறப்புறுப்பு சிதைப்பு எதிர்ப்பு தினம் - பிப்ரவரி 06

- 1997 ஆம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் (UNICEF) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் (UNFPA) ஆகியவை இணைந்து பெண் பிறப்புறுப்பு சிதைப்பிற்கு எதிராக ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன.
- 2012 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பெண் பிறப்புறுப்பு சிதைப்பினை ஒழிப்பதற்கான தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- மருத்துவம் சாராத காரணங்களுக்காக மேற்கொள்ளப்படும் இந்த நடைமுறையானது சர்வதேச அளவில் சிறுமிகள் மற்றும் பெண்களின் மனித உரிமைகள், ஆரோக்கியம் மற்றும் சீர்மை மீறலாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, பெண்களின் கருத்து வெளிப்பாடு. பெண்களின் எதிர்காலம் (Her voice. Her future), என்பதாகும்.

## சர்வதேச அரேபிய சிறுத்தை தினம் - பிப்ரவரி 10

- இது சிறுத்தையின் மிகச்சிறிய கிளையினங்களில் ஒன்றாகும்.
- அவை சவூதி அரேபியா, ஓமன், ஏமன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் சிறிய தனித்தமைந்த பகுதிகளில் காணப்படுகின்றன.
- சமீபத்திய மதிப்பீட்டின்படி, 200க்கும் குறைவான சிறுத்தைகளே காடுகளில் எஞ்சி உள்ளன.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மிகவும் அருகி வரும் ஒரு இனமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## தேசியக் குடற்புழு நீக்க நாள் - பிப்ரவரி 10

- தேசியக் குடற்புழு நீக்க தினமானது 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- 1 முதல் 19 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் (பதிவு செய்த மற்றும் பதிவு செய்யப்படாத) குடற்புழு நீக்கம் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் மண் மூலம் பரவும் குடற்புழுக்கள் உட்செல்லக்கூடிய ஆபத்தில் இருக்கும் சுமார் 240 மில்லியன் குழந்தைகளை இது இலக்காகக் கொண்டது.
- இதற்கான முதல் சுற்று பிப்ரவரி 10 ஆம் தேதி நடத்தப்படுகிறது.
- அதைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 10 ஆம் தேதி இரண்டாவது சுற்று நடத்தப் படுகிறது.
- மக்களைத் தாக்கும் மூன்று வகையான புழுக்கள் உருளைப் புழுக்கள் (அஸ்காரிஸ் லம்ப்ரிகாய்டுகள்), சாட்டைப்புழுக்கள் (ட்ரிச்சுரிஸ் டிரிச்சியுரா), மற்றும் கொக்கிப் புழுக்கள் (நெகேட்டர் அமெரிக்கனஸ் மற்றும் அன்சிலோஸ்டோமா டியோடெனலே) ஆகியனவாகும்.

## உலக பருப்பு வகைகள் தினம் - பிப்ரவரி 10

- பருப்பு வகைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் ஊட்டச்சத்து நன்மைகளையும் எடுத்துரைப்பதற்காக இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- பருப்பு வகைகளானது உலர் பட்டாணி, பீன்சு, பருப்பு, லூபின்கள் மற்றும் கொண்டைக் கடலை ஆகியவற்றை உள்ளடக்கிய உணவு வகையாகும்.
- இவற்றில் புரதம், நார்ச்சத்து, வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன.
- அவற்றில் கொழுப்பு மற்றும் சர்க்கரை குறைவாக உள்ளது.
- '#பருப்பு வகைகள்: ஊட்டமளிக்கும் மண் மற்றும் மனிதர்கள்' என்பது இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாகும்.

## உலக நோயுற்றோர் தினம் - பிப்ரவரி 11




- நோய்களால் அவதிப்படுபவர்கள் பற்றியும், சுகாதாரப் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் நோய் வாய்ப்பட்டவர்களுக்கான பரிவு மற்றும் ஆதரவின் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் முதன்முதலில் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களால் 1992 ஆம் ஆண்டில் அவரது நரம்பியல் சிதைவு நிலையின் காரணமாக நிறுவப்பட்டது.
- இது லூர்து அன்னையின் நினைவு நாளும் ஆகும்.

## அறிவியல் துறையில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11




- அறிவியல் துறையில் பெண்களின் சாதனைகள் மற்றும் பங்களிப்பை கௌரவிப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இது அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய துறைகளில் பெண்களின் முழு மற்றும் சமமான அணுகல் மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்கிறது.

- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் முதன்மையான கருத்துரு: "அறிவியல் தலைமைத்துவத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகள், நிலைத்தன்மைக்கான புதிய சகாப்தம்" என்பதாகும்.
- "அறிவியல் பற்றி சிந்தித்தல்... அமைதியைப் பற்றிய சிந்தித்தல்" என்பது இதன் உப (உட் கருத்துரு) கருத்துருவாகும்.

## டார்வின் தினம் - பிப்ரவரி 12

- இந்தத் தினமானது 1809 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் ஆண்டில் சார்லஸ் டார்வின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது.
- சார்லஸ் டார்வின் அவர்கள் ஒரு பிரிட்டிஷ் இயற்கையியலாளர், புவியியலாளர் மற்றும் உயிரியலாளர் ஆவார் என்பதோடு அவர் பரிணாம உயிரியலின் தந்தையாகவும் அறியப் பட்டவர் ஆவார்.
- இத்தினமானது அறிவியலுக்கான அவரது பங்களிப்பையும், அறிவியல் வளர்ச்சிகளை மேம்படுத்த உத்வேகம் பெறுவதையும் எடுத்துக் காட்டுகிறது.
- 1859 ஆம் ஆண்டில், டார்வின் தனது முதன்மை படைப்பான "On the Origin of Species" என்ற புத்தகத்தினை வெளியிட்டார்.
- இது அவரது கோட்பாட்டை விரிவாக எடுத்துரைக்கச் செய்ததோடு, அதை ஆதரிக்கத் தேவையான ஆதாரங்களையும் முன்வைத்தது.

## உலக யுனானி சிகிச்சை முறை தினம் - பிப்ரவரி 11

- புகழ்பெற்ற இந்திய யுனானி அறிஞரான ஹக்கீம் அஜ்மல் கானின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தியாவில் யுனானி மருத்துவ முறையின் நவீனமயமாக்கலுக்கான உந்துதலாகவும் அவர் இருந்தார்.
- கிரேக்க-அரேபிய மருத்துவம் என்றும் அறியப்படும் யுனானி மருத்துவ முறையானது, கிரேக்க மருத்துவர்களான ஹிப்போகிரட்டீஸ் மற்றும் கேலன் ஆகியோரின் போதனைகளில் இருந்து தோன்றியதாகும்.

## தேசிய உற்பத்தித் திறன் தினம் - பிப்ரவரி 12

- இத்தினமானது தேசிய உற்பத்தித் திறன் சபை (NPC) நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.
- உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய தேசிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதே இந்தச் சபையின் குறிக்கோள் ஆகும்.
- இந்திய உற்பத்தித் திறன் வாரம் ஆனது பிப்ரவரி 12 முதல் பிப்ரவரி 18 ஆம் தேதி வரை அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் முக்கிய கருத்துரு, "செயற்கை நுண்ணறிவு (AI) - பொருளாதார வளர்ச்சிக்கான உற்பத்தித்திறன் இயந்திரம்" என்பதாகும்.

## உலக வானொலி தினம் - பிப்ரவரி 13

- யுனெஸ்கோ அமைப்பானது வானொலியின் மிக முக்கியப் பங்கை முன்னிலைப் படுத்துவதற்காக இந்த நாளை நிறுவியது.
- வானொலி 1895 ஆம் ஆண்டில் இத்தாலிய இயற்பியலாளரும் கண்டுபிடிப்பாளருமான குக்லீல்மோ மார்கோனி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- இவர் கம்பிவடம் இல்லா தகவல் தொடர்புக்கான நடைமுறை சார்ந்த மற்றும் வெற்றிகரமான அமைப்பை முதன்முதலில் உருவாக்கிய பெருமைக்குரியவர் ஆவார்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'வானொலி : தகவலளிப்பு, பொழுது போக்கு மற்றும் கல்வி வழங்கும் ஒரு நூற்றாண்டு' என்பதாகும்.

## மிகவும் வன்முறை மிக்க பயங்கரவாதமானது தீவிரவாதத்திற்கு ஏதுவானதாக மாறுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 12

- இத்தினமானது வன்முறை மிக்க தீவிரவாதத்தின் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் இந்தச் சிக்கலான பிரச்சினையைக் கையாள்வதில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "ஒன்றாக வாழ்தல்: வன்முறை மிக்க பயங்கரவாதமானது தீவிரவாதத்திற்கு ஏதுவானதாக மாறுவதைத் தடுப்பதற்காகச் சமூகத்தின் நெகிழ்திறனை மேம்படுத்துதல்" என்பதாகும்.

## சர்வதேச வலிப்பு நோய் தினம் - பிப்ரவரி 12

- இது 2015 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் இரண்டாவது திங்கட்கிழமையன்று கடைபிடிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது இந்த நோய் பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமான ஒரு தளத்தை வழங்குகிறது.
- வலிப்பு நோய் என்பது ஒரு தொற்றாத நரம்பியல் நோயாகும்.
- இது உலகம் முழுவதும் சுமார் 50 மில்லியன் மக்களை பாதிக்கிறது.
- வலிப்பு நோய் என்பது தொற்றா நோயாகும்.
- வெவ்வேறு காரணிகள் வலிப்பு நோய்க்கு வழிவகுக்கச் செய்கின்றன அல்லது ஏற்படுத்துகின்றன.
- இந்த வகைகளில் உடலமைப்பு, மரபணு, தொற்று, வளர்சிதை மாற்றம், நோயெதிர்ப்பு மற்றும் அறியப்படாதக் காரணிகள் ஆகியவை அடங்கும்.


## சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் தினம் - பிப்ரவரி 15

- இந்த நாள் குழந்தைப் பருவ புற்றுநோய் தொடர்பான சவால்களையும், இந்த பயங்கரமான நோயை எதிர்த்துப் போராட குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்து உரைக்கிறது.

- இது 2002 ஆம் ஆண்டில் சர்வதேசக் குழந்தைப் பருவ புற்றுநோய் அமைப்பு என்ற அமைப்பினால் நிறுவப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் உலகெங்கிலும் 4 லட்சம் குழந்தைகள் புற்றுநோயால் பாதிக்கப் படுகின்றனர் ஆனால் அவர்களில் பாதி பேர் மட்டுமே அவர்களுக்கு அந்நோய் பாதிப்பு இருப்பது குறித்து கண்டறியப்படுகிறார்கள்.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 70% மற்றும் அதிக வருமானம் கொண்ட நாடுகளில் சுமார் 20% குழந்தைகள் இந்தப் பாதிப்பில் இருந்து குணப்படுத்தப் படவில்லை.
- ஒவ்வோர் ஆண்டும், 0 முதல் 19 வயதிற்கு இடைப்பட்ட 4,00,000 குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் புற்றுநோயால் பாதிக்கப் படுகின்றனர்.

## உலக மானுடவியல் தினம் - பிப்ரவரி 15

- இத்தினமானது பிப்ரவரி மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இது மானுடவியல் துறையை ஊக்குவிக்கச் செய்வதையும், உலகெங்கிலும் உள்ள மனிதப் பன்முகத் தன்மை, கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்களைப் புரிந்து கொள்வதில் அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் ஒரு நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இத்தினமானது அமெரிக்க மானுடவியல் சங்கத்தினால் 2015 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- முதலில் தேசிய மானுடவியல் தினம் என்று அழைக்கப்பட்ட இத்தினமானது பின்பு 2016 ஆம் ஆண்டில் உலக மானுடவியல் தினமாக மாற்றப்பட்டது.



## உலக நீர்யானை தினம் - பிப்ரவரி 15

- இந்தத் தினமானது நீர் யானைகளின் வளங்காப்பு, பாதுகாப்பு மற்றும் மதிப்பினை உயர்த்துதல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினம் ஆனது ஜிம்பாப்வே நாட்டில் துர்க்வே நீர்யானை அறக்கட்டளை திறக்கப் பட்ட ஆண்டு விழாவுடன் ஒன்றி வரும் விதமாக அதிகாரப் பூர்வமாக நிறுவப் பட்டது.
- நீர் யானைகள் பகுதியளவு நீர்வாழ் பாலூட்டிகள், ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியை பூர்வீகமாகக் கொண்டவை என்பதோடு அவை 2,000 கிலோ வரையில் எடை உள்ளவை ஆகும்.
- யானைகள் மற்றும் காண்டாமிருகங்களுக்கு அடுத்தபடியாக இது மூன்றாவது பெரிய நிலவாழ்ப் பாலூட்டியாகும்.
- இன்று, நீர் யானைகளின் எண்ணிக்கை 115,000 முதல் 130,000 வரை இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

## உலக எறும்புத் திண்ணிகள் தினம் - பிப்ரவரி 17

- இந்த அதிகம் அறியப்படாத, அருகி வரும் மற்றும் உலகிலேயே அதிகளவில் கடத்தப் படும் பாலூட்டிகளில் ஒன்றான எறும்புத் திண்ணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினம் ஒரு வாய்ப்பாக செயல்படுகிறது.
- 2009 முதல் 2017 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் சுமார் 6,000 எறும்புத் திண்ணிகள் சட்ட விரோதமாக வேட்டையாடப்பட்டுள்ளன.
- இந்தியாவில், மொத்தமுள்ள ஒன்பது எறும்புத் திண்ணிகள் இனங்களில் இந்திய எறும்புத் திண்ணிகள் (அருகி வரும் இனம்) மற்றும் சீன எறும்புத் திண்ணிகள் (மிகவும் அருகி வரும் இனம்) ஆகிய இரண்டு இனங்கள் காணப் படுகின்றன.

## உலகச் சுற்றுலா நெகிழ்திறன் தினம் - பிப்ரவரி 17





- இத்தினமானது 2023 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டது.
- சுற்றுலா வளர்ச்சியினை, திடீர் சீர்குலைவுகள் மற்றும் அவசரநிலைகளை எதிர் கொள்ளும் வகையில் நெகிழ்திறன் கொண்டதாக மாற்றுவதன் அவசியத்தை முன்னிலைப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள பல்வேறு சவால்களுக்கு எதிராக சுற்றுலாத் துறையை வலுப்படுத்துதல், நிலையான மேம்பாட்டினை ஆதரித்தல் மற்றும் பொருளாதார உறுதித் தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.

## உலக திமிங்கல தினம் - பிப்ரவரி 18

- இத்தினமானது ஒவ்வொரு ஆண்டின் பிப்ரவரி மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- திமிங்கல இனங்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இது ஒரு முக்கியமான தளமாக செயல்படுகிறது.
- இந்த நாள் ஆனது கிரெக் காஃப்மேன் என்ற விளம்பர நடிகர் மற்றும் பசிபிக் திமிங்கல அறக்கட்டளையின் முயற்சியால் 1980 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் அரேபியக் கடல் கடற்கரையானது, புவியின் மிகப்பெரிய உயிரினங்களான நீல திமிங்கலங்களின் முக்கிய வாழ்விடமாக மாறியுள்ளது.
- ஓர்காஸ் என்றும் அழைக்கப்படுகின்ற வேட்டையாடும் திமிங்கலங்கள், ஓங்கில் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதோடு அவை பெருங்கடலின் முதன்மை வேட்டையாடி இனங்களாகவும் செயல்படுகின்றன.





## அருணாச்சலப் பிரதேச மாநில உருவாக்க தினம் - பிப்ரவரி 20

- அருணாச்சலப் பிரதேசம் ஆனது 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று முழு மாநிலமாக மாற்றப்பட்டது.
- 1972 ஆம் ஆண்டு வரை, இது வடகிழக்கு எல்லைப்புறப் பிரதேசங்கள் (NEFA) என்று அறியப் பட்டது.
- இதற்கு 1972 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதியன்று ஒன்றியப் பிரதேச அந்தஸ்து வழங்கப் பட்டு, அருணாச்சலப் பிரதேசம் என மறுபெயரிடப்பட்டது.

## மிசோரம் மாநில தினம் - பிப்ரவரி 20

- சுதந்திரத்தின் போது மிசோ மலைக்குன்றுகள் பகுதி ஆனது அசாம் மாநிலத்தின் லுஷாய் மலைப்பாங்கு மாவட்டமாக மாறியது.

- மேலும், 1954 ஆம் ஆண்டில் இது அசாம் மாநிலத்தின் மிசோ மலைக்குன்றுகள் மாவட்டம் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- மிசோ தேசிய முன்னணி (MNF) அமைப்பின் மிதவாதிகளுடன் ஓர் ஒப்பந்தம் கையெழுத்துதானதை அடுத்து 1972 ஆம் ஆண்டில் மிசோரத்திற்கு ஒன்றியப் பிரதேச அந்தஸ்து வழங்கப்பட்டது.
- மத்திய அரசிற்கும் MNF அமைப்பிற்கும் இடையே மிசோரம் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானதை அடுத்து 1986 ஆம் ஆண்டில் மிசோரம் ஒன்றியப் பிரதேசம் முழு மாநில அந்தஸ்து பெற்றது.
- 1986 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 53வது சட்டத் திருத்தத்திற்குப் பிறகு 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று மிசோரம் மாநிலம் உருவாக்கப்பட்டது.
- மிசோரம் ஆனது, அரசியலமைப்பின் ஆறாவது அட்டவணையின் கீழ் (பிரிவு 244(2)) "பழங்குடியினர் பகுதி" என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20

- வேலைவாய்ப்பின்மை, வறுமை, சமூக விலக்கல், பாலினச் சமத்துவமின்மை, மனித உரிமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் சமூக நீதியை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- 2007 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையானது, பொதுச் சபையின் 63வது அமர்வில் இருந்து இந்த நாள் அனுசரிக்கப் படுவதாக அறிவித்தது.
- 2008 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதியன்று சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது ஒரு நியாயமான உலகமயமாக்கலுக்கான சமூக நீதிக்கான சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனத்திற்கு ஒருமனதாக ஒப்புதல் அளித்தது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "இடைவெளிகளைக் குறைத்தல், கூட்டணிகளை உருவாக்குதல்" என்பதாகும்.

## சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21

- இந்த நாள் என்பது மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் மிகுந்த பன்மொழித்துவம் ஆகியவற்றை அங்கீகரித்து ஊக்குவிக்கிறது.
- வங்காளதேசத்தின் முன்னெடுப்பான இந்த நாளைக் கொண்டாடச் செய்வதற்கான கருத்தாக்கமானது, 1999 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பின் பொது மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பல்மொழிக் கல்வி என்பது தலைமுறைகளுக்கு இடையேயான கற்றலின் தூண்" ஆகும்.





## உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22

- உலகெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் இளம் பெண்களின் நட்பு, சகோதரத்துவம் மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றை இந்த நாள் கொண்டாடுகிறது.
- இது இளம் பெண்கள் மத்தியில் உள்ள பிணைப்பை மிகவும் வலுப்படுத்துவதையும், அவர்களுக்கு அதிகாரமளிப்பதற்கான வழிகளை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'நமது உலகம், நமது செழிப்பான எதிர்காலம்' என்பதாகும்.

## உலக சாரணர் தினம் - பிப்ரவரி 22

- இந்தத் தினமானது சாரணர் இயக்கத்தின் நிறுவனர் ராபர்ட் பேடன்-பவல் பிரபுவின் பிறந்த நாளை நினைவு கூரும் விதமாக அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது நிறுவனர் தினம் என்றும் பிரபலமாக அறியப் படுகிறது.
- சாரணர் இயக்கம் ஆனது தற்போது 57 மில்லியன் உறுப்பினர்களுடன் 172 தேசிய சாரணர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'ஒரு சிறந்த உலகத்திற்கான சாரணர்கள்' என்பதாகும்.




## உலக அமைதி மற்றும் புரிதல் தினம் - பிப்ரவரி 23




- 1905 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற பன்னாட்டுச் சுழற் சங்கத்தின் முதல் கூட்டத்தை நினைவு கூரும் வகையில் இந்தத் தினம் அனுசரிக்கப் படுகிறது.
- உலகம் முழுவதும் மனிதாபிமான சேவை, அமைதி மற்றும் நல்லெண்ணத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் இது ஆகும்.
- 1910 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் முதல் சுழற் சங்கங்கள் பிரதானமாக சான் பிரான்சிஸ்கோ, சியாட்டில், ஓக்லாண்ட் மற்றும் லாஸ் ஏஞ்சல்ஸ் ஆகிய நகரங்களில் உருவாக்கப் பட்டன.
- பன்னாட்டுச் சுழற் சங்கங்களின் முக்கியக் குறிக்கோள் உலகளாவிய அமைதியைக் கட்டமைத்தல் மற்றும் நேர்மறையான தீர்மானம் காணல் ஆகும்.

## மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24

- 1944 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த மத்திய கலால் மற்றும் உப்புச் சட்டம் உருவாக்கப் பட்டதை நினைவு கூரும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்தத் தினமானது இந்தியப் பொருளாதாரத்திற்கு மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) பங்களிப்புகளையும் கௌரவிக்கின்றது.
- கலால் வரி தொடர்பான 11 சட்டங்களின் கலவையான இந்தச் சட்டமானது உப்பு மற்றும் மத்திய வரிகள் தொடர்பான சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக நிறைவேற்றப்பட்டது.
- பின்னர், 1966 ஆம் ஆண்டில், இந்தச் சட்டத்தின் பெயர் மத்திய கலால் சட்டம், 1944 என மாற்றப் பட்டது.




## உலக அரசு சாரா அமைப்புகள் தினம் - பிப்ரவரி 27


- இத்தினமானது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் பால்டிக் கடல் தன்னார்வ தொண்டு நிறுவன மன்றத்தால் முன்மொழியப்பட்டது.
- முதல் உலக அரசு சாரா அமைப்புகள் தினம் ஆனது 2014 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதில் அரசு சாரா நிறுவனங்கள் - தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் - (NGO) வகிக்கும் முக்கியப் பங்கை அங்கீகரித்து கொண்டாடுவதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பொதுவாக சுயாதீனமான, இலாப நோக்கற்ற நிறுவனங்களாகும் என்ற நிலையில், அவை பல்வேறு சமூக, சுற்றுச்சூழல் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக உள்நாடு, தேசிய அல்லது சர்வதேச அளவில் பணியாற்றுகின்றன.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்: நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு" என்பதாகும்.

## உலக புரத தினம் – பிப்ரவரி 27

- 2020 ஆம் ஆண்டில் இத்தினம் ஆரம்பிக்கப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டு இந்தியாவில் 5வது தேசிய புரத தினம் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில் இதன் கருத்துரு புரதத்துடன் நிவர்த்தி செய்யுங்கள் என்பதாகும்.
- புரதம் என்பது மனித உடலில் ஒரு முதன்மை கட்டமைப்பு தொகுதி ஆகும்.
- பெரும்பாலான மக்களுக்கு அவர்களின் உடல் எடையின் 1 கிலோகிராமிற்கு 0.8 முதல் 1 மில்லி கிராம் என்ற அளவிற்கு புரதத்தின் தினசரித் தேவையானது பரிந்துரைக்கப் படுகின்றது.

## தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28

- இந்திய அறிவியலாளர் சந்திரசேகர வெங்கட இராமன் அவர்கள் 1928 ஆம் ஆண்டில் ஃபோட்டான்களின் சிதறல் நிகழ்வைக் கண்டுபிடித்ததை இந்த நாள் கொண்டாடுகிறது.
- பின்னர் இந்தக் கண்டுபிடிப்பிற்கு அவரது பெயரால் 'இராமன் விளைவு' என்று பெயரிடப்பட்டது.
- இராமன் அவர்களுக்கு, அவரது கண்டுபிடிப்பிற்காக வேண்டி 1930 ஆம் ஆண்டில் அறிவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- முதலாவது தேசிய அறிவியல் தினம் ஆனது 1987 ஆனது பிப்ரவரி 28 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு 'விக்சித் பாரதத்திற்கான உள்நாட்டுத் தொழில்நுட்பங்கள்' என்பதாகும்.




## அரிய நோய் தினம் - பிப்ரவரி 29

- இத்தினமானது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 28 (லீப் வருடங்களில் 29 ஆம் தேதி -ஆண்டின் அரிதான தினம்) ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ஓர் அரிய நோயின் பின்புலத்தினை அதன் தொற்றுநோயியல் மூலம் அடையாளம் காணலாம்.
- ஏதேனும் அரிதான நோயின் பாதிப்பு வரம்பு ஆனது 10,000பேரில் 6.5-10 பேருக்கு குறைவாக இருக்க வேண்டும்.

- 72% நோய்கள் மரபியல் சார்ந்தவை மற்றும் சுமார் 5 புற்றுநோய் பாதிப்புகளில் 1 அரிய வகை ஆகும்.
- இந்திய அரிய நோய்கள் அமைப்பு (ORDI) ஆனது இந்தியாவில் 263 அரிய நோய்களை பட்டியலிட்டுள்ளது.




# இதரச் செய்திகள்

## மத்திகா மொழி

- மத்திகா என்பது பல நூற்றாண்டுகளுக்கு முன் கர்நாடகாவில் இருந்து புலம் பெயர்ந்த சாகலியா சமூகத்தினரால் பேசப்படும் மொழியாகும்.
- தற்போது இளைய தலைமுறையினர் மலையாள மொழியினைத் தேர்வு செய்வதால் இந்த மொழி மிகவும் வேகமாக அழிந்து வருகிறது.
- கடைசியாக மத்திகா மொழியை மிக சரளமாகப் பேசுபவர்கள் இரண்டு பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர்.
- மத்திகா என்பது எழுத்து வடிவம் இல்லாத மற்றும் தெலுங்கு, துளு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் கலவையாகும்.
- இது கன்னடத்தைப் போலவே உச்சரிப்பு ஒலியைக் கொண்டிருந்தாலும், அதன் பல தரப்பட்ட மொழித் தாக்கங்களால் கேட்போரைத் திகைக்க வைக்கும்.
- கன்னடத்தின் பழைய வடிவமான ஹவ்யாகா கன்னட மொழியானது, மத்திகா மொழி மீது பெருமளவிலான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.



## இந்திய சீரம் நிறுவனம் - CEPI கூட்டாண்மை

- இந்திய சீரம் நிறுவனம் (SII) ஆனது, உலகளாவியத் தெற்கு நாடுகளில் தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்களின் வளர்ந்து வரும் பெருந்தொற்றிற்கான தயார்நிலைப் புத்தாக்கங்களுக்கான கூட்டணியில் சேர உள்ளது.
- இது எதிர்காலத்தில் தோன்ற உள்ள பெருந்தொற்றுகளுக்கு விரைவான, திறம் மிக்க மற்றும் உரித்தான நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பெருந்தொற்றிற்கான தயார்நிலை புத்தாக்கங்களுக்கான கூட்டணி (CEPI) என்பது பெருந்தொற்று மற்றும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பரவும் பெருந்தொற்று அச்சுறுத்தல்களுக்கு எதிராக தடுப்பூசிகள் மற்றும் பிற உயிரியல் சார்ந்த எதிர் நடவடிக்கைகளின் உருவாக்கத்தினை விரைவுபடுத்தும் ஒரு புதுமையான உலகளாவியக் கூட்டாண்மை ஆகும்.
- CEPI அமைப்பானது, தடுப்பூசிகள் ஆனது சரியான நேரத்தில், ஒரு பெருந்தொற்று ஏற்படுத்தக் கூடிய நோய்க்கிருமியை அடையாளம் கண்ட 100 நாட்களுக்குள் ஆரம்ப அங்கீகாரம் மற்றும் உற்பத்திக்கு தயாராக இருக்க வேண்டும் என்ற இலக்கை கொண்டுள்ளது.
- இந்தக் கூட்டணியானது, உலகளாவியத் தென் பிராந்தியங்களில் தடுப்பூசி தயாரிப்பு முயற்சிகளுக்கு குறிப்பிடத்தக்க ஊக்கமாக இருக்கும் என்பதோடு மேலும் 100 நாட்கள் நடவடிக்கை இலக்கினை அடைவதற்கு அதனை ஒரு படி முன்னோக்கிக் கொண்டுச் செல்லும்.

## 390 ஆண்டுகள் பழமையான தீபஸ்தம்பம்



- தெலுங்கானா மாநிலத்தின் நல்கொண்டா மாவட்டத்தில் காசி விஸ்வநாதருக்கென அர்ப்பணிக்கப் பட்ட கல்வெட்டுடன் கூடிய 390 ஆண்டுகள் பழமையான விளக்குக் கம்பம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- விளக்குகளுக்கான குழியங்களைக் கொண்ட 20 அடி உயர விளக்குக் கம்பத்தில் பொறிக்கப் பட்டுள்ள இந்தக் கல்வெட்டு ஆனது கி.பி.1635 என்று தேதியிட்ட தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளின் கலவையில் பொறிக்கப்பட்டுள்ளது.

- காசி விஸ்வநாத கடவுளுக்கான மரியாதை வணக்கத்துடன் தொடங்கும் இந்தக் கல்வெட்டு ஆனது வாலி முனுலய்யாவின் மகன் பொலினேடுவால் காசி விஸ்வநாத கடவுளுக்காக தூண் எழுப்பப்பட்டது குறித்த பதிவினைக் கொண்டுள்ளது.
- இந்த விளக்கு கம்பம் ஆனது (20 அடி உயரத் தூண்) இந்த நகரத்தின் வழியாக பயணித்த வணிகர்கள் மற்றும் கப்பல்களுக்கான புவியியல் குறிகாட்டியாக இருந்திருக்கலாம்.

## தவளையின் பழமையான புதைபடிமம்

- 100 மில்லியன் ஆண்டுகள் பழமையான தவளையின் பழங்கால புதைபடிவம் – இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டவற்றில் மிகவும் பழமையானது - சீனாவில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தத் தவளையின் புதை படிமம் ஆனது ஓர் அரிய உயிரியல் அம்சத்துடன் - பல சிறிய முட்டைகளைக் கொண்ட வயிறு - காணப்பட்டது.
- இந்தப் புதைபடிமமானது தோராயமாக 145 மில்லியன் முதல் 100.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பழைய கிரெட்டேசியஸ் காலத்தில் உருவாகியுள்ளது.
- இந்தத் தவளையின் மிகவும் பழமையான ஒரு புதை படிமமானது கன்சுபட்ராச்சஸ் கிலியானென்சிஸ் இனத்தைச் சேர்ந்தது ஆகும்.




## தயானந்த சரஸ்வதி அவர்களின் 200வது பிறந்தநாள்

- சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் 1824 ஆம் ஆண்டு பிப்ரவரி 12 ஆம் தேதியன்று குஜராத்தில் மூல சங்கர் திவாரி என்ற பெயரில் பிறந்தார்.
- அவர் 'சத்யார்த் பிரகாஷ்' என்ற தனது முதல் படைப்பிற்காகப் புகழ் பெற்றார்.
- 1875 ஆம் ஆண்டில், அப்போது நிலவியச் சமூக ஏற்றத்தாழ்வுகளை களைய வேண்டி ஆரிய சமாஜத்தை நிறுவினார்.
- சமூகச் சீர்திருத்தங்கள் மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் அளித்ததன் மூலம் நாட்டின் கலாச்சார மற்றும் சமூக விழிப்புணர்வில் ஆரிய சமாஜம் முக்கியப் பங்கு வகித்தது.




## இராணி சென்னம்மாவின் கிளர்ச்சியின் 200வது ஆண்டு நினைவு தினம்

- முன்னாள் சுதேச அரசான கர்நாடகா மீது படையெடுப்பதற்காக சுமார் 20,000 ஆங்கிலேயர்களைக் கொண்ட படையானது, கித்தூர் கோட்டையின் அடிவாரத்தில் நிலை நிறுத்தப்பட்டது.
- ஆனால் கித்தூர் ராணி சென்னம்மா தனது தாயகத்தைப் பாதுகாப்பதற்காக வேண்டி ஆங்கிலேய அதிகாரியை எதிர்த்து நின்று கொன்றார்.
- இது 1824 ஆம் ஆண்டின் கித்தூர் கிளர்ச்சி என்று அறியப் பட்டது.
- கித்தூர் ஆட்சியாளர் 1824 ஆம் ஆண்டில் அவர் இறப்பதற்கு முன், சிவலிங்கப்பா என்ற குழந்தையை தனது வாரிசாக ஏற்றுக் கொண்டார்.
- எனினும், ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் ஆனது, 'வாரிசு இழப்புக் கோட்பாட்டின்' கீழ் சிவலிங்கப்பாவை அந்த ராட்சியத்தின் வாரிசாக அங்கீகரிக்க மறுத்தது.



## பாதாமி சாளுக்கியர் கல்வெட்டுகள்

- தெலங்கானாவின் நல்கொண்டா மாவட்டத்தில் முடிமாணிக்யம் கிராமத்தில் சுமார் 1,300-1,500 ஆண்டுகள் பழமையான இரண்டு பாதாமி சாளுக்கியக் கோயில்களும், 1,200 ஆண்டுகள் பழமையான முத்திரைக் கல்வெட்டும் சமீபத்தில் கண்டறியப்பட்டன.
- இந்த இரண்டு கோயில்களும் கி.பி.543 முதல் கி.பி.750 ஆண்டுகளுக்கு இடைப்பட்டவை ஆகும்.
- இந்தக் கல்வெட்டு ஆனது பாதாமி சாளுக்கியர்களின் ஆட்சியுடன் தொடர்புடைய கி.பி 8 அல்லது 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.
- இக்கோயில்கள் ரேகா நாகரா வடிவத்தில் கடம்ப நகர பாணியில் இருப்பதால் தனிச் சிறப்பு வாய்ந்தவையாகும்.
- இன்று தெலுங்கானாவில் இத்தகையக் கட்டிடக்கலைக்கு இதுவே ஒரே உதாரணமாக விளங்குகிறது.
- ‘கண்டலோரன்று’ என எழுதப்பட்டுள்ள இந்த முத்திரைக் கல்வெட்டானது கிராமத்தில் உள்ள ஐந்து கோயில்களை உள்ளடக்கிய குழுவின் தூண்களில் பொறிக்கப் பட்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★